ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தி

மா, ஏப், மே 1936.

JL
Q22 m L11, N35SR.
N36.)
218933

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த
ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத்ஸம்ப்ரதாயார்த்தப்ரகாசனபத்ரிகை.

ஸம்புடம் 1.] யுவஹ மாசிப் புனர்பூசம். [சஞ்சிகை 4.

பத்ராதிபர்

வடகரை இராமாநுஜாசாரியார்

ம்மல் ...
..., ஆசாரப்பன் ... தெரு; ஜி. டி. மதராஸ்.

1936 பிப்ரவரி.] [தனிப்ரதி விலை 0—3—0

6 APR 1936
MADRAS

விஷய அட்டவணை.

	விஷயம்.	பக்கம்.
1.	மாசிப் புனர்பூசம்	27—29
2.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம்	29—31
3.	ப்ரஹ்ம ஸூத்ரமும் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தமும்	32—36
4.	நவவித ஸம்பந்தம்	36—39
5.	நம்பெருமாள் திருமஞ்சனமும் பட்டர் ஈடுபாடும்	39—46
6.	ஆத்ம ஸமர்ப்பணம்	46—50
7.	வர்த்தமானங்கள்	51—56
8.	ஸ்ரீராமாயண ஸ்லோகார்த்தம்	1—8

நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப்பத்ரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்தவிசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்தசம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தையிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. அது ப்ரொப்ரைட்டரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்டமுடையவர்கள் ப்ரவேசக்கட்டணமாக ரூ. 1-0-0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.

சந்தா விபரம்

அங்கத்தினர்களுக்கு	வருஷச்சந்தா	....	1 8 0
,,	வெளியூர் ,,	....	1 12
	தனிப்ரதி	....	0 3

வெளியூர் சந்தாதார்கள் சந்தாத் ... அனுப்பி சரியான விலாசத்தைத் தெரி ... டில் அனுப்பப்படும்.

...ன்னதாக ... தொகை ... புக்போஸ்ட் ... வித்தால் சஞ்சிகை

விள...

ராப்பர் முழுப்பக்கம் ஒருதடவை		....	5 ...
,, அரைப்பக்கம்	,,	....	2 0
,, கால்பக்கம்	,,	....	

...ம்பரம் ...

...வக்கு ....

உயர்ந்த சரக்கு. குறைந்த விலை.

T. M. G. S. மங்களூர் பார்ஸ்லீ

குங்குமம்

வஸ்துக்களில் உயர்ந்தது குங்குமம். தேவதார்ச்சனைகள் செய்வதற்கும் உத்தம ஸ்த்ரீகளின் உத்தமாங்கத்தை அலங்கரிப்பதற்கும் இன்றியமையாததும், குங்குமமே. இவ்வளவு பெருமைவாய்ந்த வஸ்துவில் மட்டச் சரக்குகளை வாங்கி உபயோகிப்பது உசிதமன்று. உயர்ந்த வஸ்துக்களில் உயர்ந்த சரக்குகளையே வாங்கவேண்டும். இக்குங்குமங்களில் உயர்ந்தது T. M. G. S. மார்க்குடைய குங்குமம். இதன் பெருமை ஒரு தடவை வாங்கி உபயோகித்தால் நன்கு விளங்கும். சாதாக்குங்குமமும் அசல் ஸ்ரீ சூர்ணமும் மொத்தமாயும் சில்லரையாயும் கொடுக்கப்படும். வாங்குமவர்கள், இந்த மார்க்கைக் கவனித்து வாங்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

T. M. G. ஸ்ரீனிவாஸ அய்யங்கார்,
52, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

APR 1938

பிரபல ஜோதிஷர்.

மஹாராஜாக்களாலும், பல பிரமுகர்களாலும், தங்க மெடல்களும், நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றவர், ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாசாசாரியார்,
58, லஸ்சர்ச் ரோட், மயிலாப்பூர் மதராஸ்.

L. G. பெருங்காயம்.

“ஆஹாரசுத்தள ஸத்வசுத்தி:” என்கையால் சுத்தமான ஆஹாரத்தை உட்கொள்வதினாலேயே மனிதர்களுக்கு ஸத்வ

சுத்தி யுண்டாகின்றது. ஆதலின் ஸாத்விகமான ஆஹாரத்தையே உட்கொள்ளவேண்டும். அவ்விதமான ஆஹாரத்தைத் தயார் செய்வதற்கு இன்றியமையாதது பெருங்காயம் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. அப் பெருங்காயங்கள் பலவகைகளாக நமது நாட்டில் பரவியிருக்கின்றமையால் அவைகளில் எல்லோராலும் போற்றப்படுவது L. G. காயமே என்பதை மாத்திரம் இவ் விளம்பரம் தெரிவிக்கின்றது.

லால்ஜீ கோது & கம்பெனி.
பிரபல பெருங்காய வியாபாரிகள்,
8, பெருமாள் முதலிதெரு, ஜி.டி., மதராஸ்.
பம்பாய். சென்னை. கும்பகோணம்.

அம்ருதாஞ்சநம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே.

அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம்போய் மருந்துகள் வாங்கி அவ் வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில அமருதாஞ்சனம் கைவசமிருக்குமேயாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டாமென்பதை அனைவருமறிந்திருந்தாலும் இவ்விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்குங்கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.
பம்பாய். மதராஸ். கல்கத்தா.

ஸ்ரீ:
ஸ்ரீ ரங்கநாதாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யச்ச்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஶ்ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||

வேதவேதாந்த வேதாங்க ஸத்ஸூக்த்யர்த்தவர்ஷிணீ |
ஶ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

வேத வேதாந்த வேதாங்க ஸத்ஸூக்த்யர்த்தவர்ஷிணீ |
ஶ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஸ்ரீ
ராமாநுஜஸித்தாந்தவைஜயந்தீ
மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை.
பத்ராதிபர்
வடகரை இராமாநுஜாசாரியார்

தொகுதி 1.] [பகுதி 4.

பத்ராதிபரின் விஜ்ஞாபனம்.

மாசிப் புனர்பூசம்

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தியின் நான்காவது பகுதி மாசிப் புனர்பூசத்தில் அவதரிக்க நேர்ந்ததுபற்றி அம்மாசி புனர்பூசத்தின்பெருமை இங்கு யதோசிதம் தெரிவிக்கப்படுகிறது. ‘மாசிப் புனர்பூசத்திற்குப்பெருமை என்’? எனில், ஆழ்வார்களில் ராஜாவாகிய நம் குலசேகரன் அவதரிக்கும் பாக்யம் பெற்றதே. இவ்வாறு இப்புனர்பூசத்திலவதரித்த ஆழ்வார் ஸ்ம்ருதி விஷயமானவாறே அவ்வாழ்வாரின் பெருமையைப் பேசாமலிருக்க முடியுமோ? இவ்வாழ்வார் கலி

218933

யுக வருஷங்கள் இருபத்தேழு சென்ற பராபவ வருஷம் மாசிமாதத்தில் புனர்பூச நக்ஷத்திரத்தில் சுக்ல பக்ஷத்வாதசியுடன் கூடிய வியாழக் கிழமையில் கௌஸ்துபாம்சராய் சேரன் குலத்திற்கு மேகராய் நம்மை உஜ்ஜீவிப்பதற்கு இப்புவியிலவதரித்தருளினார். இவர்த் தத்துவ வைஜயந்தி மாலையில் :

> கல்யப்தே ஸுக ஸங்க்யயா வ்யபகதே மாஸேச மாகாபிதே
> வர்ஷேசாபி பராபவே ஸுரகுரோர்வாரேசபக்ஷே ஶுசள
> த்வாதஶ்யாக்யதிதள புநர்வஸுதிநே ப்ரீத்யாக்யயோகாந்விதே
> த்ராதும் நஃ குலசேகரஃ க்ஷிதிபதிஃ ஸ்ரீ கௌஸ்து பாம்ஶோऽபவத் ||

என்கிற ஸ்லோகம் தெரிவியாநிற்கும். இவ்வாழ்வார் சக்ரவர்த்தித் திருமகனை பெருமாளைப் போலவே க்ஷத்ரிய வம்ஶத்திலே அவதரித்துப் பெரியது சிறியதை நலியாதபடி செங்கோல் செலுத்தி பரமோதாரா யெழுந்தருளியிருந்தபடியால் குலசேகரப் பெருமாள் என்றும் போற்றப்படுவர். இவ்வாழ்வார் எம்பெருமானால் மயர்வற மதிநல மருளப்பெற்று எம்பெருமானுடைய ஸ்வரூப குண விபவாதிகளை ஸாக்ஷாத்கரித்து வேதவேத்யனை ஸர்வேஶ்வரன் சக்ரவர்த்திக்குப் புத்ரனாய் அவதரித்தாற்போல் வேதமும் வால்மீகி முகத்தில் நின்றும் ராமாயணமாக அவதரித்திருக்கின்றமையாலும் "கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" என்றும், "மனத்துக்கினியான்" என்றும் சொல்லப்படுகிற ஸ்ரீ ராம வ்ருத்தாந்தத்தைக் கேட்டுப் போராநிற்க - "சதுர்தஶ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீம கர்மணாம் | ஏகஸ்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி" என்கிற ஶ்லோகத்திற்கு இளைய பெருமாளைப் பிராட்டிக்குத் திருமேனிக் காவலாக வைத்துவிட்டு தர்மாத்மாவான பெருமாள் தான் ஒருவராய் அதிபயங்கரமான க்ருத்யங்களைச் செய்யும் ராக்ஷஸர்களாய் அதிலும் பதினாலாமாயிரவர்களான கரதூஷணாதிகளோடு யுத்தத்திற்கு எழுந்தருளினார் அங்கு எவ்வாறு முடியுமோ? என்று ருஷி வருந்துகிறான் என்று அர்த்தம் சொல்லக்கேட்டவாறே பெருமாளிடமுள்ள ப்ரேமாதிஶயத்தாலே கலங்கி, வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வாரில்லாத குறை தீர்க்கத் தான் சதுரங்கபலத்தோடு புறப்பட்டு எழுந்தருளா நிற்க, இவருடைய கலக்கத்தைத் தவிர்ப்பிக்க மந்த்ரிகள் சில வைஷ்ணவோத்தமர்களை எதிரே வரவிடுத்து அவர்களின் வாயிலாய், "தம் த்ருஷ்ட்வா" என்கிற ஶ்லோகத்தை வ்யாக்யாநிக்கும்படிசெய்ய அவர்களும் "பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் தான்

ஒருவனாகவே நிரஸித்து ஆஶ்ரமம் எழுந்தருளா நின்ற பெருமாளின் வீரத்திற்குகந்து ஜனககுல ஸுந்தரியான பிராட்டி பர்த்தாவான பெருமாளை ஆலிங்கனம்பண்ணி ஆஶ்வஸிப்பித்தாள்" என்று சொல்லக்கேட்டு, ஆழ்வாரும் அதிஸந்துஷ்டராய் மீண்டு எழுந்தருளினார். அப்பால் மந்த்ரிகள் இவர்க்கு இவ்வைஷ்ணவ ஸஹவாஸத்தாலன்றோ இவ்வாறு கலங்கும்படி ஏற்படுகிறது என்று கருதி இவர்கள் ஸஹவாஸத்தை ஒழிக்க உபாயம்தேடி திருவாராதனப் பெருமாளின் ஆரத்தை யெடுத்து மறைத்து வைத்து வைஷ்ணவர்கள் அபஹரித்தார்கள் என்று சொல்ல பரமபுருஷனிடத்தில் பக்திபண்ணும் பரமபாகவதோத்தமர்கள் பர (அந்யர்களின்) வஸ்துவை ஆசைப்படார்கள் என்று ப்ரதிஜ்ஞை பண்ணிப் பாம்புக்குடத்திலே கையிடுவேன் என்றுசொல்ல, மந்த்ரிகளும் இவருடைய அத்யவஸாயத்தைப் புகழ்ந்து தாங்கள் செய்த அக்ருதயத்தை விண்ணப்பம் செய்து ஆரத்தை ஆழ்வாரிடம் ஸமர்ப்பித்தார்கள். அப்பால் ஆழ்வாரும் இத்தீயர்களுடன் இவ்வரசாளும் பெருமையை வெறுத்து நல்லார்கள் வாழும் நளிரரங்கமாகிற திருவரங்கம் திருப்பதி சென்று திருக்காவேரி திரைக்கையால் அடிவருடத் திருவனந்தாழ்வான்மேல் திருப்பள்ளிகொண்ட திருமேனியம்மானைக் கண்ணாரக்கண்டு வாயாரப் புகழ்ந்து அநுபவித்து அவ்வநுபவ பரீவாஹ ரூபமாகப் பெருமாள் திருமொழி என்கிற திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்து இவ்வுலகை வாழ்வித்தருளினார். இவ்வாறு இவ்வாழ்வாரின் பெருமையை நாம் அநுபவிக்கும்படி செய்த இந்த மாசிப்புனர்பூசத்தினன்று வைஜயந்தீயின் நான்காவது பகுதி வெளிவந்ததும் ஒரு ஶுபஸூசகமே.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்.

கீழ்ஸஞ்சிகையில் ப்ரமாணங்களைப்பற்றி யதோசிதம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அ ப்ரமாணங்களால் அறியக்கூடிய ப்ரமேயங்கள் இவைகள் என்பது நிரூபிக்கப்படுகிறது.

ப்ரமேயங்கள் என்றால் ப்ரமாணங்களால் அறியத் தகுந்தவைகள். அவைகள் ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம் என்று சொல்லப்படுகிற அர்த்த பஞ்சகங்கள்.

அவைகளில், ஸ்வஸ்வரூபமாவது ஆத்மஸ்வரூபம் எனப்படும். ஆத்மஸ்வரூபமாவது தேக இந்த்ரியமநஃ ப்ராண புத்திகளைக்காட்

டிலும் வேறுபட்டதாய் நித்யமாய் நிர்விகாரமாய் ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாய் ஜ்ஞாநமாய் அணுவாய் ஈச்வரனுக்கு சேஷமாய் பாதந்த்ர்யமாயிருக்கும்.

தேஹாதிகளைக் காட்டில் ஆத்மா வேறுபட்டது என்று சொல்வது எப்படி? எனில், காணப்படுகிற தேஹம், என்னுடைய தேஹம் என்று சொல்லப்படு கின்றமையாலும் ஆத்மா நான் என்று தோற்றுகையாலும் இந்த தேஹமானது ஜாக்ரத்தசையில் (விழித்துக்கொண்டிருக்கும்பொழுது) நான் பருத்தவன் சிறுத்தவன் என்று ஆத்மாவாகத் தோற்றினாலும் ஸுஷுப்திதசையில் (உறங்கும்பொழுது) அவ்வாறு தோற்றக் காணாமையாலும் ஆத்மா உறங்குவதற்குமுன் எல்லாவற்றையும் அறிந்திருந்து உறங்கும் பொழுது என்னுடம்பைக் கூட நான் அறிந்திலேன் என்று உறங்கி எழுந்தபொழுது சொல்லக் காண்கையாலும், ஸுஷுப்திதசையோடு ஜாக்ரத்தசையோடு வாசியற எப்பொழுதும் தோற்றுகையாலும் ஆத்மா தேகத்தைக் காட்டிலும் வேறுபட்டவன். மேலும் இந்த தேஹம் செவி, வாய், கண், மூக்கு, உடல் முதலான அனேக அவயவங்களின் ஸங்யா (கா) தம் (சேர்க்கை) ஆகையாலும் அஹம் (நான்) என்கிற வ்யவஹாரார்ஹனை ஆத்மா ஒருவனாகத் தோற்றுகையாலும் தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவன். இன்னமும், "நான் முன்பு கண்ணும் செவியுமுள்ளவனாயிருந்தேன். இப்போது குருடனும் செவிடனும் ஆனேன். முன்பு என் மனது நன்றாயிருந்தது ஆதலால் எதையும் நன்றாயறியுமவனாயுமிருந்தேன். இப்போது அது அவ்வளவு ஸரியாயில்லாமையால் நான் ஒன்றும் அறிந்துகொள்ள முடியாதவனாயிருக்கிறேன். முன்பு ஜ்ஞாநமுடையவனா யிருந்தேன். இப்போது ஜ்ஞாநமில்லாதவனாய் விட்டேன் என்று வ்யவஹரிக்கக் காண்கின்றமையாலும், ஆத்மா தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவன். இவ்வாறு ப்ரத்யக்ஷத்தாலும் அநுமானத்தாலும் ஆத்மா தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று தோற்றக் கடவதாயிருக்கும். மேலும் "பஞ்ச விம்சோயம் புருஷ:" "பஞ்ச விம்ச ஆத்மாபவதி"ய: பர: ப்ரக்ருதே: ப்ரோக்த: புருஷ: பஞ்ச விம்சக:| ஸஏவ ஸர்வபூதாத்மா நாஇத்ய பிதீயதே || என்று ஆத்மா இருபத்தைந்தாவது தத்வமென்றும் அவனே புருஷன் என்று சொல்லப்படுகிறான், என்றும் சப்த ப்ரமாணங்களாகிற சருதிஸ்ம்ருதிகளாலும் ஆத்மா தேஹாதிகளைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று சொல்லப்படுகிறது.

நித்யமாவது ஸர்வகாலத்திலும் உண்டாயிருக்கை. இவ்விடத்தில் ஆத்மா நித்யனானால் பிறந்தான், இறந்தான் என்று சொல்லுவானேன்? எனில், தேஹ ஸம்பந்தத்தைப் பெற்றபொழுது பிறந்தான் என்றும் தேஹவியோகத்தை அடைந்தபொழுது இறந்தான் என்றும் வ்யவஹரிக்கின்றார்களே அல்லாமல் ஆத்மா பிறந்தான், இறந்தான் என்று அர்த்தமில்லை. இவ்வர்த்தத்தை "நஜாயதே ம்ரியதே வா விபச்சித்" "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ" "நித்யோ நித்யாநாம்" என்று ச்ருதியும், "ப்ருக்ருதிம் புருஷஞ் சைவ வித்யநாதீ உபாவபி" "நஜாயதே ம்ரியதேவா கதா சித்" என்று கீதையிலும் மற்றும் அனேக ஸ்தலங்களிலும் சொல்லப்படுகையால் ஆத்மா நித்யன் என்று சொல்லப்படுகிறான். நிர்விகாரன் என்பது அசித்துப்போல விகாரப் படாமல் எப்போதும் ஒரு படிப்பட்டிருக்கை. இவ்வர்த்தத்தை "அம்ருதாக்ஷரம்ஹர:" என்றும் "ஆத்மா சுத்தோக்ஷர:" என்றும் சொல்லப்படுகிற ச்ருதி வாக்யங்கள் அறிவியாநிற்கும்.

ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாயிருக்கையாவது, விளக்கும், விளக்கின் வெளிச்சமும் தேஜஸ்ஸாயிருந்தாலும் விளக்கு வெளிச்சத்திற்கு ஆச்ரயமாயிருக்குமாப் போலே ஆத்மா ஜ்ஞாநமாயிருக்கச் செய்தேயும் ஜ்ஞாநத்திற்கு இருப்பிடமாயு மிருக்கும். இவ்விடத்தில் ஆத்மா, ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாகில் சாஸ்த்ரங்களில் இவ்வாத்மாவை "விஜ்ஞாநமய:" என்றும், "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே" என்றும், ஜ்ஞாநமென்றும் சொல்லுவானேன்? என்று சங்கிக்கக்கூடும். இவ்வாத்மாவிற்கு ஜ்ஞாநம், ப்ரதாந குணமாய் ஸ்வஸ்வரூபத்திற்கு நிரூபக தர்ம்மா யிருக்கையாலும் ஆத்மாவை ஜ்ஞாநம் என்றும் சொல்லக் குறையில்லை. இவ்வர்த்தத்தை "தத்குண ஸாரத் வாத்தத் வ்யபதேச:" என்கிற ஸூத்ரம் தெரிவியாநிற்கும்.

அணுவாயிருக்கையாவது ஹ்ருதயத்திலிருக்கையும், அதில் நின்றும் வெளியேறிச் செல்லுதலையும் மறுபடியும் வருகையையும் சொல்லுகையாலே அணுவாகக் கடவன். விபுவானால் இவ்வாறு செல்லக்கூடாதிறே. இவ்வர்த்தத்தை "ஏஷோணுராத்மா சேதஸா வேதிதவ்ய:" முதலான ச்ருதிகள் அறிவியாநிற்கும்.

இவ்வாத்மா ஈச்வரனுக்கு சேஷமாயிருக்கும். கீழ்ச்சொன்ன ஸ்வரூபங்களைக் காட்டிலும் சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்பது ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம். இந்த சேஷத்வ விவரணம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

ப்ரஹ்ம ஸூத்ரமும்—ராமாநுஜ ஸித்தாந்தமும்

[பெருமாள் கோயில்
ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்.]

உபநிஷத்துக்களின் ஒரு மிடறான தாற்பரியத்தை நிர்ணயம் செய்வதற்கு ப்ரவர்த்தித்தவர் வ்யாஸ மஹர்ஷி. இவர் இயற்றியது சாரீரக மீமாம்ஸை. இதுவே ப்ரஹ்மஸூத்ர மெனப்படும். அதற்குப் பல.பாஷ்யங்கள் அவதரித்திருந்தாலும் நம் இராமானுசமுனி அருளிச் செய்த ஸ்ரீ பாஷ்யமே ஸூத்ரகாரருடைய ஹ்ருதயத்தை நன்கு அநுஸரித்தது என்பது பிராமாணிகர்களின் கொள்கை.

அந்த ப்ரஹ்மஸூத்ரத்தில் முதல் அத்யாயத்தில் நான்காவது பாதத்தில் ஆருவது அதிகரணம் வாக்யாந்வயாதிகரண மென்பது. இதன் ப்ரமேயத்தை ஆராய்ந்து பார்த்தால் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தின் ஆர்ஜவம் விளங்கும்.

ப்ருஹதாரண்யகமென்னும் உபநிஷத்தில் மைத்ரேயீ ப்ராஹ்மணம் என்னும் பகுதியில் (6—5—6) "நவாசுஅரெ வத்யுஃ காமாய வதிஃப்ரியொ ஹவதி ஆத்மநஸ்துகாமாய வதிஃப்ரியொஹவதி" (நவா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோபவதி ஆத்மநஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி) என்று தொடங்கி, "நவா அரெ ஸவஸ்ய காமாய ஸவம்ப்ரியம்ஹவதி ஆத்மநஸ்துகாமாய ஸவம் ப்ரியம் ஹவதி ஆத்மாவாஅரெ த்ரஷ்டவ்யஃ ஶ்ரோதவ்யொ மந்தவ்யொ நிதித்யாஸிதவ்யஃ......" (நவா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:) என்று ஓதப்பட்டிருக்கின்றது. மோக்ஷோபாயம் எது? என்று கேட்கிற மைத்ரேயியை நோக்கி யாஜ்ஞவல்க்யர் ஆத்மோபாஸநத்தை மோக்ஷோபாயமாக உபதேசிக்கிருரிங்கு. இதில் உபாஸ்ய வஸ்துவாகச் சொல்லப்பட்டிருக்கிற ஆத்மா ஜீவாத்மாவா? பரமாத்மாவா? என்கிற ஸம்சயத்தைப் போக்குவதற்காக இந்த வாக்யாந்வயாதிகரணம் ப்ரவர்த்தித்திருக்கின்றது.

மேலே காட்டியுள்ள மைத்ரேயீ ப்ராஹ்மண ப்ரகரணத்தில் உள்ள கீழ் மேல் வாக்கியங்கள் யாவும் பரமாத்ம விஷயமாகவே

அந்வயிக்கக் கூடியவையாயிருப்பதால்-ஜீவாத்ம விஷயமாகச் சிறிதும் அந்வயிக்கமாட்டாமையால் இங்குள்ள ஆத்மா என்கிற பதம் பரமாத்மாவைக் காட்டுமேயல்லது ஜீவாத்மாவைக் காட்டமாட்டாது என்பதாக ஸித்தாந்தம் செய்கிறது. [வாக்யாந்வயாத்] வாக்யாந்வயாத் என்னும் ஸூத்ரம்.

இந்த அதிகரணத்தில் இதற்குமேல் மூன்று ஸூத்ரங்கள் இருக்கின்றன. அவை எதற்காக வந்தவையென்னில்; மேற்குறித்த மைத்ரேயீ ப்ராஹ்மணத்தில் பரமாத்மோபாஸநமே விவக்ஷிதமாகில் ஜீவாத்மவாசியான ஆத்மா என்கிற சொல்லாலே பரமாத்மாவைச் சொல்லியிருப்பானேன்? என்கிற கேள்விக்கு விடையளிப்பாக அந்த மூன்று ஸூத்ரங்கள் வந்தன. "ப்ரதிஜ்ஞாஸிசெலிங்மாஶ்மரத்யஃ" (ப்ரதிஜ்ஞா ஸித்தேர் லிங்க மாஶ்ம ரத்ய:) "உத்க்ரமிஷ்யத ஏவம்ஹாவாதித்யௌடுலொமிஃ" (உத்க்ரமிஷ்யத ஏவம் பாவாதித்யௌடுலோமி:) என்கிற இரண்டு ஸூத்ரங்கள் கடந்த பிறகு உள்ள அவஸ்திதெரிதி காஶக்ருத்ஸ்நஃ (அவஸ்திதேரிதி காஶக்ருத்ஸ்ந:) என்கிற மூன்ருவது ஸூத்ரத்தை இப்போது எடுத்துக் கொள்வோம். இதனுல் என்ன சொல்லப்படுகின்றதென்ருல், ஆத்மா என்கிற சப்தத்தினுல் பரமாத்மாவைச் சொல்லுவது பொருந்தும்; அது ஜீவாத்மவாசக சப்தமாகவேயிருந்தாலும் ஜீவாத்மாவினுள்ளே பரமாத்மா உயிராக இருக்கின்ருரென்பது "ய ஆத்மநி திஷ்ட்ந் ஆத்மநொஅந்தரொ யமாத்மா நவெத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரொயமயதி ஸத ஆத்மாஅந்தர்யாம்யம்ருதஃ" (ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோந்தரோ யமாத்மா நவேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோயமயதி ஸதஆத்மா அந்தர்யாம்யம்ருத:) இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களினுலே ஸித்தமாதலால், தனக்கு சரீரமான ஜீவாத்மாவில் ஆத்மாவாகப் பரமாத்மா இருப்பதனுல் ஜீவசப்தத்தாலே ப்ரஹ்மத்தை ப்ரதிபாதநம் பண்ணினபடி என்று காசக்ருத்ஸ்நர் என்பவர் அபிப்ராயப்படுவதாக இந்த ஸூத்ரத்தினுல் சொல்லப்படுகிறது.

சரீராத்மபாவத்தைக் கொண்டு அபேதச்ருதி நிர்வாஹம் செய்யத்தக்கது என்பதே இந்த ஸூத்ரத்தினுல் தேறியதாகும். ஸ்ரீ பாஷ்யத்திலும் வேதாந்த ஸாரத்திலும் வேதாந்த தீபத்திலும் இந்த ஸூத்ரத்தை விவரிக்குமிடத்தில் எம்பெருமானுர் இவ்வர்த்தமே ஸூத்ரகாரர்க்கு அபிமதம் என்பதை நிரூபித்தருளியிருக்கிருர்.

இந்த ஸூத்ரத்திற்குக் கீழ் இரண்டு ஸூத்ரங்களால் கூறப்பட்டுள்ள விஷயம் இந்த ஸூத்ரத்தின் அர்த்தத்தோடு இணங்க மாட்டாமையாலும் வஸ்துத: துஷ்டமாகையாலும் இதற்குமேல் வேறொரு அபிப்ராயத்தைக் காட்டாமல் இவ்வளவோடு நிறுத்தி விட்டபடியாலும் இதுவே வ்யாஸர்க்கு அபிமதம் என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஸூத்ரத்திற்கு பாஷ்யமிடாநின்ற ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளும் “ 𑌕𑌾𑌶𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍀𑌯𑌂 𑌮𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍁𑌸𑌾𑌰𑍀𑌤𑌿 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 ” (காஶக்ருத்ஸ்நீயம் மதம் ஶ்ருத்யநு ஸாரீதி கம்யதே:) என்று எழுதியுள்ளார். ஆனால் அவர் ப்ரக்ருத ஸூத்ரத்தின் அர்த்தத்தை வேறு வகையாக உரைத்திருக்கின்றார். 𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌃 (அவஸ்திதே:) என்று ஸூத்ரத்திலுள்ள பதத்திற்கு ‘இருப்பதனாலே’ என்று பொருள். எங்கே எது எவ்விதமாக இருப்பதனாலே? என்று கேள்வி பிறக்கும். ஜீவாத்மாவினிடத்தில் பரமாத்மா உயிராக இருப்பதனாலே என்று சொல்லவேண்டும். இங்ஙனமே நம்முடைய பாஷ்யகாரர் அருளிச் செய்தார்.

சங்கராசார்ய ஸ்வாமிகளோவென்னில், “ 𑌅𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌅𑌨𑍇𑌨𑌾𑌪𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑍇𑌨 𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌤𑍍 𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑌿𑌦𑌮𑌭𑍇𑌦𑍇𑌨𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑌣𑌮𑌿𑌤𑌿 𑌕𑌾𑌶𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 ” (அஸ்யைவ பரமாத்மந: அநேநாபி விஜ்ஞாநாத்மபாவேந அவஸ்தாநாத் உபபந்நமிதம் அபேதேந உபக்ரமணமிதி காஶக்ருத்ஸ்ந ஆசார்யோ மந்யதே) என்று தமது பாஷ்யத்தில் எழுதியுள்ளார். ‘பரமாத்மாவே ஜீவாத்மாவாக இருப்பதனாலே’ என்பது இவருடைய அர்த்தமாகத் தேறுகிறது. ஸூத்ரகாரர் இவ்வர்த்தத்தை விவக்ஷித்திருக்கமாட்டாரென்பது 𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌃 (அவஸ்திதே:) என்கிற பதத்தின் ஸ்வாரஸ்யத்தை உணர்ந்தவர்கட்கு எளிதாகத் தெரியும். அதைப் பற்றிப் பிறகு விரிவாகப் பேசுவோம். இரண்டாவது அத்யாயத்தில் மூன்றாவது பாதத்திலுள்ள “ 𑌚𑌰𑌾𑌚𑌰𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍋 𑌭𑌾𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ” (சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத்தத்வ்யபதேஶோ பாக்ஸ்தத்பாவ பாவித்வாத்) என்கிற ஸூத்ரத்தாலும் 𑌶𑌰𑍀𑌰𑌵𑌾𑌚𑌿𑌶𑌬𑍍𑌦 (சரீரவாசிஶப்த) ங்களுக்கு ஶரீரிபர்யந் தத்வம் நிர்ணயிக்கப்படுவதால் இதனை உபஜீவித்தே 𑌅𑌭𑍇𑌦𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌂 (அபேதநிர்த்தேஶம்) ஆங்காங்குச் செய்யப்படுவதாகக் கொள்வது மிகவும் பொருந்துகின்றது.

இவ்விஷயத்தை நமது நெஞ்சில் திடமாகத் தேக்கிக் கொள்ளுமாறு ஸ்ரீரங்கராஜஸ்தவ-உத்தரசதகத்தில் பட்டர் இரண்டு ச்லோகங்கள் அருளிச்செய்துள்ளார். “ 𑌦𑍇𑌹𑍋 𑌦𑍇𑌹𑌿𑌨𑌿 𑌕𑌾𑌰𑌣𑍇 𑌵𑌿𑌕𑍃𑌤𑌯𑌃 ” (தேஹோ தேஹிநி காரணே விக்ருதய:) என்பதும் “ 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿.... ” (ஸ்திதியுத்பத்தி ப்ரவ்ருத்தி) என்பதும் அவை. அந்த இரண்டு ச்லோகங்களின் பொருளை நன்கு உணரப்பெற்றால் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸாரத்தை நாம் உணர்ந்தோமாவோம். அடுத்த ஸஞ்சிகையில் அதனை விவரிப்போம்.

நம்முடைய ஸித்தாந்தத்தில் நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் ஸகல சேதநாசேதநங்களும் ஸர்வேஶ்வரனுக்கு சரீரம்; அவன் சரீரி என்பதேயாம். இதுவே சரீராத்மபாவம் எனப்படும். இது ஸகல வேதாந்தப் பெட்டிகளுக்கும் ஒரு திறவு கோல்போன்றது. இதை வைத்துக்கொண்டு எந்த உபநிஷத் வாக்யத்தையும் திறந்து நாம் நிராபாய(பாத)மாக அநுபவிக்கலாம். இதற்கு ப்ரதாந ப்ரதி தந்த்ரம் என்று வ்யவஹாரம். நம்முடைய ஸித்தாந்தத்திற்கு அந்தரங்கமாகவுள்ள அர்த்தவிசேஷங்களுள் இந்த சரீராத்மபாவமே முதன்மைபெற்றதென்றும், இதைச் செவ்வனே தெரிந்து கொண்டால் ஒரு ப்ரதிபக்ஷியும் நம் எதிரேநின்று ஒரு கோலாகலமும் செய்யமுடியாதென்றும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்கிறார்:- “ 𑌯𑌦𑍍𑌯𑍇𑌤𑌂 𑌯𑌤𑌿𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌕𑌥𑌿𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌷𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌮𑌯𑍁𑌗𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌃 । 𑌤𑌤𑍍𑌰𑍈𑌕𑌤𑍍𑌰 𑌝𑌟𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑍈𑌤𑌿 𑌵𑌿𑌲𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌤𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌹𑍇𑌵𑌾𑌕𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌨𑌹𑍈𑌤𑍁𑌕𑌕𑌥𑌾𑌕𑌲𑍍𑌲𑍋𑌲 𑌕𑍋𑌲𑌾𑌹𑌲𑌃 ॥ ” (யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் வித்யாதவியாதம: ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ர மந்திமயுகே கஶ்சித் விபஶ்சித்தம:—தத்ரைகத்ர ஜடித்புபைதி விலயம் தத்தந்மதஸ்தாபநா ஹேவாக ப்ரதமாநஹைதுக கதா கல்லோல கோலாஹல:—என்பது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் தேசிகனுடைய திவ்ய ஸூக்தி. எம்பெருமானாரருளிச்செய்த சரீர சரீரபாவமாகிற இந்த ப்ரதாநப்ரதி தந்த்ரமானது அவித்யையாகிற இருளைத் தொலைக்க வல்லது; இதனை நன்றாக ஒருவன் தெரிந்து கொள்வானாயின் அவனே மஹாபண்டிதன்; அப்படிப்பட்ட ஒருவன்

இருந்தாலும் போதும்; எத்தனை வாதிகள் கூடி எவ்வளவு குதர்க்க கோலாஹலங்கள் செய்தாலும் அவற்றையெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் அவலீலையாக ஒழித்திட அவ்வொரு வ்யக்தியே போதும் என்று இதனால் பரம கம்பீரமாக அருளிச் செய்தாராயிற்று.

நவவித ஸம்பந்த விவரணம்

[பெருமாள் கோயில்
ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

எம்பெருமானோடு நமக்குள்ள உறவைத் தெரிந்துகொள்வதே சிறந்த தவமென்றும், அந்த உறவு ஒன்பது வகையாகத் திருவெட்டெழுத்தெனும் திருமந்திரத்தில் தேறுகின்றதென்றும் முன்னம் நிரூபித்தோம். அவ்வுறவுகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்யப் புகுவோமினி.

திருமந்திரத்தில் முதலெழுத்தாகிய அகாரத்தில் ப்ரக்ருதி சக்தியினால் எம்பெருமானே ஸகல ஜகத்காரணபூதன் என்று விளங்குகின்றதென்று நிரூபித்திருக்கிறோம். அவன் காரணபூதனானால் உலகமெல்லாம் அவனுடைய காரியப்பொருள் என்பது சொல்லாமலே விளங்குகின்றது. அவன் பிதாவாய் நாமெல்லாரும் அவனுடைய மக்கள் ஸ்தானத்திலே யிருக்கின்றோமென்றவாறு.

எம்பெருமான் விபவாவதாரங்களில் தன்னுடைய பித்ருத்வத்தை மறைத்துக்கொண்டு தசரத புத்திரன் வஸுதேவ புத்திரன் என்றாற்போலே சிலர்க்குப் புத்திரனாயிருக்குந் தன்மையை ஏறிட்டுக் கொண்டாலும் அவனுக்குக் காரணத்வம் பறியுண்டு கார்யத்வம் வந்துவிடாது. தன்னுடைய க்ருபாதிசயத்தினால் பிறக்கிறானேயல்லது நம்மைப்போலே கருமத்தினால் பிறக்கிறானல்லன். இதை "அஜாயமானோ பஹுதா விஜாயதே | தஸ்ய தீராঃ பரிஜானந்தி யோநிம்" (அஜாயமானோ பஹுதா விஜயதே தஸ்யதீரா: பரிஜாநந்தியோநிம்) என்றும் "பிதா புத்ரேண பித்ருமான் யோநியோநௌ நாவேதவின் மநுதே தம் ப்ருஹந்தம்" (பிதாபுத்ரேண பித்ருமாந் யோநியோநௌ நாவேதவிந் மநுதேதம் ப்ருஹந்தம்) என்றும் வேதபுருஷன் ஓதுகின்றான். நாம் பலயோனிகளிலும் பிறப்பது போலவே அவனும் பலபல யோனிகளில் பிறப்பதாகக் கேள்விப்படுகிறோம். கீதையில் தானே அருளிச் செய்கிறான் "பஹூநி

மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந" (பஹூநிமேவ்யதீதாநி ஜந்மாநிதவசார்ஜுந) என்று. நம்மைக் காட்டிலும் அதிகமாகவே அவன் பிறக்கிறான் என்றும் சொல்லலாம். ஆனாலும் நம்முடைய பிறப்புக்குக் கருமம் காரணமாயிருப்பதுபோல வல்லாமல் கேவலம் கருணையே அவனுடைய அவதாரங்களுக்குக் காரணமாயிருக்கின்றமையால் பிறக்கப் பிறக்க அவனுக்குத் தேசு பொலிகின்றது. இதை "ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாநঃ" (ஸ உஶ்ரேயாந் பவதி ஜாயமாந:) என்றும் "பலபிறப்பா யொளிவரும்" என்றும் உபய வேதங்களும் அறைந்தன. மகனொருவர்க்கல்லாத மாமேனி மாயனை அவனுடைய அவதார நீர்மைகளை மற்றொருகால் அநுபவிப்போம். இப்போது அவனது காரணத்வப் பெருமையைப்பற்றிப் பேசுவோம்.

பரப்ரஹ்மத்தைப்பற்றிப் பேசத் தொடங்கிய உபநிஷத்து முந்துறமுன்னம் "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே தத் ப்ரஹ்ம" (யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே தத்ப்ரஹ்ம) என்று ஜகத் காரணத்வத்தையே ஓதிற்று. "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" (அதாதோப்ரஹ்மஜிஜ்ஞாஸா) என்று ப்ரஹ்மவிசாரம் செய்யப்புகுந்த வ்யாஸரும் அடுத்த ஸூத்ரத்தினால் "ஜந்மாத்யஸ்ய யதঃ" (ஜந்மாத்யஸ்யயத:) என்று சொல்லி ஜகத் காரணத்வத்தையே ப்ரஹ்மலக்ஷணமாகப் பேசினார். பரப்ரஹ்மமாகத் தம்மை அநுசரிக்கப்புகுந்த நம்மாழ்வாரும் "கடல்ஞாலம் செய்தேனும் யானே யென்னும்" என்று முந்துறப் பேசினது இதனையே. மாறனடி பணிந்துய்ந்த விராமானுசனும் ஸ்ரீ பாஷ்யத்தின் உபக்ரமத்தில் "அகிலபுவநஜந்ம...." (அகிலபுவநஜந்ம) என்று இந்தக் காரணத்வத்தையே பேசியிழிந்தார். உபநிஷத்துக்களெல்லாம் ஒருமிடறாக "காரணம் து த்யேயঃ" (காரணந்து த்யேய:) இத்தியாதிகளாலே காரணவஸ்துவையே உபாஸிக்குமாறு விதித்திருப்பதனால், எம்பெருமானைக் காரண பூதனாக நாம் நன்றாகத் தெரிந்துகொள்ளவேணும்.

இவ்வுலகத்திற்குக் காரணமான வஸ்து யாதொன்றும் கிடையாதென்றும், எல்லாம் இயற்கையாகவே ஜநிக்கிறதென்றும் கூறுகிற இதரவாதிகளை விட்டிடுவோம்; அநுமாநத்தாலே ஒரு ஈஶ்வரனை ஸாதித்து அவனை ஜகத்காரணமாகக் கொள்ளுகிற நையாயிகர்களையும் விட்டிடுவோம். ஶாஸ்திரத்தையே கண்ணாகக்கொண்டு அதனாலேயே ஈஶ்வரனையும் அவனுடைய காரணத்வத்தையும் பேசுகின்ற பரம வைதிகர்களின் உக்திகளையே பின்சென்று நாம் பேசக்கடவோம்.

முற்காலத்தில் ஒருவன் ஶாஸ்திரங்களையெல்லாம் படித்திருந்தும் ஆஸ்திக்ய மில்லாமையினாலே ஈஶ்வரன் காரணமல்லன் என்றே யெண்ணியிருந்தான் ; அவன் ஒருநாள் வெளியே புறப்பட்டுப் பற்பல வற்றையும் ஆழ்ந்து நோக்குமிடத்து, இப்படி விசித்திரமான பிரபஞ்சங்களைப் படைத்தவன் விலக்ஷணசக்தியுக்தனான வொரு முழுமுதற் கடவுளாகவேயிருக்கத் தகும் என்றெண்ணி, வழிநடந்துகொண்டே போம்போது மிகப் பெரிய ஆலமரமொன்றையும் பூசினிக்கொடியையும் பார்த்து, ப்ரபஞ்ச கர்த்தாவான ஈச்வரன் புத்திசாலியல்லன் போலும் என நினைத்தான் ; ஏன்? மிகப் பெரிதான ஆலமரத்திற்கு மிகச் சிறிய காய்களையும், மிகச் சிறிதான பூசினிக்கொடிக்கு மிகப் பெரிய காய்களையும் படைத்திருக்கக் கண்டதனால்.

இங்ஙனே சிந்தித்துக்கொண்டே அவன் வழிநடந்த ஆயாசத்தினால் அந்த ஆலமரத்தினடியிலேயே கிடந்து நெடுநேரம் உறங்கிவிட்டான். பிறகு கண்விழித் தெழுந்ததும் தன் உடல் முழுவதிலும் ஆலங்கனிகள் விழுந்திருந்ததைக் கண்டு, ‘அஹஹ! எம்பெருமானுடைய புத்தியின் பெருமையை என்ன சொல்லுவேன்!’ என்று மிகவும் வியந்தான். முன்பு தான் நினைத்தபடி அவ்வாலமரத்திற்குப் பெரிய காய்கள் இருந்திருக்குமானால் அவை விழுந்து தன் மார்பு பிளந்திருக்குமன்றோ. ஆலமரம் மற்ற மரங்களைப்போலல்லாமல் நிழலுக்காக அனைவராலும் ஆஶ்ரயிக்கப்படக் கூடியதாதலால் இதற்குப் பெருத்தகாய்கள் இருக்கலாகாதென்றும், பூசினிக்கொடி நிலத்தின்மீது படர்வதாதலால் எவ்வளவு பெரிய காயாயிருப்பினும் ஸர்வம்ஸஹையான பூமிப்பிராட்டி தாங்குகின்றாளாதலால் அதற்குப் பெரிய காய்கள் இருக்கலாமென்றும் இவ்வள்வு விசாலமாகத் திருவுள்ளங் கொண்டு ஒவ்வொரு அமைப்பையும் ஜனங்களின் ஸௌகரியத்திற்கு ஏற்பவே செய்தருளியிருக்கின்ற மிகு ஞானச் சிறு குழவியான ஸர்வேஶ்வரனை புத்திஹீனனாக நினைத்தேனே பாவியேன்! என்று தன்னைத் தானே நொந்துகொண்டனனாம்.

இங்ஙனம் பாமரர்களும் அதிசயிக்கக்கூடிய விலக்ஷணமான சக்தியும் ஞானமும் வாய்ந்த பரமபுருஷனையே இவ்வுலகம் காரணமாகக் கொண்டிருக்கவும் அவனுக்குக் காரணத்வத்தை இசையாதே ப்ரக்ருதியே காரணமென்றும் ஜீவனே காரணமென்றும் கூறுகின்ற பிறசமயிகள் கிடக்க. எம்பெருமானே ஸகல ஜகத்காரண பூதன் என்று நாம் தெரிந்துகொண்டபின் அதிலுமுட்புகுந்து இன்னமுஞ் சில விஷ

யங்கள் தெரிந்துகொள்ளவேண்டியவையுண்டு. உலகில் ஒரு காரியப் பொருள் பிறக்கவேணுமானால் மூவகையான காரணப்பொருள்கள் இருந்துதீரவேண்டும். பானையென்கிற ஒருபொருள் உண்டாகவேணுமானால் மண்வேண்டும், தண்ணீர் தடி சக்கரம் முதலியனவேண்டும், குயவன் வேண்டும் இப்படியே துணியென்கிற வொருபொருள் உண்டாகவேணுமானால் நூல் வேண்டும், நசவுப் பலகை முதலியன வேண்டும் ; சேணியன்வேண்டும். இத்தகைய காரணப்பொருள்களை உபாதாந காரணமென்றும் ஸஹகாரி காரணமென்றும் நிமித்தகாரணமென்றும் ஶாஸ்த்ரஜ்ஞர்கள் கூறுவார்கள். எந்த வஸ்துதானே காரிய வஸ்துவாக மாறுதலையடைகின்றதோ அது உபாதாந காரணமெனப்படும். மண்தானே பானையாக மாறுகின்றது ; நூல்தானே துணியாக மாறுகின்றது. ஆகவே அவை உபாதாந காரணமாம். தண்ணீர் தடி சக்கரம் முதலியவை பானையை யுண்டாக்குவதற்குத் துணைக் கருவிகளாக நிற்பதனால் அவை ஸஹகாரி காரணமெனப்படும். மேற்கூறிய இருவகைக் காரண வஸ்துக்களையுங் கொண்டு கர்த்தாவாக நிற்கிறவன் நிமித்தகாரணமெனப்படுவான். காலம் அதிருஷ்டம் முதலியனவும் இவ்வகுப்பிற் சேரும். ஆக இப்படிப்பட்ட மூவகைக் காரணங்களும் கார்ய ஸ்ருஷ்டிக்கு இன்றியமையாதனவாதலால் மிக விரிவான இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டிக்கு ஸர்வேஶ்வரன் நிமித்த காரணமென்கிற ஒரு காரணமாகத்தானே இருக்கமுடியும்; மற்ற உபாதான காரணமும் ஸஹகாரி காரணமும் எவை? என்று கேள்வி பிறக்கக்கூடும். மூவகைக் காரணங்களும் பகவானே என்று சாஸ்த்ரங்கள் கூறும். அது எங்ஙனே பொருந்தும் என்கிற ஆக்ஷேபங்களும் அவற்றின் ஸமாதானங்களும் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

நம்பெருமாள் திருமஞ்சனமும் பட்டர் ஈடுபாடும்

[பெருமாள் கோவில்
ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

கூரத்தாழ்வான் திருக்குமாரராகிய ஸ்ரீ பராசர பட்டர் கோயிலில் வாழும் நம்பெருமாளுடைய திருமஞ்சனங்களை ஸேவிக்குங் காலங்களில் அந்த ஸந்நிவேசத்தில் ஈடுபட்டும் வடிவழகில் ஈடுபட்டும் சமத்காராதிசயம் பொலியப் பலச்லோகங்களை அருளிச் செய்திருக்கி

ளுர். அவை நாளைக்கும் அவருடைய திருவம்சஸ்தர்களால் திருமஞ்சன ஸமயங்களில் விண்ணப்பம் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றுள் "த்வம்மேऽஹம்மே" என்கிற ஒரு ச்லோகம் மிகவும் அற்புதமாக அமைந்தது. இதனை நம் ஆசாரியர்கள் வியாக்யான க்ரந்தங்களிலே கையாண்டு வருகின்றனர். இதன் அரிய பெரிய பொருள் இங்கு விவரிக்கலாகிறது. ஸ்ரீ ரங்கநாதன் தோளிணை மேலும் நன் மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையையுடையனாய்த் திருமஞ்சனங் கொண்டருள ஸந்நத்தராயிருக்கும் படியைப் பார்த்தால் பிரமாணம் செய்ய ஸித்தராயிருக்கிறாரோ என்று உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யுள்ளது என்று பட்டர் திருவுள்ளம் பற்றுகிறார். உலகத்தில் பிரமாணம் செய்பவர்கள் துளசிமாலை யணிந்துகொண்டு ஒரு முழுக்குப் போடுவது வழக்கமாதலால் எம்பெருமானும் அங்ஙனே செய்கிறானே என்று உல்லேகிக்கிறார். பிரமாணம் செய்யவேண்டிய ஆவச்யகதை எம்பெருமானுக்கு என்ன வந்தது என்னில், உலகத்தில் பிரமாணம் செய்பவர்கள் எதற்காகச் செய்வது வழக்கம் என்று பார்த்தால், ஒருவன் தன்னுடைய ஸொத்தைப் பிறன் கொள்ளை கொண்டால் அதைத் தனக்கு ஸ்வாதீனப் படுத்தித் தரவேணுமென்று நியாயாலயத்தில் விண்ணப்பம் செய்துகொண்டு உண்மையில் அந்த ஸொத்து யாருடையது என்று தெரிந்து கொள்வதற்காக ஸாக்ஷி விசாரணை முதலியன செய்யப்படுங் காலத்திலே தகுந்த ஆதாரங்களைக்கொண்டு உண்மையை ஸ்தாபித்துக்கொள்ள முடியாமல் அந்தோ! நம்முடைய ஸொத்தை அநியாயமாக இழந்துவிட நேருகின்றதே! என்கிற அநுதாப முடையார் கடைசியாக ஒரு வார்த்தை சொல்லுவதுண்டு. "இது என்னுடைய ஸொத்துதான் என்று பிரமாணம் செய்ய நான் துளசிமாலை யணிந்து முழுக்கிட்டு விடுகிறேன்; நியாயாதிபதிகள் அது கொண்டாவது உண்மை யுணரவேண்டும்" என்பர்கள். நியாயாதிகாரிகளும் அதனை ஆதரித்துத் தீர்ப்புக் கொடுப்பதுண்டு. இது இன்னமும் வழக்கத்திலுள்ளது. இவ்விதமாகவே எம்பெருமானுக்கும் பிரமாணம் செய்யவேண்டிய ஆவச்யகதை நேர்ந்துவிட்டதாம். அது ஏதெனில், சேதநவர்க்கம் என்கிற ஸொத்து எம்பெருமானுடையது; ஆனால் அந்த ஸொத்தை "கிம்தேந ந க்ருதம் சோரேணாத்மாபஹாரிணா" என்றும் "பண்டே யுன் தொண்டாம் பழவுயிரை யென்னதென்று கொண்டேன்" என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸாரிகள் கொள்ளை கொண்டார்கள். இந்த

ஸொத்து என்னுடையது என்கிறான் எம்பெருமான். ஸம்ஸாரிகளோ 'இது உன்னுடையதல்ல, எங்களுடையதே' என்கிறார்கள். விவாதம் முற்றிவிட்டது. ஸம்ஸாரிகள் அடாவடியில் பலிஷ்டர்களாகையாலே அவர்களுடைய வாதமே மேம்பட்டு எம்பெருமானுடைய வாதம் தோல்வி யடையும்படியான நிலைமையிலே வந்துவிட்டது. அந்தோ! அந்யாயமாய் நம்முடைய ஸொத்தை இழந்துவிட நேருகின்றதே! என்கிற பரிதாபம் எம்பெருமானுக்கு உண்டாய் விட்டது. 'இந்த ஸொத்து என்னுடையதுதான் என்று பிரமாணம் செய்தாகிலும் இதனை நாம் இழவாமல் அடைந்தே தீரவேண்டும்' என்கிற அபிநிவேசம் எம்பெருமானுக்கு உண்டாய் விட்டது. அது துளசிமாலை யணிந்து முழுக்கிட்டுச் செய்யவேண்டிய காரியமாதலால் இந்தத் திருமஞ்சன மென்கிற வியாஜத்தாலே அது செய்யப்படுகிறது போலும் என்பது பட்டருடைய உல்லேக சமத்காரம்.

ஈச்வரனுக்கும் சேதநனுக்கும் நடந்த விவாதம் ஒரு ஸம்வாத ரூபமாக இந்த ச்லோகத்தில் அழகாய்க் காட்டப்படுகிறது. ச்லோகம் வருமாறு:—

𑌤𑍍𑌵𑌂𑌮𑍇𑌽𑌹𑌂𑌮𑍇 𑌕𑍁𑌤𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌦𑌪𑌿 𑌕𑍁𑌤 𑌇𑌦𑌂 𑌵𑍇𑌦𑌮𑍂𑌲-
𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌤𑍍, 𑌏𑌤𑌚𑍍𑌚𑌾𑌨𑌾𑌦𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌦𑌨𑍁𑌭𑌵𑌵𑌿𑌭𑌵𑌾𑌤𑍍 𑌸𑍋𑌽𑌪𑌿
𑌸𑌾𑌕𑍍𑌰𑍋𑌶 𑌏𑌵 । 𑌕𑍍𑌵𑌾𑌕𑍍𑌰𑍋𑌶𑌃 𑌕𑌸𑍍𑌯 𑌗𑍀𑌤𑌾𑌦𑌿𑌷𑍁 𑌮𑌮 𑌵𑌿𑌦𑌿𑌤𑌃
𑌕𑍋𑌽𑌤𑍍𑌰 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌸𑍁𑌧𑍀𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌹𑌨𑍍𑌤 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑌪𑌾𑌤𑍀 𑌸 𑌇𑌤𑌿
𑌨𑍃𑌕𑌲𑌹𑍇 𑌮𑍃𑌗𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

த்வம் மேஹம் மே குதஸ் தத் ததபி குத இதம் வேதமூலப்ரமாணாத், ஏதச்சாநாதிஸித்தாதநுபவவிபவாத் ஸோபி ஸாக்ரோச ஏவ, க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மம விதித: கோத்ர ஸாக்ஷீ ஸுதீஸ் ஸ்யாத் ஹந்த த்வத்பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத்த்வம்.

இதன்பொருள் சுருக்கமாகக் காட்டப்படுகிறது.

த்வம் மே - இது எம்பெருமான் ஸம்ஸாரிசேதநனை நோக்கிச் சொல்லும் வார்த்தை. சேதநா! நீ என்னுடைய சரக்கு என்றானெம்பெருமான். அதாவது நீ எனக்கு அடிமைப்பட்டவனென்றபடி. சேதநன் ஸ்வாதந்திரியம் பாராட்டி வணங்காமுடிமன்னனாய்க் கிடந்தபடியாலே எம்பெருமான் இந்தவார்த்தை சொல்லவேண்டியதாயிற்று.

அஹம் மே - அதற்கு ஸம்ஸாரி பதில் சொல்லுகிற வார்த்தை இது. நான் உனக்கு அடிமைப்பட்டவனல்லேன், எனக்கு நானே அரசன் என்றான் ஸம்ஸாரி. எம்பெருமான் " த்வம் மே " என்றது போலே ஸம்ஸாரியும் பதிலுக்கு ' த்வம் மே ' என்னலாமே; அப்படி ஏன் சொல்லவில்லை ? ' நானு உனக்கு அடிமைப்பட்டவன், நீதான் எனக்கு அடிமைப்பட்டவன் ' என்று ஸம்ஸாரி சொல்லியிருக்கலாமே; ஏன் அங்ஙனம் சொல்லவில்லை என்னில், இப்படிப்பட்ட பதில் ஸம்ஸாரி சொல்லியிருந்தானாகில் எம்பெருமான் பெரும்பேறு பெற்றானவனே; தான் சேஷியாயிருப்பதிலுங்காட்டில் சேஷபூதனாயிருக்குமிருப்பிலே மிகவும் குதூஹலமுடையானன்றோ அவன். ஏதேனுமொருபடியாலே சேதநனோடு தனக்கு ஸம்பந்தம் ஏற்பட்டால் போதும் என்று பாரிப்பவனன்றோ அவன்; சேஷியாகவே தானிருக்கவேணுமென்கிற எண்ணம் இல்லையே அவனுக்கு. ஸம்ஸாரிகள் தன்னோடு உறவை அறுத்துக்கொண்டுபோகாமல் தன்னை அடியவனாகக்கொண்டு பரிமாறினாலும் பரமதிருப்தி பெறுபவனன்றோ அவன். அது தோன்றவன்றோ ' **த்வம் மே** ' என்று ஸாவசேஷமாய்க்கிடக்கிறது. **த்வம் மே** தாஸ: என்றோ, **த்வம் மே** ப்ரபு: என்றோ விவக்ஷித்துச் சொன்னபடி. ஏதேனுமொருபடிக்கு ஸம்ஸாரி இசைந்திடுவனோ என்று பார்த்தான் எம்பெருமான். ஸம்ஸாரி மஹாசதுரனாகையாலே ' இவனோடு நமக்கு எவ்விதமான உறவும் தேவையில்லை; அவன் நமக்கு அடியவனாக இருக்க இசைந்தாலும் அதற்கும் நாம் இசையவே கூடாது; அடியவன்போல இருந்து காலக்ரமத்தில் நம்மையே அடிமைப்படுத்திக்கொள்ளவல்ல கிறியான் அவன்; ஆதலால் அவனுடைய எல்லையிலும் நாம் செல்லாமல் இருந்துவிடுவதே நமக்குத் தகுதி ' என்று ஸம்ஸாரி நினைத்தானாகையாலே **அஹம் மே** என்று, எம்பெருமானுக்குப் பிடிகொடாமலே விடையளித்து விட்டான். இவனும் **த்வம் மே** என்று பதில் சொல்லி யிருந்தானாகில் அவ்வளவோடு விவாதம் சாந்தமாகியிருக்குமே; எம்பெருமானே வெற்றி பெற்றானாய்விடுவனே.

குதஸ் தத் - (தத் குத: ?) ' அஹம் மே ' என்று சொன்ன ஸம்ஸாரியை நோக்கி எம்பெருமான் கேட்கிறான். எதனால் அப்படிச் சொல்லுகிறாய் ? என்று.

தத் அபி குத: ? நீ **த்வம் மே** என்று சொன்னாயே, அது எதைக்கொண்டு சொன்னாய் ? என்று ஸம்ஸாரியின் பதில்கேள்வி இது.

இதம் வேதமூலப்ரமாணாத் - சேதநா! வேதமாகிற மூலப்பிரமாணத்தைக்கொண்டு நான் **த்வம் மே** என்று சொன்னேன் என்கிறது எம்பெருமானுடைய பதில்.—" பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் " " க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக: " இத்யாதிப்ரமாணங்கள் இங்குக் கொள்ளத்தக்கன.

ஏதச்ச அநாதிஸித்தாத் அநுபவவிபவாத் - (இது ஸம்ஸாரியின் பதில் வார்த்தை.) நீ சொல்லுகிற ப்ரமாணம் ஓலைப்படா ப்ரமாணமாகையாலே வெளிக்கு வரமாட்டாதது; **அஹம் மே** என்று சொன்ன எனக்கு ஸாதகமான ப்ரமாணம் அப்படிப்பட்டதன்று. அநாதிகாலமாக ஸ்வாதந்திரியத்தை நான் அனுபவித்துக்கொண்டு வருவதால், அநுபவமே ப்ரபல ப்ரமாணமாகையால் இதனால் உன்னுடைய வேதம் அடிபட்டொழிந்தது என்றான். உலகத்திலும் ஒரு க்ருஹம் ஒருவனுடையதென்று சாஸனபத்திரங்கள் இருந்தாலும் நெடுநாளாக அந்த க்ருஹத்தை வேறொருவன் அநுபவித்துவந்தால் அவனே அதற்குச் சொந்தக்காரனாக ஆய்விடுவன் என்றும், உண்மையான உடையவன் இழந்துபோய்விடுவான் என்றும் காண்கிறோம். அதுபோல், எம்பெருமானே உடையவனென்று சாஸநமிருப்பினும் அநாதியான அநுபவம் ஸம்ஸாரியினுடையதாகையாலே அந்த சாஸநம் துர்ப்பலமாக இவனால் நிரூபிக்கப்பட்டது. ஸம்ஸாரியும் கிரமமான வழியிலேயே வழக்காடுகிறான் போலும்.

ஸோபி ஸாக்ரோச ஏவ - (அதற்கு எம்பெருமானுடைய பதில் இது.) சேதநா! நெடுங்காலமாக உனக்கு ஸ்வாதந்த்ரிய அநுபவம் உண்டென்பது உண்மையே; அதை நான் அபலபிக்கவில்லை. ஆனால் அந்த அநுபவம் நிராக்ஷேபமாக இருந்தாலன்றோ செல்லும். அப்படியில்லையே. உனது அநுபவம் ஆக்ஷேபத்தோடு கூடியதாயிற்றே! அதனை நீ சொல்லிக்கொள்வதனால் உனக்கு லாபமில்லையே என்றானெம்பெருமான். உலகத்திலும் ஒரு க்ருஹத்தை இதரன் ஒருவன் நெடுநாளைய அநுபவத்தில் வைத்துக் கொண்டிருந்தாலும் அந்த அநுபவத்தை அடிக்கடி சொந்தக்காரன் ஆக்ஷேபித்துக் கொண்டிருந்ததாகப் புலப்பட்டு விட்டால் அவ்வநுபவம் செல்லமாட்டாதென்பது ப்ரஸித்தம்.

ஆக்ரோச: க்வ ? கஸ்ய ஆக்ரோச: ?—(இது ஸம்ஸாரியின் வினா) என்னுடைய ஸ்வாதந்திரியாநுபவம் ஆக்ஷேபத்தோடு கூடியதென்று நீ சொன்னாய்; அப்படிச் சொல்லிவிட்டால் போதுமா ? ஆக்ஷேபம்

செய்திருப்பது யார்? ஆக்ஷேபம் எவ்விடத்தில் செய்யப்பட்டிருக்கிறது? அதையெல்லாம் விசதமாகச் சொன்னாலல்லவோ உன்னுடைய வாதம் ஏறும்.

கீதாதிஷு மம விதித:— (இது எம்பெருமானுடைய மறுமொழி.) க்வ என்று கேட்டதற்கு 'கீதாதிஷு' என்பது பதில். கஸ்ய என்று கேட்டதற்கு 'மம' என்பது பதில். சேதநா! பகவத்கீதை முதலானவற்றிலே (உன் ஸமூஹத்தில் தலைவனான அர்ஜுனனென்கிற வொருவனை வைத்துக்கொண்டு) சேதநஸ்வாதந்திரியத்தை நான் ஆக்ஷேபித்திருக்கிறேனென்பதை நாடு நகரமும் நன்கறியும். என்றைக்கோ ஒருநாள் ஏதோவொரு மூலையிலே நீ ஆக்ஷேபித்திருந்தால் அது செல்லுமோவென்று ஸம்சாரி சொல்லுவதற்கு இடமில்லாதபடி 'விதித:' எனப்பட்டது. கீதை நடையாடாத இடமில்லை; கீதைக்கு ப்ரசாரமில்லாத காலமுமில்லை; கீதையைத் தெரிந்து கொள்ளாத வ்யக்தியுமில்லை என்ற அபிப்ராயங்கள் இச்சொல்லில் பொதிந்துள.

அத்ர க: ஸாக்ஷீ— (இது ஸம்ஸாரியின் கேள்வி.) வ்யவஹாரம் என்று வந்துவிட்டால் ஸாக்ஷி விசாரணை இருந்தே தீரவேண்டும். எத்தனை சாஸநபத்திரங்கள் இருந்தாலும் ஸாக்ஷிகளைக்கொண்டு நிரூபிக்கவேண்டியது முறைமை. உனக்கு ப்ரமாணமான வேதங்களும் கீதை முதலியனவும் கிடக்கட்டும். பெட்டியின்மீது ஏறிச் சொல்லுவதற்கு ஒரு ஸாக்ஷி வேணுமே. யார் ஸாக்ஷி? என்கிறான் ஸம்ஸாரி. எம்பெருமான் தவிர மற்ற எல்லாச் சேதநர்களும் ஸம்ஸாரிகளே யாதலால், அவர்களும் அஹம் மே என்றிருப்பவர்களேயாதலால் இவனுக்கு ஸாக்ஷிகள் எங்ஙனம் கிடைக்கப் போகிறார்களென்பது சேதநனுடைய எண்ணம். எம்பெருமானுடைய பாக்யத்தாலே ஸம்ஸாரிகளினிடையே முமுக்ஷுக்களும் சிலர் இருப்பதால் அவர்கள் தனக்கு ஸாக்ஷிகளாக இருக்கத் தகுதியுடையார் என்றெண்ணின எம்பெருமான் ஸுதீ: ஸ்யாத் என்றான். ஞானிகளெல்லாரும் என் பக்ஷத்தில் ஸாக்ஷிகளாக நிற்கக்கூடும் என்றபடி. (ஸுதீ: என்பதை ஜாத்யேகவசநமாகக் கொள்க.) அஸ்தி என்று உறுதியாகச் சொல்லாமல் ஸ்யாத் என்று சொன்னது ஏனெனில், இவ்விருள் தருமா ஞாலமானது ப்ரஹ்லாதாழ்வானையு முட்பட எதிரம்பு கோக்கப் பண்ணினதாகையாலே ஞானிகளும் ஸமயத்திலே நம்மைக் கைவிடும்படி நேர்ந்துவிடுமோ என்னவோ என்கிற அதிசங்கை தோன்றி அதை ஸ்யாத் என்பதனால் காட்டினனென்க. "விண்ணுளார் பெருமாற்கு

அடிமை செய்வாரையும் செறும் ஐம்புலனிவை" ஆதலால் யாரையும் நம்புவதற்கில்லையே என்றெண்ணினான் போலும்.

ஹந்த! த்வத்பக்ஷபாதீ ஸ:- (இது ஸம்ஸாரியின் பதில்.) ஸாக்ஷிகள் மத்யஸ்தர்களாக இருக்கவேண்டும். உறவினர்களையே கொண்டு சொல்லுவிக்கப்படுகிற ஸாக்ஷியம் உபயோகப்படாது. ஞானிகளை ஸாக்ஷியாகச் சொன்னது பொருந்துமோ? "ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்று கீதையில் நீயே சொல்லியிருக்கிறாயே; உனது உயிர் நிலையாகவன்றோ ஞானிகள் இருப்பது. வாதியே ஸாக்ஷி என்று சொன்னதாகத் தேறிற்றேயல்லது பிறனொருவன் ஸாக்ஷியாகக் கூறப்பட்டானில்லையே என்றான் ஸம்ஸாரி.

இதற்குமேல் எம்பெருமான் என்ன செய்வான்! ஸம்ஸாரிகள் யாவரும் பிரதிவாதிகளாக ஆய்விட்டபடியால் அவர்களில் ஒருவரும் ஸாக்ஷிகளாக நில்லார். முமுக்ஷுக்களோ தன் வகுப்பில் சேர்ந்துவிட்டபடியாலே அவர்களுடைய ஸாக்ஷியம் அப்ரயோஜகமென்று கண்ணழிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஸம்ஸாரிகளையும் விடமாட்டிற்றிலன். வ்யவஹாரத்திலோ தான் தோல்வியடையவேண்டியவனாக முடிந்துவிட்டது. 'நம்முடைய சரக்குகளை நாம் அநியாயமாய் இழந்துவிடுவதா!' என்று பரிதபிக்கின்றான். இந்த நிலைமையில் தைவாதீனமாய் ஒரு உபாயம் ஸ்புரித்ததாம்; அதாவது, ஸம்ஸாரியினுடைய வாயாடித்தனத்தினால் நமக்கு வ்யவஹாரத்தில் பழுது ஏற்பட்டாலும் ஸொத்து நம்முடையதேயென்பது ஸத்யமாதலால், கடைசியாக ப்ரமாணம்பண்ணிக்கொடுத்து ஸொத்தைப்பெற்றுக் கொள்வதான முறைமையும் அரசாங்கத்தில் இருப்பதால் அந்த வகையில் நாம் வெற்றிபெறக்கடவோம் என்று தோன்றிற்றாம்.

[இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்]

இதி - இவ்விதமாக, ந்ருகலஹே - சேதநனோடு விவாதமுண்டாகித் தனக்குத் தோல்வி விளைந்த வளவில், த்வம் ம்ருக்யமத்யஸ்தவத் (ப்ரகாசஸே) = தேவரீர் ப்ரமாணம் செய்ய ஸங்கத்தர்போலே விளங்கா நின்றீர். "[illegible] உச்யதே" என்பது நிகண்டு.

இந்த உத்ப்ரேக்ஷையினால் நமக்குக் கிடைக்கும் பொருள் யாதெனில்; எம்பெருமானோடு நாம் விவாதப்படாமல் இருக்குமளவே போதுமென்பதும், எவ்வகையினாலேனும் நம்மை அடிமைப்படுத்திக் கொள்ள அவன் வழிதேடுகின்றவன் என்பதும், நாமெல்லாம் அவ

னுடைய உடைமை யாதலால் நம்மை ஆட்படுத்திக் கொள்வதிலேயே நோக்குடையனான அவனை நினைத்து நாம் மார்பிலே கைவைத்துறங் கலா மென்பதுமாம்.

பட்டர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஆத்ம ஸமர்ப்பணம்

[C. நரஸிம்மாசாரியார், அட்வகேட், திருவல்லிக்கேணி]

ஆத்ம ஸமர்ப்பணம் என்பது ச்ருதிகளில் ச்லாக்யமாகச் சொல்லப்படும் மோக்ஷோபாயமாம். ஆத்ம ஸமர்ப்பணம் என்றால் ஜீவாத்மாவை பரமாத்மாவுக்கு ஸமர்ப்பித்தல் என்று பொருள்படும். ஆனால் ஜீவாத்மா "அதனுள் நேர்மை ஒன்றும் ஒருவர்க்கும் உணரலாகாது" என்கிறபடி பாஹ்யேந்திரியங்களுக்கு விஷயமாகாததாலும் பரமாத்மாவும் அதீந்திரியனாகையாலும் இந்த ஸமர்ப்பணம் புஷ்பம் மாலையை ஒரு அர்ச்சாவதாரத்து எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பது போல் கைகளால் செய்யும் காரியமன்று. நம் பூர்வாசாரியர்கள் ஜீவாத்மா பரமாத்மாவுக்கே உரித்தானது என்று ஸம்வதிக்கைதான் ஸமர்ப்பணம் என்பார்கள். இந்த ஸம்வதம் கேவலம் நெஞ்சினால் நினைத்த மாத்ரமாவது வாயினாற் சொல்லிய மாத்ரமாவது ஸித்திக்காது. மனோவாக்குக்காயம் என்கிற த்ரிவித காரணங்களாலும் அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவந்து காரியகரமாக்க வேணும். நெஞ்சினால் நினைப்பதும் வாயினாற் சொல்வதும் ஒன்றாய், செய்வது வேறொன்றானால் அது வஞ்சனையும் கூத்துமாகும். "பொய்யே கைம்மை சொல்லி" என்றும் "என்றென்றே சில கூத்துச் சொல்ல" என்றும் ஆழ்வார் ஸர்வேஶ்வரனை வஞ்சிக்க முடியாது என்பதற்கு அவரவர்கள் மனச்சாக்ஷியமே ப்ரமாணமாகும் என்பர். ஆகையால் ஆத்ம ஸமர்ப்பணத்துக்கு "யான் எனது என்று இராதே", "யானும் நீயே என் உடைமையும் நீயே" என்கிற திடாத்ய வஸாயத்தோடு நம்முடையது என்கிற ஸர்வஸ்வத்தையும் எம்பெருமானுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். இந்த அர்ப்பணம் காரியகரமாவது கைங்கரியத்தாலன்றி மற்றெவ்வகையாலும் முடியாது என்பதை ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஓமிட்டு ஸாதிப்பார்கள். அந்த கைங்கரியம் ப்ரீதிகாரிதமான பாகவத கைங்கரிய பர்யந்தமான பகவத் கைங்கரி

யம் என்று அறுதியிட்டார்கள். பாகவத கைங்கரியமே பகவத் கைங்கரியமாய் பர்யவஸிக்கும். கைங்கரியத்தில் "யான் எனது" என்னும் அஹங்கார மமகார ஞானம் தன்னடையே கைவிட்டுப்போய் "எனதாவியார்? யான் ஆர்? தந்த நீ கொண்டு ஆக்கினையே" என்கிற ஞானம் பிறந்து, அந்த ஞானம் அநுஷ்டானத்தில் பரிமளிக்கும். இதனையே "Love & Service" என்று ஏனைய மதஸ்தர்கள் எல்லாரும் கொண்டாடுகிறார்கள். இதுதான் வேதஸாரமாய் ஸ்ரீ வைஷ்ண மதத்தின் ஸாரமுமாகும்.

ஆனால் இத்தகைய அத்யவஸாயம் பிறக்காமல் தடுக்கும் பலமான பகைவர்கள் நம்முடைய பஞ்சேந்திரியங்களே'! "விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறும் ஐம்புலன் இவை - மண்ணுள் என்னைப் பெற்றால் என் செய்யா" என்றும் "தீர்மருந்து இன்றி ஐந்து நோய் ஆடும் செக்கிலிட்டுத் திரிக்கும் ஐவர்" என்றும் ஆழ்வார் இந்திரிய பலத்தைப் பார்த்து நடுநடுங்குகிறார். அஸ்மதாதிகள் படும்பாடு சொல்லவேண்டா. நமக்கு க்ருத்யா க்ருத்ய விவேக ஞானம் இருந்தபோதிலும் நன்மையும் தீமையும் விவேகிக்க ப்ரதீபமான சாஸ்த்ர ஞானம் உண்டாயிருந்தாலும் விஷயாந்தரங்களில் மனதைவலித்துச் செல்லும் வீர்யமுடையன நம் இந்திரியங்கள். மநுஷ்ய சஞ்சாரமில்லாத காட்டில் கிடந்தாலும் நம்மை விட்டபாடில்லை. ஆதிபரதன் மான் பின்னே சென்றும், ஸௌபரி நீரில் முழுகிக் கிடக்கச் செய்தேயும் மீன் பின்னே சென்றும் விஷயப்ரவணரானார்கள்.

தர்மவீர்ய ஞானத்தாலே ஹ்ருஷ்டரான ரிஷிகள் கர்மஜ்ஞான ஸம்ஸ்காரங்களாகிற யோகாப்யாஸங்களாலே இந்திரியங்களைஜயிக்கும் வழிகள் காட்டியுள்ளார். ச்ருதிகளில் வேதனம், உபாஸனம், ஸேவை, த்யானம் என்று இம்முறைகளை பலவகையாக கூறப்பட்டுள்ளன. ஸோபப்ரும்ஹண சாஸ்திரங்களில் சொல்லியபடி. இந்திரிய ஜயம் பெற்று பக்தியை அடையும் வழியைப்பார்த்தால் லௌகிக ப்ரவர்த்திகளான அடியேன் போன்ற கேவலர்களுக்குக் "கால் ஆழும் நெஞ்சு அழியும் கண்சுழலும்." எங்ஙனே யென்னில் "ஜந்மாந்தர ஸஹஸ்ர நற்றவங்களாலே க்யாத குலங்களிலே பிறந்து எழுதி வாசித்து தத்வஜ்ஞராய்" காயசுத்யர்த்தமாக த்ரிகால ஸ்நாநம் செய்து ஸந்த்யா வந்தன காயத்ரீ ஜபங்கள், பஞ்ச மஹாயக்ஞங்கள், ஷட்கர்மங்கள் முதலான நித்ய நைமித்திக கர்மாநுஷ்டாநங்களால் பரிபூர்ணனாய் தபச்சர்ய யோக்யதை பிறந்தவாறே காடேறப்போய் உஷ்ண காலத்தில் மலைச் சிகரத்திலும் பஞ்சாக்நி மத்தியிலும் நின்றும், குளிர்காலத்

தில் அருக்கயத்தில் மூழ்கிபும் ஜீர்ணபர்ணபலாசநராய் காயசோஷம் செய்து சாந்தம், சமம், தமம் முதலான ஆத்மகுணங்கள் பரிபூர்ணமான வைரவுருக்கான எம்பெருமான் வடிவைக் "கண்கள் சிவந்திற்" படியே மனவுட்கொண்டு ஆத்மஸாக்ஷாத்காரம் செய்து பிறகு பகவத்ஸாக்ஷாத்காரம் செய்யவேணும். இத்தகைய கர்மஞான ஸம்ஸ்க்ருதாந்தஃகரணனைக் காண்பது மிகவும் துர்லபம். "இன்னதோர் காலத்து இனையார் இது பெற்றார் என்னவுங் கேட்டறிவதில்லை" என்றார் மங்கை மன்னனும். வேதத்தின் உட்பொருளை நம் நெஞ்சுள் நிற்கப் பாடின நம்மாழ்வார் இந்த ஆத்ம ஸமர்ப்பணக்ரமத்தை "விடுமின்" என்கிற இரண்டாந்திருவாய் மொழியில் ஸர்வஸுலபமாக யாவரும் எளிதில் அறியும்படி உபதேசித்திருக்கிறார். இந்த உபதேசத்துக்கு சாஸ்திர ப்ரமாணமாவது ஸதாசார்ய உபதேசமாவது வேண்டுவதில்லை. ஆஸ்திக நாஸ்திகர்கள் அனைவரும் அறியக்கூடியது. அது எப்படி என்னில், தேகமும் தேகஸம்பந்தமான சுகதுக்கங்களும் அநித்யம் என்பதை "மின்னின் நிலையில" என்கிற பாசுரத்தில் விஸ்தரித்தார். இது யாவரும் கண்டு அநுபவிக்கும் விஷயமே. ஆகையால் அநித்யத்தைக் கைவிட்டு நித்யத்தைக் கைப்பிடிப்பது இயற்கையறிவாகும். நித்யமும் நித்யானுபவமும் இன்னதென்பதை முதல் திருவாய் மொழியில் பல காரணங்களைக்கொண்டு நிரூபித்தார். சில வருஷங்களுக்கு முன் நவீன சாஸ்த்ர ஆராய்ச்சிக்காரர் பலர், நிரீசுவரவாதிகளாயிருந்தார்கள். தற்சமயம் அவ்வாராய்ச்சிக்காரர் பலரும் ஈஶ்வரதத்வம் ஒன்று இருத்தலே வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அமெரிக்கா தேசத்துப் பண்டிதர் ஒருவர் சூரிய மண்டலத்திலிருந்து இரண்டு வகையான கிரணங்கள் வருகின்றன என்றும், அதில் ஒன்று உயிரை அளிக்கும் என்றும், மற்றொன்று அழிக்கும் என்றும் அழிக்கும் கிரணம் வாயுமண்டல ஸ்பர்சமானவுடன் அங்கேயே தங்கி அக்காற்றை சுத்தமாக்கி நமக்கு பிராணாதாரமான சுத்தக் காற்றை உண்டுபண்ணுகிறது என்கிறார். இது யாருடைய மஹோபகாரம், யார் செய்யும் நன்மை? அவர் தான் "உயர்வற வுயர் நலமுடையவன்" என்றார் ஆழ்வார். அவ்வுயர் நலமுடையவனை அடையவேண்டுமானால் அகங்கார மமகாரங்களை ஸவாஸனையற விடவேண்டும் என்று "நீர் நுமது" என்கிற பாசுரத்தில் ஸாதிப்பர். நான், எனது என்கிற புத்தி நீங்கினால் நானும் எனதும் ஸர்வேஶ்வரனுடைமையாம். அவ்வுடமையாக்குதல்தான் ஆத்மஸமர்ப்பணம். மனதை அடக்கி ஆளும் திறமைதான்.

அத்திறமை அடையும் வழியைக் காட்ட "உன்னுமின்," "சேர்மின்" "புல்கு," "பற்று," "அடங்கு," "ஒடுங்கு" என்னும் ஷட்பதப்ரயோகம் செய்தார். இவற்றின் ஸ்வாரஸ்யத்தை சற்று ஆராய்வோம். அறுகால சிறுவண்டு சாகா ஸஞ்சாரியாய் மதுவைத் திரட்டுமாப்போலே ஆழ்வாரும் சாகோபசாகையான உபநிஷத்துக்களின் ஸாரத்தை க்ரஹித்து இவ்வாறு பதப்ரயோகம் செய்தார் என்று காலக்ஷேப கோஷ்டியில் சில ஸத் வ்ருத்தர்கள் அநுபவிப்பார்கள். "உன்னுமின்" என்பதற்கு ஸ்மரணம் என்று பொருள். ஸ்மரித்த பிறகு "சேர்மின்" என்று (ஸங்கம்) நெருங்குதல் வேண்டும். நெருங்கின பிறகு "புல்கு" என்று பஜனத்திலே மூட்டுகிறார். பஜித்த வஸ்துவில் "பற்று" என்று விடாது கைப்பிடிக்க வேண்டும் என்கிற அத்யவஸாயம் பிறக்கும். அவ்வத்யவஸாயம் பிறந்தவாறே "அடங்கு" என்று எல்லா சேஷவ்ருத்திகளையும் அவனுக்கே செய்ய வேண்டும் என்கிறார். அப்படிச் செய்தால் "ஒடுங்கு" என்கிற ஸாயுச்சிய பதவி தானே கைகூடும். இம்மாதிரி படிப்படியாக எம்பெருமானைச் சேர்தல்தான் ஆத்ம ஸமர்ப்பணமாகும். பேருளாளன் ஸந்நிதியில் "உனக்கே நாமாட் செய்வோம்" என்று அநவரதம் பரிசர்யம் பண்ணிவந்த ஓர் பெருந்துறவி "உன்னுமின், சேர்மின்" பரபக்தி தசையையும் "புல்கு, பற்று" பரஞான தசையையும் "அடங்கு, ஒடுங்கு" பரமபக்தி தசையையும் காட்டும் என்று நிர்வஹித்துப்போருவர். இந்த தசா விபாகங்களை "காதல்," "அன்பு," "வேட்கை," "அவா" என்றும் ஸங்க, காம, அநுராக, ஸ்நேஹாத்யவஸ்தாதி நாமங்களாலே பரபக்தி, பரஜ்ஞாந, பரமபக்தி தசைகளாகக் காட்டுமென்பர்.

இவ்வாழ்வார் பரமக்ருபையாலே அஸ்மதாதிகளுக்கு பரமோபதேசம் பண்ணினதால் "தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோம்." இவர் ஆசார்யபதம் நிர்வஹிக்காமலும், க்யாதிலாபபூஜாபேக்ஷை இல்லாமலும், ஒரு விதிபரதந்திரராய் இல்லாமலும், பிராட்டி, பிரஹ்லாதாழ்வான் போல் "ஞாலத்தார் பந்த புத்தியும் அநர்த்தமுங் கண்டு ஆற்றாமையும் மிக்கக்கிருபையுமிறே" என்று இவருடைய கிருபையின் ஆதிக்யம் சிஷ்யோக்திஸித்தமாயிற்று. இவர் தான் அநுபவித்த விஷயம் கொள்ள மாளா இன்பவெள்ளமாதலால் பெருக்கெடுத்து ஒன்று பத்து நூறு ஆயிரமாகப் பல தலைத்தது. "நீர் பால் நெய் அமுதான ஏரி நெளிக்குமாப்போல் பரபக்த்யாதி ஞானம்ருதாப்தி வாய்கரைமிடைந்து மொழிபட்டு அவாவில் அந்தாதி என்ப் பேர்

பெற்றது." குளத்துப்படியில் குருவி குடித்துப்போம். வீராணத் தேரி நாடுபாயும். ஆகையால்தான் இவரை நாம் ப்ரமாசார்யனுகக் கொண்டாடுகிறோம்.

போலிக போலிக போலிக.

ஸ்ரீமதேராமானுஜாய நம:

பூர்வாசார்ய த்வயாபிமத அஷ்டாதஸபேத ஸங்க்ரஹம்.

திருமழிசை கோ. க. அப்பன் ராமாநுஜாசாரியரால் பூர்வாசார்ய ஸம்ப்ரதாயத்வய விஷயமான க்ரந்தங்களில், ஸ்ரீ லோகாசார்யர், ஸ்ரீ வேதாந்தாசார்யர் இவர்களுடைய ஸம்ப்ரதாயார்த்த நிர்வாஹ பேதங்கள், ஆராய்ந்தெடுக்கப்பட்டு சுருக்கமாகவும், ஸுஸ்பஷ்டமாகவும் ஶ்லோகரூபேண எழுதப்பட்டதாய் 'பூர்வாசார்யத்வயாபிமதாஷ்டாதஸ பேதஸங்க்ரஹம்' என்னும் பெயருடன், சில ஆஸ்திகர்களின் ப்ரேரணையின்பேரில் ஸ்ரீமுக ஸ்ரீ (1934)-ல் மணிப்ரவாள வ்யாக்யானத்துடன் தெலுங்கு லிபியிலும் தமிழ் லிபியிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. இக்கிரந்தத்தின் விஷயங்களைப் பார்த்ததும், அந்தப் பூர்வாசார்யர்களுடைய ஸம்ப்ரதாயார்த்த தாத்பர்யங்கள் ப்ராமாணிகமாயும், தெளிவாயும் புலன்படும். ஸ்ரீலோகாசார்யர் அருளிச்செய்த அஷ்டாதஸ ரஹஸ்யக்ரந்தங்களையும் ஸ்ரீ வேதாந்தாசார்யர் அருளிச்செய்த ரஹஸ்யத்ரய ஸாரத்தையும் ஆராய்ந்து பார்க்கவேண்டிய க்லேஸம் படவேண்டாம். இக்கிரந்தந்தன்னில், அந்தந்த நிர்வாஹங்களின் பரஸ்பரம் தாரதம்யமாவது, வைஷம்யமாவது ஈஷத்தும் காட்டப்படவில்லை. திவ்ய ப்ரபந்த வ்யாக்யானங்களில் ஸ்ரீ உடையவர், எம்பார், கூரத்தாழ்வான், பட்டர் இவர்களுடைய நிர்வாஹ பேதங்கள் போலவே இந்த நிர்வாஹபேதங்களும் உள்ளன. 'பிணங்கியமரர் பிதற்றும்,' என்கிறவிடத்தில், விஷயவைலக்ஷண்யாதீனமான பிணக்கம்போலவே, இங்கும் ஸம்ப்ரதாயார்த்த விஷயவைலக்ஷண்ய மடியாகப் பிணக்கம் நேர்ந்தால், உபாதேயமாகவே கொள்ளலாம். அல்லாத போதிறே த்யாஜ்யமாகிறது.

கீழ்ச்சொல்லப்பட்டக் கிரந்தத்தை திருமழிசை கோ. க. அப்பன் ராமானுஜாசார்யர் என்கிற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 218933 சென்னை-600008

வர்த்தமானங்கள்.

கோயிலுத்ஸவங்கள்.

மாசி 21௨ (4-3-36) தெப்பத்திருநாள் ஸூர்யப்ரபை, பந்தக் ...

„ 28௨ (11-3-36) திருவெள்ளறைத்திரு...

பங்குனி 1௨ (13-3-36) உரையூர் தெப்பத்திருநாள்.

„ „ திருவெள்ளறைப் பெருமாள் வட திருக்காவேரி தீர்த்தம்.

„ 7௨ (19-3-36) ஸர்வைகாதசி, உறையூர் பந்தக்காக்ஷி, திருவெள்ளறைத்தேர்.

„ 14௨ (26-3-36) திருமுளை.

„ 15௨ „ ஸேனை முதலியார் நகர் சோதனை.

„ 16௨ „ ப்ரஹ்மோத்ஸவ ஆரம்பம், த்வஜாரோஹணம்.

„ 24௨ „ பங்குனி உத்திரம், கோரதம்.

„ 25௨ „ பூர்ணிமை, ஸப்தாவரணம், சாற்றுமுறை

திருமலை உத்ஸவம்.

[ஸிலாஸாஸந பரிஸோதகர் மையூர் பண்டித விஜயராகவாசாரியார்.]

'அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை யுறையும் திருமார்பையுடைய திருவேங்கடமுடையான் "கலியுகத்தில் கண் முன்னே விளங்கும் தெய்வம்" என்று உலகத்தார் கொண்டாட ஆநந்தநிலய விமானத்தில் வீற்றிருந்து பக்த கோடிகளை அநுக்ரஹித்துவரும் விஷயம் கையிலங்கு நெல்லிக்கனிபோல் அனைவருமறிந்ததே.

மண்ணுடும் விண்ணுடும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் மங்களாசாஸநம் செய்யும் ஸ்ரீநிவாசனுடைய வாசஸ்தானமாகிய திருமலை, வ்ருஷகிரி, கருடகிரி, ஸிம்ஹகிரி, க்ருஷ்ணகிரி, அஞ்சனகிரி, வேங்கடகிரி, நாராயணகிரி, அல்லது சேஷகிரி என்கிற ஏழு திருநாமங்களையுடைய பர்வதங்களையும் அனேக புண்ய தீர்த்தங்களையுமுடையதாய் விளங்கா நிற்கும். இவ்வளவு மஹிமைவாய்ந்த திருமலையில் திருக்கோயில்கொண்ட திருவேங்கடமுடையானுக்கு உத்ஸவாதிகள் சாந்த்ரமான ரீதியை அநுஸரித்தே நடைபெறும்.

1936 மார்ச் 23௳ (பங்குனி 11௳) சாந்த்ர ஸம்வத்ஸராதி ஆஸ்தாநம் என்னும் உத்ஸவம் நடைபெறும்.

௸ தினத்தில் ப்ராதக்காலத்தில் பெரிய ஜீயர், ஏகாங்கி, அர்ச்சகாள், ஆசார்ய புருஷர்கள் முதலான கோயில் அதிகாரிகள் அனைவரும் சன்னிதிக்குவந்து ஸுப்ரபாதம் முதலான நித்யாராதனமும் சாற்றுமுறையும் நடந்தபின் முன்மண்டபத்தில் எழுந்தருளி விசேஷச் சிறப்புகள் அமுது செய்து பஞ்சாங்க ஶ்ரவணாநந்தரம் கோஷ்டி விநியோகமான பிறகு ஆஸ்தாநம் எழுந்தருள்வர். அப்பால் அப்யாகதர்களனைவர்க்கும் தர்மதர்ஶநம் நடைபெறும். அதே தினத்தில் கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜன் ஸன்னிதியிலும் சக்ரவர்த்தித்திருமகன் சன்னிதியிலும் அதே உத்ஸவம் நடைபெறும்.

காஞ்சீபுரம் உத்ஸவங்கள்.

[ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

தேவப்பெருமாள் ஸந்நிதியில் நாளது பங்குனி௴ 1௳ 7 நாள் பல்லவோத்ஸவம் நடைபெறும். தினப்படி பகல் 11 மணிக்குப் பெருமாள் நூற்றுக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளிப் பலவித சீதோபசாரங்களுடன் ஸ்தலபுராணம் வாசிக்கக் கேட்டருள்வது, இரவில் திருவீதிப் புறப்பாடு. 19-3-36௳ ச்ரவண நக்ஷத்ரத்தில் முடிவுபெறும்.

௸ ஸன்னிதியிலேயே 30-3-36௳ முதலாக ஏழுநாள் பங்குனி யுத்திரத்திருநாள் நடைபெறும். இது மலையாள நாச்சியாருடைய திருக்கல்யாணத்திற்காக இந்த திவ்ய தேசத்தில் நடத்தப்படுமுத்ஸவம். 5-4-36௳ ஞாயிற்றுக்கிழமை இவ்வுத்ஸவம் முடிவுபெறும். அன்று திருக்கல்யாண மஹோத்ஸவமும், மறுநாள் கந்தப்பொடி வஸந்த மஹோத்ஸவமும் அன்றிரவு பெரிய திருவீதி புறப்பாடும் மிக அழகானவை.

ஸ்ரீயதோக்தகாரி ப்ரஹ்மோத்ஸவம்.

ஸ்ரீ காஞ்சீபுரியில் வெஃகா என்கிற திவ்ய தேசத்து எம்பெருமானாகிய சொன்னவண்ணஞ்செய்த பெருமாளுக்கு 20-3-36௳ முதலாக ப்ரஹ்மோத்ஸவம் ப்ரமவிலக்ஷணமாக நடைபெறும். நித்தியம் இரண்டு வேளையும் தேவப்பெருமாளுடைய மாட்வீதிகளையும் அலங்கரித்து நடைபெறும் இவ்வுத்ஸவம் அவசியம் பக்தர்களுக்கு ஸேவிக்கவுரியது.

ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதி ப்ரஹ்மோத்ஸவம்.

இந்த திவ்ய தேசத்தில் பதினெட்டு நாள் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுவது வழக்கம். 11-3-36 தேதி முதலாக இது நடைபெறும். இது இரண்டு ப்ரஹ்மோத்ஸவமாகும். முதல் ஒன்பது நாள் ஸாதாரணமான உத்ஸவமாயிருக்கும். பிந்தின ஒன்பதுநாள் மிகவும் ஆச்சரியமான மஹோத்ஸவம். பங்குனி௴ ரோஹிணீ நக்ஷத்திரத்தில் அவப்ருதம். அந்த மஹோத்ஸவத்தில் வித்வத் ஸபைகள் விசேஷமாக நடந்து கொண்டிருந்தன. இடையில் சில வருஷமாக நடைபெற வில்லை. இவ்வருஷத்தில் பழையபடி நடைபெறுமாவென்று பலர் எதிர்பார்க்கிறார்கள்.

திருவல்லிக்கேணி யுத்ஸவங்கள்.

இத்தலத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாளுடைய திவ்ய விமாநத்தில் சில திருப்பணிகள் நடக்கவேண்டியதற்காக, சென்ற தை மாதத்தில் பாலாலய ப்ரதிஷ்டை நடந்திருப்பதால் சில மாதங்களுக்கு ஸ்ரீ பார்த்தஸாரதியின் ஸகல உத்ஸவங்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அழகிய சிங்கருடைய உத்ஸவங்கள் மாத்திரமே நடை பெறுகின்றன. நாளது சித்திரை மாதத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுவது அருமையே. மஹாஸம்ப்ரோக்ஷணம் முடிந்தபிறகு ௸ ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறும். ௸ ஸந்நிதியின் தர்மகர்த்தாக்களில் ஒருவரான ம-ா-ா-ஸ்ரீ. வேலூர் (ராவ் பஹதூர்) ரங்கநாதம் செட்டியாரவர்களின் பெருமுயற்சியினால் ௸ திருப்பணி விரைவாகவே நடந்து வருகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

[ஸ்ரீ. வைஷ்ணவதாஸ பாததூளி]

இந்த க்ஷேத்ரத்தில் ஆண்டாளவதரித்த திருப்பூர மண்டபத்தில் சுமார் 2, 3, வருஷங்களாக தி. கிடாம்பி. தெய்வசிகாமணி அய்யங்கார் ஸ்வாமிகளால் ப்ரதிதினம் கால க்ஷேபம் நடந்துவருகிறது. திருப்பல்லாண்டு முதலாக முதலாயிரம் முடிந்து திரு

மங்கைமன்னன் திருவாய்மலர்ந்த பெரிய திருமொழியில் திருவேங்கட முடையான் விஷயமான "தாயே தந்தை யென்னும் என்கிற பதிகம் நடந்துவருகின்றது. அர்ச்சகாள் ஸ்தாநீகாள் ஸ்ரீ வைஷ்ணவாள் தாஸநம்பிகள் முதலான அகில பாகவதோத்தமர்களும் கேட்டு ஆனந்தமடைகிறார்கள். இக்காலக்ஷேபம் சாஸ்வதமாய் நடைபெறும்படி ஆஸ்திக ப்ரபுக்கள் ஆதரிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

ஸ்ரீ வாநமாமலை

பங்குனி உத்தர ப்ரஹ்மோத்ஸவம்.

[ஸ்ரீ. உ. வே. தே. திருமலாசாரியார் வாநமாமலை]

பங்குனி மாதத்தில் திரு உத்தரத்தன்று அவப்ருதம். அதற்குமுன் 10-நாள் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறும். த்வஜாரோஹணம் ஆரம்பித்து 11-வது உத்ஸவம் தீர்த்தவாரி. த்வஜாரோஹணத்தன்று பெரிய பெருமாளுக்கு ஏறக்குறைய பெரிய படிக்கு 75 படி எண்ணெய்க்காப்புத் திருமஞ்சனம் நடைபெறும். அன்று ராத்திரி பெரிய பிராட்டியாரும் (ஸ்ரீ வரமங்கைத் தாயாரும்) தெய்வநாயகனும் அடைவே ஸவர்ணகசிதமான கஜலக்ஷ்மீ வாஹநத்திலும் பெரிய திருவடியின்மேலும் வீதியார எழுந்தருள்வார்கள். 2-வது உத்ஸவம் முதல் நாலாவது உத்ஸவம்வரை காலை வேளையில் ஸ்வர்ணமயமான மங்களகிரியில் தாயாரும் பெருமாளும் சேர்ந்து எழுந்தருள்வர். 5-வது உத்சவத்தன்று காலையில் தங்கத்திருப்பல்லக்கில் தாயார் பெருமாள் ஆண்டாள் மூவருமான சேர்த்தியுடன் எழுந்தருள்வர். ஆறுவது உத்சவம் காலையில் தண்டியல். 7-வது உத்ஸவம் காலையில் மங்களகிரி. ஸாயங்காலம் சூர்ணோத்ஸவம் ஆனதும் ஸமீபத்தில் திருநாடலங்கரித்த ஸ்ரீ பெரியஸ்வாமியால் தமது அந்திமதசையில் அத்யாதரவுடன் பண்ணி ஸமர்ப்பிக்கப் பெற்ற மஹாமேரு ஸத்ருசமான ஸ்வர்ணமயமான புண்யகோடிவிமாநத்தில் தாயாரும் பெருமாளும் வீற்றிருந்து வீதி எழுந்தருள்வது கண்டார்கண்கள் களிக்கும்படி இருக்கும். ராத்ரி கண்ணாடிச் சப்பரத்தில் தாயாரும் பெருமாளும் வீதி எழுந்தருள்வர். ப்ரதி ராத்ரிகளிலும் ஸ்வர்ணமயமான இரண்டு வாஹநங்களில் வரமங்கையும் தெய்வநாயகனும் எழுந்தருள்வர்கள். 5-வது உச்சவம் ராத்ரி ஆண்டாள் கிளிவாஹநத்தில் எழுந்தருள்வதும் 9-வது உத்சவம் ஸௌர்யப்ரபையில் தாயாரும் பெருமாளும் இருவருமான சேர்த்தியாயிருந்து ஞாலமெல்லாம் புகழப்பெற்ற ஸ்வர்ண ரதத்தைக் கடாக்ஷித்து வீதி எழுந்தருள்வர்கள். 10வது உத்சவம் காலை 7-மணிக்குள் ஸ்வர்ணமயமான ரதத்தில் தாயாரும் பெருமாளும் எழுந்தருளி வீதிவலம் வந்து அரங்க நகரப்பன் திருமுன்பே திருமாலை மாற்றிக்கொள்ளும் பெருமை வாசாமகோசரம். அன்றிராத்ரி தந்தப்பல்லக்கிலும், வெள்ளித்திருப்பல்லக்கிலும் தாயாருக்கு வெண்ணெய்த்தாழித் திருக்கோலத்துடன் திருத்தேர் எழுந்தருளின திருவீதி மாத்திரம் எழுந்தருளும்படியிருக்கும். 11-வது உச்சவம் தாயாரும் பெருமாளும் தீர்த்த பேரரோடுகூட சேற்றுத்தாமரையில் ஸாக்ஷாத் தீர்த்தம் ஸாதிப்பதும் அதிஸோபையாயிருக்கும். அவப்ருதத்தன்று தீர்த்த விநியோக கோஷ்டி முடிவு பெற்றதும் கத்யத்ரயத்திற்காக கண்ணாடி ஊஞ்சலில் திருவாராதநங் கண்டருளி ஸ்ரீ ஸ்வாமி திருவாலவட்டம் பரிமாற ஸ்ரீ வைஷ்ணவக் குழாம்முழுதும் நின்றபடியே கத்யத்ரயத்தை எம்பெருமானரும் அவரடியார்களும்போல் கேட்டாரடைய நுண்மணற்போல் உருகும்படி விண்ணப்பிக்கக் கேட்டருளி விசேஷத் தளிகைகள் அமுது செய்து ஏகாந்தமாக கத்யத்ரயம் விண்ணப்பம்செய்த அடியார்களுக்கு மாத்திரம் ஸ்ரீசடாரி சாதிக்கப்படும். அன்றிராத்ரி இரண்டு விலாமிச்சவேர்ச் சப்பரத்தில் தாயாரும் பெருமாளும் எழுந்தருளி இராமாநுஜ நூற்றந்தாதியை ஸ்ரீ ஸ்வாமியும் தச்சாயாபூதர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களும் திருவீதிகளில் யாதொரு வாத்யகோஷமின்றி விண்ணப்பம் செய்யத் திருச்செவிசாத்திக் கொண்டெழுந்தருள்வர்.

---:o:---

ஓர் விண்ணப்பம்.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்திலபிநிவேசமுடைய ஆரியர்காள் நமது வைஜயந்தீ பத்ரிகைகள் அருணோதயத்தோடு 5-ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. இது விஷயமாய் இதுவரை ஏறக்குறைய ரூ. 250 செலவு செய்திருக்கிறேன் மாதம் ஒன்றுக்கு ரூ. 50-க்குக் குறையாமல் வேண்டும். அகிஞ்சனை அடியேன் இக்கார்யத்தை நிர்வஹிப்பது அசாத்யமே. ஆயினும்— மஹாநுபாவர்களான அனேகர்களுடைய அநுக்ரஹத்தைக்கொண்டே இக் கைங்கர்யத்தை நிர்வஹிக்கலாமென்று நம்பிக்கையுடன் ஆரம்பித்திருக்கின்றேன். யாந்தி ந்யாயப்ரவ்ருத்தஸ்ய திர்யஞ்சோபி ஸஹாயதாம் என்றால், இவரடிபணிந்தவர் என்கிற நம்மிராமாநுஜனடியார்கள் இவ்விஷயத்தில் உபகரியார்களா? என்கிற த்ருடமான நம்பிக்கையுடன் ஆரம்பித்த சீலமில்லாச் சிறியனான அடியேனிடம் அன்புடன் யாதோசிதம் பொருளுதவி செய்து இப்பத்ரிகை இடையறாது நடக்கும்படி இன்னருள்புரிய வேண்டுமென்று ஸவிநயம் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம் V. இராமாநுஜாசாரி, பத்ராதிபர்.

ஸ்ரீமான் ஊரா ஸ்ரீராமுலு செட்டியார்.

ஸ்ரீமான் ஊரா சுப்பய்ய செட்டியார் என்ற மஹாநுபாவர் இச்சென்னை மாநகரில் பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்ய நிரதராய் சென்னை வரதா முத்தியப்பன் தெருவிலிருக்கும் ஸ்ரீ உடையவர் சன்னிதிக்கு தர்மகர்த்தாவாயிருந்து விசேஷமான திருப்பணி முதலான கைங்கர்யங்களைச் செய்து பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் என்கிறபடி அடியார் நிலாகின்ற வைகுந்தம் சென்றிருக்கிறார். அம்மஹாநுபாவரின் ஸத்புத்ரரான ஸ்ரீமான் ஊரா ஸ்ரீராமுலு செட்டியாரவர்களும் தூணிர்தமாரதோபம: என்கிறபடி அவரைப்போலவே ஆத்ம குணங்களால் அலங்கரிக்கப்பட்டவராய் பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்ய துரந்தரராய் ஷை உடையவர் சன்னிதிக்கு தர்மகர்த்தாவாய் கோபுரமண்டப திருத்தேர் முதலான விசேஷ கைங்கர்யங்களைச் செய்துகொண்டு வருகிறார். இவர் பல்லாண்டு பல்லாண்டாக இக்கைங்கர்யங்களைச் செய்துகொண்டு இருக்கும்படி எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிவாராக. இம் மஹாநுபாவர் நமது வைஜயந்தீ பத்ரிகைக்கு ஸஞ்சிகைதோறும் ஒருரீம் காகிதம் வாங்கிக்கொடுப்பதாக வாக்களித்து அவ்வாறே இந்த மாசிப்புனர்பூசப் பத்ரிகைக்கு ஒருரீம் காகிதம் வாங்கிக்கொள்ளும்படி ரூபா 3—4—0 கொடுத்துஉபகரித்தார். இதேமாதிரி ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தில் அபிநிவேசமுடைய ஆரிய ப்ரபுக்கள் யதோசிதம் பொருளுதவிசெய்து இப்பத்ரிகை சாஶ்வதமாய் நடைபெறுமாறு அநுக்ரஹிக்க வேண்டும்.

இங்ஙனம் V. இராமாநுஜாசாரியார்.

பத்ராதிபர்.

What an Advocate says :—

I have great pleasure in testifying to the efficacy of "VITABS." The tablets were used by me for about 2 or 3 weeks. They undoubtedly produced a visible effect in toning up the tired nerves and restoring lost health. I understand that very valuable and efficacious ingredients are mixed in the getting up of the same.

I congratulate the manufacturer in launching forth this preparation in the midst of other similar preparations that are found in the medical world to-day. A trial will convince the weak and anaemic patient.

N. KASTURIRANGA IYENGAR,
ADVOCATE, G.T., MADRAS.

THE NATIONAL AGENCIES,

No. 11, BROADWAY, G. T. MADRAS.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீஸீதா லக்ஷ்மண பரத ஶத்ருக்ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ. உ. வே அநந்தான்பிள்ளை திருநாராயணபுரம்
கோவிந்தப்பங்கார் ஸ்வாமி அனுக்ரஹித்த

ஸ்ரீ ராமாயண ச்லோகார்த்தங்கள்.

தபஸ்ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம்வரம் ।
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநிபுங்கவம் ॥

தபஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம்வரம் ।
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநிபுங்கவம் ॥

தபஸ்வாத்யாய நிரதம். * "நாரதோஹமநுப்ராப்த: த்வத்தர்சந குதூஹலாத்-ப்ரபவோ பகவத்பக்தா: மாத்ருஶாம் ஸததம் த்விஜ தும்புருநாரதர் புகுந்தனர் என்கிறபடியே † பகவத்பாகவத ஸந்தர்சந ப்ரணய ஸல்லாப ரூபமான தபஸ்ஸிலும், ‡ குணகீர்த்தந கான ப்ரஶம்ஸோபநிஷத்பாக பாடபரஸ்பர போதநாதிரூப ஸ்வாத்யாயத்திலும் நிரதனையுள்ளவனை. $ ஸ்வஸந்தர்சநார்த்தமாக ஸ்வாச்ரம ஆகமநத்திற்கு ஹேதுவாக இத்தை முந்துற முன்னம் சொன்னபடி

(தபஸ்வீ.) சரணாகதி ப்ரதிபாதகமான ஸ்ரீராமாயண ¶ ஆக்யாநத்தை நிர்மிக்கும்படியான அதிரிக்த தபோநிஷ்டனென்றபடி.

---

* நாரதர் என்று சொல்லப்படுகிற நான் உம்மைக் காணவேண்டுமென்னுமாசையினால் வந்தடைந்தேன். ப்ராஹ்மணோத்தம! என்னைப்போலொத்தவர்களுக்கு எப்போதும் பகவத் பக்தியை யுடையவர்கள் ப்ரபுக்கள்.

† பகவானையும் பாகவதர்களையும் கண்களால் காண்டலும் தலையால் வணங்கலும் வாயால் பேசுதலுமாகிய.

‡ பகவத் பாகவத குணங்களைப் பாடலும் பாட்டைப் புகழாநின்ற உபநிஷத் பாகபாடத்தை ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்வது மாகிய.

$ தன்னைப் பார்க்கத் தன்னிருப்பிடத்திற்கு வருகைக்குக் காரணமாக.

¶ கதையை.

§ "தஸ்மாந்யாஸ மேஷாம் தபஸா மதிரிக்தமாஹு:.]என்று நின்றதிறே :—

(வாக்விதாம்வரம்.) வாக்கென்று அபௌருஷேயமான வாக்கைச் சொல்லுகிறது. வேதார்த்தத்தை அறிந்தவர்களில் ச்ரேஷ்டனென்றபடி. வேதோபப்ருஹ்மணமாய் இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயண ஆக்யானத்தைச் சொன்னவன், வேதார்த்த வித்துக்களில் ச்ரேஷ்டனென்னத் தட்டுண்டோ. *இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுப ப்ருஹ்மயேத் என்றன்றோ சொல்லப்படுகிறது.

† வேதோப ப்ருஹ்மணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: என்று தானே சொன்னானிறே. "நாரதம் பரிபப்ரச்ச பராசரம் பரிபப்ரச்ச" என்கைக்கும் மூலமாயிருப்பதொரு பாசுரமாயிற்றிது. இதிஹாஸ புராணங்கள் என்றிறே சொல்லுவது.

ஆதிகாவ்யமிறே:. (நாரதம்) பதார்த்தங்க ளெல்லாவற்றையும் உள்ளபடி யறிந்தவன், தேவதா பாரமார்த்ய வேதியான பராசர பகவானுக்கும் பிதாமகனிறே?:

(பரிபப்ரச்ச) ‡ தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா என்கையாலே ப்ரணிபாதாபிவாதந பூர்வகமாக ஸம்யகர்த்த ப்ரச்நம் பண்ணினனென்கை.

"மைத்ரேய: பரிபப்ரச்ச-ப்ரணிபத்யாபிவாத்யச என்னக்கடவதிறே!.

(வால்மீகி:) பிறப்பேபிடித்து நிரவத்யனா யிருக்கும்படியைச் சொல்லுகிறது. ஸ்ரீ பூமிப்பிராட்டியாருடைய ¶ கர்ணத்திலே பிற

§ ஆகையால் சரணாகதியை இந்த தபஸ்ஸுக்களுக்கு மேற்பட்டதாய்ச் சொல்லுகிறார்கள்.

* இதிஹாஸ புராணங்களால் வேதம் நன்றாக விஸ்தரிக்கப்படட்டும்.

† வேதார்த்தத்தை விஸ்தரிப்பதன் பொருட்டு குசலவர்களை அங்கீகரித்ததாகத் தன்வாயாலேயே.

‡ வணங்கி வழிபடுதல் குசலப்ரச்நம் பண்ணுதல் சிச்ரூஷை பண்ணுதல் முதலானவைகளால்.

¶ காதிலே.

தவன். அதோ ச்ரோத்ர மேவ ச்ரோத்ரம் ஏவம் ஹ்யேதத் ப்ரதிவ்யாம் யத் வல்மீக:—(அதோ ச்ரோத்ர மேவச்ரோத்ரம் ஏவம் ஹ்யேதத் ப்ரதிவ்யாம்யத் வல்மீக:) என்று ச்ருதி. ஆதிகாவ்ய கர்த்தாவாய் ஜ்ஞாநாநுஷ்டாநங்களாலும் பராசர பாராசர்யாதிகளையும் அதிசயித்த ஸ்ரீவால்மீகி பகவானுக்கு ஸ்ரீமைத்ரேய பகவானிற்காட்டிலும் நெடுவாசி யுண்டெனச் சொல்ல வேண்டாவிறே. வால்மீகி என்று உச்சரித்த மாத்திரத்திலே ஜ்ஞாநிகளுக்கு இவ்வதிசய மெல்லாம் ஸ்புரியாநிற்கும். வால்மீகிர் பகவாந்ருஷி: என்று தன்னைத்தானே கொண்டாடும் படியன்றோ! இவ்வதிசய மிருப்பது.

"வண்குருகூர்ச் சடகோபன் கொற்றவேல் பரகாலன் கலியன், மின்னுநூல் விட்டுசித்தன், கொடைவிளங்கு விறல்தானைக் கொற்ற ஒள்வாள் கூடலர்கோன் குடைக் குலசேகரன் துளபத்தொண்டாய தொல்சீர் தொண்டரடிப்பொடி, விட்டுசித்தன் வியன்கோதை, வில்லைத் தொலைத்த புருவத்தாள்" என்று நின்றார்களிறே?

(முநிபுங்கவம்) பகவத்குண மன்ன சீலரில் வைத்துக்கொண்டு ச்ரேஷ்டனென்கை. தபஸ்வாத்யாய நிரதம் என்று காயிக சுத்தியையும் வாக்விதாம்வரம். என்று வாக்சுத்தியையும் (முநிபுங்கவம்) என்று மநஶ்ஶுத்தியையும் சொல்லிற்றாயிற்று. ஏவம் பூதனான ஸ்ரீநாரத பகவானைக்குறித்து வால்மீகிபகவான் ப்ரச்நம் பண்ணினனென்றால் அங்கு ப்ரணிபாதாபிவாதநங்கள் பண்ணச் சொல்ல வேண்டாவிறே?

2. கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கஶ்ச வீர்யவாந் । தர்மஜ்ஞஶ்ச க்ருதஜ்ஞஶ்ச ஸத்யவாக்யோ த்ருடவ்ரத: ॥

2. கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம்லோகே குணவாந் கஶ்சவீர்யவாந் ।
தர்மஜ்ஞஶ்ச க்ருதஜ்ஞஶ்ச ஸத்யவாக்யோ த்ருடவ்ருத: ॥

வால்மீகி பகவான் நாரத பகவானைக் குறித்து ப்ரச்நம் பண்ணுமதில் $ ஹேமாரவிந்தம் போல ஆச்ரயவைலக்ஷண்யத்தினால் § நிஸ்ஸமாப்யதிகதையைச்சொல்வதற்காக (கோநு) என்று ப்ரதமம் தர்மி

$ தங்கத்தாமரை.

§ ஒத்தார் மிக்காரிலாமையை.

நிர்தேசம் செய்கிறான் (அஸ்மிந்) இந்த லோகத்தில் என்றபடி. இத்தால் பரமபத நிலயனான எம்பெருமானை வ்யாவர்த்திக்கிறது. (ஸாம்ப்ரதம்) இப்போது என்றபடி இந்த லோகத்தில் இப்போது என்றதினால் காலாந்தரத்தில் அவதரித்த நரஸிம்ஹமாதி அவதாரங்களை வ்யாவர்த்திக்கிறது இத்தால் நிஸ்ஸமாப்யதிகதயா பரனாய் தேசகால ** விப்ரக்ருஷ்டனன்றிக்கே ஸுலபனுமா யிருப்பவன் எவன்? என்கிறான் 'குணவாந்' ஸௌலப்ய மிருந்தாலும் தாமரையிலை ஜலம் போல் ஒட்டாமலிருக்கை யன்றிக்கே நீரிலே நீர் சேர்ந்தாப்போலே இருக்கவேண்டுமென்று 'குணவாந்' என்று ப்ரச்நம் பண்ணுகிறான். குணசப்தம் ஸௌசீல்ய வாசியாய் பெரியவன் சிறியவனோடு புரையறக்கலந்து பரிமாறுகையைச் சொல்லுகிறது. அன்றியில் ஹேய குணவ்யதிரிக்தமாய் அநந்தமாய் ப்ரசஸ்தமான கல்யாணகுணங்களைச்சொல்லுகிறது. 'வீர்யவாந்' தனக்கொரு விகாரமின்றிக்கே பரர்களுக்கு விகாரத்தை உண்டுபண்ணுகையிறே வீர்யம். அதை யுடையவனென்றபடி சகாரம்-பராக்ரமத்தை ஸமுச்சயிக்கிறது. தர்மஜ்ஞ: ¶ 'ஏகத: க்ருதவஸ்ஸர்வே ஸமக்ரவரதக்ஷிணா: ஏகதோபயபீதஸ்ய ப்ராணிந: ப்ராணரக்ஷணம்' என்கிறபடி ஆர்த்தரக்ஷணமாகிற விசேஷ தர்மத்தை யறிந்தவன் என்றபடி. சகாரம் ரக்ஷணத்யாகாத்யதர்மத்தை அதிஹேயமாக வறிந்தவனென்றபடி க்ருதஜ்ஞ: அல்பமாகவும் ப்ராஸங்கிகமாகவும் ஆச்ரிதர்களால் செய்யப்பட்ட உபகாரத்தை பெரிதாக அறியுமவனென்கை. சகாரம் அலஸதையால் ஒருவன் அது செய்யாவிடிலும்—உபகரிக்குமவனென்கை. 'ஸத்யவாக்ய:' கஷ்டங்களிலும் அந்ருதவசநம் இல்லாதவன். 'த்ருடவ்ரத'—ப்ரதிஜ்ஞாதமான ஆர்த்தரக்ஷணத்தை ஆபத்திலும் விடாத ஸங்கல்பத்தை யுடையன்

3. 𑌏𑌤𑌦𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌂 𑌵𑌰𑌂 𑌕𑍌𑌤𑍂𑌹𑌲𑌂
𑌹𑌿 𑌮𑍇। 𑌮𑌹𑌰𑍍𑌷𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌮𑍇𑌵𑌂
𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑌂॥

** தூரஸ்த.

¶ ஸம்பூர்ணமாய் ச்ரேஷ்டமான தக்ஷிணையை யுடைய யாகம் ஒருதட்டு பயத்தால் பயந்த ப்ராணியின் ப்ராணரக்ஷணம் ஒருதட்டு.

3. ஏததிச்சாம்யஹம் ஶ்ரோதும் பரம் கௌதூஹலம்ஹி மே।
மஹர்ஷேத்வம் ஸமர்த்தோஸிஜ்ஞாதுமேவம் விதம்நரம்॥

ஏதத்-பூர்வோக்த தேசகால குணவிசிஷ்ட வஸ்துவைக் கேட்க ஆசைப்படாநின்றேன். 'பரம் கௌதூஹலம்' கேவலம் பூர்வோக்தமான குணமுடைய வஸ்துவைக் கேட்பதிலும் கௌதூஹல மில்லை. கேவலம் ஏதத்தேசகால ஸம்பந்தியான நர விஷயத்திலும் கௌதூஹலமில்லை. ஆச்சர்ய ரூபமானதால் உபயாத்மகமானவற்றைக் கேட்க ஆசைப்படாநின்றேன். ஹி என்று ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. ஸர்வத்ர ஆச்சர்ய வஸ்துவைப் பார்ப்பதில் கௌதூஹலம் ப்ரஸித்தமிறே! இவ்விரண்டும் வெவ்வேறாயிருப்பதை வேதாந்தங்களால் அறிவேன். அதில் எனக்கு கௌதூஹலமில்லை. இப்படிப்பட்ட வஸ்துவை என்னால்தான் அறியக்கூடுமோ? என்னில். 'த்வம் ஸமர்த்தோஸி' நீர் அறிய சக்தர்காண் என்கிறான். அதெப்படி எனில்? 'மஹர்ஷே' ருஷிகளாகிறார் ¶ அலௌகிகார்த்த த்ருஷ்டாக்கள் நீர் மஹர்ஷியானபடியால் எங்களைக்காட்டிலும் வேதாந்த ரஹஸ்ய ஜ்ஞாந முடையவரன்றோ?—ஆகையால் இப்படிப்பட்ட குணங்களையுடைய பரமபுருஷனைச் சொல்ல வேண்டுமென்கிறான்.

4. 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚 𑌕𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑍋 𑌹𑌿𑌤𑌃
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌃 𑌕𑌃 𑌸𑌮𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌕𑌶𑍍𑌚𑍈𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌃

4. சாரித்ரேண ச கோயுக்த: ஸர்வ பூதேஷு கோஹித:
வித்வாந் க: கஸ்ஸமர்த்தஶ்ச கச்சைகப்ரியதர்சந:

இந்த ச்லோகத்தில் ஸதாசார நிஷ்டன் எவன்? ஸர்வ பூத ஹிதனாய் இருக்குமவன் எவன்? வித்வான் எவன்? ஸமர்த்தன் எவன்? ஸதைகப்ரியதர்சனன் எவன்? என்று வாக்யத்திலே பூர்வோக்த ப்ரச்நங்கள்போல் நாலிரண்டு குணங்களைக்காட்டி ப்ரச்நம் செய்யாமல் ப்ரத்யேகம் ப்ரச்நம் பண்ணுகிற இத்தால் ஸதாசாரவத்தையையும் ஜ்ஞாந பரிபூர்ணத்வத்தையும் ஸர்வாத்மோஜ்ஜீவந ஸாமர்த்யத்தையும் முக்யமாய் ஸதபிமதமான ஸித்தாந்தத்தில் ஸந்ததநிரதனாயிருக்குகையும் ப்ரச்நம் பண்ணினானாயிற்று. ஸதைகப்ரியதர்சந: என்கிற விடத்திலும் இவ்வர்த்தமே அபிப்ரேதம்.

$ அத்ருஷ்டமான அர்த்தங்களை யறியுமவர்கள்.

ஸர்வஜந தர்சநீயத்வம் ஸமஸ்ஸம விபக்தாங்க: இத்யாதிகளில் ஸித்தமாகையால் அத்தைச்சொல்லில் புநருக்தமாம். 'சாரித்ரேணச கோயுக்த:' என்று துடங்கி கீழ் நாலும் ஆத்மகுணப்ரச்நமாயிற்று. தேஹ குணப்ரச்நமாம்போது அர்த்த ஸ்வாரஸ்யமில்லை. த்யுதிமாந் என்கிற விடத்தில் தர்சநீயத்வம் ஸித்தமாகையால் புநருக்தமாம். ஸதைக ப்ரியதர்சந: என்கிறவிடத்தில் கீழும் ஆத்மகுணபரமாகையால் இதுவே பொருளாகக் கடவது. "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்" என்கிற ச்லோகம் ராமஸித்தாந்தம். அது ஸர்வோத்தரமாய் ஸத்துக்களுக்கு அபிமதமாயிருக்குமிறே. 'ஸதாமேததகர்ஹிதம்' என்று பெருமாள் தாமே அருளிச் செய்தாரிறே. (அகர்ஹிதம்) கர்ஹிதாத் அந்யத் அபிமதம் என்றபடி 'ஸர்வதா அபிகத: ஸத்பி:' என்கிற ச்லோகத்தில் பெருமாளுக்கு ஆத்மகுண பூர்த்தி சொல்லுகிற தென்றும் ஸம்ப்ரதாயத்திற்கும் இவ்வர்த்தமே ஸங்கதம்.

5 பஹவோ து³ர்லபா⁴ஶ்சைவ யே த்வயா கீர்திதா கு³ணா:।
முநே வக்ஷ்யாம்யஹம் பு³த்³த்⁴வா தைர்யுக்த: ஶ்ரூயதாம் நர:॥

5. பஹவோ துர்லபாச்சைவ யேத்வயாகீர்த்திதா: குணா: ।
முநே வக்ஷ்யாம் யஹம்புத்வா தைர்யுக்தச் ச்ரூயதாம் நர :||

இப்படி இவ்வர்த்தம் அநேக வ்யக்தியில் துர்லபங்களாகையாலேயிறே பஹவோ துர்லபாச்சைவ என்கிறான். ஏகவ்யக்தியில் துர்லபங்களான யாவை சில குணங்களை நீர் ப்ரச்நம் பண்ணினவாறே ராமகுண ஸ்மரணத்தாலே நெஞ்சு கலங்கினேன் தெளிந்து ப்ரக்ருதிஸ்தனானவாறே சொல்லுகிறேன். அக்குணங்களோடு கூடின மஹாபுருஷனை பகவத்குணமனன சீலரான நீர் கேளீரென்கிறான். இவன் குணப்ரச்நம் மிகவும் திருந்தி விலக்ஷணமாய் ப்ரேமசாலிகள் பண்ணும் பகவத்குண கீர்த்தநமோபாதி செவிக்கினிய செஞ்சொல்லாய் உருகுமால் நெஞ்சம" என்னும்படி இருக்கையாலே 'கீர்த்திதா:' என்கிறான். "வோராவிநிர்விதிரா மெய்சிலிராக் கைமோவா" என்கிறபடி பகவத் விஷயம் சொல்லப் புக்குத் தான் உடைகுலைப் பட்டபடிக்கு "மொய்த்துக் கண்பனிசோர மெய்கள் சிலிர்ப்ப" என்னக் கடவதிறே: 'முநே வக்ஷ்யாம் யஹம்புத்வா'

என்று ப்ரச்நம் பண்ணின வால்மீகி பகவானுக்கு நாரதபகவான் நான் ஆனவாறே சொல்லுகிறேன் என்கிறான். அதுக்குக்கருத்தென்? எனில் அந்யபரனான நான் தெளிந்து ப்ரக்ருதிஸ்தனானவாறே சொல்லுகிறேன் என்றபடி.

தனிச்லோகம்.

(பஹவ:) ப்ரச்நம் பண்ணப்பட்ட குணங்கள் பதினாறாயிருந்தாலும் ஒவ்வொரு குணங்களும் தனித்தனியே பிரித்து விஸ்தரித்துப் பார்த்தால் அநேக குணராசீகரணமா யிருப்பதால் பஹவ:— என்கிறான். (துர்லபா:) ராமனைவிட்டு பரமபத நிலயனான பரவாஸுதேவனிடத்திலும் மற்ற அவதாரங்களிலும் காணக் கிடையாமையால் துர்லபா:- என்கிறான். வாயினால் சொல்லவும் அரிதென்கிறான் என்னவுமாம். இப்படி ப்ரச்நம் மற்றொருவரால் செய்யவொண்ணாதுகாண் என்கிறான். (முநே) என்று. நீர் மனனசீலரான ப்ரேமசாலியாகையாலே இவ்வாறு ப்ரச்நம்பண்ணினீர் இப்படிப்பட்ட ப்ரச்நத்திற்கு உத்தரம் சொல்வதற்கு அதிகாரி நானே என்கிறான் அஹம் என்று. என்னாலும் ஸஹஸா சொல்லமுடியாதென்கிறான் புத்வா என்று. அதவா புத்வா என்னுமதால் 'கோந்வஸ்மிந்' என்னும் ப்ரச்நாதிகளால் ராமகுணங்கள் நெஞ்சிற்பட்டு லோகம் மறந்தேன். தெளிந்து சொல்லுகிறேன். அப்படிப்பட்ட குணங்களோடு கூடின மஹா புருஷனைக்கேளீர் என்கிறான்.

6. இக்ஷ்வாகுவம்ஶப்ரப⁴வோ ராமோ நாம ஜநை: ஶ்ருத:।
நியதாத்மா மஹாவீர்யோ த்³யுதிமாந் த்⁴ருதிமாந் வஶீ॥

6. இக்ஷ்வாகு வம்சப்ரபவோ ராமோநாம ஜநைச்ச்ருத :
நியதாத்மா மஹாவீர்யோ த்யுதிமாந் த்ருதிமாந்வசீ.

'இக்ஷ்வாகு வம்சப்ரபவ:' தான் பெருமாளுக்குச் சொல்லுமதிசய மெல்லாவற்றிற்கும் ப்ரதானமாய் 'பிதரம்ரோசயாமாஸ' (சக்ரவர்த்தியைத் தனக்குப்பிதாவாகக் கோரினான்) என்கிறபடியே பெருமாளும் தம்முடைய அதிசயமெல்லாவற்றிற்கும் இது மூலமென்று திருவுள்ளமாய் இவ்வம்சத்தை ஆசைப்படும்படியிறே இவ்வம்சத்தினதிசய மிருப்பது. "இக்ஷ்வாகூணாம் மியம் பூமி: ஸசைல

வநகாநநா" என்றாரிறே பெருமாள். ஆகையால் முந்துற முன்னம் இக்ஷ்வாகு வம்சப்ரபவ: என்கிறான். "ஜாயமாநம் ஹி புருஷம் யம்பச்யேந் மதுஸூதந:" "ஸாத்விகஸ்ஸது விஜ்ஞேய: ஸவை மோக்ஷார்த்த சிந்தக:" என்கிறபடியே தானும் முமுக்ஷுவாய் ஸகலசேதநர்க்கும் பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷம் ஸித்திக்கவேண்டுமென்று மஹாதபஸ்ஸைப்பண்ணி ஸத்யலோகத்தில் நின்றும் பெரிய பெருமாளை திருவயோத்யைக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்த மஹாநுபாவனிறே இக்ஷ்வாகு "பஹூநாம் ஜந்மநாம் அந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுதுர்லப:" (அநேக ஜன்மங்களின் கடைசியில் ஜ்ஞானத்தையுடையவன், எல்லாம் வாஸுதேவன் என்று என்னை அடைகிறான். அப்படிப்பட்ட மஹாநுபாவன் துர்லபன்) என்னும்படியானவனிறே: ஸ்ரீ நாரத பகவான் தான் புக்கவிடமெங்கும் பாகவத ப்ரசம்ஸா பூர்வகமாக பகவத்ப்ரசம்ஸை பண்ணுமவனுகையாலும் விசேஷத: இக்ஷ்வாகு சக்ரவர்த்தியுடையவைபவத்தை அறிந்தவனுகையாலும் இவன் குடியிற் பிறப்பு பெருமாளுக்கு அத்யந்தாபி மதமென்று ஆடியிலே இக்ஷ்வாகு வம்சப்ரபவ; என்கிறான். இக்ஷ்வாகுவம்சப்ரபவ ; - என்றுசொல்லி நியதாத்மா மஹாவீர்யோ த்யுதி மாந் என்கைபாலே இக்குணங்களெல்லாம் இக்குடிப்பிறப்பாலே வந்ததுபோலேகாணும்" என்று ஜீயர் அருளிச்செய்வர். இப்படி விகல்பிக்கலாம்படியிறே! இவனுடைய நியம வீர்ய த்யுதி வசித்வாதிகளிருக்கும்படி. பெரிய பெருமாளைப் பெறவேணுமென்கிற தபஶ்சர்யையிலே இவ்வர்த்தமெல்லாம் த்ருஷ்டமிறே! 'வீர்யே ஸாக்ஷாச்சசீபதே' என்று பெருமாளுடைய வீர்யத்திற்கு உபமானபூமியான இந்திரனுடைய வஜ்ராயுதமும் வ்யர்த்தமாம்படியிறே அவனுடைய ப்ரபாவாதிசயமிருப்பது. ராமோ நாம ஜநைச்ருத. குணத்தளவும் செல்லவேண்டாம். ராமன் என்கிற திருநாமமே ஸர்வ ஜநங்களுக்கும் செவிக்கினிய செஞ்சொல்லாய்க் காணுமிருப்பதென்கிறார். இத்தால் இவருடைய ஶ்ரோதவ்யத்வம் (கேட்கத்தகுந்ததின் பெருமை) ஸித்திக்கிறது. ஶ்ரோதவ்யமேதந் நியமேந ஸத்பி: (ஸத்துக்களால் நியமத்துடன் இந்த ராமாயணம் கேட்கத்தகுந்தது) என்று வால்மீகியும் சொன்னானிறே:. மஹாநுபாவம் சரிதம் நிபோதத (மஹத்தான பெருமையையுடைய இச்

ஏஜன்டுகள் தேவை.

தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

அதிருசிகரம்! அதிஸௌகர்யம்!

சமையலுக்கு இன்றியமையாத ஓர் புதிய பதார்த்தம்.

ஷட்விதபா கோபயோகி

என்கிற

இண்டியன் குக்கிங்க் பவுட

INDIAN COOKING POWDER
V. R. GOPALAIYENGAR
GODHA VILASAM
25. ACHARAPPAN ST. G. T. MADRAS

REGISTERED TRADE MARK

SHADVITHA PACOPAYOGI : INDIAN COOKING POWDER
TRADE MARK
25. ACHARAPPAN ST. MADRAS.

சட்விதபாகோபயோகி
V. R. கோபால அய்யங்கார்
கோதாவிலாசம்
25 ஆச்சாரப்பன்வீதி ஜீடி மதருஸ்

சென்னை கார்ப்பரேஷன் சுகாதார ஆபீஸர்களாலும் மற்றும் பல ஸாராஸார விவேகிகளாலும் பரீக்ஷித்து பாராட்டப்பெற்றது.

ரஸம் சாம்பார் முதலான பதார்த்தங்கள் புளி, உப்பு மிளகாய் முதலானவைகளில்லாமலே அதி சுலபமாயும் அதி ருசிகரமாயும் அதி சீக்கிரத்தில் செய்து கொள்ள உபயோகமாயிருக்கும்.

(1) அப்படியே இட்லிமுதலானவைகளுக்கு உபயோகிக்கலாம்
(2) ஜலத்தில் கட்டியாய் கலந்தால் சட்னியாகும்.
(3) புளிப்பில்லாத்தயிரில் கலக்க தயிர்ப்பச்சடியாகும்.
(4) சாதத்தில் கடலைப்பருப்பும் முந்திரிப்பருப்பும் வறுத்துச் சேர்த்துப் பொடியைக்கலக்க புளியோதனமாகும்.
(5) சமையல் செய்த பருப்பில் சேர்த்தால் சாம்பாராகும்.
(6) கொதித்த ஜலத்தில் சேர்த்து விட்டால் ரஸமாகவேயிருக்கும்.

"கோதா விலாஸம்"
25, ஆசர்ரப்பன் தெரு, மதராஸ்

V. R. GOPALA AIYANGAR,
Proprietor

Registered No. M. **3401**

விளம்பரம்

1. தங்கம், கெம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச்சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயுமிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1-க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம்பொன்னுக்கு உத்தரவாதம.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசுவளயல்களுக்கும் கேட்லாக்கு உண்டு அதைவாங்கி நெம்பரைக்குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்து கொடுக்கப்படும்.

பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

Edited & Published by Vadakarai Ramanujachariar, 25, Acharappan St., and Printed at the Newman Press, 161, Broadway, Madras

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை

ஸம்புடம் 1	தாது ஸூ சித்திரை மீ	சஞ்சிகை 6

பத்ராதிபர் :

வடகரை இராமாநுஜாசாரியார்

25, ஆசாரப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

1936 ஏப்ரல்] [தனிப்ரதி விலை **0-3-0**

நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பா இப் பத்திரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்தி களில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்கார ணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷ யங்களை வித்வான்கள் எழுதியனுப்பினல் அவை இதில் ப்ர சுரிக்கப்படும்.
5. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
7. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள்
8. மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனுடு இப்பத்திரிகை விஷயமான ஸுகதுக்கானுபவங் களை யுடையவர்கள் (Sympathizers) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவ னுகக் கடவேன்.
9. (25) இருபத்தைந்து ரூபா கொடுக்கு மவர்களை ஜீவியச் சந்தா தாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பண மன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.
10. பத்திரிகையின் வருஷசந்தா

வெளியூர்	...	1	12	0
உள்ளூர்	...	1	8	0
தனிப்ரதி	...	0	3	0

ஷை ரூபாயை அனுப்பி சரியான விலாசத்தைத்தெரிவித்தால் சஞ் சிகை:புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விளம்பரம்

ராப்பர் முழுப்பக்கம் ஒரு தடவைக்கு	...	5	0	0
,, அரைப்பக்கம் ,,	...	3	0	0
,, கால்பக்கம் ,,	...	2	0	0

—பத்ராதிபர்.

ஸ்ரீமத். உபயவேதாந்த வித்வச் சிகாமணி
காரப்பங்காடு - சிங்கப்பெருமாள் ஸ்வாமி.

விஷய ஸூசிகை

விஷயங்கள்.	பக்கம்.
1. சித்திரையில் செய்ய திருவாதிரை —ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்	... 91
2. ஸ்ரீமத் உபய வேதாந்த வித்வச் சிகாமணி காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி —ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்	... 99
3. கச்சி மேயகளிறு	... 104
4. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் —பத்திராதிபர்	 108
5. தானமும் தவமும் —பர்தல்குடி, பாரத்வாஜ மாடபூசி, ரெ. ஸ்ரீ. திருமலை அய்யங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.	... 113
6. தேசிகன் யதிராஜ ஸப்ததியில் நாதமுனிகளிடம் ஈடுபாடு —எ. வி. கோபாலாசாரியார், பத்திராதிபர், ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸ்ம்ரக்ஷிணி.	... 118
7. வர்த்தமானங்கள்	... 120
8. ஸ்ரீ ராமாயண ச்லோகார்த்தம் —ஸ்ரீ அநந்தாண பிள்ளை கோவிந்தப்பங்கார்	... 9

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களாலும், பலபிரமுகர்களாலும் தங்க மெடல்களும், நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1 - க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாசாசாரியார்,
58, லஸ்சர்ச் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது -
- மனிதர்களுக்கு ஆரோக்யத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.
ப்ரபல பெருங்காய
வியாபாரிகள்:
பம்பாய், சென்னை,
கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதறாஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமனத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவச மிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.
பம்பாய். மதராஸ். கல்கத்தா.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

தொகுதி 1.	பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார்	பகுதி 6.

ஸ்ரீரஸ்து
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே ।
யஶ்ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ॥
வேதவேதாந்த வேதாம்ஶ ஸத்ஸம்ப்ரதாயபோஷிணீ ।
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ॥

சித்திரையில் செய்ய திருவாதிரை.

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

ஏழ்பாருமுய்ய எதிராசருதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரை இன்று.

"ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு" இதுவேயாகும். இதுவே நாற்றிசையுங் கொண்டாடும் நாள்.

நமது பத்ரிகையோ ராமாநுஜ சித்தாந்த வைஜயந்தி. இராமானுசனுடைய திருவருளைப் பெற்று அவருடைய ஸித்தாந்தத்தின் ஸாரப் பொருள்களை வெளியிடுதற்கென்றே உலாவுகின்ற இப்பத்திரிகை இன்று அவ்விராமானுசனுடைய திருக்குணங்களில் சிலவற்றை அறுப்விக்கவும் நண்பர்களை அநுபவிப்பிக்கவும் குதுகலிக்கின்றது.

இந்த நன்னாளின் சிறப்பை மணவாளமாமுனிகள் ஒரு சீரிய செய்யுளினால் வெளியிட்டருளியுள்ளார்; அதுவருமாறு:—"சங்கர பாக்கர யாதவபாட்ட ப்ரபாகரர்தங்கள் மதம், சாய்வுற வாதியர்

மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திருநாள், வெங்கலி யிங்கினி வீறு நமக்கில்லையென்று மிகத்தளர்நாள், மேதினி நஞ்சுமை யாறுமெனத் துயர்விட்டு விளங்கியநாள், மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடுநாள், மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள், செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ் சிறந்தபெரும்பூதூர்ச், சீமா னிளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரை நாளே" என்பதாம்.

இஃது ஆர்த்திப் பிரபந்தத்துள் முப்பத்திரண்டாவது பாசுரமாகும். எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே பலபல மாயமதத்தவர்கள் இவ்வுலகில் மலிந்து வேதங்களுக்கு ஏலாத பொருள்களை ஏறிட்டுரைத்துத் தத்வார்த்தங்களுக்கு க்ஷேபத்தை விளைத்திருந்தார்கள். அதனால் வேதங்களும் 'நமது கதி இப்படியாயிற்றே!' என்று சாலவும் வருந்திக் கிடந்தன. எம்பெருமானார் திருவவதரித்தவன்றே அவற்றின் வருத்தம் தொலைந்து அவை வாழ்ச்சிபெறத் தொடங்கிவிட்டன:

அன்றியும், இந்நிலத்தில் கலிபுருஷன் நெடுநாளாகச்செங்கோல் செலுத்திக்கொண்டு தன்னுடைய பராக்கிரமமே எங்கும் ஓங்கி வருமாறு அரசாட்சி புரிந்து வந்தான்; அன்னவனும் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே "கலியுங் கெடுங்கண்டு கொண்மின்" என்ற மூதுவர்மொழி பலிக்குங்காலம் வாய்ந்ததுபோலுமென்று துணிந்து இனி நாம் மாள்வதன்றி வாழ்வதற்கில்லையென்று தளர்ச்சியடையத் தொடங்கிவிட்டான்.

அன்றியும், பூமிப்பிராட்டியானவள் 'ஸர்வம் ஸஹா' என்று பெயர் பெற்றிருந்தாலும் நல்லார்கள் பலபல கோடிக்கணக்காகத் தன் மீது வாழப்பெற்றாலும் அவர்களைப் பஞ்சுச் சுருள் போல் சிறிதும் ஆயாஸமின்றித் தாங்கி நிற்பள். தீயவர் ஒருவரிருவர் இப்பினும் இரும்பு மூட்டை தாங்குவதனால் போல் மிக மெலிந்து நிற்பள். உடையவர் திருவவதாரத்திற்கு முன்னே நல்லார்கள் மிக மெலிந்து தீயார்களே மிக மலிந்திருக்கப் பெற்றதனால் பூமிப்பிராட்டி பொறுக் கொணாச் சுமையினால் மிகவும் துயருற்றுக் கிடந்தாள்; அன்னவள் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே, இனி இந்நிலவுலகில் தீயார் ஒருவருமின்றிக்கே அனைவரும் நல்லாராகவே வாழ்ச்சி பெறுவர்களென்று சிக்கனத் துணிந்து இனி நமக்குப் பொறுக்க வொண்ணாத பாரம் சிறிதுமிராதென்று தேறித் துயர் விடத் தொடங்கினள்.

அன்றியும், பல ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஏற்கனவே திருவவதரித்து அருமருந்தன்ன ஸ்ரீஸூக்திகளை உதவியருளியிருந்தாலும் அவற்றுக்கு ஸர்வதோ முகமான ப்ரசாரம் ஏற்படாமலும் அழகிய வியாக்கியானங்கள் அமையாமலு மிருந்ததனால் 'நம்முடைய அரிய பெரிய காரியங்கள் உலகுக்குப் பெரிதும் பயன்படவில்லையே!' என்று அவர்களெல்லாம் களிப்பின்றியே குன்றியிருந்தனர்; எம்பெருமானார் திருவவதரித்தவன்றே 'இனி ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி திவ்யக்ரந்தங்கள் ஓங்கப் பெறுமாதலால் நமக்கொரு குறையில்லை; நாம் செய்திருந்த காரியங்களெல்லாம் சதசாகமாகப் பணைக்கும்படியான பாக்கியம் வாய்க்க நற்சமயம் விளைந்திட்டது, என்று துணிந்து அன்னவர்கள் அளவிலாத ஆனந்தமெய்தத் தொடங்கினர்.

அன்றியும், எம்பெருமான்தான் பரமபதத்தில் பரவாஸுதேவனாக வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தி யிருக்குமிருப்பிலும், திருப்பாற் கடலில் அடியார்களின் கூக்குரல் செவிப்படுமாறு வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து அதன் மேலே கள்ள நித்திரை கொண்டு உறங்குவான் போல் யோகு செய்திருக்குமிருப்பிலும், ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபு ராவண கம்ஸ சிசு பாலாதிகளைத் தொலைத்திட்டு உலகை வாழ்விக்க ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்கள் செய்தவற்றிலும், கருதரியவுயிர்க்குயிராய்க் கரந்து எங்கும் பரந்துறையுமிருப்பிலும், திருப்திபெறுதே கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலான திருப்பதிகளிலே பின்னானார் வணங்குஞ் சோதியாய் நித்யஸந்நிதிபண்ணி யிருந்தும், அந்தத் திருப்பதிகளைத் திருத்திப் பணி கொள்வாரில்லாமையாலே அர்ச்சாவதாரமும் அப்ரயோஜநமாக ஆய்விட்டதே! என்று வருந்த வேண்டி யிருந்தது எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே. இப்பெரியார் இவ்வுலகினிற் போந்தவன்றே "ஸர்வதேச தசாகாலேஷு அவ்யாஹத பராக்ரமா, ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்று நீடுழியூழி நாடெங்கும் போற்றும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் அற்புதமான சீர்திருத்தங்களும் கைங்கர்ய அபிவிருத்திகளும் இனி ஒளி மல்குமென்று துணிந்து அர்ச்சாவதார எம்பெருமான்கள் குறை தீர்ந்து மகிழத் தொடங்கினர். ஆக இங்ஙனம் வேத வேதாந்தங்கள் களிப்புறவும், கலிபுருஷன் தேய்வுறவும், மண்மாது மகிழ்வுறவும், பூருவர்கள் யாவரும் பொலிவுறவும், எம்பெருமான்கள் இன்புறவும் அமைந்த நன்னாள் இத்திருவாதிரை யொன்றேயாகும்.

இத்திருநன்னாளில் தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அபராவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவமென்றும் விஷ்வக்ஸேநருடைய அவதாரமென்றும் இங்ஙனே பலவாறாகப் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் "அடையார் கமலத்தலர் மகள் கேழ்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும், ஒண்சாரங்க வில்லும்புடையார் புரிசங்கமுமிந்தப்பூதலங்காப்பதற்கென்றிடையே இ ரா மா னு ச மு னி

யாயின வித்தலத்தே" என்னும் பாசுரத்திலும், "𑌪𑍍𑌰𑌥𑌯𑌨𑍍 𑌵𑌿𑌮𑌤𑍇𑌷𑍁 𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌭𑌾𑌵𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌸𑍍𑌮𑌤𑍍𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑍇 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃। 𑌅𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌯𑌨𑍍𑌮𑌯𑌤𑍍𑌵𑌂 𑌵𑌵𑍃𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑌾𑌯𑍁𑌧𑍈𑌰𑍍𑌮𑍁𑌰𑌾𑌰𑍇𑌃—ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண பாவம் ப்ரபுர ஸமத்பரிரக்ஷணே யதீந்த்ர:, அப்ருதக்ப்ரதிபந்நயந் மயத்வம் வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:" என்ற யதிராஜஸப்ததிஸூக்தியிலும் பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதார மென்னும் விஷயம் காட்டப்பட்டுளது. "𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌤𑍍𑌰𑌾𑌤𑍁𑌂 𑌵𑌿𑌷𑌯𑌨𑌿𑌯𑌤𑌂 𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌸𑌨𑍍 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑍋 𑌯𑌤𑌿𑌪𑌤𑌿𑌰𑌭𑍂𑌤𑍍 𑌵𑍇𑌤𑍍𑌰𑌸𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌃—விச்வம் த்ராதும் விஷயநியதம் வ்யஞ்ஜிதாநுக்ரஹஸ்ஸந் விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத்வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:;" என்கிற யதிராஜஸப்ததி ஸூக்தியொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுளது.

திருவனந்தாழ்வானுடைய திருவவதார மெனனும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள்.

எம்பெருமானாருடைய அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான திருமலை அனந்தாழ்வான் தாமருளிய ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸமாலா என்கிற திவ்யக்ரந்தத்தில், "𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌪𑌤𑌿𑌃.... 𑌨𑌿𑌜𑌶𑍇𑌷𑌾𑌹𑌿𑌂𑌸𑌂 𑌤𑌮𑌾𑌹𑍂𑌯 𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 ‘𑌧𑌰𑌣𑍀𑌤𑌲𑍇 𑌦𑍀𑌪𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌂 𑌸𑌂𑌰𑌕𑍍𑌷’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑌃 𑌸 𑌚𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 .... 𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌕𑍇𑌶𑌵𑌯𑌜𑍍𑌵𑌨𑌸𑍍𑌤𑌨𑌯𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌬𑌭𑍂𑌵." என்கிற கத்யத்தையும், "𑌕𑌲𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑍇𑌷𑍍𑌵𑌹𑌹 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌾𑌨𑌾𑌯 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑌂𑌵𑍇𑌷𑍁 𑌸𑍁𑌯𑌾𑌤𑍇 𑌸𑌿𑌂𑌹𑌮𑌾𑌸𑍇. 𑌸𑌵𑌿𑌤𑌰𑌿𑌵𑌶𑌤𑍇 𑌤𑍇𑌷𑌰𑌾𑌶𑌿𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌜𑍍𑌞𑍇 𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌾 𑌤𑌾𑌰𑌾𑌯𑌿𑌤𑍍𑌵𑍇 𑌹𑌰𑌿𑌤 𑌕𑌰𑍍𑌣𑍇𑌃 𑌕𑍇𑌶𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌦𑌿𑌜𑌾𑌤𑍍𑌰𑌸𑍍 𑌶𑍍𑌰𑍀𑌦𑌰𑍍𑌪𑌂 𑌸𑌿𑌤𑌵𑍇 𑌪𑌾𑌦𑌯𑌿𑌯𑌾𑌣𑌿𑌤𑌂 𑌶𑍇𑌷 𑌆𑌵𑌿𑌰𑍍𑌬𑌭𑍂𑌵." என்கிற பத்யத்தையும் ப்ரஸாதித்துள்ளார். எம்பெருமான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந்தாழ்வானை நோக்கி 'நீ நிலவுலகத்திற் சென்று பிறந்து எவ்வுயிரையும் ஸம்ரக்ஷிக்கக் கடவை' என்று நியமித்தருள, அந்த நியமநத்தைச் சிரமேற்கொண்ட ஆதிசேஷன் அப்படியே திருவாதிரையில் ஸ்ரீ கேசவ ஸோமயாஜிகளுக்குப் புதல்வராகப் பிறந்தானென்பது மேற்குறித்த ப்ரமாணங்களின் பொருள்.

இப்படியே மற்றொரு சிஷ்யரான வடுகநம்பி யருளிச்செய்த ச்லோகரூபமான யதிராஜவைபவக்ரந்தத்தில்—"𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌮𑌰𑍍𑌥𑌨𑌾𑌯 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌰𑌾𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌨𑌿𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌯 𑌨𑍃𑌪𑌶𑍇𑌷𑌾𑌂𑌶𑌕𑌃 𑌕𑍇𑌶𑌵𑌯𑌜𑍍𑌵𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌤𑍇𑌜𑍋𑌨𑌿𑌧𑌿𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌿𑌹𑌾𑌵𑌿𑌰𑌾𑌸𑍀𑌤𑍍" || என்றுள்ளது. வேதாந்த தத்துவப் பொருள்களை நிலைநாட்டுதற்காகவும் துர்மதங்களைத் தொலைப்பதற்காகவும் திருவனந்தாழ்வானுடைய அம்சபூதராய்த் தேஜோநிதியான ஒரு மஹான் கேசவ ஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்பது இந்த ச்லோகத்தின் பொருள். இவ்வடுக நம்பிகள் தாமே அருளிச்செய்த ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தரசத நாமஸ்தோத்ரத்தில் "𑌶𑍍𑌰𑍀𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑍁𑌖𑌾𑌵𑌤𑌾𑌰𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌾𑌹𑌨𑌰𑌕𑍍𑌷𑌕𑌃 | 𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑌃 𑌶𑍇𑌷𑌾𑌵𑌤𑌾𑌰𑌪𑌾𑌪𑌹𑌕𑌃" என்பது இருபத்து மூன்றும் ச்லோகம்.

எம்பெருமானுடைய பூர்ண கடாக்ஷ பாத்ர பூதராய் அவர் திறத்துத் தேவுமற்றறியாதே ஈடுபட்டிருந்த மஹா ப்ராஜ்ஞரான கருடவாஹந பண்டிதர் பணித்த திவ்யஸூரி சரித மென்னும் மஹா காவ்யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜ வைபவம் சொல்லப்புகுந்த விடத்து, "𑌸𑌾𑌜𑌂𑌗𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌹𑌾𑌯𑌶𑍇𑌷 𑌹𑍋𑌗𑍀 𑌯𑌦𑍍𑌰𑍂𑌪𑌮𑌾𑌪 𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌸𑌮𑌨𑌵𑌾𑌨𑌿𑌤𑌂 𑌜𑌗𑌾𑌮" [திருவனந்தாழ்வான் தனது உரகவுடலை விட்டொழிந்து இராமாநுச முனியாந் திருவுருவத்தை யடைந்தான்] என்றும்; "𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯 𑌹𑌂 𑌤𑌵 𑌸𑌵𑌿𑌧𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌲𑍋𑌕𑌾𑌸 𑌶𑍇𑌷𑌾𑌂𑌶𑌾𑌜𑍍𑌜𑌨𑌿𑌤𑌾𑌤𑌂 𑌕𑍃𑌤𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌤𑍍" (யாதவ ப்ரகாசனை நோக்கி ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் வார்த்தை இது. உமது பக்கத்திலிருப்பவரும் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வானுடைய அம்சமாக வந்து திருவவதரித்தவருமான இந்த [ராமாநுஜ னென்கிற] மஹானிடத்தில் நான் அஞ்சுகின்றேன்) என்றும் சொல்லப்பட்டுளது.

ஆசார்ய கோஷ்டியிற் சேராதவர்களாய் முந்நூறு நானூறுவருஷங்களுக்கு முன்னே யிருந்தவர்களான பல மஹா வித்வான்களும் இவ் வழியையே ஆதரித்துப் பேசியுள்ளார்கள். ஸூரபுரம் ஸ்ரீ வேங்கடாசாரிய ஸ்வாமிகள் இயற்றின யதிராஜ தண்டகத்தில்—"நரவேஷாய சேஷாய குரவே பரவேதிநே" என்று மங்கள ச்லோகத்திலும் "𑌘𑍋𑌷𑌾𑌤𑌿𑌘𑍋𑌰𑌾𑌯 𑌶𑍇𑌷𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌯' என்று முடிவிலும் மொழிந்துள்ளமை காண்க. அரசாணிபாலை ஸ்ரீவேங்கடாத்வரிகளும்

விச்வ குணாதர்சத்தில் ஸ்ரீ பெரும்பூதூர்வர்ணந ப்ரகரணத்தில் "ராமாநுஜாய முநயே நவவேஷபாஜே ஶேஷாய யஸ்த கலயே கலயே ப்ரணாம:" [மநுஷ்யாவதார மெடுத்த ஆதிசேஷனும் கலியைக் கெடுத்தவராயுமுள்ள எம்பெருமானாரைத் தொழுகின்றேன்] என்று சொல்லியுள்ளார்.

ஸ்ரீ தேசிகனை யடிபணிந்து உய்ந்து போந்த ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பணித்ததாக ப்ரஸித்தமாயுள்ள திவ்யஸூரிஸ்தோத்ரத்தில் "மேஷார்த்ராஸம்பவம் விஷ்ணோர்தர்ஶநஸ்தாபநோத்ஸுகம் | துண்டீரமண்டலே ஶேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே ||" [எம்பெருமானுடைய தர்சநத்தை ஸ்தாபித்தருளச் சித்திரைத் திருவாதிரையில் தொண்டை நாட்டில் அவதரித்த ஆதிசேஷ மூர்த்தியாகிய ஸ்ரீ ராமாநுஜனைத் தொழுகின்றேன்] என்று சொல்லப்பட்டுளது.

இராமாநுச நூற்றந்தாதியில் "நல்லார் பரவு மிராமாநுசன்" என்ற எண்பதாம் பாசுரத்தின் வியாக்யானத்தில்—"அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத: பரம் பலபத்ரஸ்த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜஸ்ம்ருத:—அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத: பரம், பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத:." என்கிற ஆர்ஷவசநம் உதாஹ்ருதமாகக் காண்கிறது. இந்த ச்லோகத்தில் கலௌ கஶ்சித்பவிஷ்யதி என்கிற பாடமாகவும் கடையடி காண்கிறது.

இங்ஙனே பல ஆசிரியர்கள் எம்பெருமானாரை ஆதிசேஷாவதாரமாக அருளிச் செய்திருக்க, நூற்றந்தாதியிலும் யதிராஜ ஸப்ததியிலும் பஞ்சாயுதாவதாரம்—விஷ்வக்ஸேநாவதாரம் என்றிப்படி அருளிச் செய்ததேன்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். இதற்குப் பெரியோர்கள் பகர்வதாவது:—சரித்திர நூல் என்பது வேறு, ஸ்தோத்ர நூல் என்பது வேறு. சரித்திர நூல்களில் அவதார ரஹஸ்யம் உள்ளது உள்ளபடி உரைக்கப்படும். ஸ்தோத்ர நூல்களிலோ வெனில், கவிகளின் புத்தி சமஸ்காரத்திற்குத் தக்கபடியும் ப்ரதிபாத்யர்களின் ப்ரபாவ விசேஷங்களுக்கு ஏற்றபடியும் பலவகையான வர்ணனைகள் இருக்கக்கூடும். சரித்திர நூல்களால் அறுதியிடப்படுகிற அவதார ரஹஸ்ய தத்துவங்களை ஸ்தோத்ர நூல்களிலுள்ள உக்திகள் உபமர்த்திக்க வல்லமையல்ல.

இதற்கு ஒரு நிதர்சநம் காணலாம். தேசிகன் திருமணியவதாரமென்று சரித்திர நூல்களால் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டுளது.

ஸ்தோத்ர நூல்களிலோ வென்னில், "வேங்கடேஶாவதாரோऽயம் தத்கண்டாம்ஶோऽதவா ஹலேஶ: யதீந்த்ராம்ஶோऽதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து ஸம்மத:" என்று பலவாறு உல்லேகிப்பதாகச் சொல்லப்படுகிறது. சரித்திர நூல்களில் ஒருவகையான நிஷ்கர்ஷம் இருக்கும்போது இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷைகள் ஏதுக்கு? என்று நாம் கேட்கலாகுமோ? வைபவ விசேஷங்களைப் பார்த்தால் பலபடியுஞ் சொல்லாயிருக்கையாலே "அத்ரிஜமதக்நிபங்க்திரதவஸுநந்தஸூநுவானனுடைய யுகவர்ணக்ரமாவதாரமோ! வ்யாஸாதிவத் ஆவேசமோ! மூதுவர்கரை கண்டோர் சீரியரிலே ஒருவரோ! முன்னம் நோற்ற அனந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவரோவென்று சங்கிப்பர்கள்." (ஆசார்யஹ்ருதயம்) என்று நம்மாழ்வார் திறத்திற்போலவே மற்றுமுள்ள பெரியார் திறத்திலும் பலபடியாக உல்லேகிப்பது உரியதேயாகும். எம்பெருமானார் திறத்திலும் இப்படிப்பட்ட உல்லேகத்தை வடுகநம்பிகளும் "ஶேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர்வேதி ஸாத்விகை: விதர்க்யாய மஹாப்ராஜ்ஞைர்யதிராஜாய மங்களம் ||" என்ற ச்லோகத்தினால் காட்டியருளினர்.

இங்கு ஸாரமாக ஒன்று விஜ்ஞாபிக்கிறேன். இன்ன ஆசிரியர் இன்ன அவதாரந்தான் என்று நிர்த்தாரணம் செய்து தீரவேண்டிய அவசியமுமில்லை. நித்யஸூரிகளில் ஒருவர் வந்து அவதரித்துமிருக்கலாம். நித்யமுக்தர்கள் பலரும் திரண்டு வந்து ஒரு வடிவு கொண்டு அவதரித்துமிருக்கலாம். 'அந்த ஸூரியின் அவதாரமன்று, இந்த ஸூரியின் அவதாரந்தான்' என்று ஒன்றை மறுத்து ஒன்றை ஸ்தாபிக்கவேண்டிய ஆவச்யகதை சிறிதுமில்லை. 'எம்பெருமானார் பஞ்சாயுதாவதாரர்' என்று ஒருவர்க்குக் கொள்கையாயின் அதனை மறுத்துரைக்க ஒருவர் முற்பட வேண்டா. பெரிய திருவடியின் அம்ஶமென்று மற்றொருவர்க்குக் கொள்கையாயின் அதுவும் மறுத்துத் தீரவேண்டிய விஷயமன்று. நித்யஸூரிகளில் ஆரேனுமொருவருடைய அம்ஶமாக ஆசார்யரைச் சொல்லுவது பூஷணமேயல்லது தூஷணமன்றே. பஞ்சாயுதாழ்வார்களுள் ஒருவரான திருவாழியாழ்வாரொருவரே எம்பெருமானாராகத் திருவவதரித்ததாய்க் கூறுவதில் குறையொன்றுமில்லாதிருக்கச் செய்தேயும் பஞ்சாயுதாழ்வார்களும் ஒன்று சேர்ந்து வந்து திருவவதரித்ததாக அமுதனார் அருளிச் செய்த கணக்கிலே அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான பல நித்யஸூரிகளும் ஒன்று சேர்ந்து எம்பெருமானாராகத் திருவவதரித்தனர் என்று ஒரு பக்த சிரோமணி திருவுள்ளம் பற்றினால் அது தானும் மறுத்துரைக்க வேண்டிய விஷயமோ? அன்று.

'அவருடைய அவதாரமன்று, இவருடைய அவதாரந்தான் என்று ஒரு ஆக்ரஹம் தோற்ற நிர்ப்பந்திக்கப் புகுதல் உரியதன்று. நிர்ப்பந்தித்தேயாக வேண்டிய அவசியமுளதாகில் எம்பெருமானாரைப் பற்றின வரையில் சேஷாவதாரரென்று ஸித்தாந்தப் படுத்துவதே ஸஹ்ருதய ஹ்ருதயங்கமம்.

அபரிச்சேத்ய ப்ரபாவ விசேஷங்கள் மிகுந்த இவ்வாசார்ய சிகாமணி தம்முடைய திருவடிஸம்பந்தத்தினால் பின் புள்ளாரனைவர்க்கும் உஜ்ஜீவநம் தந்தருளியது போலவே தமது திருவடி ஸம்பந்தத்தினால் முற்பட்ட ஆசார்யர்களுக்கும் உஜ்ஜீவநம் தந்தருளியதாக அக்காலத்திலிருந்த மஹான்கள் உபச்லோகித்துள்ளார்கள். இதைச் சிலர் அதிசயோக்தி என்று கொண்டாலும் அங்ஙனம் சிறப்பித்துக் கூறுதற்கு ஏற்ற பெருமேன்மை இப்பெரியார் பக்கல் நிரம்பியிருந்ததென்று நிஷ்கர்ஷிக்கத் தட்டில்லையாயிற்று.

அஸ்மதாதிகள் புதிய புதிய நரக ஸ்ருஷ்டிக்கு ஹேதுவான மஹா பாதகங்களை க்ஷணந்தோறும் அளவுகடந்து செய்பவர்களாயிருக்கச் செய்தேயும் 'நம்மிராமானுசனையுடையோம்' என்று மார்பு நெறிக்கப் பெற்று நாமும் நற்கதி நண்ணுதற்குத் தடை சிறிதும் கிடையாதென்பதை தேசிகனும் மணவாளமா முனிகளும் ஸ்பஷ்டமாக அருளிச் செய்தருளினர். தேசிகன் ந்யாஸதிலகத்தில் "𑌉𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌯𑌾 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌯𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌮𑍁𑌨𑍇𑌰𑍍 𑌭𑌵𑌤𑌾 𑌵𑌿𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌰𑌂 𑌤𑌦𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌮𑌦𑌾𑌵𑌲𑌿𑌪𑍍𑌤𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌮𑌯𑌿 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥" ச்லோகத்தில் ஸ்ரீரங்கநாதனை நோக்கியுரைக்கும் முகமாகத் தெரிவித்தருளின சீரிய பொருளை மணவாளமா முனிகள் யதிராஜவிம்சதியில் "𑌕𑌾𑌲𑌤𑍍𑌰𑌯𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑌣𑌤𑍍𑌰𑌯𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾𑌤𑌿𑌪𑌾𑌪𑌕𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌶𑌰𑌣𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌕𑍍𑌷𑌮𑍈𑌵 𑌸𑌾 𑌚 𑌤𑍍𑌵𑌯𑍈𑌵 𑌕𑌮𑌲𑌾𑌰𑌮𑌣𑍇𑌽𑌰𑍍𑌥𑌿𑌤𑌾 𑌯𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌮𑌃 𑌸 𑌏𑌵 𑌹𑌿 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌭𑌵𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑍍." என்ற ச்லோகத்தில் எம்பெருமானாரையே விளித்து வெளியிட்டருளினர்.

அறுசமயச் செடியதனை யடியறுக்க, அடர்ந்து வரும் குதிட்டிகளை அறத்துறக்க, செறுகலியைச் சிறுது மறத் தீர்த்துவிட, தென்னரங்கர் செல்வம் முற்றுந் திருத்திவைக்க, மறையதனிற் பொருளனைத்தும் வாய்மொழிய, மாறனுரை செய்த தமிழ்மறை வளர்க்க 'அழகாரு மெதிராசர் அறமிகு நற்பெரும் பூதூரில் அவதரித்த' இந்தத் திருவாதிரையையே மறவா திரு நெஞ்சே!.

ஸ்ரீ:.

ஸ்ரீமத். உபய வேதாந்த வித்வச் சிகாமணி

காரப்பங்காடு. சிங்கப்பெருமாள் ஸ்வாமி.

(ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர் எழுதுவது.)

ஸ்ரீ வைஷ்ணவ வுலகத்தில் இந்த ஸ்வாமியின் திருநாமத்தைக் கேள்விப்படாதவர்கள் பெரும்பாலும் இருக்கமாட்டார்கள். இவர் திருநாட்டுக்கெழுந்தருளி இரண்டு மூன்று ஸம்வத்ஸரங்களாயின. இவருடைய திருவுருவப்படம் இந்த ஸஞ்சிகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. நேரில் ஸேவிக்கப் பெறாதவர்களும் இப்போது ஸேவித்து க்ருதார்த்தர்களாகக் கடவர்கள்.

இவருடைய ஞானனுஷ்டான வைபவங்களைப்பற்றி விரிவாக விஜ்ஞாபனம் செய்ய அடியேனுக்கு யோக்யதையில்லை. ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களிலும் த்ராவிட சாஸ்த்ரங்களிலும் மிகத் தெளிவான ஞானம் பெற்று ஸ்ரீபாஷ்ய பகவத் விஷய ரஹஸ்யாதி க்ரந்தங்களை அநேக பர்யாயம் சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்து, அநேக வித்வத் ஸபைகளிலும் அமுதமொழிகளை அடிக்கடி வர்ஷித்து நாடெங்கும் பரவிய நற்புகழ்பெற்ற மஹாநுபாவர் இவர். அநேக ஸம்வத்ஸரம் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருந்து உபய வேதாந்த ரஹஸ்யார்த்தங்களைப் பலர்க்கு உபதேசித்தருளினவர். ஜ்யோதிச் சாஸ்த்ரத்திலும் மஹா நிபுணர். எந்த விஷயத்திலும் ஸம்சய விபர்யயமில்லாமலும் புஸ்தகத்தைக் கடாக்ஷியாமலும் தாராளமாகச் சொல்லிக்கொண்டிருந்தவர். ஸ்ரீ பாஷ்யம், ச்ருதப்ரகாசிகை, வேதாந்த தேசிகனுடைய க்ரந்தங்கள், உபநிஷத் பாஷ்யகாரரான் ரங்கராமாநுஜ ஸ்வாமியின் க்ரந்தங்கள், மைஸூர் அனந்தாழ்வானுடைய வேதாந்த வாதாவளிகள், ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸா பாஷ்யம் ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம் முதலிய ஸகல க்ரந்தங்களும் இந்த ஸ்வாமிக்கு வாசோவிதேயம். இதிஹாஸ புராணங்களிலும் தர்மசாஸ்த்ரங்களிலும் ஞாபக சக்தி அளவிட முடியாதது. ஆசார்ய ஹ்ருதயம் என்கிற திவ்ய ரஹஸ்யக்ரந்தம் இவர்க்கு அஸாதாரண நிதியாக வாய்ந்தது.

இந்த ஸ்வாமி ஸந்நிதியில் அத்யாத்ம சாஸ்த்ரார்த்தங்களை க்ரஹித்து ப்ரஸித்த வித்வான்களாகப் பல மஹான்கள் விளங்கி வருகிறார்கள். காரப்பங்காடு தேசி. வரதாசாரியர் ஸ்வாமி, சேனங்குளம் பஹுகுடும்பி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, காரப்பங்காடு கிடாம்பி வெங்கடாசாரியர் ஸ்வாமி, உத்தமசீலி. [ஸ்ரீரங்கம்] ரங்கஸாமி ஐயங்கார் ஸ்வாமி ப்ரப்ருதிகள்.

இந்த ஸ்வாமியின் தௌஹித்ரரும் ஸ்வீக்ருத குமாரருமாகிய ஸ்ரீமதுபயவே. (ந்யாய வேதாந்த வித்வான்) வெங்கடாசாரியர் ஸ்வாமி இப்போது இவருடைய திருமாளிகையில் எழுந்தருளியிருந்து உபய வேதாந்த க்ரந்த ப்ரவசநம் செய்தருளி வருவது மிகவும் பாராட்டத்தகுந்தது.

பூர்வாசார்யர்களைப் போலவே கௌரவிக்கத் தகுந்த பெருமை வாய்ந்த இந்த சிங்கப்பெருமாள் ஸ்வாமி விஷயமாகச் சில ச்லோகங்களையும் செய்யுட்களையும் விஜ்ஞாபிக்கும்படியான பாக்கியம் சில மஹான்களின் நியமனத்தினால் அடியேனுக்கு வாய்த்தது. அவை வருமாறு:—

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சூவாய-ஷுரூயக்ருதேஜோ யவஸ்யாஸாயாரணம் யநழ் ।
ஸவணஷ ந்ருஹரிஸ்ஸுரிஜெஜெத ஶாரஸ்ஸதழ் ॥ ௨॥
ஐஹக்ஷிதிதயெ ஸாக்ஷாத்ஜிதா ஜ்ஞாநஹாக்ஸர: ।
ஐதிதாதாஜியோமீநெ: ஶ்ராவிதம் மாராஶ்ரயெ ॥
ஶஸ்யாஸயாஜகெயாஜாதூரோமவிஜுர ம்ழ் ।
சூக்ருய நரஸிம்ஹாயஜூஷஶிகாராஶ்ரயெ ॥ ௪॥
உவகாரஜெயம் ய: ஶ்ரீஸக்திதிஸிஸ்தாழ் ।
வக்ரு நரஹரிஸ்ஸுரிஸ்ஸாயம் ஹாதா ஶதம் ஸமா: ॥ ௫॥
ஊயுமத்யாஸ்கா யஸ்ய வாஜாவெவ ஸிஷெவிரெ ।
தவெஸ்வ ந்ருஹரெஸ்ஸுரெஶ்ரணள ஶரணம் ஜஜ ॥ ௬॥
ஜீஜ்வ ஶாஹா ஜதியஸ்ய ஸவஶாஸ்த்ராவமாஹிநீ ।
ஶ்ராஜ்ஞாநு விஷ்ாவயாஜாவ ஸஸிம்ஹாரோ மாரஜ ॥
ஸதாஜ்ரஶா மாரநஜநம் நஹஜதா நஹவிஷ்யதி ।
ஐதெவஜவிஜெரொமெ: கீர்த்திதா மாரெயதாழ் ॥
வெஶய்வஜதயும் யஸ்ய வஜவாவாயவவஸ்ததி: ।
வெராமநிருயஸாயம் ஸிம்ஹாயெ ராமவாநு ஜயி ॥
ஒஜஷ்ஜெஜாய்ருதிஶ்ஶாஞ்சி: ஶ்ருதிஹாஶ்ருதிஜாஜதி: ।
யஜாஶ்ரித்ய ஶ்ருயதெஷ்ஷ வெஸாயம் ஸிம்ஹமாரமார: ॥
ஒளஜாயஜஹதம் யஸ்ய ஸக்திஷ வெரக்ஷ்ய வம்ஶிதா: ।
ஶ்ருணெஜரவஶாஸ்ஸாயம் ஶ்ருவஸீஜத மாரஜயி ॥ ௧௧॥
ஸம்ஶாவதாரஸ்வெஷாம் வஜவயணாஜயம் ய்ரவழ் ।
ஐத்யுவஸ்யஞாக்ருயம் ந்ருஸிம்ஹமாராஶ்ரயெ ॥௧௨॥
ஶ்ரீஜஜாக்ருயஸிம்ஹாயஷ்டிஜநாம்மணொஜ்ஜநாழ் ।
வம்தாம் வாசி வாஜெஷீ ஶாஜிமஜெரதிஹர்ஜி ॥

சரஜஶ்லோக:.

ஸவெ ஶ்ரீஜவநாஜ் யாஜஹஸாம் கநாவராஶிம்
மதெ ஶஜெ சந்ரகுராவிவ்ரஜிநிருயெ வக்ஷெ சிதீயா

தியள । சூக்ருயாநயஸிம்யகளஷ்ஷ ஹஜணி: ஶ்ரீஶிஜ்ஞரா யஸ்யஸீ: ஷிவ்யயாஜ நிஷெவ்ய ஹ்ருஷ்யதிதஜாம் கெஜக் யஸாஜாஜ்யஹாக: ॥

வாழி திருநாமம்.

தாரணியி லிருள்செகவந் துதித்தபிரான் வாழியே
தாழ்வாது மிற்கலைகள் தரித்துரைத்தோன் வாழியே
ஏரணிசீர் வேங்கடவ ரிணையடியோன் வாழியே
எழில்திருவாய் மொழிப்பொருளை யினிதுரைப்போன் வாழியே
தாரணியும் புளிங்குடி மாமுனி பணிந்தோன் வாழியே
தகவுடனே பாஷ்யத்தைத் தெரிந்துரைத்தோன் வாழியே
காரணிநற் காரப்பங் காடுதித்தோன் வாழியே
கருணைமிகு புகழ்ச் சிங்கப் பெருமாள் தாம் வாழியே.

மணவாள மாமுனிவன் மன்னுரைகள் வாழத்
தணவாத வேதியர்தாம் வாழக்—குணவாளர்
சென்னிதிகழ் சேவடியோய் சிங்கப் பெருமாளே
இன்னமொரு நூற்றாண் டிரும்.

சந்ததமும் வடதென்மொழி மாமறை சீர்பொரு ளீந்தவர்நாள்
சாதுசனங்க ளுவந்திட ஆழ்பொருள் சாரமளித் தவர்நாள்
அந்தமில் நற்கலை யத்தனையும்திரு நாவிலமர்ந் தவர்நாள்
ஐயமறத் தெளிவாக வரும்பொரு ளன்பொ டுரைத்தவர்நாள்
சிந்தைமகிழ்ந் துலகாரியர் நன்மொழிச் சீர்மை தெரித்தவர்நாள்
சீர்மிகு நன்மணவாளமுனித் திருவுள்ள முரைத்தவர்நாள்
உய்ந்தது மாநிலமென்ன விளங்கிய சிங்ககுருப்பெருமாள்
உத்தமர்வந்து பிறந்திடுமைப்பசிய னுடமதெனுநாளே.

சிங்கப்பெருமாள் திருவடிகளேசரணம்.

கச்சிமேயகளிறு.

(ப்ரதிவாதிபயங்கரம் - அண்ணங்கராசாரியார்.)

வேதாந்ததீபிகை :—சென்ற ஆவணிமாதம் வெளிவந்த இப் பத்திரிகையில், ஸ்ரீமதுபயவே. ஸி. நரஸிம்மாசார்யர், அட்வகேட், ஸ்வாமியாகிய எமது உயிர்நண்பர் "அத்திகிரி அருளாளனும் ஆழ்வார்களும்" என்ற தலைப்பின்கீழ் எழுதியுள்ள விஷயங்கள் இன் சுவையே வடிவுகொண்டவை. அதிலுள்ள ஒரு பாரா மாத்திரம் சிறிது பரிஷ்கரிக்கப்படவேணுமென்று அடியேன் கைகூப்பி வணங்கி வேண்டிக்கொள்ளுகின்றேன். அதாவது—

> "கல்லுயர்ந்த நெடுமதில்சூழ் கச்சிமேய களிறு—என்பது திருநெடுந்தாண்டகம், இது பாடகத் தெம்பெருமானைக் குறிக்கும் என்பர் சிலர். பாடகத்தில் கல்லுயர்ந்த நெடு மதில்களே யில்லை. அது ஒரு சிறு கோயில். களிறு என் னும் ப்ரயோகம் ஹஸ்திகிரிநாதனுக்கு அமையுமேயன்றி மற் றொருவருக்கும் அமையாது. 'ஐயன்பாழியில் ஆனை போர்க்கு உரித்தாமோ'?"

என்று ஒரு பாரா எழுதியுள்ளார். பூருவாசாரியர்களின் திருவடி களையே தஞ்சமாகக் கொண்டிருக்கின்ற அடியேன்போல்வார்க்கு இந்த வாக்கியங்கள் வருத்தத்தை விளைவிக்கின்றனவென்று ஸவி நயம் விஜ்ஞாபனம் செய்யாதிருக்க முடியவில்லை. "கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சிமேய களிறே!" என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரத்திற்குப் பாடகத்தெம்பெருமான் விஷயமான வியாக்கியான மருளிச் - செய்தவர் ஸர்வஜ்ஞராய் ஆசார்ய ஸார்வபௌமரான பெரியவாச்சான் பிள்ளையாவர். அன்னவர் தகுதி நோக்கியே ஆழ்ந்து அருளிச்செய்த பொருளை "என்பர் சிலர்" என்ற சொல் லால் அநுவதிப்பது அழகோ?

அடியேனும் திருநெடுந்தாண்டகத்திற்கு விரிவான உரை [திவ்யார்த்த தீபிகை] எழுதி வெளியிட்டுள்ளேன். ப்ரக்ருத ஸ்த லத்திற்கு ஆங்கு அடியேன் வரைந்துள்ளவற்றைக் கீழே குறிப்பிடு கிறேன்

"இங்குக் கச்சிமேய களிறு என்கிறது திருப்பாடகத்து நாய னாரை என்பர் பெரியவாச்சான்பிள்ளை. திருவத்திமாமலையில் நின்றருளாநின்ற பேரருளாளப் பெருமாளை என்று அருளிச் செய்திருக்கலாம்; அவருடைய திருவுள்ளம் அங்ஙனே நெகிழ்ந்தபடி. திருப்பாடகத்து நாயனாராக அருளிச் செய் ததற்கு ஒரு பொருத்தமுண்டு; *நின்றதெந்தை யூரகத்தி ருந்த தெந்தைபாடகத்து, அன்று வெஃகணைக் கிடந்தது* என்று திருமழிசைப்பிரான் அநுபவித்தபடியை இம்மூன்று ஸ்தலத்திலும் அநுபவிக்கிறாள் இவள்—என்று மேலே நிர்வ ஹித்தருளுகையாலே அதற்குப் பொருந்தும். திருவழுந்தூ ரில் நின்ற திருக்கோலமும் திருப்பாடகத்தில் வீற்றிருந்த திருக்கோலமும் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட திருக் கோலமுமாக அநுபவிக்கிறாளென்று நிர்வஹிப்பதில் ஒரு சமத் கார அதிசயமுண்டு காணும்."—என்றேன்.

வாஸ்தவத்தில் திருமங்கையாழ்வாருடைய திருவுள்ளத்திற்கு நன்கு பொருந்தவே பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியான முள்ளது. ஸ்ரீஹஸ்திகிரி நாதனிடத்தில் அவர்க்குப் பகையா? ராஜாதிராஜனையும் களிறு என்கிற சொல்லுக்கு ஏற்றவனையுமெழுந் தருளி யிராநின்ற பேரருளாளனை விட்டு ஒரு மூலையிலே யிருக் கின்ற பாண்டவதூதப் பெருமானை யிட்டுப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானஞ் செய்தருளினரென்றால் ஸர்வஜ்ஞரான அவருடைய திருவுள்ளத்தைக் கண்டு பிடிக்க முயல்வதன்றோ நமக் குப் பணி. நம்முடைய புத்தியில் தோன்றுகிற அர்த்தம் அவரு டைய விசாலபுத்தியில் தோன்றாமற் போகுமோ?

> "பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்குந்
> தெரிய வியாக்கியைகள் செய்வால்—அரிய
> அருளிச் செயல்பொருளை ஆரியர்கட்கிப்போது
> அருளிச் செயலாய்த் தறிந்து."

என்று உபதேச ரத்தினமாலையில் மணவாளமா முனிகளருளிச் செய்வதை நோக்குங்கால் அருளிச்செயற் பொருள் விஷயத்தில் பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளொழியத் தஞ்சமுண்டோ நமக்கு?

“பாடகத்தில் கல்லுயர்ந்த நெடுமதிள்களே யில்லை; அது ஒரு சிறிய கோவில்” என்று நமது நண்பர் எழுதியுள்ளார். இது எதற்காக எழுதப்பட்டதோ? பாண்டவதூதன் ஸந்நிதியைக் கல்லுயர்ந்த நெடுமதிள் சூழ்ந்திருப்பதாக ஆழ்வார் அருளிச் செய்திருக்கவில்லையே. நெடுமதில்சூழ் என்பது கச்சிக்கு அடைமொழியாகவுள்ளதத்தனை. காஞ்சீபுரத்தில் நெடு மதிள்களுள்ளன என்பதில் என்ன விவாதம்? அப்படிப்பட்ட காஞ்சீபுரத்தில் வீற்றிருந்த திருக்கோலமாக ஸேவை ஸாதிக்கின்ற பாண்டவதூதனே! என்பதில் என்ன வழு? கச்சியென்பது நகரப் பொதுட் பெயரல்லவோ?

திருநாங்கூரைச் சேர்ந்த பதினொரு திருப்பதிகளைப் பற்றிய திருமங்கையாழ்வார் பாசுரங்களை உற்று நோக்கவேணும். நாங்கூர் என்பது ஒவ்வொரு பதிகத்திலும் வரும். இடும் அடைமொழிக ளெல்லாம் நாங்கூரில் அந்வயிக்கும். அதுபோலவே இங்கும் கச்சியில் அந்வயிக்கின்றது. ஆகவே, கல்லுயர்ந்த நெடுமதிள் கச்சியி லுண்டா இல்லையா என்கிற விசாரம் ப்ராப்தமாகுமே யல்லது பாடகத்திலுண்டா இல்லையா என்கிற விசாரம் ப்ராப்தமாக வழியில்லை

அன்றியும். பேருளாளன் ஸந்நிதியைச் சுற்றி இப்போது காணப்படுகின்ற திருமதிளையா ஆழ்வார்கள் பேசி யிருப்பது? ஆழ்வார்கள் காலத்தில் இப்போதைய திருமதிள் நிர்மாணமாக வில்லையென்று பிராமாணிகர்கள் கூறுகின்றார்கள். அது ஏற்ப டையதென்றே இசையத் தக்கது. திருக்கண்ணபுரத்தைப் பற்றி நம்மாழ்வார் பாடியுள்ள பதிகத்தில் *வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரம்* வெள்ளி யேய்ந்த மதிள்சூழ் *வானையுந்து மதிள்சூழ்* நன்பொனேய்ந்த மதிள்சூழ்* கல்லிலேய்ந்த மதிள் சூழ்* என்றுள்ள திருவாக்குக்கள் காணத்தக்கன. இப்படிப்பட்ட அருளிச் செயல்கள் மற்றும் பலபல திருப்பதிகளைப் பற்றியும் ப பலவுள்ளன. எம்பெருமானுடைய திருப்பதிகட்கு இத்தகைய அமைதிகள் நேரவேணுமென்கிற ஆசம்ஸையினால் ஆழ்வார்கள் மிகச் சிறப்பித்துக் கூறுகின்றார்கள். உண்மை. இப்படி யிருக்க பாடகமென்பது கல்லுயர்ந்த நெடுமதிள் சூழப்பெறுத் சிறு

கோவில் என்னத் தகுமோ? ஆழ்வார்கள் திருவுள்ளத்தினால் சிறு கோவில் எதுவுமில்லையே. ஸ்ரீபாஷ்யத்தின் தொடக்கத்தில் ப்ரஹ்ம சப்தார்த்த நிரூபணம் செய்தருளா நின்ற எம்பெருமானார் பெருமை யென்னுங் குணத்தை இரண்டு வகையாகப் பகுத்துக் கூறுகின்றார். உருவத்தினால் ஏற்படும் பெருமை ஒன்று; குணங்களினால் ஏற்படும் பெருமை ஒன்று. இவற்றுள் குணங்களினலாகும் பெருமை சிறந்தது. அந்தப் பெருமை உகந்தருளின நிலங்களெல்லாவற்றிற்கும் துல்யமென்பதே ஆழ்வார்களின் திருவுள்ளம். “மருவிய பெரிய கோயில் மதிள் திருவரங்கம்” என்ற தொண்டரடிப்பொடியாழ்வாரும் அந்தப் பெருமை தன்னையே விவக்ஷித்துப் பெரிய கோயிலென்றார். ப்ராகார கோபுர மண்டபாதித் திருப்பணிகளினலாகிய உருவப் பெருமையும் உண்டானால் அதை மறுக்க வேண்டிய அவசியமில்லை யெமக்கு.

பாடகத்திற் காட்டிலும் சிறு கோவிலாகிய (ஆழ்வார் திருநகரி ஸமீபத்திலுள்ளதான) திருத்துலைவில்லிமங்கலத்தை ஆழ்வார் *துவளில் மாமணிமாடமோங்கு தொலைவில்லி மங்கலம்* என்கிறார். ஒரு அந்தணர்கூட இல்லாத அந்தத் தலத்தை *நிற்கும் நான்மறைவாணர் வாழ் தொலைவில்லி மங்கலம்* என்கிறார். இவ்வகைப் பாசுரங்களைப் பொருந்த விடுகிற ரீதியிலே *கல்லுயர்ந்த நெடுமதில்சூழ் பாடகம்* என்று ஒரு பாசுரமிருந்தால் அதனையும் தாராளமாகப் பொருந்தவிடலாமே. உண்மையில் பாடகத்தைப் பற்றின விசேடணம் ஒன்றுமே யில்லாமலிருக்க, அத்தலத்தைக் குறித்து நமது நண்பர் எழுதியுள்ள வார்த்தைகள் இல்லாமலிருக்கலாமென்று தலைவணக்கிக் கைகூப்பி விஜ்ஞாபிக்கின்றேன். “கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சிமேய களிறே!” என்றருளிய திருமங்கையாழ்வார் திருவுள்ளத்தில் திருப்பாடகத்து நாயனார் தாம் களிறாக விளங்கினார் என்று திண்ணமாகக் கொள்ளவேண்டும் “கல்லார் மதிள்சூழ் கச்சி நகருள் நச்சிப்பாடகத்துள், எல்லா வுலகும் வணங்கவிருந்த வம்மான்” என்று இவ்வாழ்வார்தாமே பெரிய திருமொழியில் அருளிச் செய்துள்ளார். அவ்விடத்துள்ள விஷேடணம் போலவேதான் திருநெடுந் தாண்டகத்திலுள்ளதும். சிறிதும் வாசியில்லை. கச்சி என்கிற பதத்திற்கே பாடகமென்கிற

பொருளைப் பெரியவாச்சான் பிள்ளை கொண்டதாக க்ரஹிப்பதற்குச் சிறிதும் இடமில்லை. "கச்சி வெஃகாவிற் கிடந்திருந்து நின்றதுவுமங்கு" என்ற பேயாழ்வார் பாசுரத்திற்கும் அடியேனுடைய திவ்யார்த்த தீபிகை நோக்கத்தக்கது. தேவப்பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ள அழகிய சிங்கர் வீற்றிருந்த திருக்கோலமேயானாலும் அவரைச் சேர்த்து அர்த்தம் பண்ணுவது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பல திவ்ய தேசங்களில் ந்ருஸிம்ஹன் சக்ரவர்த்தித் திருமகன் கண்ணன் முதலான எம்பெருமான்கள் காலக்ரமத்திலே பக்தர்களால் ப்ரதிஷ்டிப்பிக்கப்படுவதுண்டு. இதற்குமேல் இங்கு விரிவு வேண்டாவென விடப்படுகின்றது.

"ஐயன்பாழியிலானை போர்க்கு உரித்தாமன்று" என்கிற வாக்கியம் தேவதாந்தரங்களை நோக்கி நம்பிள்ளை யீட்டில் அருளிச்செய்ததாகும். அதனை ப்ரஸித்த திவ்ய தேசத்தெம்பெருமான் விஷயத்திலே பிரயோகித்தல் பொருந்துமோ?

வாக்குத் தூய்மையிலாத நீசனேனுடைய வாசகங்களில் உள்ள குற்றங்குறைகளை நமது உயிர் நண்பர் இயற்கையின்னருளால் பொறுத்தருள்வாராக.

ஸ்ரீராமாநுஜஸித்தாந்தம்.

(பத்ராதிபர்.)

சென்ற பங்குனியிலுத்திரத்தில் சேஷத்வத்தின் பேதங்களையும் அவைகளில் அசித்துப்போலே தனக்கேயாக வெனைக் கொள்ளவேண்டுமென்றிருக்கும் சேஷத்வமே ஆத்மாவிற்கு ஸ்வரூபம் என்று சொல்லப்பட்டது.

இப்பேர்ப்பட்ட சேஷத்வத்தை ஸ்வரூபமாகவுடைய ஆத்மாக்கள், பத்தர்கள், கேவலர்கள், முமுக்ஷுக்கள், முக்தர்கள், நித்யர்கள் என்று ஐந்துவகைப்பட்டிருப்பார்கள்.

இவர்களில் பத்தர்களாவார் அடிகாண முடியாத அவித்யா கர்மவாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் ஸம்ஸார சக்கரத்தி

லகப்பட்டு, பகவதாயத்த ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளையுடையவர்களாகையால் அவனுக்கே சேஷபூதர்களாயிருக்கும் ஸ்வாஸாதாரண ஸ்வரூபத்திற்கனுகுணமான அவனுடைய முகமலர்த்திக்கேயுறுப்பான கைங்கரியங்களிலேயே பரமப்ரீதியையுடையவர்களாய் ஸர்வப்ரகார பரிபூர்ண பகவதநுபவத்தாலே உண்டான அளவிலாவானந்தத்தையடைவதற்கு யோக்யர்களாயிருக்கும் தங்கள் பெருமையை மறந்து அத்தை இழந்தோமே என்கிற துக்கலேசமுமின்றிக்கே துக்கத்திற்கிருப்பிடமாய் ஸுகலேசமுமின்றிக்கேயிருக்குமதாய் வந்த வழியறியவரிதாய் தங்களால் தவிர்ப்பித்துக்கொள்ள முடியாததாயும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலுண்டான ஜந்மங்களிலிருந்து விட்டுப்போகாமைக் குறுப்பாய் பலவகைப்பட்டதாய், அளவிலா வறிவுடையாரையும் கலங்கப் பண்ணுமதாய் அத்யாஶ்சர்யாவஹமாயிருந்துள்ள ஶப்தாதி விஷயங்களில் ஆழ்ந்து பகவானுடைய மாயையினால் மறைக்கப்பட்ட ஸ்வப்ரகாஶத்தையுடையவர்களாய் அநாத்யஜ்ஞாநாந்தர்களாகையால் அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநமுடையவர்களாய் அதனடியாக உண்டான ராகத்வேஷங்களையுடையவர்களாய் அதற்கநுகுணமான கர்மங்களைச் செய்யாநின்றுகொண்டு அந்த வாஸநாபலத்தாலே விருத்தியடையப்பட்ட விபரீத ருசியையுடையவர்களாய் அத்தாலே சம்பாதிக்கப்பட்ட புண்யபாபரூபமான அநாதி கர்ம ப்ரவாஹத்தாலேற்பட்ட தேவதிர்யக்மநுஷ்யஸ்தாவர ரூபமான நான்குவித ஶரீரங்களையும் பரிக்ரஹித்து அவ்வோஶரீரங்களில் கர்ப்ப, ஜந்ம, பால்ய, யௌவந, வார்த்தக, மரண, நரகங்களாகிற அவஸ்தா ஸப்தகம் [ஏழு] களிலும் ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகங்களாலேற்பட்ட அனேகவித கஷ்டங்களையனுபவித்து அந்த தேக ஸம்பந்தத்தைப் பற்றிய பார்யா புத்ராதி ரக்ஷணார்த்தமாக நந்தந்த்யுதித ஆதித்யே என்கிறபடி சூர்யோதயமானதும் உண்டியே யுடையே என்று உகந்தோடி நந்தந்த்யஸ்தமிதேரவௌ என்கிறபடி சூர்யாஸ்தமந மானவளவில் வேற்கணார்கலவியே கருதிக் களித்துத் திரியும் ப்ரஹ்மாதிகீடபர்யந்த (ப்ரஹ்மாமுதலாய்புழுக்களீறாயுள்ள) ஆத்மாக்கள். கேவலர்கள் என்பவர், ஸம்ஸாரமாகிற மருகாந்தாரத்தில் க்ருத்யா

க்ருத்ய விவேகமின்றி அங்கு மிங்கு மலையா நின்றுகொண்டு ஆத்
யாத்மிகாதிதாபத்ரயத்தால் வருந்தாநிற்க, ஏதோ ஒரு ஸுக்ருத
விஶேஷத்தால் ஶாஸ்த்ராப்யாஸத்தைப் பண்ணி அதனால் ப்ரக்
ருத்யாத்ம விவேக முண்டாய் அதனடியாய் ப்ரக்ருதியின் தீமை
யையும் எண்பெருக்கந்நலத் தொண் பொருள் என்கிறபடி வில
க்ஷணமான ஜ்ஞானத்தைக் குணமாகவுடையதாய் ஸ்வயம் ப்ரகாஶ
மாய் ஸ்வதஸ்ஸுகியாய் அப்ராக்ருதனாய் நித்யனாயிருக்கும்
ஆத்ம ஸ்வரூபத்தின் நன்மையையும் நன்கறிந்து கொடுமைக்குக்
கொள்கலமான ஸம்ஸாரத்தை ஒழித்து ஆத்மாநுபவமாகிற
ஆநந்தத்தை யடைவதற்கு யோக்கியமான ஜ்ஞானயோகத்தி
விழிந்து உணர்முழு நலம் ஆன பரமாத்மாவின் ஸ்வரூபத்தை
யறியாதே அந்தமில் பேரின்பமாகிய பகவதநுபவத்தைக் காற்
கடைக்கொண்டு அசித்தைக்காட்டிலும் சிறிது விலக்ஷணமான
ஆத்மாநுபவத்தையே புருஷார்த்தமாகக் கைப்பற்றி அவ்வனு
பவத்தைப் பண்ணா நின்றுகொண்டு ஆத்மாவுள்ள வளவும்
அஶரீரியாய்த் திரியு மவர்களாவர். முமுக்ஷுக்கள், கீழ்ச்
சொன்னபடியே ஸம்ஸாரமாகிற சக்ரத்தில் புநரபிஜநனம் புநரபி
மரணம் என்கிறபடி சுழலாநின்றுகொண்டு மஹத்தான துக்
கத்தை யடையாநிற்க ஜந்மாந்தரஸஹஸ்ரங்களில் இவனறியாமல்
ஏற்பட்ட யாத்ருச்சிக ஸுக்ருத விசேஷமடியாக பகவா
னுடைய நிர்ஹேதுக ஜாயமாநகால கடாக்ஷத்தால், பகவத்
விஷயத்தில் பக்தியுண்டாய் அதனடியாக ஸம்ஸாரத்தில் வெறுப்
புமுண்டாய் ஸம்ஸாரத்தினுடைய கொடுமையை நினைத்து,
ஓ! உலகினதியல்வே என்றும் நண்ணாதார் முறுவலிப்பநல்லுற்றார்
கரைந்தேங்க எண்ணாரத்துயர்விளைக்குமிவையென்னவுலகியற்கை
என்றும் ஓலமிட்டுக் கூப்பிட்டு இந்த ஸம்சாரத்தைவிட்டு ஒரு
தேஶ விசேஷத்திலேபோய் பகவதநுபவத்தைப் பண்ண விச்
சியா நின்றுகொண்டு ஜ்ஞானாந்மோக்ஷமாகையால் அதை அடைவ
தற்கு ஒரு ஆசார்யனைக்கிட்டி அவனுபதேஶத்தால் ஸம்ப்ரதாய
பரம்பரா ப்ராப்தமான ரஹஸ்யத்ரயோக்தமான அர்த்தபஞ்சக
ஜ்ஞானத்தைப் பெற்று அதனடியாக உண்டியேஉடையே என்று
கந்தோடும் ஸம்ஸாரிகளோடு ஸஹவாஸம் பண்ணுகை துஸ்ஸஹ

மாய் கூவிக்கொள்ளும்காலமின்னம் குறுகாதோ என்றும் க்ருத
க்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம் என்றும்
சரீர வியோக காலத்தை எதிர்பார்த்து இடையில் இருக்கும்
நாட்களில் இளங்கோயில் என்று அவனுகந்தெழுந்தருளியிருக்
கும் திவ்யதேசங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்
களால் காலக்ஷேபம் பண்ணாநின்றுகொண்டும் இவ்வாறு குணாநு
பவம் பண்ணிக்கொண்டிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் பெருமை
யைப் பெரிதும் பாராட்டி திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியத
னாய் அத்தை அநுக்ரஹித்த ஆசார்யன் விஷயத்தில் க்ருதஜ்ஞ
னாய் எம்பெருமானிடத்தில் மிகுந்த ப்ரேமத்தையுடையனாய்
ஜ்ஞானமும் விரக்தியும் ஶாந்தியுமுடையனான பரமஸாத்விகர்க
ளோடு ஸஹவாஸம் பண்ணிக்கொண்டு இவ்விருள் தருமாஞாலத்
தைத் தங்களுபதேஶாதிகளால் தெருள்தருமா ஞாலமாக்கிக்
கொண்டெழுந்தருளியிருக்கும் பரமபாகவதோத்தமர்கள்.

முக்தர்களாவார், கீழ்ச்சொல்லப்பட்ட முமுக்ஷுக்கள் பெரிய
பிராட்டியார் புருஷகாரமாக எம்பெருமான் திருவடிகளை உபாய
மாகப்பற்றி பகவதாஜ்ஞாரூபமான நித்யநைமித்திகாதிகர்மங்களை
பகவத்கைங்கர்ய புத்யாவநுஷ்டித்து பகவத்பாகவத ஆசார்யாபசா
ரங்களை அறவேயொழித்து தேஹாவஸாநஸமயத்தில் பகவத்பாக
வத ஆசார்ய விஷயத்தில் இவனறியாமல் ஏதேனுமபசார முண்டா
யிருந்தால் அதற்கு க்ஷமாபணம்வேண்டி விடைபெற்று தாங்கள்
செய்திருக்கும் புண்யபாபங்களை அநுகூலர்பக்கலிலும் ப்ரதிகூலர்
பக்கலிலும் சேர்ப்பித்து அருளாழிப்புட்கடவீர் என்று இவர்களா
சைப்பட்டபடியே பெரியதிருவடியின்மீது எழுந்தருளி ஸேவை
ஸாதித்து ஆதிவாஹிகரைக்கொண்டு ஸத்கரிப்பிக்க. இந்த்ரியைர்ம
நஸிஸம்பத்யமாநை: என்கிறபடி பாஹ்யேந்த்ரியங்கள் மனஸ்
ஸிலேலயிக்க மனஸ்ஸுப்ராணனோடு சேர்ந்து ப்ராணன் ஆத்மா
வோடு சேர ஆத்மா பூதஸூக்ஷ்மவிஶிஷ்டனாய் பரமாத்வோடு
சேர்ந்து ஹார்த்தன் (ஹ்ருதயகமலத்தில் எழுந்தருயிருக்கும்
பரமாத்மா) வழிகாட்ட முக்திமார்க்க வாயிலான ஸுஷும்நை,
என்கிற நாடியின் வழியாக ப்ரஹ்மரந்த்ரத்தைப் பேதித்து வெளி
யேறி 'பாதேயம் புண்டரிகாக்ஷநாம ஸங்கீர்த்தநம்' என்கிறபடி

பகவந்நாமஸங்கீர்த்தநத்தைப் பாதேயம் (கட்டுசாதம்) ஆகக் கொண்டு அர்ச்சிராதிமார்க்கமாக விரஜாநதியைக்கிட்டி ஸ்நாநம் செய்து ஸூக்ஷ்மஶரீரத்தையும் ஒழித்து அமாநவகரஸ்பர்ஶத்தால் அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹத்தைப் பெற்று ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்களால் அலங்கரிக்கப்பெற்று ஸ்ரீ வைகுண்டமாநகரையடைந்து அங்குள்ள அனந்தகருடவிஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகள் "விஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலேயிருக்கும்போது அநந்ய ப்ரயோஜனர்களாய் பகவத்குணாநுபவம் பண்ணப்பெற்ற இம்மஹாநுபாவர்கள் விண்ணுளாரிலும் சீரியர் நம்மைக்காட்டிலும் பெருமையுடையவர்கள். இவ்விடம் எழுந்தருளியது நம்முடைய பாக்யமன்றோ" என்று வாயாரப்புகழ, அவர்களைத் தெண்டன் ஸமர்ப்பித்து அவர்களை முன்னிட்டு மஹாமணிமண்டபத்தையடைந்து, தர்மாதிபீடத்தின்மேல் பத்மாஸநத்தில் சாமரஹஸ்தர்களான விமலாதிகளால் ஸேவிக்கப்பட்டும், ஸ்ரீபூமி நீளைகளான தேவிமார்களோடு கூடினவனாய், ஶங்க சக்ராதி திவ்யாயுதங்களாலும் கிரீடாதி நூபுர பர்யந்தமாயுள்ள திவ்யாபரணங்களாலு மலங்கரிக்கப்பட்டவனாயும் எல்லையில்லாத கல்யாண குணங்களையுடைய எம்பெருமானைக் கண்ணாரக்கண்டு வாயாரப் புகழ்ந்து தன்பாதங்களால் பர்யங்கம் மிதித்தேறி பகவானால் தொடையிலேவைத்துக்கொள்ளப்பட்டு நீயார் என்று கேட்க? நான் ராஜகுமாரன் என்று சொல்ல, அதைக்கேட்டுத் திருவுள்ளமுகந்து இவ்வளவுகாலம் இவர்களைவிட்டுப் பிரிந்திருந்ததிற்கு மிகவும் வருந்திப் பூர்ணமாகக் கடாக்ஷிக்க இவர்களும் அவனுடைய கல்யாணகுணங்களை அநுபவித்து அவ்வநுபவத்தாலுண்டான ப்ரீதிக்குப்போக்குவீடாக ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்துகொண்டு அஸ்தாநே பயஸங்கிகளான, அயர்வறுமமரர்களோடே ஒரு கோவையாகச் சூழ்ந்து பல்லாண்டுபாடிக்கொண்டு யாவத்காலம் எழுந்தருளியிக்குமவர்கள்.

நித்யர்களாவார். ஒரு காலத்திலும் ஸம்ஸாரஸம்பந்தமில்லாதவர்களாய் அதனால் நிர்த்தோஷர்களாய் பகவானுக்கு முகோல்லாஸமாயிருக்குமதையே தங்களுக்குப் புருஷார்த்தமாகக் கருதுமவர்களாய் ஜ்ஞாநஸங்கோச ப்ரஸங்கமில்லாதவர்களாய் வானிளவரசான

வைகுந்தநாதனுக்கு விண்ணாட்டவர் மூதுவர் என்கிறபடி மூப்பரான மந்த்ரிகளாய் ஸர்வேஶ்வரனுடைய கம்பீரமான அபிப்ராயத்தை அநுஸரித்து ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைப்பண்ணவும் ஶக்தர்களாய் பரவ்யூஹாதிஸர்வாவஸ்தைகளிலும் தொடர்ந்து குற்றேவல்செய்யும் பாக்யமுடையவர்களாய் எழுந்தருளியிருக்கும் அநந்தகருட விஷ்வக்ஸேநாதிகள்.

தானமுந்தவமும்.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை ஐயங்கார்
காரியதரிசி, திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கம்]

புருஷனால் விரும்பப்படுவது புருஷார்த்தம், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் புருஷார்த்தம் எனப்படும். இதனை வடநூலார் முறையே தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பர். அறம் பொருளின்பங்களை திரிவர்க்கமெனவும் மோக்ஷத்தை அபவர்க்கம் என்றும் கூறுவர். திரிவர்க்கத்தினின்றும் நீங்கல் அபவர்க்கம். அறமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலுமாம். அறம் இல்லறம், துறவறம் என இருவகை நிலையுடைத்து அறமுதலியவற்றிற்கு, ஔவை மூதாட்டியார்

"ஈதலறந்தீவினை விட்டீட்டல் பொருளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதேயின்பம் பரனை நினைந்திம்மூன்றும்
விட்டதே பேரின்பவீடு"

என இலக்கணங் கூறுகின்றார்.

தானமாவது அறநெறியால் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல். தவமாவது மனம் இந்திரியங்களின் வழியிற்போகாது நிற்றற்பொருட்டு விரதங்களினால் உணவைக் குறைத்தலும், சித்திரைமாதமுதல் ஆடிமாதம் ஈறாயுள்ள வெயிற் காலத்தில் வெயிலில் நிற்றலும், ஆவணிமாத முதல் கார்த்திகை

மாதமீறாயுள்ள மழைக்காலத்திலும், மார்கழிமாதமுதல் பங்குனி மாதமீறாயுள்ள பனிக்காலத்திலும் நீர்நிலையில் நின்றுக்கொண்டிருத்தலும், ஈரத்துணியைப் போர்த்துக்கொள்ளலும் பஞ்சோபவாசம், மாதோபவாசமிருத்தலும்; மரத்தின் கீழ்வசித்தலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்து பிறவுயிர்களைப் பாதுகாப்பதாம். பெரும்பான்மைபற்றித் தானம் இல்லறத்தின் மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன. இதனை திருவள்ளுவர்.

"தானந்தவமிரண்டுந்தங்கா வியனுலகம்
வானம் வழங்காதெனின்" என்பர்.

வானஞ்சுருங்கில் தானஞ்சுருங்கும் மாரியல்லது காரியமில்லை என்பன இங்கு நோக்கற்பாலன.

தானமெனினும் ஈதல் எனினும் கொடையெனினும் ஒக்கும்.

"ஈதல் இசைபடவாழ்தல் அது வல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

(வறியவர்க்குக் கொடுக்கக்கடவர். அவ்வாறு கொடுத்தலால் புகழுண்டாக வாழக்கடவர். அப்புகழல்லாமல் மக்கள் உயிர்க்குப் பயன் வேறொன்று இல்லை,)

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை. ஈதற்குரியவர் ஒன்பதின்மரென்றும், ஈதற்குரியரல்லாதார் ஒன்பதின்மரென்றும் காசி காண்டம் கூறும்.

"மாண்புடையாளர் கேண்மையர் தத்தம்
வழிமுறையொழுக்கினிலமர்ந்தோர்
சேண்படு நிரப்பினெய்தினோர் புரப்போர் தீர்ந்தவர்
தந்தைதாய் குரவர்
காண்டகு முதவிபுரிந்துளோரினையோரொன்பதின்
மருமுளங்களிப்ப
வேண்டுறுநிதிய மளிப்பின் மற்றொன்றே
கோடியாமெனமறை விளம்பும்.

"முகனெதிரொன்றும் பிரிபின் மற்றொன்று மொழிபவர் விழைவுறு தூதர், அகன்ற கேள்வியிலாரரு மருத்துவர்களரும்பொருள் கவருநர் தூர்த்தர், புகலருந்தீமை புரிபவர் மல்லர செருக்கினர் புன்றொழிற் றீயோர், இகழ்தருமினையோ ரொன்பதுபெயர்க்கு மீந்திடல் பழுதென விசைப்பார்"

அறப்பயன் தக்கார் கைப்பட்டக்கால் வானினும் பெரிதாகும். இதனை.

"உறக்குந்துணையதோராலம் வித்தீண்டி
யிறப்ப நிழற்பயந்தாஅங்—கறப்பயனுந்
தான்சிறிதாயினுந் தக்கார் கைப்பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்துவிடும்"

என்ற நாலடியார் வற்புறுத்தும்.

கம்பர் வாமனன் திரிவிக்ரமனானதைக் கூறுமிடத்து,

"கயந்தரு நறும்புனல் கையிற்றீண்டலும்
பயந்தவர்களு மிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே"

எனவும்,

"ஞானமுன்னிய நான்மறை யாளர்கைத்
தானமென்னத் தழைத்தது நீத்தமே"

எனவும் தானப்பலன் பெருகுதலை விவரித்தமை காண்க.

உவகையோடுங் கொடுத்தலே தானம். 'உள்ளியுள்ள வெல்லா முவந்தீயுமவ் வள்ளியோரின் வழங்கின மேகமே' என்பர் கம்பர்.

தானம் பலவகைப்படும். ஷோடச மஹாதானங்கள் என்பன பிரசித்தம். ஸ்ரீராமாயண பாராயணம் பண்ணுவோருக்கு அநேக தானப்பலன் உண்டாகும்.

"அன்னதான மகில நற்றானங்கள்
கன்னிதானம் கபிலை யின்றானமே
சொன்னதானப் பலமெனச் சொல்லுவர்
மன்னி ராமகதை மறவார்க்கரோ"

பசியால் சகல நன்மைகளும் அழியும்.

"மானங்குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந்தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்

கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்"

ஆதலால் அன்னதானம் விசேடம் என்பர்.

"அற்றாரழிபசி தீர்தத லஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்றார் குறளாசிரியர். பொருளைப்பெற்றவன் அதனைத் தனக்கு உதவ வைக்கும் இடம் வறியவர் பசியைத் தீர்க்கும் அறமாம் என்பது இக்குறட் கருத்து.

மேலும் தவத்திற்கு உரு உற்ற நோய் நோன்றல். உணவைச் சுருக்குதல் முதலியவற்றால் தம் முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிற வுயிர்களுக்கு துன்பம் செய்யாமையுமே தவமாகும்.

'தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்.' 'செயற்கரிய செய்வார் பெரியர்.' 'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத், திறந்தாரை யெண்ணிக்கொண்டற்று' என்பவற்றால் நீத்தார் பெருமை நன்கு புலப்படும். துறந்தாரிடம் காணப்படுவன ஒன்னார்த்தெறலும், உவந்தாரை யாக்கலும், வேண்டிய வேண்டியாங் கெய்தலும், தன்னுயிர் தானறப்பெறலும், கூற்றங்குதித்தலும் என்க.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தான்கொண்
மற்றையவர்க் கடவம்'!

இக்குறளுக்குப் பரிமேலழகர் உரைதருதும்.

"இல்லறத்தையேபற்றி நிற்பார் துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாந்தவஞ் செய்தலை மறந்தான் போலும்.

துப்புரவு-அனுபவிக்கப்படுபவன. 'வேண்டிய வேண்டியாங் கெய்தற்' பயத்ததாதலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய் தவத்தைத் தாஞ் செய்யுந்தானத்தின்மேல் விருப்ப மிகுதியான் மறந்தார் போலு மெனவே தானத்திற்றவம் மிக்க தென்பது பெற்றாம்." தானத்திலும் தவம் உயர்ந்த தென்பது இங்கு குறிக்கப்பட்டுளது. இங்ஙனம் கூறிய நாயனார்,

"ஆற்று வாராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்று வாராற்றலிற் பின்"

என இல்லறத்தாரை உயர்த்திக்கூறியுள்ளார் தாமும் பசித்துப் பிறரையும் அப்பசி தீர்க்கமாட்டாத தவத்தினரது வல்லமையிலும்

தாமும் பசியாது பிறரையும் அப்பசி தீர்ப்பவராகிய இல்லறத்தாரது வல்லமை நல்ல தென்பதாம்.

தவத்தை மிகுதியாகச் செய்கின்றவருக்குப் பாவம் நீங்கித் தத்துவ ஞானம் உண்டாகும். தன்னுயிரைத் தனக்குரியதாகப் பெற்றவனை யெல்லா வுயிரும் வணங்கும். செல்வர் சிலரும் தரித்திரர் பலருமாக இருத்தற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலரும் அது செய்யாதார் பலருமாக இருத்தலேயாம். "அறந்தானியற்று மவனிலுங் கோடி யதிகமில்லங், துறந்தானவனிற் சத கோடி யுள்ளத் துறவுடையோன்" என்றபடி ஜனகன் முதலியோர் மனத்துறவு பூண்டிருந்தனர்.

விசுவாமித்திரர் அரசவைக்கு வந்ததைக்குறித்து தசரதன்
"நிலஞ்செய் தவமென்றுணரினன்று நெடியோயென்
நலஞ் செய்வினை யுண்டெனினு மன்று நகர் நீயான்
வலஞ் செய்துவணங்க வெளிவந்தவிது முந்தென்
குலஞ் செய்தவ மென்றினிது கூற முனிகூறும்"

என்பது கம்பராமாயணம். இதனால் தவத்தினது உயர்வு விளங்கும் தவத்தினது மகிமையை ஆழ்வார்,

"யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்—யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது"

"தவஞ்செய்து நான்முகனே பெற்றான் தரணி
நிவந்தளப்ப நீட்டிய பொற்பாதம்—சிவந்ததன்
கையனைத்தும் ஆரக்கழுவினான் கங்கைநீர்
பெய்தனைத்துப் பேர்மொழிந்து பின்"

என்கின்றார்.

தவஞ் செய்தலை திருமங்கை மன்னன்
—நான்கினிலும்
"
பின்னையது பின்னைப்பெயர் தருமென்பது ஓர்
தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியும் ஊழிலையும்
என்னும் இவையே நுகர்ந்து உடலம் தாம் வருந்தி
துன்னும் இலைக்குரம்பைத் துஞ்சியும்—வெஞ்சுடரோன்
மன்னும் அழல்நுகர்ந்தும் வண்தடத்தி னுட்கிடந்தும்

இன்னதோர் தன்மையராய் ஈங்கு உடலம் விட்டெழுந்து
தொன்னெறிக்கண் சென்றார்”

என்றுரைத்தலுங் காண்க.

“கருமமும் கருமபலனுமாகிய காரணன் தன்னை
திருமணிவண்ணனைச் செங்கண்மாலினைத் தேவபிரானை
ஒருமை மனத்தினுள்வைத்து உள்ளம் குழைந்தெழுந்தாடி
பெருமையும் நாணும்தவிர்ந்து பிதற்றுமின் பேதைமைதீர்ந்தே’

ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில் நாதமுனிகளிடம் தேஶிகன் ஈடுபாடு

[ஏ. வி. கோபாலாசாரியார், அட்வகேட்,
பத்திராதிபர் ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷிணீ]

(பங்குனியிலுத்திரத்தின் 77-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

நாதமுனிகள் கீழ்ப் பத்திரிகையிற் சொல்லியபடி ப்ரபந்தங்களை உலகத்திற்கு அப்படியே மீட்டுக் கொடுத்ததைத் தவிர தாமாக இயற்றிய க்ரந்தமுமுண்டு. ஸம்ஸ்க்ருத பாஷையில் நம்முடைய தரிசனத்தின் படிக்கு தத்வங்களை யெல்லாம் விளக்கிய ‘ந்யாயதத்வம்’ என்னும் ப்ரகரணக்ரந்தம் அவர் இயற்றியதே. வித்யாஸ்தானங்கள்—14; அவை தர்மஸ்தானமுமாகும். வேதங்கள்—4; வேதாங்கங்கள்—6; மீமாம்ஸை; ந்யாயவிஸ்தரம்; புராணம்; தர்மஶாஸ்திரம்; ஆகப்பதினான்கு. இதில் ந்யாயவிஸ்தரம் என்னும் வித்தியாஸ்தானமாக கௌதம ந்யாயஸூத்ரங்களே வழங்கி வரப்பட்டன. அதில் சில பாகங்கள் ஶாரீரகாதி விருத்தமாயிருப்பதைப்பற்றி ந்யாயதத்வ மென்னும் க்ரந்தத்தால் பகவன் நாதமுனி ந்யாயமார்க்கத்தை விளக்கியருளினாரென்று ந்யாயபரிஶுத்தியில் ஸாதிக்கப்பட்டது. ந்யாயதத்வக்ரந்தம் ஸ்ரீபட்டர், ஸ்ரீதேஶிகன் காலங்களில் ப்ரசாரத்திலிருந்தது தத்வரத்னாகரம் என்னும் ஸ்ரீபட்டர்க்ரந்தத்திற்கு அது மூலமென்பது ந்யாயபரிஶுத்தியிலும், ந்யாயசித்தாஞ்சனத்திலும் பரிக்ரஹிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீஸூக்திகளால் தெரிகிறது. தத்வரத்னாகரக்ரந்தம் பூர்த்தியாவதற்கு முன் ஸ்ரீபட்டர் இளம்பிராயத்திலேயே திருநாடலங்கரிக்கும்படி நேர்ந்துவிட்டது. மூலப்ரக்ருதியின் ஸ்வரூபத்தையும், தமஸின் (இருட்டின்) ஸ்வரூபத்தையும் விசாரித்துக் கொண்டிருக்கையில்

“இந்த விஷயத்தில் தத்வவித்துகள் கூறினார்கள்” என்று தொடங்கிய ஶ்லோகத்தோடு அந்த ஸ்ரீகோஶம் விக்னப்பட்டு நின்று போனதாக ந்யாயஸித்தாஞ்சனத்தில் ஸாதிக்கப்பட்டுளது, ப்ரமாணங்களாகிய ப்ரத்யக்ஷம், அனுமானம், ஶப்தம் இவற்றைப்பற்றி அந்தக்ரந்தம் முதலில் முழுவதும் விசாரிக்கப்பட்டதென்றும், மேலே ப்ரமேயங்களை விசாரித்துக் கொண்டிருக்கையில் மத்தியில் விக்னம் வந்து விட்டதென்றும் அறிகிறோம். அந்த க்ரந்தத்திலிருந்து அநேக ச்லோகங்களும், வாக்யங்களும், ந்யாயபரிஶுத்தி, ந்யாயஸித்தாஞ்சனம், தத்வடீகை முதலிய ஸ்ரீதேசிகக்ரந்தகளிலிருந்து உதாஹரிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீதேசிகக்ரந்தங்களிலிருந்து அந்தக்ரந்தங்களின் பெருமையை நாம் தெரிந்து கொள்ளுகிறோம். ந்யாயதத்வத்தின் சில வாக்யங்கள் ஸ்ரீயாமுனக்ரந்தங்களிலும்; தேசிகன்க்ரந்தங்களிலும் உதாஹரிக்கப்பட்டுள. ப்ரமாத்ருபாதம், கரணபாதம், முதலிய பாதங்களால் க்ரந்தமமைந்ததென்றும், ஒவ்வொரு பாதமும் பல அதிகாரணங்களாலமைக்கப்பட்டதென்றும் அறிகிறோம். தம்முடைய யோஹமதமையாலோ ப்ரபஞ்ச ஸ்வபாவங்களை நன்றாக கவனிப்பதாலோ, ஜந்துக்களின் ஸ்வபாவங்களை அழகாக வர்ணித்திருக்கிறார். கரண (இந்த்ரிய) பாதத்தில் “ஸர்ப்பங்கள் பாதமென்றும், கர்மேந்த்ரியமில்லாமலே மார்பாலே செல்லுகின்றன; அவற்றிற்கு மார்பில் கமனஶக்தி; ஆகையால் உரகங்களும், பன்னகங்களுமாகும்” என்று ஸாதித்தார். உரகம் என்பதற்கு ‘மார்பால் நகருவது’ என்று பொருள். ‘பன்னகம் என்பதற்கு’ காலால் நடக்காதது’ எனறு பொருள். வாக்யங்கள் ஸூத்ரங்கள் போன்றன. ந்யாயதத்வத்தை நாம் வித்யாஸ்தானமான ந்யாயவிஸ்தரமாகக் கொள்ளலாமென்று ஸ்ரீதேசிகன் ஸாதித்திருப்பதற்குக் காரணம் அவை ஸூத்ரங்கள் போல மிகச்சுருக்கமாயும், மிகத் தெளிவாயும், எல்லோர் மனதிலும் உடனே அழகாகப்பதியும்படியாயுமிருப்பதே. ஸூத்ரங்கள் அல்பாக்ஷரங்களாயிருந்தாலும், ஸந்தேஹலேஶமுமில்லாமல் மிகத் தெளிவாய் (அஸந்திக்தமாய்) இருக்க வேண்டும். நம் தரிசனத்திற்கு வேண்டிய ந்யாயஶாஸ்த்ரத்திற்கு நாத முனிகள் ஸூத்ரகாரராவா ரென்பதைப்பற்றி “ நா யொவஜ்ஞும் [illegible] ” என்று நம் தர்ஶனத்தை வர்ணித்ததாகவும் சொல்லலாம். அவர் உயர்ந்தயோகி என்பது ப்ரஸித்தம். அப்படிச் சிறந்தயோகியாக இல்லா விட்டால் ஆழ்

வாரை ஸ்ரீமதுரகவியின் மதுரவாக்கைக் கொண்டு நிரந்தரம் த்யானம் செய்து அடியோடு மறைந்து கிடந்த தமிழ் மறையை எவ்விதம் அப்படியே ஸாக்ஷாத்கரிக்கக் கூடும்? அவர் மஹா யோகியாயிருந்ததால் தான் அவருக்கு அது ஶக்யமாயிற்று. அவர் யோகத்தால் ஸ்ரீவைஷ்ணவலோகம் உஜ்ஜீவிக்கிறது. ந்யாயதத்வத்தில் பெருமாள் விஷயமான மங்களஶ்லோகத்தில் "யோவேத்தியுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேணஸதாஸ்வதஃ" என்று பெருமாள் லக்ஷணத்தைஸாதித்திருப்பது ப்ரஸித்தம். எப்போதும் ஜகத் காரணமென்று ப்ரஹ்மலக்ஷணங் கூறுவார்கள். "உள்ளங்கை நெல்லிக்கனி போல காலத்ரயத்திலுமுள்ள எல்லாவற்றையும் ஸர்வகாலமும் ஸ்வதஃ தம்ப்ரபாவத்தாலேயே (பிறாதீன மில்லாமல், உயர்வற, ஸ்வாபாவிகமாக) ப்ரத் யக்ஷீகரிக்கிறாரோ, அந்த ஹரியை ப்ரணாமம் பண்ணி ந்யாயதத்வதைநன்கு விவரிப்போம்" என்று அந்தஶ்லோகம். யோகிகள் பகவானை யோகீஶ்வரராகத் தொழுவர் பகவானுடைய ஸர்வப்ரத்யக்ஷீகரணயோகமஹிமை அவருக்கு ஸ்வதஸ்ஸித்தம். அந்யாதீனமல்ல. மற்ற யோகிகளுக்கு அந்த மஹிமை அவராதீனம். டதஞ்சலி முனிவர் யோகஸூத்ரத்தில் பகவானுடைய லக்ஷணத்தை ஜகத் காரண மென்று கூறவில்லை. "க்லேஶகர்ம விபாகாஶயங்களால் தொடப் படாத புருஷவிஶேஷன். (தொடரும்.)

வர்த்தமானங்கள்

ஸ்ரீரங்கம்

வைகாசி 15௳ (28-4-36) வஸந்தோத்ஸவ ஆரம்பம்.
,, 22௳ (4-5-36) ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி
,, 23௳ (5-5-36) ஏகவஸந்தம், சாற்றுமுறை

(2) காஞ்சீபுரம் பெருமாள் கோவில்

வைகாசி 21௳ (3-6-36) கருட ஸேவை
,, 25௳ (7-6-39) ரதோஸ்வம்

(3) ஆழ்வார் திருநகரி

ப்ரபன்னஜந கூடஸ்தரான நம்மாழ்வாரவதரித்த திவ்விய க்ஷேத்தரம் இந்த க்ஷேத்ரத்தில் வைகாசிமீ 12௳ (25-4-36)ல் ஆழ்வார் உத்ஸவ ஆரம்பம் வைகாசி 21-3-36ல் சாற்றுமுறை.

சரித்ரத்தைக் கேளுங்கோள் என்று பெருமாள் தாமு மருளிச் செய்தாரிறே!.

தனிஶ்லோகம். நாரதபகவான், வால்மீகிபகவானால் ப்ரஸ்துதங்களான பரத்வ ஸௌலப்ய ரூபங்களான தர்மங்களிரண்டில் ஒவ்வொன்றே தனித்திருக்கும்படி இவரால் அறியப்பட்டதே— இவ்விரண்டு தர்மங்களும் ஒரு வ்யக்தி விஶேஷத்திலிருப்பதை இவ் வால்மீகி பகவானறிந்தாரில்லை. ஆதலின் அதுவே இவர்க்கு இப்போது உபதேசிக்க வேண்டுமென்று திருவுள்ளம்பற்றி அதில் முதலில் லோகோத்தரமான ஆஶ்ரயமாஹாத்ம்யத்தை அருளிச் செய்கிறார் இக்ஷ்வாகுவம்ஶ ப்ரபவஃ என்று.

தன்னுடைய தவத்தின் பலனாக ஸ்ரீரங்கநாதனைப்பெற்ற மஹா புருஷனுடைய வம்ஶத்தி லவதரித்தவன் என்கிறான் இக்ஷ்வாகு என்று.

வைஷ்ணவோ நஃ குலே ஜாதஃ ஸ நஸ்ஸந்தாரயிஷ்யதி என்று ஒரு வைஷ்ணவனுண்டான மாத்திரத்தில் அவ்வம்ஶத்திலுள்ளாரனைவருக்கும் உத்தாரகத்வம் ப்ரஸித்தம் ஏழாட்காலும் பழிப்பிலோம் என்றும் குடிகுடி யாட்செய்கின்றோம் என்னும்படி இவ்வம்ஶத்தில் பிறந்தோ ரெல்லோரும் அரங்கனை ஆராதித்த மஹாநுபாவர்களாதலின் அவ்வம்ஶத்தில் அவ்வரங்கன்தானே அவதரித்தான் என்றால் அவ்வம்ஶத்தின் பெருமையைப் பேசாமலிருக்க முடியுமோ? ஆதலின் இக்ஷ்வாகுவம்ஶ என்கிறான்.

ப்ரபவஃ (உத்பத்தி ஸ்தாநம்) இவ்வம்ஶத்தை உத்பத்திஸ்தானமாக உடையவன் என்றதால் கௌஸல்யா கர்ப்பவாஸத்தை அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹம் வந்து தோன்றின மாத்திரத்தைக் கொண்டு உத்பத்திஸ்தாநமாகச் சொன்னபடி "ஸுக்ரீவ மாருதி விபீஷணர்களுடைய பரிசுத்தமான பாதஸ்பர்ஶத்தால் பரம பாவநமான பவந (க்ருஹ)த்தை ப்ரவேஶித்தான் ராமன்" என்னுமாப் போலே அரங்கனை ஆராதித்த மஹாநுபாவர்க ளவதரித்ததினால் அதிபரிசுத்தமான இவ்வம்ஶத்தி லவதரித்ததும்.

அப்பால் ஆஶ்ரிதவைலக்ஷண்யம் சொல்லப்படுகிறது. ராம: ரமயதி இதி ராம: (குணங்களால்) ரமிப்பிக்கிறான் என்றும் ரமந்தே யோகிந: அஸ்மிந் இதி ராம: இவனிடத்தில் யோகிகள் ரமிக்கிறார்கள் என்றும் சொல்லக்கூடும். இவ்விரண்டு வ்யுத்பத்திகளாலும் ஸௌஶ்

ரேயாந் பவதி ஜாயமாந: என்கிற ஆஸ்ரித ஸகல வஸ்து வைலக்ஷண்யமும் ஆதியஞ்சோதி யுருவான திவ்யமங்கள விக்ரஹ வைலக்ஷண்யமும் சொல்லப்பட்டது. அவதார வைலக்ஷண்யம் ராமம் ஸத்ய பராக்ரமம் என்கிற விடத்தில் சொல்லப்படும்.

நாம ப்ரஸித்தார்த்தத்தைச் சொல்லா நின்ற இந்த ஶப்தத்தால் தம்தீராஸ: கவய உந்நயந்தி ஸ்வாதியோ மநஸா தேவயந்தஃ என்று சொல்லப்பட்ட வைதிக ப்ரஸித்தி சொல்லப்படுகிறது. ஜநைஶ்ஶ்ருத: என்றதினால் லௌகிக ப்ரஸித்தி சொல்லப்பட்டது. நியதாத்மா அஸாதாரண திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையவன். மஹா வீர்ய: மஹத்தான வீர்யத்தை யுடையவன்) வீர்யத்திற்கு மஹத்வமாவது. தோஷாஹிதமாயும், ஒரு காரணத்தை யிட்டுண்டானதன்றிக்கே ஸ்வாபாவிகமானதாயும்; எல்லையில்லாததாயும் ஒப்புயர் வில்லாததாயு மிருத்தல். த்யுதிமாந் (காந்தியை யுடையவன்) "நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா நீருண்ட காளமேகத்திணிடையில் நிலாகின்ற மின்னல் கொடி போன்ற ஔஜ்வல்யத்தை யுடையவன். தம்தபந்தமிவாதித்யமு பபந்நம் ஸ்வதேஜஸா என்று மேலும் சொல்லப்படும். த்ருதிமாந் (ஆணைக்கடங்கிய வுலகை யுடையவன். வஶீ குணங்களால் வஶீகரிக்கப்பட்ட ஸர்வஜநங்களை யுடையவன். ஜயிக்கப்பட்ட இந்த்ரியங்களை யுடையவன் என்னவுமாம். ஹ்ருஷிகேஶோ ஜிதேந்ரிய: என்னக்கடவதிறே!

𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍𑌨𑍀𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌵𑌾𑌗𑍍𑌮𑍀 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌞𑍍𑌛𑌤𑍍𑌰𑍁𑌨𑌿𑌬𑌰𑍍𑌹𑌣𑌃

புத்திமாந் நீதிமாந் வாக்மீ ஸ்ரீமான் ஶத்ரு நிபர்ஹணஃ

புத்திமாந் (எல்லாமறிந்தவன்) "யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" எனறபடி. நீதிமாந் மர்யாதையுடையவன் தாதாயதா பூர்வ மகல்பயத் என்றபடி. வாக்மீ சோபனமான வாக்கை யுடையவன். யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவைவேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை என்கிறபடி ஸர்வ வேத ப்ரவர்த்தக னென்றபடி. ஸ்ரீமாந் பூர்ணமான உபய விபூத்யை ஶ்வர்யத்தை யுடையவன். வாக்மீ ஸ்ரீமாந் வார்த்தை சொல்லும்போது பூவலர்ந்தாப்போலே ஓஷ்டஸ்புரண மிருந்தபடி 'அன்றிக்கே' மணிவண்ணன் மணி என்று பத்ம ராகமாய் வர்ணம் திருவதரத்தின் செகப்பாய் வார்த்தை சொல்லும்போது திருவதரத்தில் சிவப்பைச் சொல்லுகிறதென்று திருவுள்ளம்பற்றி வாக்மீ ஸ்ரீமாந் என்றருளிச்செய்கிறுன் என்னவுமாம். சோதிவாய்திறந்து. என்னக்கடவதிறே!........,

𑌸𑌮𑌸𑍍𑌸𑌮𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌃 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍 ।
𑌪𑍀𑌨𑌵𑌕𑍍𑌷𑌾 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌵𑌾𑌞𑍍𑌛𑍁𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 ॥

ஸமஸ்ஸம விபக்தாங்கஃ ஸ்நிக்தவர்ண: ப்ரதாபவாந்: |
பீநவக்ஷா விஶாலாக்ஷோ லக்ஷ்மீவாந் ஶுபலக்ஷணஃ||

ஸம: அத்யுன்னதமாயும் அதிஹ்ருஸ்வமா (மிகக்குறுகி)யுமிருக்கை யன்றிக்கே. "ஷண்ணவ த்யங்குளோத் ஸேதஸ்ஸார் பௌமோ பவேந்ந்ருப: என்கிறபடி உத்தம புருஷனுக்குச் சொல்லப்படுகிற 96 அங்குலமுள்ள திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையவன்.

ஸமவிபக்தாங்க: ஒன்று நீண்டும் குறுகியு மிருக்கையன்றிக்கே பகுக்கப்பட்ட கரசரணாத்யவயவ (கைகால் முதலான அங்க)ங்களை யுடையவன்:

ஸ்நிக்தவர்ண: கண்டார் கண்களைக் கவரும்படி ஸ்நிக்தமான இந்த்ர நீலவர்ணத்தை யுடையவன். ஸ்நிக்தேந்த்ர நீலவர்ணஸ்து போகம் விந்ததி புஷ்கலம் என்று அவாப்த ஸமஸ்த காமத்வம் தோற்ற நின்றது. அன்றிக்கே சந்தனம் பன்னீர் முதலானவைகள் போலே கண்டபோதே தாபமெல்லாம் தணியும்படியான குளிர்ந்த வடிவை யுடையவன் என்னவுமாம். ப்ரதாபவாந். தேஜஸ்ஸையுடையவன். குளிர்ந்தவடிவில் தேஜோதிஶய மிருந்தபடி.

சந்த்ரவத்ப்ரியதர்ஶந: சந்த்ரனைப்போல் குளிர்ந்த வடிவை யுடையவன் என்னுநிற்கச் செய்தேயிறே ஸூர்யஸ்யாபி பவேத்ஸூர்யஃ ஸூர்யனுக்கும் ஸூர்யனுயிராநின்ருன் என்றது. கதிர்மதியம்போல் முகத்தான் என்றன்றே! இவனுடைய வடிவிருப்பது. இதனால் ப்ரதிகூலர்க்கு அநபிபவனுயிருக்கும்போதே அநுகூலர் கிட்டி நின்றனுபவிக்கும்படியா யிருக்கையை சொல்லுகையால் மற்றொரு வ்யக்தியிலில்லாத சேர்க்கை இங்கே சேர்ந்தபடி சொல்லப்பட்டது. பீநவக்ஷா: பருத்த மார்பை யுடையவன். மஹோரஸ்க: என்கிற விஶாலதைக்கீடான பணைப்பிருந்தபடி. விஶாலாக்ஷ: அகன்ற கண்களை யுடையவன். நீண்டவப் பெரிய வாய கண்கள் என்றபடி. பீநவக்ஷா: விஶாலாக்ஷ: என்றதனால் ஆத்மாநம்மாநுஷம் மந்யே என்று இவர் தன்னுடைய பரத்வத்தை மறைத்துக்கொண்டிருந்தாலும் திருமார்பும் திருக்கண்களும் ஒப்பற்று விலக்ஷணமாய் பரமபுருஷனே இவன் என்று கோட்சொல்லும்படி யிருக்கும். ஒப்புச் சொல்லும்போதும் யதாகப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ தம்பத்மதள பத்ராக்ஷம்

ப்ரபுத்தமுக்தாம்புஜ சாருலோசநம் என்றிப்புடைகளிலே உபமானத்தைத் திருத்திச் சொல்லவேண்டும்படியிறே அவைகளிருப்பது லக்ஷ்மீவாந். (அவயவ) ஶோபையை யுடையவன். பீநவக்ஷா விஶாலாக்ஷோ லக்ஷ்மீவாந். என்கையால் ஸீதாலக்ஷ்மீ: என்னுமவள் அகலகில்லேன் இறையுமென்று நித்யவாஸம் பண்ணுகையால் அவனுடைய மார்பும் கண்களும் தடமார்பாய் தடங்கண்களாய் க்ருதார்த்தங்களாயின. அவளை யணைக்கையும் நோக்குகையுமிறே இவைகளுக்குப் பலம். பிராட்டியை யணைக்கையாலே திருமார்பு பணைத்தது. அவளை நோக்குகையிலே திருக்கண்மலர் விகஸிதமாயிற்று.

பீநவக்ஷா விஶாலாக்ஷோ லக்ஷ்மீவாந் என்று திவ்யாவயவங்களோடே சேர்த்துச் சொல்லுகையால் அவளும் திருமேனியிலே ஒரு அவயவம்போலே பொருந்தி யிருந்தபடி சொல்லுகிறது. ஶுப லக்ஷண: ஶுபமான லக்ஷணத்தை யுடையவன், இதனால் பிராட்டியோபாதி திருமருவும் திருமார்பிலே கூடஏருடமா யிருந்தபடி.

விஶாலவக்ஷஸ்தல ஶோபி லக்ஷணமிறே! லக்ஷ்மீவாந் என்று ஸமுதாய ஶோபையையும் ஶுபலக்ஷண: என்று பின்னையு முண்டான திவ்யமங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்தையும் சொன்னபடி...............

𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 ।
𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 ॥

ரக்ஷிதா ஜீவலோகஸ்ய தர்மஸ்ய பரிரக்ஷிதா |
ரக்ஷிதா ஸ்வஸ்யதர்மஸ்ய ஸ்வஜநஸ்யச ரக்ஷிதா ||

அவதாரத்திற்கு முக்யமான குணங்களைச் சொல்லுகிறது ரக்ஷிதா என்று தொடங்கி. ரக்ஷிதா ஜீவலோகஸ்ய உலகத்தில் ஸார்வபௌமரானவர்கள் தன்னுடைய ஜநங்களின் ரக்ஷணத்திலேயே ஊக்கமுடையவர்களா யிருக்கக்காண்கிறோம்.

இந்த ராமன் அவ்வாறு பக்ஷபாத லேஶமின்றிக்கே ஸமஸ்தமான ப்ராணி ஸமூகங்களுக்கும் ரக்ஷகனாகிறான். இவ்வாறு எல்லோரையும் ரக்ஷிப்பானாகில் கெட்டகாரியங்களைச் செய்யுமவர்களையும் ஸுகிகளாகச் செய்வானோ என்னில்? "தர்மஸ்ய பரிரக்ஷிதா" தர்மத்தை நன்றாகப் பரிபாலிப்பவன். இதில் "பரி" என்கிற உபஸர்க்கத்தால் தானும் தர்மத்தை யநுஷ்டித்து பிறர்களையும் அநுஷ்டிக்கச்செய்து தர்மத்தைப் பரிபாலிப்பவன். இதனால் ஶாஸ்த்ரங்களை

அதிக்ரமித்து பாபமேசெய்து பாவியாய்த்திரியு மவர்களையும் சிகித்ஸகன் (மருத்துவன்) ரோகிகளின் ஶரீரத்தில் தோஷமுள்ள பாகங்களை வாளாலறுத்துச் சுட்டு ரக்ஷிக்குமாப்போலே ஶிக்ஷித்து ரக்ஷிக்கும் என்பதும் அர்த்தமாகும். இவ்வர்த்தத்தை "பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாயச துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று தானே அருளிச்செய்தானிறே! அன்றிக்கே பக்ஷபாதகந்தத்தையு மறியாமல் முதலில் ஜீவலோகத்தையும் அவர்களநுஷ்டிக்கும் தர்மத்தையும் நோக்கிப் பின்னை ஸ்வவர்ணத்தையும் ஸ்வஜநத்தையும் நோக்குமவ னென்னவுமாம். "தர்மஸ்ய பரிரக்ஷிதா" பரி என்னு முபஸர்க்கத்தால் அவரவர்களின் வர்ணாஶ்ரம வயோநுகூலமாக தயைபண்ணி ரக்ஷிக்கையாலே அவர்களெல்லோரும் பெருமாளை விட்டகலாமல் அநுவர்த்தித்துக் கொண்டிருக்கும்படி சொல்லுகிறது.

ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய (தன்னுடைய தர்மத்தையும் பரிபாலிப்பவன்.) உலகத்தில் தர்மோபதேஶ ஸமயத்தில் எல்லோரும் பண்டிதர்களே. ஸ்வாநுஷ்டாநத்தில் வந்தால் முநிகளும் மூடர்களாவர்கள். அதுபோலவோ ராமன் எனில்?

ரக்ஷிதா ஸ்வஸ்யதர்மஸ்ய, தனக்கு அஸாதாரணமான க்ஷத்ரிய தர்மத்தையும் பரிபாலிக்குமவன். அன்றிக்கே "ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய" "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே அபயம் ஸர்வபூதேப்யோ ததாம் யேதத்வ்ரதம்மம" என்ற தன்றோ ஸ்வதர்மமாவது. அத்தர்மத்தை தன் ப்ராணனை விட்டும் ப்ராணனைக்காட்டிலும் பெருமையையுடைய பிராட்டியை விட்டும் யாரை விட்டாலும் விடமாட்டாத இளையபெருமாளை விட்டும் ரக்ஷிக்குமவன். "ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா" ஒருவன் உலகத்தையெல்லாம் ரக்ஷிக்குமவனாயிருந்தாலும் ஸ்வஜநங்களை ரக்ஷிப்பதில் அசக்தனாகிறான். "தாஸ்யமைஶ்வர்ய பாவேநஜ்ஞாதீ நாஞ்ச கரோம்யஹம்! அர்த்தபோக்தா ச போகாநாம் வாக்துருக்தாநி ச க்ஷமே" என்று பகவானே சொன்னானிறே. இவ்வளவு துர்க்கடமான ஸ்வஜநரக்ஷணத்தையும் செய்யுமவன் என்கிறான். அன்றிக்கே உலகத்தில் ஒருவன் எல்லோரையும் ரக்ஷியாநின்றுகொண்டுஸ்வஜனங்களை உபத்ரவிப்பான். இவன் அவ்வாறின்றி ஸ்வஜனங்களையும் ரக்ஷிக்குமவன் என்னவுமாம். "ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய" ஸ்வதர்ம: பாத்வம். அதை ஹாரதநுர்ப்பங்க பரசுராம கர்வபங்கங்களால் ஸ்தாபிக்குமவன்.

"ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா" ஸ்வபூதோஜந: ஸ்வஜந: ஜ்ஞாநீ. அவர்களை ரக்ஷிக்குமவன். "தேஷாம் நித்யாபி யுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்" என்றபடி.

"இக்ஷ்வாகு வம்ஶப்ரபவ:" என்று தொடங்கி "ரக்ஷிதா ஜீவ லோகஸ்ய" என்னுமளவாக "வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றி விண்முழுது முய்யக்கொண்டவீரன்" என்றதாயிற்று. "தர்மஸ்ய பரிரக்ஷிதா" என்று "மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து வல்லரக்க ருயிருண்டமை" சொல்லப்பட்டது. "ரக்ஷிதா" ஸ்வஸ்ய தர்மஸ்ய" என்றதால் "செவ்வரி நற்கரு நெடுங்கட் சீதைக்காகிச் சினவிடையோன் சிலையிறுத்தமை" சொல்லப்பட்டது. "ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா" என்று "மழுவாளேந்தி வெவ்வரி நற்சிலைவாங்கி வென்றி கொண்டு" "பாலநாம் மமபுத்ராணாமபயம் தாதுமாஹஸி" என்று பயந்த சக்ரவர்த்தி முதலான தன்னுடையவர்களைக் காப்பாற்றினமை காட்டப்பட்டது. அன்றிக்கே, "ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய" தன்னுடைய தர்மமான ஶரணாகத ரக்ஷணரூபதர்மத்தை, பிராட்டியைத் திருமணம்புணர்ந்து நோக்கினபடியைச் சொல்லுகிறதென்னவுமாம். "லக்ஷ்ம்யாஸஹ" விறே ரக்ஷகனாகிறது. அங்ஙனுமன்றிக்கே தன்னுடைய ஸ்வரூபத்திற்கு "அஹந்தாப்ரஹ்மணஸ்தஸ்ய ஸாஹமஸ்மிஸநாதநீ" என்று நிரூபக தர்மபூதையான பிராட்டியை மணந்து நோக்கினபடி சொல்லுகிறதாகவுமாம்—

இவ்வாறு "வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து செவ்வரி நற்கரு நெடுங்கட் சீதைக்காகிச்சின விடையோன் சிலையிறுத்துத் திருமணம் புணர்ந்து மழுவாளேந்தி வெவ்வரி நற்சிலை வாங்கி வென்றிகொண்டு மெல்லியல் தோள் தோய்ந்த" பாலகாண்டக்கதை ஸங்க்ரஹித்த தாயிற்று..........

𑌸𑌰𑍍𑌵𑌦𑌾𑌽𑌭𑌿𑌗𑌤𑌸𑍍𑌸𑌦𑍍𑌭𑌿𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 𑌇𑌵 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌭𑌿𑌃 |
𑌆𑌰𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌦𑍈𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 ||

ஸர்வதா பிகதஸ்ஸத்பி: ஸமுத்ர இவ ஸிந்துபி: |
ஆர்யஸ்ஸர்வஸமஶ்சைவ ஸதைகப்ரியதர்ஶந:||

"ஸர்வதா" (அஸ்த்ராப்யாஸ காலத்தோடு வேட்டையாடி ஶ்ரம பரிஹாரார்த்தமாகச் சிறிதுகாலம் நிழலிலே நின்றபோதோடு வாசியற எப்போதும் "ஸத்பி:" (பரஸம்ருத்யை கப்ரயோஜனர்களான)

(ஸத்புருஷர்களாலே) "அபிகத:" (பரிவாரித:) சூழ்ந்துகொண்டிருக்கப்பட்டவன், எப்படிப்போலே எனில்? "ஸமுத்ர: ஸிந்துபிரிவ" ஸமுத்ரமானது ஆறுகளாலேபோல. இவ்வாறு ஸத்புருஷர்கள் ராமனைச் சூழ்ந்துகொண்டிருப்பது ராமனுக்கு அறியாத வர்த்தங்களை அறிவிக்கவோ? என்னில் "ஸமுத்ரஇவ ஸிந்துபி:" பண்டே பூர்ணமா யிருக்கும் ஸமுத்ரத்தின் குறையை நிறப்புவதற்காகவன்றே! நதிகள் ஸமுத்ரத்தை அடைகின்றன. பின்னையாது காரணம்பற்றி யெனில்? தங்களுக்கு நடுவில் தரிப்பில்லாமையாலும் மஹாநதீ என்கிற மஹத்வத்தை (பெருமையை) அடைவதற்காகவுமன்றோ? அடைகின்றன ஸமுத்ரத்தை. அதுபோலவே எல்லாவற்றாலும் பூர்ணரான பெருமாளுக்கு இவர்களறிவிப்பது யாதொன்றுமில்லை ஆதலின் அவர்கள் அபூர்வார்த்தங்களை அறிந்து கொள்ளுவதற்கும் அவனை விட்டு மற்றொரு யிர்ப்பிடமிவர்களுக்கில்லாமையாலுமன்றோ! அவனைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் எப்போதும் சூழ்ந்துகொண்டிருப்பதற்குக் காரணமான ஸௌலப்யாதி குணங்களைச் சொல்லுகிறார் "ஆர்ய:" என்று தொடங்கி. "ஆர்ய:" அபிகந்தவ்ய: (அடைவதற்கு யோக்யமானவன்) பூஜிக்கத்தகுந்தவன் என்னவுமாம். ஸத்துக்களுக்கு மாத்திரம்தான் அடையத் தகுந்தவன் மற்றையோர்களுக்கன்றோ? எனில். "ஸர்வஸம:" (ஜாதி குணவ்ருத்யாதி தாரதம்யமன்றிக்கே ஆஶ்ரயிக்கும் விஷயத்தில்) எல்லார்க்கும் ஸமானனாயிருப்பவன். இவ்வர்த்தம் "குஹேநஸஹித:" "ஶபர்யாபூஜித:" என்கிறவிடங்களில் நன்கு விளங்கும். ஒன்று முபதேசிக்கா விட்டாலும் ஸௌந்தர்யம் கண்டார் கண்களைக் கவரும்படி யிருக்கு மென்கிறார் "ஸதைகப்ரியதர்ஶந:" என்று. எப்போது மனுபவித்துக்கொண்டிருந்தாலும் "பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில்" என்கிறபடி புதிது புதிதாகத் தோற்றும்படியான தோற்றமுடையவன். அன்றிக்கே "ஸதைகப்ரிய தர்ஶந:" "அபயம் ஸர்வ பூதேப்யோததாம் யேதத் வ்ரதம்மம" என்கிறபடி ஏகமாய் முக்யமாய் ஸர்வபூதங்களுக்கும் ப்ரியமான ஸங்கல்பத்தை யுடையவன் என்னவுமாம். இதனால் "கஶ்சைக ப்ரியதர்ஶந:" என்ற வினாவிற்கு விடையளித்தபடி.

தனிஶ்லோகம்: "ஸர்வதா அபிகத: ஸத்பி:" சக்ரவர்த்தித் திருமகனான பெருமாளுடைய ஸம்பந்தத்தால் ஸத்தை பெற்றவர்களான வஸிஷ்டாதிகளால் ஸர்வதா ஸிந்துபி: ஸமுத்ர இவ, எப்போ

தும் மஹாநதித்வத்தை யடைவதற்கு நதிகள் எப்படி ஸமுத்ரத்தை யடைகின்றனவோ அப்படியே ஸத்துக்கள் தங்களுக்கு (ஸஜ்ஜநத்வம்) நல்லவர்களின் தன்மை உண்டாவதின்பொருட்டு ராமகோஷ்டியை அடைகிறார்கள். ஸிந்துபி: ஸமுத்ர இவ என்பதால் ஒரே கோஷ்டியாக இருந்தாலும் நக்ஷத்திரங்களின் நடுவில் விராஜின்ற சந்த்ரனைப்போல எல்லோரையும்காட்டில் நிரதிஶயமான ராமனுடைய தேஜிஷ்டத்வம் தோன்றுகின்றது. கரையழியப் பெருகாநின்ற ப்ரவாஹங்களையுடைய நதிகளால் ஸமுத்ரமானது எவ்வாறு கலக்க முடியாதோ? அவ்வாறே நாஸ்திகவாதங்களைப் பேசாநின்ற ஜாபாலி முதலானவர்களால் கலக்கப்பட்டாலும் தன்னிலே கலங்காதவர் என்பதும் தோன்றுகின்றது. "ஸர்வதா" என்பதால் நதிகளால் எப்போதோ ஒரு கால விஶேஷத்தில் ஸமுத்ரம் அடையப்படுகிறது. இந்த ராமன் எப்போதும் ஸத்துக்களால் அடையப்படுகிறான். ஸர்வதா அபிகத: என்றதால் ப்ரயோஜநார்த்தமாக (அ)ஸத்துக்கள் வந்தார்களேயானால் அவர்களோடு விதண்டாவாதங்களைச் செய்தால் அவர்கள் அதைச்சகியாமல் வாராதிருப்பார்கள் அவ்வாறு ராமன் செய்யமாட்டார் என்பது விளங்குகிறது: இது "நவிகர்ஹ்ய கதா ருசி:" என்று மேலே ஸார்ப்தமாகச் சொல்லப்படும். நதிகளுக்கு ரத்நாகரமான ஸமுத்ரத்தினுடைய ஸங்கம ப்ரதேஶத்திலேயே சில ரத்நங்களின் ஸம்பந்தம் அதுபோலே குணங்களுக்கு ஆகரமான ராமனுடைய ஸம்பந்தத்தாலேயே ஸத்துக்களுக்கு குணங்கள் ப்ரகாஶிக்கின்றன என்பதும் தோற்றா நிற்கின்றது. உலகத்தில் ராஜகுமாரர்கள் ஒருஸமயம் விநோதார்த்தமாக ஶ்ருங்கார ஹாஸ்யரஸ வறிவர் சிலரோடு போது போக்குவதுண்டு. ராமன் அவ்வாறிருப்பது கிடையாதென்பதைக் காட்டுகிறது ஸ்த்பி: என்கிற பதம். "ஸிந்துபி: ஸமுத்ர இவ" என்பதால், ஸத்துக்களுக்கு கத்யந்தரமில்லாமையும் ராமனுடைய ஸௌலப்யமும்' தோற்றுகிறது.

𑌸 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌣𑍋𑌪𑌤𑌃 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 |
𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 𑌇𑌵 𑌗𑌾𑌮𑍍𑌭𑍀𑌰𑍍𑌯𑍇 𑌧𑍈𑌰𑍍𑌯𑍇𑌣 𑌹𑌿𑌮𑌵𑌾𑌨𑌿𑌵 ||

ஸச ஸர்வகுணோபேத: கௌஸல்யா நந்தவர்த்தந: |
ஸமுத்ரஇவ காம்பீர்யே தைர்யேண ஹிமவாநிவ ||

" [illegible] " || "[illegible]

கல்யாண காலம்! சுபகாரியங்கள்!!

உயர்ந்த நாகரீகமான நகைகள்

விலை குறைவு! மதிப்பு அதிகம்!



அசல் சவரன் பொன் நகைகள்

அசல் சீமை வெள்ளி நகைகள்

T. A. பொன்னுசாமி நாய்க்கர் & சன்,

72, சைனுபஜார், மதருஸ்.



சிறந்த

செம்பு பித்தளை

சாமான்கள்

புதுமாதிரியான எல்லாவகை பாத்திரங்களும் தயாரித்துக் கொடுக்கப்படும்.

T. A. பொன்னுசாமி நாயக்கர் & சன்,

88, சைனுபஜார், மதருஸ்.

Registered No. M. 3401

விளம்பரம்

1. தங்கம், செம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச் சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயு மிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட் டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1-க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம் பொன்னுக்கு உத்தரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசு வளையல்களுக்கும் கேட்லாக்கு உண்டு. அதை வாங்கி நெம்பரைக் குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்துகொடுக்கப்படும்.

பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,
31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஓர் வேண்டுகோள்

வைஜயந்தீக்ராஹக மஹாநுபாவர்காள் !

சித்திரையிற் செய்ய திருவாதிரையில் அவதரித்த இப்பத்ரிகை வைஜயந்தியின் ஆருவது சஞ்சிகை ஈது மென்பது அனைவருமறிந்ததே! ஷை பத்ரிகை விஷயமாய் மாதம் ஒன்றுக்கு ரூ 60-க்கு குறையாமல் செலவாகின்றது. அதை வைஜயந்தீக்ராஹர்களின் ஸஹாயத்தைக்கொண்டே நிர்வஹிக்க வேண்டியனு யிருக்கின்றேன். பத்ரிகையை V. P. மூலம் அனுப்பினுல் அதிக சார்ஜ் ஆவதுடன் அநேக அஸந்தர்ப்பங்களும் ஏற்படக்கூடு மாதலின் அவ்வாறு செய்ய அடியேன் விரும்பவில்லை. சில மஹாநுபாவர்கள் அடியேனுடைய நிலைமையை யறிந்து முன்னதாகவே சந்தாத் துகையை மணியார்டர் செய்திருக்கிருர்கள். இது பர்யந்தம் அவ்வாறு மணியார்டர் செய்யாமலிருக்கு மவர்களும் அடியேனிடம் அன்பு செய்து சந்தாத் துகையை மணியார்டர் மூலம் அனுப்பிவித்து அநுக்ரஹிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
வடகரை இராமாநுஜாசாரி,
பத்ராதிபர்.

Edited & Published by Vadakarai Ramanujachariar, 25, Acharappan St., and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St. M...

05 ௳௦௫
JUN 1936

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசன பத்ரிகை

ஸம்புடம் 1 | தாது௵ ஏரார் வைகாசி விசாகம் | சஞ்சிகை 7

பத்ராதிபர் :
வடகரை இராமாநுஜாசாரியார்

25, ஆசாரப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

1936 மே] [தனிப்ரதி விலை 0-3-0

விஷய ஸூசிகை

விஷயங்கள்.

1. வைகாசி விசாகம்
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர்
2. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்
—பத்திராதிபர்
3. அத்யமே ஶ்லோகார்த்த விசாரঃ
—பத்திராதிபர்
4. பகவந் நாமோச்சாரண ப்ரபாவம்
—திருமழிசை கோயில் கந்தாடை அப்பனய்யன் ராமாநுஜாசாரியார்
5. ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில் நாதமுனிகளிடம் தேசிகன் ஈடுபாடு ..
—எ. வி. கோபாலாசாரியார், பத்திராதிபர், ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணி.
6. அத்யமே ஶ்லோகார்த்த நிரூபணம் ...
—திருமலை அனந்தாண் பிள்ளை ஸ்ரீ க்ருஷ்ண தாஸன்
7. வர்த்தமானங்கள் ...
8. பீதாம்பர பண்டித ப்ரஸங்க பராமர்சம் ...

ஆரியர்காள்:—

நமது வைஜயந்தீ பத்திரிகை ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த அபிநிவேசமுடைய பெரியோர்கள் அநுக்ரஹிக்கும் விஷயதா களைச் சிரமேலேற்று நிஷ்பக்ஷபாதமாய் வெளியிடுவதற்கென் வெளிவந்திருக்கின்றது. ஆயினும் அவ்வாறு விஷயதானங்களை க்ரஹிக்குமவர்கள் பிறர்மனம் வருந்தும்படி வசைமொழிகளை அ ஒழித்தும் விஷயத்திற்குப் பொருத்தமுடையனவாயும் அ யகமான விஷய விசாரங்களை வளர்த்தாமலும் அநுக்ரஹிக்கவே டும். இவற்றிற்கு விருத்தமாயிருக்கும் விஷயதானங்களை நமது ப ரிகை அங்கீகரிக்காதென்பதை ஸவிநயம் தெரிவித்துக்கொள்கிறோ

இங்ஙனம்,
பத்ராதிப

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது
மனிதர்களுக்கு ஆரோக்யத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:
பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.
பம்பாய். மதராஸ். கல்கத்தா.

ராம் மோஹன் கம்பெனி

வட இந்திய யாத்திரா ஸ்பெஷல்

29-7-36-ல் சென்னையை விட்டு புறப்பட்டு
23-9-36-ல் சென்னைக்கு திரும்பிவரும்.

மூன்றாவது வகுப்பு ரூ. 110.

அடியிற்கண்ட க்ஷேத்திரங்களுக்கும், புண்ணிய நதி தீரங்களுக்கும், முக்கிய நகரங்களுக்கும் செல்லும்.

துங்கபத்ரா, பண்டரீபுரம், நாஸிக் (திரியம்பகம் பஞ்சவடி) பம்பாய், பரோச் (நர்மதா) பரோடா, டாகோர், (ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்) ஜாம்நகர், துவாரகை, ஸித்தபூர் (மாதுர்கயா) அபுரோட் (அபுமலை) ஆஜ்மீர் (புஷ்கரம்) ஜயபூர், ஆக்ரா, மதுரா, (கோகுலம்) கோவர்த்தனம், பிருந்தாவனம்) புதிய டில்லி, குருக்ஷேத்திரம், ஹரித்வார் (ரிஷிகேஶ்) நைமிசாரண்யம், அயோத்யா, பிரயாகை, திருவேணி, அலஹாபாத்) சித்ரகூட பர்வதம், விந்தியாசல பர்வதம், ஸ்ரீகாசி, கயா, கல்கத்தா, பூரி-ஜகந்நாதம், சிம்ஹாசலம், ராஜமஹேந்த்ரம் முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டு, சென்னைக்கு திரும்பிவரும்.

பிரயாணகாலத்தில், யாத்ரீகர்களுக்கு எல்லாவித சௌகர்யங்களும் செய்து கொடுக்கப்படும். இதுவரையில் எங்கள் ஸ்பெஷலில் ஆறாயிரம் பேர்களுக்கு மேல் திருப்தியுடன் யாத்திரை செய்திருக்கிறார்கள்.

முழு விவரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,
பிரயாணிகளின் ரயில்வே ஏஜண்டுகள்.
25, தம்பு செட்டி தெரு, சென்னை.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை.

தொகுதி 1. | பத்ராதிபர் வடகரை இராமாநுஜாசாரியார் | பகுதி 7.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁
𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 ।
𑌯𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍 ॥
𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑍇𑌦𑌾𑌂𑌗 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍈𑌕𑍍𑌯𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌜𑍃𑌂𑌭𑌤𑌾𑌮𑍍 ॥

ஏரார் வைகாசி விசாகம்

[பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

* சீராரும் வேதந் தமிழ் செய்த மெய்யன் எழில் குருகை நாதன் அவதரித்த நாளாகிய ஏரார் வைகாசி விசாகத்தின் ஏற்றம் பாரோர் பலரு மறிந்ததே. ஆயினும் இன்று நாம் இதனைச் சிறிது பேசி யநுபவிப்போமாக.

இக்கலியுகத்தின் தொடக்கத்தில் திருவவதரித்துத் தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்ன நம்மாழ்வார் நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்திற்கு இந்த யுகத்தில் ப்ரதம ப்ரவர்த்தகராக விளங்கினர். ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி ஆளவந்தார் எம்பெருமானர் ஆழ்வான் பட்டர் பிள்ளை லோகாசாரியர் தேசிகன் மணவாள மாமுனிகள் முதலான ஆசிரியர்கள் அநேக திவ்ய க்ரந்தங்களால் இவ்வுலகை வாழ்வித்தருளின தெல்லாம் இவ்வாழ்வாருடைய திவ்ய ப்ரபந்தங்களை மூலமாகக் கொண்டே யாம்,

“ நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேய ப்ரபந்தை: த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரிதமகிலதம: கர்ஶநம் தர்ஶநம் ந: ” நாதோபஜ்ஞம்ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேய ப்ரபந்தை: த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரித மகில தம: கர்ஶநம் தர்ஶநம் ந: என்று அருளிச்செய்த தேசிகன் தாமே ஸ்ரீ குரு பரம்பராஸாரத்தில்—“ ஸ்ரீமந் நாதமுநிகளுக்கு ஸ்ரீ மதுர கவிகள் முதலாக வுண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் திருவாய்மொழி முகத்தாலும் யோகதசையிலே ஸாக்ஷாத் க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார்” என்றருளிச் செய்திருக்கையாலும், ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்நத்தில் ஆழ்வாரைத் துதிக்கும் ச்லோகத்தில் “ ஆத்யஸ்ய ந: குலபதே: ஆத்யஸ்ய ந: குல பதே:” என்றே அருளிச் செய்கையாலும் நம்மாழ்வாரே ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு முதன்மையான ப்ரவர்த்தகர் என்னத் தட்டில்லை.

உபநிஷத்துக்களில் த்வைத பரமாகவும் அத்வைத பரமாகவுங் காண்கின்ற பற்பல வாக்கியங்களை முறையே அத்வைதிகளும் த்வைதிகளும் அநாதரித்தது போலல்லாமல் விசிஷ்டாத்வைதிகள் எல்லாவற்றையும் அழகாகவே ஆதரித்து நிர்வஹித்து வருவதானது ஸர்வேச்வரனுக்கும் சேதநாசேதநங்களுக்குமுள்ள சரீராத்ம பாவத்தைக் கொண்டே யாகும். இதனை முதன் முதலாக நமக்கு விளங்கக் காட்டிக் கொடுத்தருளின ஆசிரியர் நம்மாழ்வாரே யாவர். திருவாய்மொழியில் முதற் பதிகத்தில், “ திடவிசும் பெரிவளி நீர் நிலமிவை மிசை, படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும், உடன் மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன், சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.” என்றுள்ள பாசுரம் ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்தங்களனைத்துக்கும் ஜீவாது வாகும். இங்ஙனே ஆழ்வார் காட்டியருளின வழியைப் பின்பற்றியே ஆசாரியர்கள் பேதா பேத ச்ருதிகளை ஒருங்கவிட்டார்கள்.

மற்றும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு உள்ளீடான அர்த்த விசேஷங்கள் யாவும் ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளிலிருந்தே ஸ்ரீ ஆளவந்தார் எம்பெருமானார் முதலான ஆசாரியர்களால் நிஷ்கர்ஷிக்கப்பட்டவை யாகும். “பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ர வாக்யங்கள் ஒருங்க விடுவர்” என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீ ஸூக்தியும், “செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித்

தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே” என்ற தேசிக ப்ரபந்தப் பாசுரமும் இவ்விஷயத்தை வற்புறுத்தி நிற்கும்.

சுருக்கமாக மற்றொரு விஷயமுங் காட்டுவோம். எம்பெருமானார், கத்யத்தில் “ ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்=ஸ்வாதீந த்ரிவித சேதநா சேதநஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்” என்று எம்பெருமானுக்கு ஒரு விசேஷண மிட்டருளியுள்ளார். சேதநா சேதநங்களின் ஸ்வரூபமும் ஸ்திதியும் ப்ரவ்ருத்தியு மெல்லாம் எம்பெருமானிட்ட வழக்கா யிருக்கு மென்பது இதன் கருத்து. இவ்வர்த்தத்தை எம்பெருமானார் எங்கிருந்து க்ரஹித்தருளினார் என்று ஆராய்ந்து பார்க்குமளவில், திருவாய்மொழியில் முதற்பதிகத்தில் நான்கு ஐந்து ஆறும் பாசுரங்களிலிருந்து முறையே க்ரஹித்தருளினார் என்றே புலப்படுகின்றது. அவற்றுள் நாமவனிவனுவன் என்கிற பாசுரத்தில் ஸகல சேதநா சேதநங்களின் ஸ்வரூபம் எம்பெருமானுக்கு அதீன மென்றது. அதற்கடுத்த * அவரவர் தமது * என்ற பாசுரத்தில் ஸகல பதார்த்தங்களினுடையவும் ஸ்திதி [ரக்ஷணம்] எம்பெருமானதீன மென்றது. அதற்கடுத்த * நின்றனரிருந்தனர் * என்ற பாசுரத்தில் ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் எம்பெருமானதீன மென்றது. ஆக இங்ஙனே மூன்று பாசுரங்களினாலும் தேறின பொருளையே எம்பெருமானார் * ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதநஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்தி பேதம் * என்ற சூர்ணையினால் தொகுத்தருளினர்.

இப்படி ஆழ்வார் அருளிய அர்த்த விசேஷங்களையே உடையவர் பெரும்பாலும் உபந்யாஸ முகத்தாலும் ஸ்ரீபாஷ்யாதி கிரந்த முகத்தாலும் ப்ரவசனஞ் செய்தருளினதுபற்றியே “தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்” என்று பட்டர் அருளிச் செய்யலாயிற்று. இவ்வாழ்வார் திறத்து ஆளவந்தார் கொண்டிருந்த பக்திப் பெருங் காதலின் பரிசு “மாதா பிதா யுவதய:” என்ற ஒரு ச்லோகத்தினாலேயே நன்கு விளங்கும். ஆழ்வாருடைய திருநாமத்தையும் ஸாக்ஷாத்தாக வெளியிடாமே ‘ஆத்ய குலபதி’ என்றே குறிப்பிட்டது மிகவும் பாராட்டத்தக்கது.

ஆழ்வான் பட்டர் முதலானார்கள் தங்கள் தங்கள் திவ்யக்ரந்தங்களிலே ஆழ்வாரைத் துதித்துக் கூறிய ச்லோகங்கள் பல பல இருந்

தாலும், எம்பெருமானார்க்கு ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்ய மிருந்ததாக அவருடைய ஸ்ரீஸூக்திகளினால் ஏற்படவில்லையே யென்று சிலர் கேட்பதுண்டு. ஆழ்வார் பக்கலிலுள்ள பக்தியே உடையவராக உருக்கொண்டதென்று காட்ட இராமாநுச நூற்றந் தாதியில் பல பாசுரங்கள் இருந்தாலும், வேதாந்த தேசிகன், நயனாசார்யர், மணவாள மாமுனிகள் முதலான ஆசார்ய சிகாமணிகளும் தங்களுடைய க்ரந்தங்களில் அப்படியே அருளிச் செய்திருந்தாலும் உடையவருடைய ஸாக்ஷாத்தான ஸ்ரீஸூக்தி ஆழ்வார் துதியாக ஒன்றுமில்லையே யென்று ஸ்ரீவைஷ்ணவர்களிலேயே பலர் சொல்லிக் கொண்டிருப்பதுண்டு.

பெரியோர்கள் இதற்கு இரண்டு வகையான ஸமாதாமனருளிச் செய்வர்கள். உலகத்தில் எல்லா ஆசார்யர்களின் ரீதியும் ஒரு படிப் பட்டதாகவே காண்கிறதில்லை. "பஞ்சாசார்யபதாச்ரித:— பஞ்சாசார்ய பதாச்ரித:" என்கிறபடியே உடையவர் ஐந்து ஆசாரியர்களை அடிபணிந்தவராயிருந்தும் ஒரு ஆசாரியர் விஷயமாகவும் ஒரு துணுக்கைகூட கிரந்தஸ்தமான துதிமொழி அருளிச் செய்திருக்கவில்லை. ஸ்ரீவைகுண்ட ஸ்தவம் அருளிச் செய்யப் புகுந்த ஆழ்வான் உடையவரை ஒரு ச்லோகத்தாலும் நம்மாழ்வாரை இரண்டு ச்லோகங்களாலும் துதித்து, மேலே எம்பெருமானளவிற் சென்றுவிட்டார். ஸ்ரீரங்கராஜஸ்தவம் அருளிச் செய்யா நின்ற பட்டர், ஆழ்வான் எம்பார் உடையவர் ஆளவந்தார் நாத முனிகள் நம்மாழ்வார் பெரிய பிராட்டியார் நம்பெருமாள் என்ற கிரமத்திலே போயினார். இதில் சில ஆசாரியர்களை விட்டிருக்கிறார். யதிராஜஸப்ததி அருளிச் செய்யா நின்ற தேசிகன், பெருமாள் தொடங்கி உடையவர் வரையில் குரு பரம்பரையில் ஒருவரையும் விடாமல் உப ச்லோகித் திருக்கின்றார். ஒரு ஆசாரியரையும் துதியாமலே கிரந்தங்கள் எழுதி யிருப்பாருமுளர். இங்ஙனே பலபடியும் நாம் காணா நின்றோம். ஆசாரிய ஸ்துதிகளைப் பிற்காலத்தவரும் காணும்படி கிரந்தஸ்தமாக்கியே வைக்க வேணுமென்கிற நிர்ப்பந்தம் இருக்கவில்லை. ச்லோகமாகவோ பாசுரமாகவோ ஆசாரிய ஸ்துதிகளை யியற்றி யிருந்தால்தான் ப்ராவண்யமுள்ளதாகக் கொள்ளக்கூடுமென்று சொல்வதற்கில்லை. பெரிய வாச்சான் பிள்ளை, பிள்ளை லோகாசார்யர், மணவாள மாமுனிகள் முதலானார் கிரந்தங்களருளிச் செய்திருக்கும்படியை நோக்கலாம்.

கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திவ்ய தேசங்களில் ஆழ்வார்களின் ஆலயங்களைப் பரிஷ்கரிப்பித்தும் அருளிச் செயல்களின் ப்ரசாரங்களை அபிவிருத்தி செய்வித்தும் உடையவர் செய்தருளின ஆணைத் தொழில்கள் கோயிலொழுகு முதலான நூற்களில் விசதம். "ஸர்வ தேச தசா காலேஷ்வவ்யாஹத பராக்ரமா | ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம் ||" ஸர்வ தேச தசாகாலேஷ்வவ்யாஹத பராக்ரமா ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததா மபிவர்த்ததாம்" என்கிற நெடுநாளைய மங்களா சாஸநம், அதுபற்றியே நிகழ்கின்றது. உடையவர்க்கு முற்பட்ட ஆசாரியர்களும் சிஷ்ய வர்க்கங்களும் ஆழ்வாரல்லது வேறு தெய்வமில்லை யென்று உறுதி கொண்டிருக்கின்றமை ஸ்பஷ்டமாக இருக்கும்போது, பராங்குச தாஸரென்றே திருநாமம் பூண்ட பெரிய நம்பிகளைப் பணிந்து உய்ந்தவரான உடையவர் வேறுபட்டிருந்தாரென்று நெஞ்சிலும் நினைக்கக் கூடுமோ? நூற்றந்தாதி தொடங்கும்போதே "பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த பாமன்னு மாறனடிபணிந்துய்ந்தவன்-இராமாநுசன்" என்றது. இடையில் "உறுபெருஞ் செல்வமும் தந்தையுந் தாயும் உயர் குருவும் வெறிதரு பூமகள் நாதனும், மாறன் விளங்கிய சீர் நெறி தருஞ் செந்தமிழாரணமே யென்று இந்நீணிலத்தோரறிதர நின்றவிராமாநுசன்" என்றும் "பண்டரு மாறன் பசுந் தமிழானந்தம் பாய் மதமாய் விண்டிட வெங்களி ராமாநுச முனிவேழம்" என்றும். "உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் திருவாய் மொழியின் மணந்தரு மின்னிசை மன்னு மிடந்தொறும்................ ...புக்கு நிற்கும் இராமாநுசன்" என்றும் பல பாசுரங்கள் திகழ்கின்றன.

ஆக இவ்வளவும் உடையவருடைய ஸ்ரீஸூக்திகளில் ஆழ்வார் விஷயமான துதியில்லை யென்கிற வாதத்தை யிசைந்து சொன்ன ஸமாதானம். இனி இரண்டாவது வகையான ஸமாதானமேதென்னில்; ஸ்ரீபாஷ்யத்தின் தொடக்கத்தில்,

"அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே
விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே |
ச்ருதி சிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மிந் சேமுஷீ பக்திரூபா ||"

என்றுள்ள மங்கள ச்லோகம் ஆழ்வார் விஷயமாகவும் அழகாக அமைக்கப்பட்டுள தென்பதைப் பேராசிரியர்கள் உபதேச பரம்பரையிற் கூறி வருவதுண்டு. இது ரஹஸ்யமாகப் பேணி அநுஸந்திக்க வேண்டிய அர்த்தமாயினும் ஒரு அபிநிவேசத்தினால் வெளியிடப் பெறுகின்றது.

அகில புவந ஜந்மஸ்தேம பங்காதி லீலே = அகில புவநாநாம் ஜந்மஸ்தேம பங்காதி: (வ்யாபார:) லீலா யஸ்ய என்கிற வ்யுத்பத்தியினால் இது எம்பெருமானுக்கு விசேஷணமாகிறது. ஜகத் ஸ்ருஷ்டி ஸம்ரக்ஷண ஸம்ஹாராதிகளை அநாயாஸமாக [விளையாட்டாக]வே நடத்துகிறவன் எம்பெருமான் என்றபடி. இந்த விசேஷணம் ஆழ்வார்க்கும் பொருத்தமாக அந்வயிக்கின்றது. அகிலம் புவந ஜந்மஸ்தேம பங்காதிலீலா யஸ்ய என்று இப்போது வ்யுத்பத்தி கொள்க. "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்று ஆழ்வார்தாம் அருளிச் செய்தபடியே புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலனான எம்பெருமானை அகிலமாக [எல்லாமாக] உடையவர் ஆழ்வார் என்றபடி. கீதையிலே "வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்று கண்ணபிரான் இழவோடே பேசிப் போனான். அப்படி அவன் சொல்லி வாய்மூடுவதற்குள்ளே ஆழ்வார் திருவவதரித்து (இதி வாஸுதேவ ஸர்வம்) எல்லாங் கண்ணன் என்று பேசியருளினராதலால் அந்தச் சிறப்பை உடையவர் முந்துற வெளியிடுகிறாரென்க. ஸ்ரீ பாஷ்யத்தின் உப ஸம்ஹாரமும் வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: இதி என்பதேயாதலால் அங்கும் ஆழ்வாரையே ஒருவாறு ஸ்மரித்துத் தலைக்கட்டுகின்றார் போலும்.

இனி, அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காநாம் ய: ஸ்ருஷ்டி:— [ஸ்ருஷ்டிகாரண ஸம்ஹர்த்தா ஸம்வாநு] தேந ஸஹ லீலா யஸ்ய என்று வ்யுத்பத்தி கொண்டு, எல்லா வுலகங்களையும் படைத்து அளித்து அழிப்பவனான எம்பெருமானோடே பிராட்டி நிலைமை கொண்டு லீலை புரிகின்றவர் ஆழ்வார் என்றுரைப்பாருமுளர். மின்னிடை மடவார்கள் முதலான திருவாய் மொழிகளில் எம்பெருமானுக்கும் ஆழ்வார்க்கும் லீலா ப்ரவ்ருத்திகள் காணத் தக்கன.

விநத விவித பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே = தன்னை வணங்கின பலவகைப்பட்ட ஜந ஸமூஹங்களை ரக்ஷிப்பதையே விரதமாகவுடைய

வன் என்று இவ்விசேஷணம் எம்பெருமானுக்கு அந்வயிப்பது போலவே ஆழ்வார்க்கும் பொருத்தமாக அந்வயிக்கும். எங்ஙனே யெனில்; ரக்ஷிக்கின்ற அதிகாரம் திருவடிகளுக்கே யாகும். "பிராட்டியுமவனும் விடிலும் திருவடிகள் விடாது; திண்கழலாயிருக்கும்" என்கிற முமுக்ஷுப்படி ஸ்ரீ ஸூக்தியும் காண்க. பாதுகா ஸஹஸ்ரத்தில் [ப்ரபாவ பத்ததி—42.] ஜகதாம் அபிரக்ஷணே த்ரயாணாம் அதிகாரம் மணிபாதுகே வஹத்யோ: | யுவயோ:" ஜகதாமபிரக்ஷணேத்ரயாணு மதிகாரம் மணிபாதுகே வஹத்யோ:-யுவயோ:- என்ற ஸ்லோகத்தையும் வந்தே விஷ்ணுபதாஸக்தம் தச்ச்ரேஷ்டம் பாதுகாம் ச தாம் | யயோ: ஸஞ்ஜித்ஸஞ்ஜ்ஞா ஸித்தவிஜயாத்யயோ: வந்தே விஷ்ணு பதா ஸக்தம் தம்ருஷிம் பாதுகாம் ச தாம் யதார்த்த சடஜித் ஸம்ஜ்ஞா மச் சித்த விஜயாத்யயோ: இத்யாதியாகவுள்ள ஸமாக்யாபத்ததி ச்லோகங்களையும் ஊன்றி நோக்குமிடத்து விநத விவித பூதவ்ராத ரக்ஷைக தீக்ஷத்வம் ஆழ்வார்க்குப் பொருந்தத் தட்டுண்டோ? ஸ்ரீ சடகோபனென்று வழங்குகின்ற திருவடி நிலை ஆழ்வாரில் வேறுபட்ட தன்றே.

ச்ருதி சிரஸி விதீப்தே = ச்ருதிகளின் சிரஸ்ஸாகிய உபநிஷத்துக்களில் எம்பெருமான் விளங்குபவன். இவ்விசேஷணம் ஆழ்வார்க்கும் மிகப் பொருந்தும். ச்ருதி யென்று செவிக்கினிய செஞ்சொல்லாகிய திருவாய் மொழியைச் சொல்லிற்றாய், சிரஸ்ஸென்று ஒவ்வொரு பதிகத்திலும் முடிவு பாசுரத்தைச் சொல்லிற்றாய் அதிலே நியமேந குருகூர்ச் சடகோபன் என வருதலால் நிகமனப் பாசுரங்களாகிய ச்ருதி சிரஸ்ஸில் ஆழ்வார் விளங்குபவர் என்றபடி. அன்றியே, திருவாய் மொழியின் தலையான ஸ்தானத்திலே கண்ணி நுண் சிறுத்தாம்பெனும் திவ்ய ப்ரபந்தம் ஸம்ப்ரதாய ப்ராப்தமாதலால் ச்ருதி சிரஸ்ஸென்று அதைச் சொன்னபடியாய் அதிலே தேவு மற்றறியேன் என்னும்படி விசேஷேண தீப்தர் ஆழ்வார் என்றலும் மிகப் பொருந்தும்.

ப்ரஹ்மணி = ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் மிகப் பெரியன் எம்பெருமான். இப்பெருமை ஆழ்வார்க்கு அற்புதமாக அமையும். எங்ஙனே யெனில்; ஆழ்வார் பெரிய திருவந்தாதியில் எம்பெருமானை நோக்கி ஒரு பாசுரமருளிச் செய்கிறார்; (அதாவது) "புவியுமிருவிசும்பும் நின்னகத்த, நீ யென் செவியின் வழிபுகுந்தென்னுள்

ளாய்-அவிவின்றி, யான் பெரியன் நீ பெரியை யென்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாயுள்ளூ." இதன் பொருள்:—எம்பெருமானே! கீழுலகங்களும் மேலுலகங்களுமாகிய வெல்லாம் உன்னிடத்தேயுள்ளன; அப்படி யெல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிரா நின்ற நீ என்காதுவழியாக என்னுள்ளே புகுந்து போராமலிருக்கின்றாய்; ஆனாலும் 'ப்ரஹ்மம்' என்று உனக்குப் பேராயிருக்கிறது. எது எல்லா வற்றிற்காட்டிலும் பெரிதான வஸ்துவோ அது ப்ரஹ்மமென்னத்தகும்; விபூதிகளைமாத்திரம் வஹித்துக் கொண்டிருக்கின்ற நீ பெரியவனா? அல்லது விபூதிகளை வஹிக்கிற வுன்னையுங் கூடச் சேர்த்து வஹிக்கிற நான் பெரியவனா என்று ஆராயவேண்டாவோ? இதனை நன்கு ஆராய்ந்தால் நானே மிகப் பெரியவனாவேன்; ப்ரஹ்மமென்னும் பெயர் பெறுதற்கு நானே தகுதியுடையேனாவேன்; என்னுள்ளே ஒரு மூலையில் அடங்கிக்கிடக்கவல்ல உன்னை ப்ரஹ்மமென்று சொல்ல வொண்ணுமோ? இதனை நீயே ஆராய்ந்துபார் என்பதாம். இதன்படி ஆழ்வார்க்கு ப்ரஹ்மத்வம் சாலப் பொருந்தியதே, அன்றிக்கே, ஜந்மாத்யஸ்ய யத: ஜந்மாத்யஸ்ய யத: என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தின்படி ஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹார காரணத்வமே ப்ரஹ்ம லக்ஷணமாகத்தேறுதலால், ஆழ்வார் தம்மை எம்பெருமானாக அநுகரித்துப்பேசியருளும் ஒரு பதிகத்தில் "கடல் ஞாலஞ் செய்தேனும்யானே யென்னும்" என்று தொடக்கத்திலேயே அந்த ப்ரஹ்ம லக்ஷணம் தம்மிடத்துள்ளதாகக் கூறுகின்றமை கொண்டும் இதனை நிர்வஹிப்பாருளர். முந்தின நிர்வாஹமே ரஸவத்தரம்.

ஸ்ரீநிவாஸே = அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பனாகையாலே எம்பெருமான் ஸ்ரீநிவாஸனாயினன். ஆழ்வார் ஸ்ரீநிவாஸரானபடி யெங்ஙனே யென்னில்; கேண்மின்: இலங்கைச் செல்வமனைத்தையும் விட்டிட்டுப் புகலற்று வானத்திலே வந்து நின்ற விபீஷணாழ்வானை "ஸுஹுரிக்ஷ ம தக: ஸ்ரீமாநு—அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்றார் வால்மீகிமுனிவர். அப்போது அவ்விபீஷணரிடத்து இருந்த ஸ்ரீயாவது பகவத்பாகவத கோஷ்டியில் அந்வயிக்கப் பெறவேணுமென்றிருந்த விருப்பமேயன்றோ. அன்றியும் குவலயத்துங்கக்கரியும் பரியுமிராச்சியமும் எங்கும் பரதற்கருளிவன் கானடையப் புறப்பட்ட இராமபிரான்பின்னே மண்வெட்டியும் கூடையுமாய்ப் புறப்பட்ட இளையபெருமாள் லக்ஷ்மணோ லக்ஷ்மி

ஸம்பந்ந: எனப்பட்டார். அப்போது அவர்க்கிருந்த லக்ஷ்மியாவது ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டுமென்று கொண்டகைங்கரியப் பாரிப்பேயன்றோ. அன்றியும் முதலையின் வாயிலேயகப்பட்டுத் துடியாநின்ற கஜேந்திராழ்வான் ஸது நாகவர: ஸ்ரீமாந் எனப்பட்டான். அப்போது அவனுக்கிருந்த ஸ்ரீயாவது எம்பெருமானை நேரில் கண்டு அவனது திருவடிகளிலே செவ்விப்பூவைப் பணிமாறவேணுமென்று கொண்டிருந்த குதுகலமேயன்றோ. இப்படிப்பட்ட ஸ்ரீயானது ஆழ்வாரையே பிறப்பிடமாகக் கொண்டதென்னுமிடம் விவரணஸாபேக்ஷமன்றே.

பவது மம பரஸ்மிந் சேமுஷீ பக்திரூபா = அந்த ஆழ்வார் திருவாய்மொழி முதற்பாசுரத்தில் அயர்வறும மரர்களதி பதி மதிநலமருளினன், என்று தமக்குப் பரமபுருஷன் பக்திரூபமான சேமுஷியை(ஜ்ஞாநத்தை)த் தந்ததாகக் கூறினர், தேவுமற்றறியாத நான் அவ்வாழ்வாரையே பரமபுருஷனாகக் கொண்டுளேனாதலால் இவர் திறத்திலே எனக்கு மதிநலம் விளையக்கடவது—என்றாராயிற்று.

இங்ஙனே நம் ஆசார்யர்கள் பேசும்படியான பல்வகைப்பட்ட பெருமை வாய்ந்த ஆழ்வார் அவதரித்த வைகாசி விசாகத்திற்கு ஒப்பொருநாள் உண்டோ?

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்

[பத்ராதிபர்]

மேற்குறித்த மகுடத்தின் கீழ் இவ்வளவாக யதாக்ரமம் ஸ்வஸ்வரூபம் விவரிக்கப்பட்டது. இனி பரஸ்வரூபத்தைப்பற்றி யதாமதி தெரிவித்துக் கொள்கிறேன். அறிவொன்றுமில்லாத வடியேனால் எழுதப்படுமவைகளிலுள்ள தவறுகளை அறிவாலுயர்ந்த ஆரியர்கள் அறிவிப்பரேல் அவர் திறத்துத் தலையல்லால் கைம்மாறிலாதவனாவேன்.

பரஸ்வரூபம் என்பது ஈஶ்வர ஸ்வரூபம் எனப்படும். ஈஶ்வரனுக்கு ஸ்வரூபங்களாவன ஸர்வ ஜகத் காரணத்வம் ஸர்வ ரக்ஷகத்வம் ஸ்ரிய: பதித்வம் ஸர்வஶேஷித்வம் முதலானவைகள். ஸர்வஜகத் காரணத்வமாவது காணப்படா நின்ற ஸமஸ்தமான உலகுக்கும்தான் காரணமாயிருத்தல். காரணமாவது உபாதாந காரணம்,

நிமித்த காரணம், ஸஹகாரி காரணம் என மூன்று வகைப்படும். உபாதாந காரணமாவது கார்யமாகப் பரிணமிக்கைக்கு யோக்யமாயிருக்குமது. ம்ருத் (மண்) காரணம். கடம் (குடம்) கார்யம்.

கடமாகிற கார்யத்திற்கு ம்ருத் உபாதாந காரணமாகும். உபாதாந காரணமான ம்ருத்தை கார்யமாகிற கடமாகப் பண்ணுபவன் நிமித்த காரணம் ஆவன். அதாவது ம்ருத்தைக் கடமாகப் பண்ணும் குலாலன் (குயவன்) நிமித்த காரணமாவன்.

ஸஹ காரிகாரணமாவது ம்ருத்தை குடமாகப் பண்ணுகைக்கு ஸாதகமாயிருக்கும் தண்ட சக்ராதிகள். இவ்விதமான மூன்று காரணங்களும்—காணப்படாநின்ற இவ்வுலகத்திற்கு ஈஶ்வரனே ஆவன். ஸூக்ஷ்ம சிதசித் விஶிஷ்டமான ப்ரஹ்மமே ஸ்தூல சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்மமாக வாகின்றமையால் ஸ்தூல சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்மமாகிற கார்யத்திற்கு ஸூக்ஷ்ம சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்மம் உபாதாந காரணமாக வாகும்.

ஸூக்ஷ்ம சித சித்துக்களுக்கு அந்தர்யாமியாய் நின்று "பஹுஸ்யாம்" என்று ஸங்கல்பித்து, சிதசித் விஶிஷ்டப்ரஹ்மான தான் ஸ்தூல சிதசித் விஶிஷ்டப்ரஹ்மமாக ஆகின்றமையால் பஹுஸ்யாம் என்கிற ஸங்கல்ப விஶிஷ்டனான ஸர்வேஶ்வரனே நிமித்த காரணமாகிறான்.

"பஹுஸ்யாம்" என்னும் ஸங்கல்பம் ஸர்வேஶ்வரனுக்கு எப்போதுமுண்டாவதன்றே? ஏதோ ஒருகால விஶேஷத்திலுண்டாவதால் அந்த ஸங்கல்பத்தை உண்டு பண்ணும்படியான அக்காலம் ஸஹகாரி காரணமாக ஆகும். அக்காலமும் அசேதனமாகையால் அக்காலம் அந்த ஸங்கல்பத்தை யுண்டுபண்ண அஶக்தமாமாதலின் அக்காலத்திற்கு அந்தர்யாமியாயிருக்குமவனே ஸஹகாரி காரணமாகவும் ஆகிறான்.

இவ்வளவாக இம்மூன்றுவிதமான காரணங்களையும் ஸ்வரூபமாகவுடையவன் ஸர்வஸ்மாத்பரன் (எல்லோரிலும் உயர்ந்தவன்) என்பதை, ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள் அறுதியிடா நிற்கும்—ஏகோஹவை நாராயண ஆஸீத்: திவ்யோதேவ ஏகோ நாராயண: நாராயணோ ஜகந்மூர்த்தி: விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம் இத்யாதி வாக்கியங்கள் அநிதர ஸாதாரணமான நாராயண ஶப்தத்தாலே உத்கோஷியா நிற்கும்.

மற்றும் சில உபநிஷத்துக்கள் ஸத்ப்ரஹ்ம இத்யாதி ஶப்தங்களால் சிலவற்றைக் காரணமாகச் சொன்னாலும் ஸாமாந்ய ஶப்தம் விஶேஷ பர்யவஸாயியா யிருக்குமாகையால் ஸதாதி ஶப்தங்களும் ஸ்ரீமந் நாராயணனையே ப்ரதிபாதியா நிற்கும்.

ஹிரண்ய கர்ப்பஸ்ஸமவர்த்த தாக்ரே தாதாயதாபூர்வமகல்பயத், ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத இது முதலான ஶ்ருதி வாக்யங்களால் ஹிரண்யகர்ப்ப ஶப்தவாச்யனான ப்ரஹ்மாவுக்கு ஜகத்காரணத்வம் சொல்லப்படுகிறதே!' என்று ஶங்கிக்கக் கூடும்.

யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே யந்நாபிபத்மாதபவந் மஹாத்மா ப்ரஜாபதி: விஶ்வஸ்ருக் விஶ்வரூப: ஹிரண்ய கர்பம் பஶ்யதி ஜாயமாநம். இத்யாதிகளால் ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கப்பட்டவனென்றும், "யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: புநஸ்த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவா நிதி ஶுஶ்ரும" என்கிறபடி அநேகமாயிரம் வருஷங்கள் விஷ்ணுவை ஆராதித்து தன் பதம் பெற்றானென்றும் தனக்குத் தனமான வேதங்களை யசுரர்கள் கையில் பறிகொடுத்துக் கண்ணிழந்தேன் தனமிழந்தேன் என்று வருந்துமவனாகையாலும், தன்னால் படைக்கப்பட்ட ருத்ரனாலே பரிபவிக்கப்பட்டவனாகையாலும் இவன் ஜகத்துக்குக் காரணமாக வாக மாட்டான். பின்னை இவ்வாக்யத்திற்கு வாச்யன் யார் என்னில்?

நான் என்ற சொல் ப்ரத்யக்ஷமான சரீரத்தைச் சொல்லாமல் சரீரத்தையுடைய ஆத்மாவிற்கு வாசகமாமாப்போலே இச்சரீரத்தையும், ஆத்மாவையும் சரீரமாகவுடைய ஸர்வேஶ்வரனையே சொல்லுகையால் ஹிரண்ய கர்ப்பாதி ஶப்தங்கள் ஹிரண்ய கர்ப்பாதிகளுக்கு, அந்தர்யாமியாயிருக்கும் ஸர்வேஶ்வரனையே சொல்லாநிற்குமாதலின் ஸமஸ்தமான சேதநாசேதனங்களுக் கந்தர்யாமியாயிருக்கு மகார வாச்யனான ஸர்வேஶ்வரனே அவ்வாக்யத்திற்கு வாச்யனாகக் கடவன்.

இதே ரீதியாகவே நஸந்நசாஸச் சிவஏவ கேவல: என்று ருத்ரனைக் காரணமாகச் சொல்லும் ஶ்ருதி வாக்யங்களுக்கும் அர்த்தம் செய்ய ப்ராப்தம். அவ்வாறு செய்யாவிட்டால் ஸ்ருஜ்யத்வ ஸம்ஹார்யத்வ கர்ம வஶ்யத்வங்களையும், அந்த ஶப்தங்களாலேயே சொல்லுகையால் ஜகத் காரணத்வம் சொல்ல இயலாது. ஆதலால் ஹிரண்ய

கர்ப்பாதி ஶப்தங்கள் போலே ஶிவ; ஶம்பு: இத்தியாதி ஶப்தங்களும் நாராயண பரங்களாக ஆகக் கடவன.

அன்றியும், சிவ: என்றால் சுத்தியையுடையவன் என்பது பொருள்; சம்பு: என்றால் மங்கள முடையவன் என்பது பொருள். இவ்வகையாலே அச்சப்தங்கள் அக்குணங்களையுடைய வஸ்துக்களெல்லாவற்றையும், சொல்லா நிற்கும். நாராயண ஶப்தமோ அவ்வாறன்றி ஸர்வ ஜகத்காரண பூதனான ஸர்வேஶ்வர னொருவனுக்கே வாசகமாயிருக்கும். ஆகையால் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய்ப் ப்ரக்ருதி புருஷர்களைக் காட்டிலும் வேறுபட்டவனாய் அவைகளோடு கூடிக்கொண்டிருக்கு மவனாயிருக்கும் நாராயணனே ஜகத் காரண பூதனாகக் கடவன்.

இப்படி ஜகத் காரண பூதனான சர்வேஶ்வரனுக்கு ஸ்வரூப நிரூபக தர்மங்கள் ஸத்யத்வ அநந்தத்வ அமலத்வாதிகள். நிரூபித ஸ்வரூப தர்மங்கள் வாத்ஸல்யாதி குணங்கள்.

இவ்வாறு சித சிச்சரீரனான ஸர்வேஶ்வரன், எவ்வாறு இளமை முதுமை முதலான தன்மைகள் ஶரீரத்தைப் பற்றினவைகளாய் சரீரியான ஆத்மாவை அடையாதோ அவ்வாறே தனக்கு சரீரங்களான சித சித்துக்களை யடையா நின்ற தோஷங்கள் தன்பக்கலில் ஏறப் பெறாதவனாய் விபுவாயிருப்பன்.

விபுத்வமாவது வ்யாபகத்வம் (எல்லா வற்றையும் வ்யாபித்திருத்தல்). அந்த வ்யாபகத்வம் ஸ்வரூபத்தாலும் தர்மபூத ஜ்ஞாநத்தாலும், விக்ரஹத்தாலுமாக மூன்று வகைப்பட்டிருக்கும். ஏவம் பூதனான ஸர்வேஶ்வரன் அநந்தன் என்று சொல்லப்படுகிறான். அநந்தத்வமாவது த்ரிவித பரிச்சேத ரஹிதத்வம் (மூவகையாலும் அளவிட வரியனாயிருத்தல்) அதாவது தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும், அளவிட வரியனாயிருத்தல்.

இவ்வாறு ஜகத் காரண பூதனான ஸர்வேஶ்வரனே ஸர்வ ரக்ஷகனாகிறான்.

ரக்ஷகத்வமாவது சேதனனுக்கு வேண்டாதன ஒழித்தலும் வேண்டுவன அளித்தலுமாம். இவ்வாறு ஸர்வேஶ்வரன ரக்ஷகனாமிடத்தில் "லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேஶ: தேவ்யா காருண்ய ரூபயா — ரக்ஷகஸ் ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே" என்கிறபடி பிராட்டியோடு கூடியே ரக்ஷகனாகிறான். "திருவில்லாத் தேவரைத் தேறேல் மின்தேவு" என்ற திருமழிசைப்பிரான் பாசுரமும் இக்கருத்துக் கொண்டதே.

லக்ஷ்மீபதியான ஸர்வேஶ்வரனுக்கு நிருபித ஸ்வரூப தர்மங்கள் வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யஜ்ஞாநஶக்த்யாதி குணங்கள். இவைகளில் வாத்ஸயமாவது தோஷ போக்யத்வம்.

கன்றின் கண் பசுவிற்குள்ள ப்ரேமை. அதாவது அப்போதீன்ற கன்றினிடத்திலுள்ள வழுக்களை போக்யமாகக் கொண்டு அக்கன்றிற்கு அம்ருதத்தை அளித்து வளர்க்கையும், அதற்குத் தடை செய்புமவர்களை கொம்பாலும் குளம்பாலும் இடித்து எறிகையும்.

தோஷாதர்சித்வம் வத்ஸல்யமென்று அயுக்த ரருளிச் செய்வர் அதாவது ஆஶ்ரிதனுடைய அபராதத்தைப் பாராதே அங்கீகரிக்கைக் கீடான இரக்கம்; இக்குணம் சேதனன் தான் செய்த அபராதத்தைப் பார்த்தகலாமைக் குறுப்பு—

ஸ்வாமித்வம் இச்சேதனன் விமுகனான தசையிலும் விடாதே தன்பேறாக ரக்ஷிக்கைக் குறுப்பான ஸம்பந்த விசேஷம். இக்குணம் நாம் அவனுடைய சொத்தாகையால் நமது கார்யத்தை அவனுடைய கார்யமாகச் செய்வன் என்று நம்புவதற் குறுப்பு:...

ஸௌஶீல்யமாவது பெரியவன் சிறியவனோடு புரையறக் கலக்கை. ஸர்வஸ்மாத்பரனான தன் பெருமையைப் பாராதே மிகவும் தண்ணிய குஹவாநர ஶபர்யாதிகளோடு புரையறக் கலக்கையும் அவ்வாறு கலக்கையைத் தன் பேறாக நினைக்கையும் இவனபேக்ஷையன்றிக்கே யிருக்கக் கலக்கையும்—.

ஸௌலப்யமாவது எவ்வளவேனுமதிஶயமுடையார்க்கு மறிய வரிதா யிருக்குமவன் இடக்கை வலக்கை யறியாத இடைச்சிகள் கட்டவு மடிக்கவுமாம்படி தன்னை ஸகல மனுஜ நயநவிஷயமாக்கிக் கொள்ளுதல்.

இது கிட்டவரியன் என்றிழக்காமைக் குறுப்பு. ஆக இந்நான்கு குணங்களும் ஆஶ்ரயண ஸௌகர்யா பாதங்கள்.

ஆஶ்ரித கார்யா பாதங்கள், ஜ்ஞாந ஶக்தியாதிகள்.

ஜ்ஞாநமாவது, யோவேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்ய க்ஷேண ஸதா ஸ்வத: என்கிறபடி எல்லாவற்றையும் எப்போதும் ஸாக்ஷாத்கரிக்கை. இது ஆஶ்ரிதர்க்குச் செய்யவேண்டிய இஷ்டங்களையும் தவிர்க்கவேண்டிய அநிஷ்டங்களையும் அறிகைக் குறுப்பு.

ஶக்தியாவது அகடித கடநா ஸாமர்த்யம். அதாவது கரியைப் பொன்னுக்கு மாப்போலே மிகவும் ஹேயரான நித்ய ஸம்ஸாரிகளை விண்ணுட்டவர் மூதுவர் என்கிற நித்யஸூரிகளோடு ஒரு கோவையாக ஆக்கவல்ல வல்லமை.

ஜ்ஞாந ஶக்திகள், ப்ராப்தி பூர்த்தி ஸத்யஸங்கல்பத்வாதி குணங்களுக்குமு பலக்ஷணம்.

அத்யமே ஶ்லோகார்த்த விசார꞉

[பத்திராதிபர்]

இந்த அத்யமே ஶ்லோகத்தை ஈட்டில் யானொட்டி யென்னுள் என்கிற பாசுர வ்யாக்யாநத்தில் எடுத்து உதாஹரித்து அதற்கு அர்த்தம் இத்தை முடித்தல் கடத்தல் என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்வர்த்தம் பெருமாள் கடலரசனைச் சரணம்புக்க விடத்து இத்தை முடிப்பேன் அல்லது கடப்பேன் என்று சரணாகதி பண்ணும் போதே நினைப்பது பொருந்ாதென்பதோடு பெருமாள் ஸ்வபாவத்திற்கும் பொருந்தாது. உதாஹரித்த விடத்திற்கும் பொருந்தவில்லையே யென்ற விசாரம் உண்டாயிருந்தாலும் இத்தை முடித்தல் கடத்தல் என்பதை இற்றை முடிதல் கடத்தல் என்றிருந்திருக்க வேண்டுமென்று தோன்றவில்லை. இது விஷயமாக அனேகம் பெரியோர்கள் ஸன்னிதியில் ப்ரஸ்தாபித்தாலும் அவர்களும் பங்க்தியிலுள்ளபடியே நிர்வஹித்துப் போந்தார்கள். இந் நிலைமையில். தற்காலம் உடையவர் உத்ஸவத்தில் அனேக பண்டிதர்களின் முன்னிலையில் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியினால் அநுக்ரஹிக்கப்பட்ட “அத்யமே ஶ்லோகார்த்த தத்வ ரப்திஷ்டா’; என்கிற கிரந்தத்தை பார்க்கும் பாக்யம் பெற்ற சீலமில்லாச் சிறியனை அடியேனும் அளவிலா வாநந்தமடைந்தேன். அது விஷயமாய் ஸ்ரீ பெரும் பூதூரில் அனேகம் வித்வான்கள் முன்னிலையில் ஆங்காங்கு அனேக விதமான சர்ச்சைகள் ஏற்பட, அப்போதே அனேக ரஸிகர்களின் திருவுள்ள முகக்குமாறே அனேக ஸமாதானங்களும் தெரிவித்துக் கொள்ளப்பட்டன. சில மஹாநுபாவர்கள் ஸர்வஜ்ஞர்களான நமது பூர்வாசாரியர்கள் அளிச்செய்த அமுத மொழிகளில் குறைகூறுவது நமக்குப் பணியன்று, அதைப் பொருந்த விடுவதே நமக்குப் பணி, என்று தங்கள் பாண்டித்யத்தின்

பெருமையைக் கொண்டு எதையும் பொருந்த விடுகிறார்கள். இது மிகவும் அழகியதே யாயினும் ஸர்வஜ்ஞர்களான நமது பூர்வாசார்யர்கள் இவ்வாறு நாம் கஷ்டப்பட்டு அர்த்தம் செய்யும்படி அருளிச் செய்திருக்க மாட்டார்கள்; ஆனால் இது எழுதியுள்ளவர்கள் பிழையோ? அல்லது ப்ரூப் பார்த்தவர்கள் பிழையோ என்று கருதி, அதை அனேக காரணங்களைக் கொண்டும், தன்னுடைய நடு நிலைமையுள்ள புத்தியினாலும் திருத்திக்கொள்வதும் உசிதமாகும். அவ்வாறு திருத்தி அது அழகான அர்த்தமாய் அமைந்துவிட்டால் அதை இசைவதே இனிமையாகும். அதற்கு அடியேன் இரண்டு உதாஹரணங்கள் காட்டி இவ்விடத்திலும் அவ்வாறே வந்ததாகக் கொள்ள வேண்டும் என்று நிரூபித்து அடியேனுடைய அபிப்ராயத்தை வெளியிட்டு விரமிக்கின்றேன். இவ்விஷயத்தில் அடியேனுக்குத் தோன்றியதையும் பெரியோர்களின் முன்னிலையில் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்கிற அவாவினால் எழுதுகிறேனேயல்லாமல் ஒருவரிடமுள்ள பக்ஷபாதத்தாலல்ல வென்பதை ஶபத பூர்வகம் ஸவிநயம் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

(1) “அத்யமே மரணம் வாத தரணம் ஸாகரஸ்யவா.” என்கிறதிற்கு நான் முடிவேன் அல்லது கடலைத் தாண்டுவேன் என்பது பொருந்தாது. திரோதாக்தனான பெருமாள் தன் வாயாலே நான் முடிவேன் என்று சொல்வது யுக்தமாகாதாதலின். இந்த கடலரசனை முடிப்பேன் என்று சொல்வதே பெருமாள் ஸ்வபாவத்திற்குப் பொருந்தும்.

(2) இது ஶரணாகதியே யன்று. அதற்கு வேண்டிய வாசகங்களும் கிடையாது பெருமாளும் அதற் கதிகாரியன்று.

(3) விபீஷணாழ்வான் சொன்னதற்காகச் சரணம் புக்கானேயல்லாமல் தனக்கது நினைவன்று. அவன் தாக்ஷண்யத்திற்கு அதைச் செய்து அப்பால் தன்னிஷ்டமான அவனைக் கொன்று தாண்டுவேன் என்ற தன் நினைவையும் ஸங்கல்பித்தான்.

(4) இத்தை முடித்தல் கடத்தல் என்று நம்பிள்ளை யீட்டில் இந்த ஶ்லோகத்தை எடுத்து அர்த்தம் செய்திருப்பதாலும் அத்யமே மரணம் என்று சொல்வது ஒரு வகையாலும் பொருத்தமுடையதன்று.

(1) “அங்குள் யக்ரேண தாந்ஹந்யாமிச்சந்” என்று சொன்னதால் எதிரிகளை முடிப்பேன் என்பது, எப்பொழுதோ ஒரு சமயம்

இச்சித்தால். அல்லாத காலத்து மனதாலும் அதை நினையேன் என்பது ஸ்பஷ்டம்.

"அபஸ்யதோமே வைதேஹீம் ஜீவிதம் நாபிரோசதே—பஸ்யேயம் யதிதாம் காந்தாம் ததஸ்வஸ்திபவேந்மம தயாவிஹீந: க்ருபண: கதம் லக்ஷ்மணதாரயே நஹ்யஹம் ஜீவிதும்ஸக்த: தாம்ருதே ஜநகாத்மஜாம், க்ஷணம் ஸௌம்ய நஜீவேயம் விநாதாமஸிதே க்ஷணம், அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே ஸௌமித்ரேபவதாவிநா" என்று அடிக்கடி பிராட்டியைப் பெற்ருல் தரிப்பேன் இல்லாவிடில் முடிவேன் என்பதே பெருமாளுக்கு வாசகம் ஆதலின் பிராட்டியைப் பெருவிடில் முடிவேன் என்று சொல்வதே யுக்தமாகும்.

ராவணனைக் கூடக் கொல்ல நினையாமல் "யதிவா ராவண ஸ்வயம்" என்றும், கச்சாநுஜாநாமி "என்றும் யாவச் சக்யம் பார்த்தும் அவனிசையாமலிருக்க, பரமோதாரனை ஒருவன் ஊராருண்பதற்கு ஒரூருணி வெட்டியிருந்தால் அதில் நீரருந்தி ஜீவியாதே அதிலே தலைகீழா விழுந்து மடிவாரைப்போலே தயரதன் பெற்ற மரதக மணித்தடத்தில் ராவணாதிகள் தாங்களாவே தலைகீழாக விழுந்து மாண்டார்களே யல்லாமல் பெருமாளுக்குக் கொல்லவேண்டுமென்கிற இச்சையே கிடையாதென்பதே நமது பூர்வாசார்யர் திருவுள்ள மாதலால் கடலரசனை முடிப்பேன் என்று முதலிலேயே சங்கல்பித்தானென்பது பெருமாள் ஸ்வபாவத்திற்கு ஒரு வழியாலும் பொருந்தாது.

(2) ஸ்ரீ வசந பூஷணத்தில் ப்ரபத்திக்கு தேஸகால அதிகாரி நியமம் கிடையாதென்று உபக்ரமித்து அதிகாரி நியமமல்லாமைக்கு த்ருஷ்டாந்தமாக தர்மபுத்ராதிகள் துடங்கி பெருமாளீருகச் சரணம் புகுருகையாலே அதிகாரி நியமில்லை என்று சொல்லி பெருமாளுக்குப் பலம் ஸமுத்ர தாணம் என்று சொல்லியிருப்பதாலும் அதிஸிஸ்யே விதிவத் ப்ரயதோ நியதோமுநி: ஸாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்ட நியமத்துடன் ஸயநித்துக் கொண்டான் என்று சொல்லியிருப்பதாலும் ஸரணாகதி பண்ணினுன் என்பதில் விவாதம் கிடையாது. அவ்வாறு ஸரணாகதி பண்ணுமிடத்துக் கொல்வேன் என்று மனதால் நினைப்பதும் பொருந்துமோ ?

(3) தம்முடைய திருவுள்ளத்திற்கு பாங்காக விபீஷணாழ்வான் சொன்னமையால் அதைத்தான் அநுஷ்டித்தாரேயல்லாமல் விருத்தமாகச் சொன்னுல் அதை அங்கீகரிக்கவே மாட்டார். இவ்

விஷயம் ஸ்ரீ விபீஷணாழ்வானைச் சேர்க்கக் கூடாதென்று மஹாராஜர் முதலான முதலிகள் தடுத்தாலும் தன்னிஷ்டப்படி விபீஷணாழ்வானை அங்கீகரித்த விஷயத்தையும் "ஸ்மாரயே" என்று பிராட்டி சொன்ன போதிலும். "அப்யஹம்ஜீவிதம் ஜஹ்யாம்" என்று ப்ராணன் முதலானவற்றை விட்டாலும் என் ப்ரதிஜ்ஞையை விடேனென்றதையும் கவனித்தால் அநுகூலமானவர்கள் தனக் கபிமதமில்லாத விஷயத்தைச் சொன்னாலும் அதையும் மறுத்து தனக்கிஷ்டமான வற்றையே செய்வான் என்பதும் நன்கு விளங்கும்.

(4) "அத்யமே மரணம் வாத தரணம் ஸாகரஸ்ய" என்ற ச்லோகத்திற்கு அர்த்தமாக ஈட்டுப்பங்க்தி யிருக்கவேண்டுமானுல் இற்றை முடிதல் கடத்தலென்றுதானிருக்க வேண்டும். இத்தை முடித்தல் கடத்தல் என்ற ஈட்டுப் பங்க்திக்குச் சரியாக ச்லோகத்தை அந்வயிக்கும்போது ஸாகஸ்ய மரணம் வாதரணம்வா என்று விபரிதாங்யமும் மத்கர்த்ருக ஸாகரகர்மக மரணம் என்று ஸாப்த போதங்கள் சொல்லியும் அதற்கு அநேக சமாதாநங்களும் சொல்லவேண்டியிருப்பதாலும் சரணாகதிக்குக் கொல்வேன் என்று நினைப்பது பொருந்தாதாகையாலும் அவ்வாறு நம்பிள்ளை சாதித்திருக்க மாட்டார். அது அச்சுப்பிழை யென்று துணிவதே அழகாகும்:

அவ்வாறு அச்சுப்பிழைகள் விழுந்திருப்பதற்கு இரண்டொரு உதாஹரணங்கள் காட்டி நிற்கிறேன். தனி ஶ்லோக வ்யாக்யான க்ரந்தமொன்று, பண்டிதர்களால் பராமர்சிக்கப் பெற்று, ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்தமுத்ராபக சபையாரால் தெலுங்குலிபியில் அச்சிடப்பட்டுளது. அதில் "நிவேதயத மாம்க்ஷிப்ரம்" என்கிற ஶ்லோகார்த்தத்தில் 189ஆம் பக்கத்தில் 4வது அர்த்தமாக எழுதியுள்ள பங்க்திகள் வருமாறு. [க்ஷிப்ரம்] 'க்ஷிப்ரம் ராமாய ஸம்ஸத்வம் ஸீதாம் ஹரதி ராவண:' என்று பிராட்டி சொன்னபோதே தேவதைகளறியாமையாலே கண்டீர்களோ ரஜநீசரன் வஸத்திலே யகப்பட்டாள். அப்படியே நானும் மனோரஜநீசரன் வஸத்திலகப்படுவதற்கு முன்னே யறிவியுங்கோள்" என்று. இதில் தேவதைகள் அறியாமையாலே என்பது சரியானபடி அர்த்தமாகாமல் விபரீதார்த்தத்தையே காட்டுகிறது. அப்பங்க்தி, தேவதைகள் அறிவியாமையாலே என்று திருத்திப் படிக்கப்பட்டால் எவ்வளவு அழகாக அந்வயிக்கின்றதென்பதை அறிஞர்கள் அறியாமற் போகார்கள். இது நிற்கமேற்படிச் சபையாரால் தெலுங்குலிபியில் அச்சிடப்பட்ட திருப்பாவை

ஆறாயிரப்படி வ்யாக்யானத்தில் 'மாரிமலை முழஞ்சில்' என்கிற பாசுரத்தை வ்யாக்யாநிக்குமிடத்தில் 226வது பக்கத்தில் "ஸுகஸுப்தி பண்ணு நிற்கச் செய்தே எதிரிகள் தபிக்கும்படி கிடக்கையாலே உணர்த்திக் கொள்ளும் கார்யத்திலும் உறக்கமே நன்றாயிருக்க என்றிய உணர்த்தினோம் என்னும்படி கொடுத்தார் துடிக்கும்படியிறே இவனுடைய உறக்கமிருப்பது" என்று ஒரு பங்க்தி உள்ளது. இது ஸர்வ ஜ்ஞான அழகிய மணவாளப் பெருமாள் நயினாருளிச் செய்தது. இதில், கொடுத்தார் துடிக்கும்படியிறே என்றவிடத்து யாதொரு அர்த்தமும் தோன்றாமல் இரண்டு மூன்று நாள் திகைத்து, 'துடை கொடுத்தார் துடிக்கும்படி' என்று திருத்தினேனானாலும் மனதிற்குக் கொஞ்சம் சந்தேகமாகவே யிருந்தது: அப்பால் ஒரு சமயம் தமிழ் லிபியில் ஆறாயிரப்படி வ்யாக்யாநத்தில் "மடி கொடுத்தார் துடிக்கும்படி" என்று இருந்ததைப் பார்த்து பரமானந்தமடைந்தேன். இது அழகிய மணவாளப் பெருமாள் நயினார் சாதித்ததா? அல்லது அச்சிடும் காலத்தில் ஏற்பட்ட தவறா? என்று ஆலோசித்தால் அச்சிடுங் காலத்தில் ஏற்பட்ட தவறென்றே கொள்ள வேண்டும். அவ்வாறே இங்கும் "இற்றை முடிதல் கடத்தல்" என்று திருத்தி அனுக்ரஹித்த அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் அபிப்ராயமே அழகியதாக அடியேனுடைய சிற்றறிவிற்குப் புலனாகின்றது. இதற்குமேல் பெரியோர்கள் திருவுள்ளம்.

பகவந் நாமோச்சாரண ப்ரபாவம்

(திருமழிசை கோயில் கந்தாடை அப்பனய்யன் ராமானுஜாசார் ஸ்வாமி.)

ஸ்ரீய: பதியான ஸர்வேஸ்வரனுடைய ஜாயமாந கால கடாக்ஷ விசேஷத்தாலே, தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷமான ஜீவாத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவங்களையும், அந்த ஜீவாத்மாவைக் காட்டிலும் விலக்ஷணமான பரமாத்மாவின் ஸ்வரூப ஸ்பாவங்களையும் உள்ளபடி யறிந்தவனான ஒரு சேதனன், காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யங்களாகிற பரிகரங்களுடன் உலகத்தைத் தன் வசமாக்கிக்கொண்டு திரிகின்ற கலியினுடைய க்ரௌர்யத்தினாலுண்டாகும் பயந்தீர்ந்து, பரமாத்மாவை யடைவதற்கு எளிதான உபாயம் பகவந், நாமோச்சாரணமே யாகும். கர்ம ஜ்ஞான பக்திகள், 'வசேஹி

யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா,' என்றிருப்பதனால், இந்திரியங்களை நிக்ரஹித்தாலொழிய நிஷ்பந்நமாகாமையாலும், ப்ரபத்தியோ, "ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசி விஸ்வாஸங்களை யுடையனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நசித்தல் ஒழிய நடுவில் நிலையில்லை" என்று பட்டருக்கு எம்பார் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தியின்படி, உபாயாந்தரங்களை விட்டு எம்பெருமானைப் பற்றுகை யாகையாலே, இவ்வர்த்தத்தில் மஹா விஸ்வாஸமின்றிக் கார்ய கரமல்லாமையாலும், இவைகள் அருமைபட்டிருக்கும். ஆனால், பகவந் நாமோச்சாரண மாத்திரத்தில் அந்தக்கலியின் கொடுமையாலேற்படும் பயம் நீங்கி எம்பெருமானை யடையலாம். இதற்கு ப்ரமாணம் யாதெனில், (ஸ்ருதி—கலி ஸந்தாரணோபநிஷத்) "த்வாபராந்தே நாரதோ ப்ரஹ்மாணம் ஜகாம, பகவந் காம்பர்யடந் கலிம் ஸந்தரேயமிதி; ஸஹோவாச ப்ரஹ்மா, 'ஸாது ப்ருஷ்டோஸ்மி, ஸர்வஸ்ருதிரஹஸ்யம், கோப்யம் | தச்ச்ருணு | யேந கலி ஸம்ஸாரம் தரிஷ்யஸி | பகவத ஆதிபுருஷஸ்ய நாராயணஸ்ய நாமோச்சாரண மாத்ரேண நிர்த்தூதகலிர் பவிஷ்யதி |' நாரத: புந: பப்ரச்சதம் 'நாமகிமிதி?' ஸஹோவாச ஹிரண்ய கர்ப: || 'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே | ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே || இதி ஷோடசகம் நாம்நாம் கலிகல்மஷ நாசநம் | நாத: பரதரோ பாய: ஸர்வ வேதேஷு த்ருஸ்யதே |' இதி." இதற்கு அர்த்தம்: நாரதர், த்வாபரயுகத்தின் முடிவில், சதுர்முகனை யடைந்து, 'பகவந், பூமியில் ஸஞ்சரிப்பவன் எவ்வாறு கலியின் கொடுமையை தாண்டக் கடவன்', என்று கேட்க, ப்ரஹ்மா சொல்லுகிறார். ஸர்வ ஸ்ருதிகளுடைய ரஹஸ்யார்த்தமாய், கலிதோஷத்தைப் போக்குவதாய், கோப்யமான விஷயத்தை நீ கேட்டது மிகவும் நன்று. கலியினால் ஏற்படும் படியான ஸம்ஸார துக்கத்தை எதனால் தாண்டுவையோ அதைச் சொல்லுகிறேன், கேள். ஷாட்குண்ய பரிபூர்ணனாய் ஆதி புருஷனான நாராயணனுடைய நாமோச்சாரண மாத்திரத்தினால், கலியின் கொடுமை தூரத்தில் தள்ளப்படும்' என்ன நாரதர் இதைக் கேட்டு மீண்டும் ப்ரஹ்மாவை நோக்கி, அத்திருநாமம் யாதென்று ப்ரஸ்நம்பண்ண, ஹிரண்ய கர்பன், 'ஹரே, ராம என்று தொடங்கி எட்டு திருநாமங்களும், ஹரே, க்ருஷ்ண என்று தொடங்கி எட்டுத் திருநாமங்களும் ஆக பதினாறு திருநாமங்கள் கலிதோஷத்தை நாசப்படுத்த வல்

ல்ன. இதற்கு மேற்பட்ட கலிதோஷத்தைப் போக்க வல்லதான உபாயம் ஸர்வ வேதங்களிலும் காணப்படவில்லை' என்றுரைத்தார்.

(புராணம்—ஸ்ரீ விஷ்ணு புராணம்) சில மஹர்ஷிகள் தர்ம ஸம்ஶயத்தை நீக்கிக் கொள்வதற்காக வ்யாஸ பகவானிடம் செல்ல, அவர் அப்பொழுது கங்கையில் நீராடிக்கொண்டிருக்க, ரிஷிகள் கரைமேல் நின்று கொண்டிருந்தனர். 'ஶூத்ரஸ் ஸாது: கலிஸ் ஸாது:' என்று சொல்லிக்கொண்டு ஸ்நானஞ் செய்த வ்யாஸபகவான் கரையேறியவுடன், மஹர்ஷிகள் கலிஸ்ஸாது: என்று கூறியதன் காரணத்தை வினவ, வ்யாஸர் 'த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞை: த்ரேதாயாம் த்வாபரே ச்சயந் | யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேஶவம்||' "க்ருத யுகத்தில் த்யானத்தாலும், இங்கு த்யானமாவது 'தஸ்மாத் ந்யாஸ மேஷாம் தபஸாம் அதிரிக்த மாஹு:' என்கிறபடியே பகவத் பாதார விந்தத்தில் ஆத்ம ஸமர்ப்பணமாகிற ஶரணாகதி. த்ரேதா யுகத்தில் யாகங்களாலும், த்வாபர யுகத்தில் அர்ச்சனைகளாலும் அநிஷ்ட நிவ்ருத்தி முதலான எந்தப் பலங்களைச் சேதனன் அடைகின்றானோ, அந்தப் பலங்களைக் கலியுகத்தில் பகவந் நாமோச்சாரண மாத்ரத்தாலே அடைகிறான்' என்று கூறினர். 'ஹரேர் நாமைவ நாமைவ நாமைவபவபேஷஜம் | கலௌ நாஸ்த்யைவ நாஸ்த்யைவ நாஸ்த்யைவ கதிரந்யதா||' கலியுகத்தில், ப்ரக்ருதி ஸம்பந்தமாகிற ஸம்ஸார வியாதியைத் தீர்க்கும் நன்மருந்து பகவந் நாமோச்சாரணமே யாகும். வேறு கதியே யில்லை. (பூர்வார்த்தத்தில் நாம என்று மூன்றுதரமும் உத்தரார்த்தத்தில் நாஸ்தி என்று மூன்றுதரமும் கூறியிருப்பதால் பாபத்தைப். போக்கி ஸத்கதியைக் கொடுப்பதில் திருநாம ஸங்கீர்த்தனத்துக்கு உண்டாகிய ப்ரபாவத்தின் தார்ட்யமும், வேறு கதியில்லை யென்பதன் நிர்ணயமும் காட்டப்பட்டன. மேலும், மஹாபாரதத்தில், ஸ்ரீ க்ருஷ்ண பகவானால் 'தஸ்மிந் நஸ்தமிதே பீஷ்மே கௌரவாணாம் துர்ந்தரே | ஜ்ஞாநாந்யல்பீ பவிஷ்யந்தி தஸ்மாத் ஸஞ்சோதயாம்யஹம்||' பீஷ்மர் இவ்வுலகத்திலிருந்து மறைந்த பிறகு ஜ்ஞாநங்கள் குறைந்துவிடும். ஆகையால் நீ அவரிடம் சென்று தர்மங்களைக் கேட்கவும், என்று தூண்டப்பட்ட தர்ம புத்திரர், பீஷ்மரிடம் சில தர்மங்களைக் கேட்டுப் பின்பு, ஸ்ரீ ஸஹஸ்ர நாமாத்யாயத்தில், 'கிஞ்ஜபந் முச்யதே ஜந்து: ஜந்ம ஸம்ஸாரபந்தநாத்' ப்ரக்ருதி ஸம்பந்தமாகிற ஸம்ஸாரத்திலிருந்து எந்த மந்த்ரத்தை ஜபித்து, இந்தச் சேதனன் ஜன்மமாகிற

ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவன் என்று கேட்க, பீஷ்மர், 'ஸ்துவந் நாம ஸஹஸ்ரேண புருஷ:, என்று தொடங்கி 'ஸர்வதுக் காதிகோ பவேத்' என்னுமளவும் பகவந்நாம ஸஹஸ்ரத்தினால் ஸ்துதிக்கும் புருஷன் எல்லா துக்கங்களிலிருந்து நீங்குகிறான் என்று கூறினர். ஸஹஸ்ர நாமாத்யாயத்தின் முடிவிலும் 'ஸங்கீர்த்ய நாராயண ஶப்தமாத்ரம் விமுக்த துக்காஸ்ஸுகினோ பவந்தி', நாராயண ஶப்தோச்சாரண மாத்ரத்தாலேயே சேதனர்கள் ஸர்வ துக்கத்தினின்றும் விடுபட்டவராவர். ஸுகிகளாகவும் ஆவர் என்றும் கூறினர்.

ஆக இதில், ஶ்ருதி புராண ப்ரமாணங்கள் எழுதப்பட்டன. அடுத்த பத்திரிகையில், ஆழ்வார்களுடைய ஸ்ரீ ஸூக்திகளிலிருந்து ப்ரமாணங்கள் எழுதப்படும்.

ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில் நாதமுனிகளிடம் தேசிகன் ஈடுபாடு

[ஏ. வி. கோபாலாசாரியார், அட்வகேட், பத்திராதியர் ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷிணீ]

(120-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

ஈஶ்வரன்" "அவர் பூர்வ ரெல்லோருக்கும் குரு, அவர் அநாதி" "அவருக்கு நிரதிஶயமான ஸார்வஜ்ஞ்ய பீஜம்" என்று இப்படி அவருடைய ஸர்வக்ஞத்வத்தையும், எல்லோருக்கும் ஞான குருவா யிருப்பதையும், துக்கம் முதலியது அற்றவரா யிருப்பதையும் பேசுகிறார். இவையெல்லாம் யோகிகள் ரஸிக்கும் குணம். பெருமாள் யோகீஶ்வரர். அவர்க்ருபையால் அவரைப்போல யோகியாகி அவர் ஸாதர்ம்யத்தையடைய வேண்டும். நாதமுனிகள் மங்கள ஶ்லோகத்தில் 'ப்ரணம்ய' என்ற பதமும், 'ஹரி:' என்ற பதமும்' ரஸகனமானவை. ப்ரணவ ஜபம் யோகிகள் அப்பியாஸம் செய்வது. ப்ரகர்ஷேண நூயதே அநேநேதி ப்ரணவ: என்பர். ப்ரணவம் தான் பெருமாள் திருவடிகளில் ஈடுபட ஸர்வோத்க்ருஷ்டமான ஸ்துதி. நமக்கு உயிரான ஶேஷத்வத்தை நினைத்துக் கொண்டு இப்ரவணமந்திரத்தை ஜபிப்பது யோகாப்யாஸம். 'ப்ரணம்ய' என்கையில் ப்ரணவோச்சாரண புரஸ்ஸரமாகத் துதித்தும், நமஸ்கரித்தும், என்று திரு

வுள்ளமிருக்கலாம். ப்ரஹ்மஸூத்ரங்களால் தத்வம் தெளிய ப்ரஹ்ம ஜிக்ஞாஸை செய்ததற்கெல்லாம் முக்யப்ரதிபாத்தியமான பொருள் மஹா யோகியான நாராயணன் ஹரி ஒருவரே' என்று பொருளுள்ள வ்யாஸர்ஶ்லோகத்தை ஶ்ருதப்ரகாஶிகையில் ஸர்வவ்யாக்யாநாதி கரணத்தில் உதாஹரிக்கப்பட்டது. 'தத்வம் ஜிக்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோ முகை: தத்வ மேகோ மஹாயோகீ ஹரிர் நாராயண : பர: என்று அந்தஶ்லோகம். யோகியாகிய இவர் ஹரிஶப்தத்தை ப்ரயோகித்தால் அந்த ஶ்லோகத்தை நமக்கு நினைவூட்டி மஹா யோகியாகிய ஹரியைத் தாம் பணிவதாயும், அந்த ஹரியே பரதத்வமென்றும் அந்ததத்வத்தையே ஶாரீரக நய ஸூத்ரங்கள் விளக்குகின்றன வென்றும், அந்த ஹரியின் கடாக்ஷத்தால் பரமப்ராப்யதத்வமாகிய அவரைப் ப்ரமாணங்களால் அறியும் மார்க்கத்தை ந்யாயதத்வத்தால் விளக்குவதாக ஸாதிக்கிறார். இவர் ஸாக்ஷாத்கரித்து உலகத்திற்கு ப்ரகாசப் படுத்தின திவ்வியப்ரபந்தங்கள் இவருடைய யோகாப்யாஸத்திற்கும், யோகானுபவத்திற்கும் மிகவும் உபகாரகமாயிற்று. இவர் யோகத்தைக் கொண்டும், பரமயோகிகளின் அனுபவங்களான திவ்யப்ரபந்தங்களைக் கொண்டும் வேதத்தின் உட்பொருளாகிய பரப்ரஹ்மத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகவும், ஸ்பஷ்டமாகவும் ஸாக்ஷாத்கரித்தாரென்பதை "யஸ்ய நைகமிகம் தத்வம் ஹஸ்தாமலகதாம் கதம்" என்று இந்தஸப்ததியின் 5 வது ஶ்லோகத்தில் ஸாதிக்கப்பட்டது. நைகமிகம்தத்வம் என்பது வேதமாத்திரத்தால் ஸித்திக்கும் தத்வங்களைச் சொல்லும். ஜீவாத்மஸ்வரூபத்தின் தத்வமும் ஶ்ருதியொன்றால் தான் ஸித்திக்குமென்று பெரியோர் பணிப்பர் என்று ஸித்தித்ரயத்தில் ஸ்ரீ ஆளவந்தார் அருளிச் செய்தருளினார். அசித்தத்வமும், ப்ரஹ்மாத்மகமான ப்ரஹ்மஶரீர மென்பதும் ப்ரத்யக்ஷத்தால் ஸித்திக்கமாட்டாது. நிகமம் என்னும் வேதமொன்றால் தான் ஸித்திக்கும். உலகத்தில் எப்பொருளை ப்ரத்யக்ஷீகரித்தாலும், அது பகவத் விபூதி யென்றும், பகவத்ரூபமென்றுமே யோகிகள் ஸாக்ஷாத்கரிப்பர்கள். 'யோகியல்லாதார் ஜகத்தை ஜகத்ரூபமாகப்பார்ப்பர், என்றார் ஸ்ரீபராஶரர். ப்ரத்யக்ஷகோசரமான சிதசின்மய ப்ரபஞ்சம் யாருடையதென்று வேதமோதுகிறதோ, மற்றொன்றை யெண்ணாதே அவரையே த்யாநிப்பதால் அந்த விபூதியோடு கூட எவர் ப்ரத்யக்ஷானுபவ விஷயமாகிறாரோ, எவர்ஒருவ

(அத்விதீய) ராய்யுகபத் (ஒரேக்ஷணத்தில், ப்ரதிக்ஷணமும் எக்காலமும்) பிறருக்கு அதீனமல்லாமல் தன்னாலேயே ஸர்வத்தை (யாவத்தையும்) ஸாக்ஷாத்கரித்துக் கொண்டே யிருக்கிறாரோ, ஆஶ்ரிதரை மோக்ஷணம் செய்யும் வ்யாபாரத்தில் மிகக் கைதேர்ந்தவரான அந்த ப்ராக்ஞரை நாம் ப்ரத்யக்ஷீகரிக்க ஆசைப்படுவோமாக என்று ப்ரத்யக்ஷாத்யாயத்தில் ஸ்ரீதேஶிகன் ஸாதித்த முடிவு ஶ்லோகம். அங்கே மூன்றுமடியில் ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச் செய்த ந்யாய தத்வமங்கள ஶ்லோகத்திலுள்ள ஈஶ்வர லக்ஷணத்தைக் கைப் பற்றினார். நாத முனிகள் விஷயமான இந்த ஸப்ததிஶ்லோகத்தில் "முனி நாதனை நாதனல்நான் நாதவானாவேனாக" என்று முன்பாதி "ஶாந்தி: ஶாந்தி:" ஶாந்தி: என்பது போல மூன்றுதரம் நாத நாமமாகிய நாத ஶப்தத்தை ப்ரயோகிக்கிறார். இந்த யோகியின் திருநாமத்தின் யோகப் பொருளும் க்ராஹ்யமே' ஒரு தடவை ரூடமான திருநாமத்தை முதல் 'நாதஶப்தத்தாலும் இருதடவை பின்பு யோகப் பொருளாகவும் ப்ரயோகிக்கிறார். ஸ்ரீபட்டரும் ஸ்தவத்தில் நாத முனிகளை யோகியாவே அனுபவித்தார். "நௌமி நாயமுநம் நாம ஜீமூதம் ஹ்ருஷ்வஹ" என்று வர்ணித்தார். ஸ்தவத்தின் வ்யாக்யானத்தில் விஸ்தாரமாய் விவரித்துள்ளோம். "முனியாகிய நாதன் (நாத முனி) என்ற திருநாமமுடைய ஒரு மேகம்" என்றார். பக்திரஸத்தை மழை போல் வர்ஷித்துக் கொண்டிருந்த திவ்யப்ரபந்தங்கள் மறைந்து போகவே அவக்ரஹ மென்றும் துர்பிக்ஷமே நாட்டைத் தஹித்துக் கொண்டிருந்தது. பக்திப் பஞ்சமே சிர காலமிருந்து விட்டது. இந்த நாத முனி யென்னும் மேகம் ஸமுத்ரபானம் பண்ணிய அகஸ்த்ய முனிவரைப் போலத் தமிழ் வேதசாகரத்தை 'நஶேஷ' யென்று பணிந்து முழுவதும் பானம் பண்ணி (பருகிப் பருகி) நமக்குப் பேரின்ப வர்ஷமாய் வர்ஷித்தார். ஸமாதி என்னும் பக்தி ரஸத்தை யோக ஸூத்ரத்தில் "தர்மமேகம்" என்று பெயரிட்டுள்ளார். ப்ரஹ்மானுபவத்தை மேகம் போல் வர்ஷிப்பது ஸமாதி. ஸ்ரீபட்டர் ஶ்லோகத்தில் முனி ஶப்தத்தாலும், யோகசாஸ்த்ரப்படி ஸமாதியைச் சொல்லும் ஜீமூதஶப்தத்தாலும், இவர் மஹா யோகி என்பதையும் நமக்கு ப்ரபந்தாம்ருதத்தை வர்ஷித்ததையும் காட்டினார். 'மேகம்' 'ஸமாதி' என்றே இவரைச் சொல்லவேணும் என்று திருவுள்ளம் இவ் வபிப்பிராயத்தை ஸ்ரீதேஶிகன் இங்கே விளக்குகிறார். நாத

முனி என்று ஸாதித்ததை முனி நாதன் என்றால், யோகிகளுக்கு இவர் நாதன் என்று பொருளாயிற்று. இவருக்கு நாதன் என்று திரு நாமம். நாத ஶப்தம் ஸஸம்பந்திகம். யாருக்கு நாதன் என்று அபேக்ஷை யுண்டாகவே முனிகளுக்கு நாதன் என்று பதில் கூறுகிறார். 'முனிகளுக்கு நாதன் எனக்கு நாதனாக வேண்டும்' என்று மேலே கூறுகிறார். அவரனுக்ரஹத்தால் தாமும் ப்ரஹ்மா பரோக்ஷானுபவ முள்ள யோகியாக வேண்டுமென்று மனோரதம். "த்ரைலோக்யமும் எந்த ராமனென்றும் நாதனால் நாதவத்தரமாகுமோ" என்ற மஹரிஷி யனுபவத்தை ஒருவாறு ஒட்டியது இவ் வனுபவமும். அதிக அதிஶயத்தைக் காட்டும் 'தரப்' என்னும் விகுதியை இங்கே ப்ரயோகிக்கா விடினும், நாதவான் என்னும் மதுப்பால் அதிஶயத்தைக் காட்டுவதாகக் கொள்ளலாம். "முனி நாதன்" என்பதைப் பின் பாதியில் "உள்ளங்கை நெல்லிக்கனி போல வேதத்தின் உட்பொருளைத் தெளியக் கண்டவர்" என்று ஸமர்த்திக்கிறார். ஸர்வாந்தரமான, உட்பொருளான ஆத்மாவும், உள்ளங்கையில் இது என்று தெளியக்காணும் படியாகச் செய்வது பகவதனுக்ரஹமடியாக வரும் யோகானுபவம். "தமேதம் வஶ்ந் ஜேஷிவட்ராஶ் ஶேஷஃ" என்றது உபநிஷத்து. அது என்று வேதம் சொல்லும் பரோக்ஷப் பொருளான ப்ரஹ்மத்தை 'இது' என்று கண்டார் ரிஷிவாமதேவர்' என்று உபநிஷத்து. இப்படிப் பார்த்ததால் தான் அவரை ரிஷியென்று சொல்லலாமென்று ஶ்ருதியின்கருத்து. வஶ்ந் ருஷிஃ. இக்கருத்தை ஸ்ரீதேசிகன் அபீதிஸ்தவத்தின் தொடக்கத்தில் தமேதம் என்னும் அஷ்டாங்கயோகமுறையாக ஆபாத சூடம் ஸ்ரீரங்கநாதனை 'நம்பாண நாதன்' அனுபவத்தையொட்டி அனுபவித்த த்யானஸோபானத்தில் அந்தர் ஜோதிஸ்ஸானது, ரங்கமத்யத்தில் யோகியல்லாத நம் போன்றவருக்கும் ஸுலபமாக (ஶ்ரூஶ்தே) காணப்படுகிறது 'என்றும் விளக்கினார். அதில் 'நமநாயஸ்ய ஜம்வாம்' என்று "வாசாம்ஹோஜம் ஸ்ரூமஃ" என்று தொடங்கிய அகண்டானுபவ ஶ்லோகத்தில் நாத முனிகள் திருநாமத்தையும் ஒருவாறு ஶப்தத்தால் கீர்த்தனம் செய்தார். ந்யாய தத்வக்ரந்தம் முழுவதும் ஸ்ரீதேஶிகனுக்கு அனுபவ விஷயமாயிருந்ததால், நாத முனிகள் தாம் அனுபவித்தவாறே பேசினார் "என்பதை அந்த க்ரந்தத்திலிருந்து நிச்சயித்துக் கொண்டதாக நாம் கொள்ள வேண்டும். யதிராஜஸப்ததியில் நாத முனிகளுடைய

யோகானுபவப் பெருமையையும் க்ரந்த முகமாக உபகரித்ததின் பெருமையையும் வர்ணிப்பதற்குக் காரண முண்டு. யோகியாகிய நாதமுனி அதீந்த்ரியமான உட்பொருளைத்தாம் உள்ளங்கை நெல்லிக் கனி போல் (ஹஸ்தாமலகமாக) கண்டார். தம்முடைய தெளிவான ந்யாயதத்வ க்ரந்தத்தால் அந்த தத்வத்தை உள்ளங்கை நெல்லிக் கனி போலப் பிறர்க்கும் விளக்கினார்.

ஸ்ரீ:

ஆழ்வா ரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அத்யமே ச்லோகார்த்த நிரூபணம்.

ஸ்ரீராமாயணத்தில் ஸமுத்ர சரணாகதி ப்ரகரணத்திலுள்ள அத்யமே மரணம்வா * என்கிற ச்லோகார்த்த விசாரபரமாக ஸ்ரீ அண்ணாஸ்வாமி தத்வ ப்ரதிஷ்டா க்ரந்தத்தை வெளியிட்டருளின பிறகு ஸ்ரீ பெரும்பூதூர் ஸ்வாமி யுத்ஸவத்தில் இரண்டொரு பண்டிதர்கள் செய்தருளின வாதங்களையும், பீதாம்பர பண்டிதரென்கிற ஒருவர் இரண்டு மூன்று சிறு பக்கங்களில் வெளியிட்டிருக்கின்ற விஷயங்களையும் பற்றி உண்மை தெரிந்துகொள்ள வேணுமென்று விருப்பங்கொண்ட வித்யார்த்திகளான சிலர் நாம் ஸ்ரீ அண்ணாஸ்வாமியைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டதன் மேல், ஸ்ரீ காஞ்சீ வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலையில் ஸ்வாமி மிக விரிவாக உபந்யஸித்தருளின விஷயங்கள் உலக மறியத்தக்கவையாதலால், ஸ்வாமி ஸந்நிதியில் கேட்ட விஷயங்களையே பெரும்பாலும் விவரித்து இது எழுதப்படுகின்றது.

ஸ்ரீ ஸ்வாமியின் தத்வ ப்ரதிஷ்டா க்ரந்தத்தில், ஸாமர்த்ஸ்ய தாரணம்வா, ஶேஶரணம்வா என்று அந்வயிப்பது தவிர வேறு வகையான அந்வயம் (அதாவது—ஶே தாரணம்வா, ஸாமர்த்ஸ்ய ஶரணம்வா என்கிற அந்வயம்) ஸங்கத மன்று என்பதை இரண்டு வழிகளாலே நிரூபித்திருக்கக் காண்கிறோம். (1) அப்படிப்பட்ட அந்வயம் கொள்வது ப்ரகரணத்திற்குப் பொருந்தாது என்றும், (2) சாஸ்த்ர ரீதியிலேயும் அப்படிப்பட்ட அந்வயம் பொருந்த மாட்டாது—என்றும் இரண்டு வழிகளை ஸ்வாமி கைப்பற்றி யிருக்கிறார். இதன்மேல் விஷயம் சொல்ல வருமவர்கள், மேற்படி இரண்டு

வழிகளுள் முதல்வழிக்கு முக்கியமாக ஸமாதானம் சொல்ல வேண்டியதை விட்டிட்டு இரண்டாவது வழிக்கு ஸமாதானம் சொல்லுகிற முறையிலே தார்க்கவாதிகளாகிப் பிரபல ஆக்ஷேபங்களைப் பேசுகிறார்கள். ஒ_தரணம்ஂவா, ஸாமரஸூ) ஶரணம்ஂவா என்கிற அந்வயம் ஏன் சாஸ்த்ரீய ரீதிக்குப் பொருந்தாது என்று வாதங்களை விஸ்தரிக்கிறார்கள்.

இவ்விஷயத்தில் உபயவாதிகளினுடையவும் சாஸ்த்ரார்த்த விசாரங்களைத் தெரிந்துகொள்ள வல்லவர்கள் மிகச் சிலரேயாவர். இரு கக்ஷிகளிலுமுள்ள தர்க்க வாதங்களை எம்மைப் போன்ற ஸாமாந்ய ஞானிகள் கேட்கும்போது மனம் குழம்பி நிற்பர்களே யல்லது, ' இது யுக்தம், அது அயுக்தம் ' என்று ஒரு வாதத்தையே நிச்சயமாகக் கைக்கொள்ளவல்ல அதிகாரிகள் கிடைப்பதரிது. ஆனா லும் இங்கு நாம் உபய கக்ஷிகளின் தர்க்க வாதங்களையும் எளிமைப் படுத்தி ஸாரமாகக் காட்ட நினைக்கிறோம். அதற்கு அவதாரிகை யாகச் சிறியதோர் விண்ணப்பம் செய்வோம்.

தர்க்க வாதம் என்பது தங்கக் கம்பி போன்றது. எப்படியும் இழுக்கக் கூடியதே அது. ஒரு அர்த்தம் மிகவும் ஸ்வாரஸ்யமானது என்று தேறிவிட்டால் அதற்கு சாஸ்த்ராநுக்ரஹம் சிறிது குறைவாக இருந்தாலும் வருந்தியாவது அதனைப் பொருந்தச் செய்துவிடலாம் என்றும், ஸ்வாரஸ்யமற்றதான அர்த்தத்திற்கு எவ்வளவு சாஸ்த்ரா நுக்ரஹம் ஏற்பட்டாலும் அது உபேக்ஷிக்கத் தக்கதே என்றும் பெரியோர்களின் திருவுள்ளத்தை க்ரந்தங்களில் நாம் காண்கிறோம்.

ஔபசாரிகத்வம் லாக்ஷணிகத்வம்-இத்யாதி விஷயங்கள் சாஸ்த்ர ஸம்மதங்களாக இருப்பதானது ஸ்வாரஸ்யம் மிக்க அர்த்த விசேஷங்களில் ஏதேனுமொருபடியாலே சாஸ்த்ராநுக்ரஹத்தைப் பெறுவிப்பதற்காகவே யல்லது வேறில்லை. ஆகவே முந்துற முன் னம் நிர்ணயிக்கப்பட வேண்டுவது அர்த்தஸ்வாரஸ்யம். கூடஉ_ாக வ்ரகரணாஜ்ஓஂமாஉளவிகூ)ாஉயஉ_நிணுயஃ இத்யாதிப்படியே ப்ரகரணாதிகளுக்குச் சேர்ந்ததான அர்த்தம் இதுதான்—என்று ஒரு அர்த்தம் முன்பே நிர்ணயிக்கப்பட்டு விடுமாகில், அதில் சாஸ்த்ரா நுக்ரஹம் குறைவு என்று ஒருவர் எவ்வளவு நிரூபித்தாலும் அது பாராட்டத் தகுந்ததேயன்று. அப்படிப்பட்ட பொருளில் சாஸ்த்ரா நுக்ரஹ முண்டு என்று ஒருவர் நிரூபிக்கப் பரிச்ரமாதிஶயம் கொள்ள வேண்டுவதும் அநாவச்யகமேயாகும். விவேகிகளின்

மனத்திற் பதியும்படி இதனைச் சிறிது நிரூபித்துக் காட்டுகிறேன். ப்ராக்ருத ச்லோகத்தில் ஸாமர_தரண மென்பதை ஒரு கல்பமாக வும் (தஉஹாவெ) ஒ ஶரண மென்பதை ஒரு கல்பமாகவும் வைத்து அந்வயிக்கலாமேயல்லது, ஸாமர_தரணத்தையும் ஸாமர ஶரணத் தையும் விகல்ப கோடிகளாக வைத்து அந்வயிக்க முடியாதென்றும், அப்படி அந்வயிப்பதற்கு சாஸ்த்ரம் இடம் கொடாதென்றும் அண்ணாஸ்வாமி நிரூபித்தார். இதன் கருத்து என்னவென்றால், கடலைக் கடத்தலென்கிற காரியமும் கடலை முடித்தலென்கிற காரிய மும் வெவ்வேறாகவே யிருந்தாலும் ஒன்று உத்தேச்யமான பலனாக வும் மற்றொன்று அதற்குறுப்பான உபாயமாகவுமிருத்தலால் இவற் றை விகல்ப கோடிகளாக வைத்துப் பேசுவது எங்கும் கிடையாது. 'இந்த பலனாவது கிடைக்கட்டும், அந்த பலனாவது எனக்கு கிடைக்கட்டும்' என்று இரண்டு பலன்களை விகல்பிப்பதுண்டு. 'உத்தேச்யமான பலனை இந்த உபாயத்தாலேயாவது பெறக்கட வேன், அந்த உபாயத்தாலேயாவது பெறக்கடவேன் என்று சொல்லி இரண்டு உபாயங்களை விகல்பிப்பதுமுண்டு. ஆக இப்புடைகளிலே யல்லாமல் பலனை ஒரு கோடியாகவும் அதன் உபாயத்தை மற்றொரு கோடியாகவும் வைத்து விகல்பிப்பது இதுவரையில் அவதரித்திருக் கின்ற ஒரு சாஸ்த்ரத்திலும் ஒரு புஸ்தகத்திலும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை.

ஆதலால் பிறர் கூறுகிறபடி அந்வயம் அஸம்பாவிதம்—என்பது அண்ணாஸ்வாமியின் பலபல வாதங்களில் ஒன்று.

இது ஶாஸ்த்ரீயமான விகல்பந்தான் என்று ஸமர்த்திக்கப் புகுந்தவர்கள் எந்த வழியைக் கைப்பற்றினார்களென்றால், இங்குள்ள தரணம் மரணம் என்ற இரண்டு பதங்களையும் ஸாமாந்ய விசேஷ பதங்களாகக் கொள்ளுகிறோம். கடலைக் கடந்து அப்பால் செல்லு வது பல படிகளால் கூடும்; தன்னுடைய வேண்டுகோளாலும், அத னுடைய இரக்கத்தாலும் இவை யிரண்டுமன்றிக்கே தண்டோபா யத்தாலும் கூடும். ஆகவே இப்படி பஹுப்ரகாரங்களான தரணங் களையும் ஸாமாநூ)தஃ சொல்லக்கடவதான தரணபதம் இங்கு ஸாஜோபாயஸாயூ)மான ஒரு தரணத்தைச் சொல்லுகிறது; மேலுள்ள மரண மென்கிற பதம் ' காயெ_ காரணோபவாரஃ ' என்கிற நியாயத்தாலே ஶாரணகாய_தரணத்தைச் சொல்லலாம்.

ஆகையாலே அது விசேஷ பதமாகவும் கீழுள்ள தாரணமென்கிற பதம் ஸாமாந்ய பதமாகவும் கொள்ளப்படும். யத்வா, ஸாமாந்யஸ்ய காரணம்வா பவது, விசேஷஸ்ய காரணம்வா பவது என்று விகல்பித்ததாகக் கொண்டு பொருந்தவிடலாம். ஸாமாந்யவிசேஷ ந்யாயத்தைக் கொண்டு இங்ஙனே பொருந்தவிடப் படுகிறது—என்றார்கள்.

இதன்மேல் அண்ணஸ்வாமி என்ன மறுப்பு எழுதினரென்றால், ஸாமாந்யவிசேஷ ந்யாயம் இங்குக் கொள்வதற்கு அவகாசமே யில்லையென்று ச்ருதப்ரகாசிகை முதலானவற்றிலுள்ள ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டு விரிவாக நிரூபணம் செய்திருக்கிறார். அந்த ந்யாய ஸஞ்சாரம் இங்குக் கூடுமா கூடாதா? என்று சங்கிக்கப் புகுந்து இதில் தர்க்க வாதங்கள் பலபல பண்ணினாலும் இங்கு அண்ணஸ்வாமி அவலம்பித்திருக்கிற வழி தவிர மற்றொரு வழியும் நிலைநிற்க மாட்டாதென்பது திண்ணம். இது நாம் பக்ஷபாதத்தினால் சொல்லுவதன்று; உண்மையுரையே யென்பதைச் சுருங்கக் காட்டி விடுவோம்.

ஒருவன் "கடமாநய, ஸௌவர்ணம்வா ஆநய" என்றால் இங்கு ஸாமாந்யவிசேஷ ந்யாயம் ப்ரவேசிக்குமா என்று கேட்கிறோம். கடபத ஸௌவர்ணபதங்கள் ஸாமாந்யவிசேஷ பதங்களல்லாமை யாலே இங்கு அந்த நியாயம் புகாது என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுவார்கள். அந்த நியாயத்தை இங்கும் ஸாமஞ்ஜஸ்யமாகப் புகுவிக்கலாமென்று தர்க்க குசலர்கள் கூறலாம். எங்ஙனே யென்னில்; கடபதமானது ஹிரண்ய ரஜத தாம்ர ம்ருண்மயாதி ஸர்வ கடஸாமாந்யத்தையும் சொல்லக் கடவதாகையாலே இங்கு விவக்ஷாநுகுணமாக ஹிரண்மய கடத்தைச் சொல்லுகிறது. மேலுள்ள குலாலபதமானது 'கார்யேஷு காரணோபசார:' என்கிற நியாயத்தாலே கடநிர்மாணகார்யத்திற்கு நிமித்த காரண பூதனை குலாலனளவிலே நில்லாமல் தத்ஸஹித கடயுக்த வாசகமாகக்கடவது. ஆகவே, ஹிரண்மய கடம் ம்ருண்மயகடம்வா ஆநய என்கிற அர்த்த விவக்ஷையிலே [கடமாநய, ஸௌவர்ணம்வா ஆநய] என்று ப்ரயோகிக்கலாம்; விவக்ஷைதான் ப்ரதானம். அதற்கு அநுகுணமாக லக்ஷணாவ்ருத்தி அல்லது கௌணவ்ருத்தி முதலானவற்றை அவலம்பிக்கலாம்—என்பர்கள்.

இவ்வகையிலே பார்த்தால் உலகத்தில் அஸங்கத ப்ரயோக மென்று ஒன்றுமேயிராது. ஹிரண்மயமான வொரு கடத்தையும் ம்ருண்மயமான வொரு கடத்தையும் கொண்டுவர வேணுமென்று நியமிக்க விரும்புகிறவர்கள் (கடமாநய, ஸௌவர்ணமாநய) என்று சொல்லுவது எவ்வுலகத்திலாவது உண்டா? அப்படி ஒருவன் சொன்னால் அந்த வாக்யத்தினால் தாத்பர்ய விஷயம் எவனுக்காவது பிறக்குமா? என்பதை மத்யஸ்த த்ருஷ்டியுடன் வித்வான்கள் விமர்சிக்கவேணும். இங்ஙனே நாம் காட்டக்கூடிய இடம் ஒன்று இரண்டல்ல; ஆயிரக்கணக்காகக் காட்டலாம். ஸாமாந்யவிசேஷ ந்யாயம் ப்ரவேசிக்க ஸ்வதராம் ஸம்பாவனையே யில்லாத விடங்களி லெல்லாம் அந்த நியாயம் புகும்படி நாமும் தர்க்க கௌசலம் காட்டி விடலாம்.

அப்படிப்பட்ட விடங்களில் பிராமாணிகமாகச் சொல்லக்கூடிய வார்த்தை என்னவென்றால், சாஸ்த்ர ரீதிப்படி லக்ஷணா வ்ருத்தி முதலியவற்றை அவலம்பிக்கிறோ மென்றால் அங்குத் தடை செய்வார் ஆருமில்லை; ஆனால் அப்படி அவலம்பிக்க வேண்டிய அவசியம் என்ன? என்று கேள்வி பிறந்தால் தினவடங்க விடையளித்தே தீர வேண்டும். பிரபலமான அர்த்த ஸ்வாரஸ்யம் கிடைப்பதா யிருந்து அதற்காகக் கல்லும் கறடுமான வழிகளிலே நுழைய ப்ராப்தமானால் அது ஸஹ்யமே யாகும் என்பதே.

இதுபோலவே, லக்ஷ்யைகதாரணம்வா, ஸாமரஸ்யேணவா என்று கொண்டு கூறப்படுகிற பொருள் சுவை மிக்கது என்று ஏற்பட்டு விட்டால் அந்த ஸ்வாரஸ்யத்தின் முன்னே வேறு எந்த அநுப பத்தியும் தலைகாட்ட மாட்டாதென்றே சொல்லிவிடலாம். ஆகவே 1. வ்யாகரணாநுஸரணம், 2. ஸ்ரீபாஷ்ய வ்யாக்யாநுஸரணம், 3. கவிஹ்ருதயாநுஸரணம், 4. ப்ராசார்ய ஹ்ருதயாநுஸரணம் முதலிய பலவற்றால் எந்த அர்த்தத்தில் ஸ்வாரஸ்யாதிசய முள்ளது என்று ஆராயவேண்டுவதொன்றே அவசியமாதலால், தாத்பர்யவிஷயம் சாஸ்த்ர ரீதியாய் ஸம்பவிக்க மாட்டா தென்கிற வாதத்திலும், ஸம்பவிக்கு மென்கிற வாதத்திலு முள்ள பக்ஷாபக்ஷங்களை விமர்சிப்பதற்கு முன்னே, ச்லோக விசிஷ்டத்தையே நாம் விசதமாகப் பண்ண ப்ராப்தம். இங்ஙனே நாம் எழுதுவதைக்கொண்டு " இவர்களுடைய கக்ஷியில் தர்க்க

வாதத்தில் ஏதோ தௌர்பல்ய மிருக்கின்றது போலும்', என்று ஸஹஸா நினைப்பவர்கள் தீவ்ரபுத்திகளாக மாட்டார்கள். இதில் தர்க்க வாதத்தின் ஸ்வரூபத்தை நாம் விளங்கக் காட்டியாயிற்று. இதற்கு மேற்பட்ட விஷயம் யாதொன்றுமில்லை. (தால வ்ருக்ஷ ஆநய, ஹிரண்யம் வா நய) என்று ஒருவன் சொன்னால் [தாலவ்ருக்ஷபதஸ்ய தாலபத்ரே லக்ஷணா, ஸச தால பத்ரஶப்த: இஹ கர்ணபூஷணாத்மகம் தாலபத்ரமாசஷ்டே, ஹிரண்ய பதஞ்ச ஹிரண்ய காரணகம் கர்ணபூஷணம் அபிதத்தே—என்று விவரணம் காட்டக் கூடியதாய்] குண்டல ரூபமான தாளபத்ரமும் ஹிரண்மயமான குண்டலமும் இங்கு விவக்ஷித மென்று ஸாதிக்க முடியுமா முடியாதா என்று பாருங்கள். விவக்ஷையிருந்தால் தடுப்பாரார் என்று சொல்லக்கூடும். விவக்ஷைக்கு நியாமகமென்ன? என்று ஆராயப் புகுந்தால் ப்ரகரணாதி பரிசீலனம் அவர்ஜநீயமே யாகும். ஆகவே அந்த பரிசீலனம் மிக முக்கியமென்று தேறி விடுகிறது. இவ்விஷயத்தை ஸ்வாமியும் தத்வ ப்ரதிஷ்டையில் 41 ஆம் பாராவில் ஸ்பஷ்டமாகவே எழுதியுள்ளார். அதாவது—"க்ரமம் தவறின யோஜனையைச் செய்வதற்கு ஆவச்யகதா லேசமுமில்லை யென்பதும் அது செய்யவும் முடியாதென்பதுமாக இரண்டு வாதங்கள் நம்முடையவை. இரண்டும் ஸமப்ரதாநமே யானாலும் முந்தின வாதம் மிக ப்ரதாநம்." என்கிற பங்க்தியைக் காணலாம். அதற்கு வியாக்கியான மாகவே நாம் இத்தனையும் எழுதிற்றென்றுணர்க.

'வியாகரணமாவது வாசி, தர்க்கமாவது வாசி' என்று சொல்ல விரும்புகிறவர் [வா ஶப்தம் கரண, ந்யாயம் வா கரண] என்று சொல்ல, அந்த அபத்தத்தை ஸமர்த்திப்பதற்காக "வா ஶப்தம் வா ஶப்தார்த்தே ப்ரமாகையாலே இங்கு வியாகரணபாடத்தைச் சொல்லுகிறது. ந்யாயபதம் ந்யாய பாடத்தில் லாக்ஷணிகம்; ஆகவே வ்யாகரணபடனம் வா கரண, ந்யாயபடனம் வா கரண என்று பொருள்படக் குறை யில்லாமையாலே அங்ஙனம் சொன்னது பொருந்தும்—என்பாருண்டோ? [பதவிஶ்லேஷார்த்தம் வா அத்யேயம் வா வ்யாகரணம் வா கரவாணி] என்று சொல்லவேண்டியவர், [பதவிஶ்லேஷார்த்தம் வா கரவாணி, வ்யாகரணம் வா கரவாணி] என்று சொல்லுவதுண்டோ? யாதர்சபதம் பதவிஶ்லேஷார்த்தபரம், வ்யாகரணபதம்

வ்யாகரணாத்யாயம் லாக்ஷணிகம் என்று ஸமர்த்திக்க வல்லவர்கள் விளங்கும்போது அப்படி ஏன் சொல்லக்கூடாது? இந்தக் கணக்கிலே [சேதனம் வா, ஸாமர்த்ய ஶ்ரணம் வா] என்று சொல்லிப் பொருந்தவிடவல்ல மஹான்களின் வாதங்களை ஸ்வாமி தத்வ ப்ரதிஷ்டையில் ஏற்கனவே அநுவதித்து, அப்படிப்பட்ட தர்க்க வாதங்களைப் பற்றின ஸ்வாபிப்ராயத்தையும் அதிலேயே காட்டிவிட்டார். (37 பாராவின் முடிவில் கண் செலுத்துக.) இத்தகைய தர்க்க வாதங்களைப் பிறர் ஆங்காங்கு திருவாக்கினால் அநுக்ரஹித்தருளி வருவதே போதும்; அவை ஶ்ரத்தா ப்ரஸங்க மாகாமலிருத்தல் நன்று என்று இதனால் ஸவிநயம் விஜ்ஞாபிக்கவத்தைனை. அவர்களின் அந்தத் தர்க்க வாதங்களை நாம் நிரம்மேற்கொண்டதாகவே கொள்க. வீணாக அந்த வாதத்தில் ஈடுபாய்ந்து செல்ல வேண்டா.

அவர்கள் சில வுலகவழக்கங்களை எடுக்கக் கைப்பற்றலாம்; அதாவது—"க்ருஹத்திற் சென்று பார்க்கிறேன், ப்ரஸாதமிருந்தால் புஜிக்கிறேன், இல்லையேல் தளிகை பண்ணிக் கொள்ளுகிறேன்" என்று உலகத்தில் வழங்குவர்கள். இதில், அநாயாஸ போஜநம் முதல் கல்பம்; ஸ்வபாகபோஜநம் இரண்டாவது கல்பம். மற்றும் காண்மின் "பணம் கொடுத்தால் பெற்றுக் கொள்ளுகிறேன்; இல்லையேல் நியாயாலயத்திற்குப் போகிறேன்' என்றும் வழங்குவதுண்டு. இங்கும்—எளிதாகப் பணம் பெறுதல் முதல் கல்பம்; நியாயாலய முகத்தால் வருத்தப்படுத்திப் பணம் பெறுதல் இரண்டாவது கல்பம். இப்படிப்பட்ட வுலக வழக்கங்கள் மிக மலிவாகவுண்டு. மற்றைப்படியான வாக்விலாஸங்களை ஒதுக்கி வைத்திட்டு இத்தகைய உலக வழக்கவழிகளைப் பின்பற்றி எளிதாக வாக்யார்த்தம் நடத்தலாம். 'எளிதாகக் கடக்க முடியுமானல் கடக்கிறேன்; இல்லையேல் தண்டித்துத் துன்புறுத்திக் கடக்கிறேன், என்பதாகச் சொல்லிவிடலாம். இதில் படையெடுக்க வருவார் ஆருமில்லை. மேலே நோக்குமின்.

முக்கியமாக விமர்சிக்க வேண்டிய விஷயம் அர்த்தத்தின் ஔசித்யம் எத்தகையது? என்பதே. இதைப்பற்றி தத்வப்ரதிஷ்டையில் ஸ்வாமி தாமே விரிவாக நிரூபித்திருப்பவற்றை இன்னமும் விவரித்து அடியேனுடைய ஸதீர்த்ய ரொருவர் எழுதியுள்ளாராதலால் அதைப்பற்றி இங்கு மிக்க சுருக்கமேயாகிறது.

218933
சென்னை-600 008
JL
Q12 m 24, N35SK N36.1

1. சரணாகதி செய்யும்போது தலையறுப்பதான வார்த்தையையும் கூடவே வைத்துப் பேசுவது தகாது. அப்படி சாஸ்த்ரங்களிலும் கண்டதில்லை, உலகத்திலும் கண்டதில்லை.

2. தீரக்கழிய அபராதப் பட்டவர்கள் பக்கலிலும் பெருமாள் நிக்ரஹம் காட்ட நெடும்போது தாமஸிப்பது வழக்கம். அபராதிகள் விஷயத்திலேயே அவர்க்கு ஊணுயாகவும் எளிதாக உண்டாமதன்று. இராவணனே இதற்கு முதல் நிதர்சநம். அப்படிப்பட்ட பெருமாள் முதலடியிலேயே தடியெடுப்பதாக ஸங்கல்பித்துக் கொண்டாரென்று சொல்லுவதும் இதற்குப் பரிந்து இன்னமும் சிலர் ஆரவாரித்து வருவதும் என்ன அழகு! என்ன காலக் கொடுமை!! இத்தகைய பாபத்தை நம்பிள்ளை திருமுடி மேலும் ஏற்றப் பார்ப்பது ஹந்த ஹந்த! ஶாந்தம்பாபம் ஶாந்தம் பாபம்.

3. மற்ற மஹர்ஷிகளைப் போலல்லாமல் அநாயாஸமாகவும் அழகாகவும் ச்லோகம் அமைக்கக் கற்ற வால்மீகி முனிவர் வாக்கில் அத்யமே மரணம்வா என்று இப்படி ஏன் வெளிவந்தது. பெருமாள் 'நானுவது ஒன்று முடிவது' என்று கருதாதிருந்த பக்ஷத்தில் 'மே மரணம்வா' என்ற விபரீதமான வொருவாசகத்தை இட்டிடுவரோ மாமுனிவர்? இது முக்கியமாக நோக்கத்தக்க தன்றோ.

4. ஸ்ரீ கோவிந்தராஜாதிகளான வியாக்கியான ஆசிரியர்களுக்கும் உடன்பாடல்லாத ஒரு விபரீதப் பொருளை நெஞ்சால் நினைப்பதற்கே கூச வேண்டியிருக்கச் சாற்றுவாருமுண்டாவதே. ஒரு அரும்பதவுரைகாரரைக் காக்க வேண்டி ஓராயிரம் அநர்த்தங்களுக்கு ஆளாவாருமுண்டோ? லோகோயம் விபர்யஜநாஸ் விவியா: கிம் கிம் நஸம்ஹாவ்யதே

உக்தம் ஸவிநயம் யயாஶ்ருதம் விஜ்ஞாபயதி

திருமலை அனந்தாண் பிள்ளை—ஸ்ரீக்ருஷ்ணதாஸன்.

வர்த்தமானங்கள்

காஞ்சீபுரம் உற்சவங்கள்

கச்சிப் பேரருளாளனுடைய வைகாசித்திருநாள் 1—6—36௳ திங்கட்கிழமை த்வாஜாரோஹணம். 3௳ புதன் கிழமை பெரிய திருவடி ஸேவை. 7௳ ஞாயிற்றுக்கிழமை திருத்தேர். ஒரே நாளில் திருத்தேர் நிலைசேர்ந்து விட்டால் 9௳ செவ்வாய்க்கிழமை அவப்ருதம் நடைபெறும். இல்லையேல் இரண்டொருநாள் கடக்கும். லோகவிலக்ஷணமான இந்த ப்ரஹ்மோத்ஸவத்தை ஆஸ்திகர்கள் அநுபவித்து மகிழ வேணும்.

வஸந்தோத்ஸவம்:—சென்ற 18-5-36௳ தேதி முதலாக ஏழு நாட்கள் வஸந்தோத்ஸவம் அதிக விபவத்துடன் நடைபெற்றது. ஸந்நிதியின் முகப்பில் தென்புறத்திலுள்ள பெரிய திருமண்டபம் அவ் வுத்ஸவத்திற்காக அமைந்தது. அது மிகவும் புராதனமாகி ஜீர்ணமாயிருந்தபடியால் கனம் ஹைகோர்ட் ஜட்ஜ் எஸ். வரதாசாரியரவர்கள் இரண்டாயிரம் ரூபாய் உதவி செய்து செப்பனிடுவித்தார். நாலாறுமாதகாலமாக நடந்துவந்த மேற்படி ஜீர்ணோத்தாரணமும் சென்ற வாரத்தில்தான் முடிவுபெற்றது. மண்டபத்தின் நிலைமை இப்போது மிகவும் அழகியது.

கோடைத்திருநாள்:—தேவப் பெருமாளுக்குச் சீதளோபசாரமாக நடக்கும் மஹோத்ஸவங்களில் இது மிகச் சிறந்தது. ஆனிமாதத்தில் ஏழுநாள் நடந்து சித்திரை நக்ஷத்திரத்தில் முடிவு பெறும். மறுநாள் ஆனிதன்னிற் சோதியென்னும் நன்னாளில் பெரியாழ்வாருடைய வருஷத் திருநக்ஷத்திரத்தை யுத்தேசித்துப் பேரருளாளனுக்கு கருடோத்ஸவம் இரவில் நான்கு மாடவீதிகளிலும் அற்புதமாக நடை பெரும்.

ஸ்ரீ பவழவண்ணர் பிரஹ்மோத்ஸவம்:—பெரிய காஞ்சீபுரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற இந்த எம்பெருமானுக்கு ப்ரஹ்மோத்ஸவம் இப்போது நடைபெற்று வருகின்றது. நரஸிம்ஹ தினம் (வைகாசி யனுஷத்தில்) அவப்ருதம் நடைபெறும். இவ் வுத்ஸவத்தின் பாதி பாகம் தேவப்பெருமாளுடைய ப்ரஹ்மோத்ஸவத்தோடு சேர்ந்து நடைபெறுவதால் பக்தர்களின் அநுபவம் இரட்டித்திருப்பது விசேஷம். தேவப்பெருமாள் ஐந்தாவது உத்ஸவத்தன்று (5-6-36) இந்த ஸந்நிதியில் திருமண்டபப்படி கண்டருளும் விசேஷம் போற்றத்தக்கது. சென்னை வாசியும் பிரபல கண்ணாடி வியாபாரியும் தர்ம ப்ரபுவுமான ஸ்ரீமான் கோடா ஸ்ரீநிவாஸய்யா அவர்களின் ஆஸ்தை இந்த திவ்ய தேசத்திற்குச் சேமவைப்பு.

காஞ்சீபுரம் நிருபர்.

ஸ்ரீ வானமாமலை

நம்மாழ்வார் உத்ஸவம்:—பல திவ்ய தேசங்களிலும் இவ்வாழ்வாரின் திருநக்ஷத்திர மஹோத்ஸவமானது அந்தந்த ஸந்நிதிகளின் விபவாநுகுணமாக நடைபெற்றாலும் இந்த திவ்யதேசத்தில் ஆழ்வாருக்கு உண்டான ப்ராவண்யவிசேஷத்துக் கநுகுணமாக

அமையப் பெற்ற திவ்யமங்கள விக்ரஹஸௌந்தர்யமும் உத்ஸவத்தின் வீறுபாடும் சால அழகியதாயிருக்கும். அஃதென்னவெனில்? இவ் வானமாமலையின் திருவடிகளை, ஸ்வீகாரங்களில் வைத்துக்கொண்டு ஒப்புயர்வற்ற ஸாமந்தஸ்வீகாரத்தினால் ஆகிஞ்சநாநந்யகதிகஸாதாரணமாக உபாயமாகப் பற்றி இப்பேருபகாரத்திற்கு கைம்மாறு காணப்பெறாமல் தடுமாறின ஏற்றத்திற்குத் தகுதியாகவும் ஸகலதிவ்யதேசங்களிலும் வழங்கப்பெறுகிற ஸ்ரீசடகோவன் என்ற திருநாமத்துக்கு ஸார்த்தகமாகவும் விக்ரஹாந்தரஸ்வீகார மன்றியில் பெருமாள் திருவடி நிலைகளோடு அபேதமாக சிறிய திருமேனியை ஸ்வீகரித்து எழுந்தருளியிருக்கும் நிலையும் திருநக்ஷத்திரமஹோத்ஸவத்தில் பெருமாள் திருவோலக்கத்திலேயே தினம் ஒரு சதகமாக திருவாய்மொழி திருச்செவி சாய்த்தருளும் பெருமையும் திவ்யதேசாந்தரதுர்லபமென்று அறியத்தக்கது

வஸந்தமகோத்ஸவம்:—இந்த திவ்யதேசத்தில் இந்த மஹோத்ஸவமானது வைசாகமாஸத்தில் பூர்ணிமைக்கு 10 தினம் முன்னாக ப்ராரம்பமாகி ப்ரதிதினங்களிலும் ஸாயங்காலத்தில் ஆஸ்தானத்தி லிருந்து தோளுக்கினியானில் நாச்சியாரும் பெருமாளும் இருவருமான சேர்த்தியாகவே எழுந்தருளி சௌந்தர்யவான்களால் ஸம்பூர்ணமான ஜவந்தி மண்டபத்தில் வீற்றிருந்து அடியார் குழாங்கள் நின்றபடியே சிறிய திருமடலை செவிக்கினிய செஞ்சொல்லால் ஸேவிக்க அத்தைக் கேட்டருளினபடியே திருவாபரணங்களும் ஸகலபுஷ்பபரிசோபிதமான திருமாலைகளும் ஸுகந்தஸம்ஜநிதமான சந்தனங்களும் சாத்திக்கொண்டு தர்சநீயமாய் சௌந்தர்யவானாநுரூபமான போகங்களமுது செய்தருளி தீர்த்தவிநியோக கோஷ்டியானதும் தேனமாம் பொழில் திருத்தோப்பில் மூன்று ப்ரதக்ஷிணம் உலாவியருளி முன் எழுந்தருளியிருந்த மண்டபத்தில் ஸமர்ப்பிக்கப்பெற்ற ஆஸநத்தில் அமர்ந்தருளி திருவாராதனம் கண்டருளினதும் திருப்பாவையும் திருவாய்மொழியில் தினம் ஒரு பத்தாகவும் கேட்டருளி தளிகை அமுது செய்தருளி சாத்துமுறை கோஷ்டியானதும் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளுவர். பூர்ணிமையன்று சேற்றுத் தாமரையில் திருவூரல் உத்ஸவம்கண்டருளி அவ்விடத்திலேயே திருவடிவிளக்குதல் திருவந்திக் காப்பு முதலியன ஆகி திருமடல் சாத்துமுறை தீர்த்த கோஷ்டி ஆனதும் ஸந்நிதியில் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி திருவாராதனம் ஆகி திருப்பாவை திருவாய்மொழி கேட்டருளி விசேஷமாக பால் மாங்காய் அமுது செய்தருளி சாத்துமுறை தீர்த்தவிநியோக கோஷ்டி நடைபெறும். தே. திருமலாச்சாரியார்.

ஸ்ரீ:

பீதாம்பர பண்டித ப்ரஸங்க பராமர்சம்

பீதாம்பரபண்டிதரென்று உலகமெல்லாம் புகழ நின்ற மஹாநுபாவர் நிகழும் வைகாசி மாதத்தில் வெளியிட்ட தமது பத்ரிகையில் "புஸ்தக விமர்சம்" என்ற மகுடத்தின்கீழ் ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசார்யஸ்வாமியின் "அத்யமே ச்லோகார்த்த தத்வப்ரதிஷ்டா" என்கிற க்ரந்தத்தைப்பற்றி ஒரு விமர்சம் வெளியிட்டிருப்பதைக் கண்டோம். மேற்குறித்த பண்டிதர் ஏற்கனவே தாம் இபற்றி வெளியிட்டிருக்கும் சில புத்தகங்களில் அபத்தமும் அஸமஞ்ஜஸமுமான விஷயங்கள் தவிர வேறு கிடையாதென்பதைச் சில மஹான்கள் க்ரந்த ரூபேண வெளியிட்டு உலகமெங்கும் பரவ வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் ஸமாதானம் சொல்வதாக ஏதோ எழுத ஆரம்பித்தவிவர் சாஸ்த்ரீய மார்க்கமாக ஸமாதானம் எழுதுவதை விட்டிட்டுப் பெரியவர்களை அநாவச்யகமாக தூஷித்துக் கொண்டும் ஆத்மப்ரசம்ஸையை அளவுக்குமீறிச் செய்துகொண்டும் காலம் கழித்து வருகிறார். இவர் தம்முடைய க்ரந்தங்களைக் கடாக்ஷித்து விஸ்மயப்படாத மஹான்கள் இந்த லோகத்திலேயே கிடையாரென்று பஹுபரிச்ரமப்பட்டு வெகுவிரிவாக நிரூபிக்கிறார். வாஸ்தவமாய் இவருடைய லேகநசாதுர்யத்தில் ஆச்சரியப்படாதவர்கள் உபயவிபூதியிலுமே கிடையாதென்று அனைவரும் நிச்சயித்த விஷயமே. தடஸ்த பரிசீலந மென்னும் புத்தகத்தில் (பக்கம் 5ல்) * பீதாம்பரதரஃ * என்கிற திருநாமத்திற்கு விசேஷார்த்த வியாக்கியானம் எழுதப்பட்டிருக்கிறதே, அதைப் பார்த்து ஆச்சரியப்படாதவர்கள் எவ்வுலகிலாவது உண்டோ? அப்படியே இவருடைய விசேஷார்த்தங்களைக் கண்டும் ஆச்சரியப்படாதவர்களும் ஆனந்தம் பொங்கி அபிநந்தனம் செய்யாதவர்களும் எங்கும் இருக்கவேமாட்டார்களென்பதை யாரேனும் மறுக்கமுடியுமோ? ஸித்தஸாதநமாக ஏதுக்கு எழுதுகிறாரென்றே வியக்கிறோம். தமக்கு நேர்ந்த ஆபத்துக்களில் லவலேசமும் போக்கிக்கொள்ள முடியாமல் பரிதபித்து நிற்குமிவர் பரகீய விசாரங்களில் அநாவச்யகமாகத் தலையிட்டுக் கொண்டு இன்னமும் சோசநீயதசையை அதிகமாக அடைந்திடுவது ஏதுக்கோ?

அத்யமேச்லோகார்த்த விஷயத்தில் இவர் எழுதியிருக்கும் விஷயங்கள் பண்டிதர்களால் இகழத்தக்கவையே என்பதை இங்குச் சுருக்கமாகத்தெரிவிப்போம். ஸ்ரீஅண்ணஸ்வாமியின் தத்வப்ரதிஷ்டாக்ரந்தத்தை இவர்தாம் ஸேவித்ததாகவும், அதிலுள்ள அநேகவிஷயங்களைத் தாம் க்ருதஜ்ஞதையோடும் ச்லாகையோடும் அங்கீகரிப்பதாகவும், அத்யமே ச்லோகப் பொருளைமாத்திரம் வெறுப்பதாகவும் முகவுரைகூறி, மேலே அத்யந்தம் அஸம்பத்தமாக இரண்டரை பக்கம் எழுதியிருக்கிறார்.

ஸ்ரீராமாயணத்தில் * அத்யமே ச்லோகமுள்ளவிடம் ப்ராயோபவேசப்ரகரணமுமல்ல, சரணாகதிப்ரகரணமுமல்ல என்று தீர்மானிக்கிறார் இவர். திருவாய்மொழியில் யானேட்டியேன்னுள் என்கிறபாசுரத்தின் ஈடுமுப்பத்தாறாயிரப்படியிலுள்ள ஒரு ஸ்ரீஸூக்தி விஷயமாக இந்த அத்யமேச்லோகார்த்த விசாரம் பெருகியிருப்பதாலும், ஈடு அருளிச்செய்தவரான வடக்குத்திருவீதிப்பிள்ளையினுடையவும், அவரது திருக்குமாரரான பிள்ளை லோகாசார்யருடையவும் ஸ்ரீஸூக்திகளையே தஞ்சமாகக் கொண்டிருக்கும் மஹான்களுக்கே இவ்வர்த்த விசாரம்ப்ரஸக்தமாயிருப்பதாலும் அந்த மஹாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கு விருத்தமாக இந்தப் பீதாம்பரபண்டிதர் தீர்மானிப்பது கடலோசையோடொக்குமத்தனை. வேல் வெட்டிப்பிள்ளைக்கு நம்பிள்ளையருளிச்செய்த வார்த்தையை ஈட்டில் காட்டியிருக்குமிடத்தில் பெருமாள் ஸமுத்ரராஜனிடத்தில் செய்தது சரணாகதியே யென்பது ஸ்பஷ்டம். ஸ்ரீவசநபூஷணத்திலும் ப்ரபத்திக்கு அதிகாரி நியமமில்லை யென்பதையும் ஸஹநியமமில்லை யென்பதையும் விவரிக்கவந்த இரண்டு ஸூத்ரங்களாலும் சரணாகதியென்பதே ஸ்திரீகரிக்கப்பட்டிருக்கிறது. திருநெடுந்தாண்டக வ்யாக்யாந ப்ரவேசத்திலும் சரணாகதியென்றேயுள்ளது. இவற்றுக்கு விரோதமாக ஸாராஸ்வாதிநீஸாரப்ரகாசிகைகளில் ஏதோ எழுதியிருப்பதாக இப்பண்டிதர் உதாஹரிப்பது வ்யர்த்தம், சரணாகதி யென்கிற பக்ஷத்தையே யிசைந்தவர்களுக்குள்ளே பரஸ்பரம் நடக்கும் விவாதத்தில் சரணாகதியல்லவென்று இவர் சொல்லிக்கொண்டு வருவது அஸமஞ்ஜஸம்.

"ப்ராயோபவேசமுமன்று" என்று இப்பண்டிதர் எழுதுவதும் ப்ராயோபவேசந்தானென்று இவரே ஸ்தாபித்தபடியாகிறது. எங்ஙனே யென்னில்; "ப்ராயோபவேசம் க்ஷத்ரியருக்கு விஹிதமன்று என்று பரதனை நிஷேதித்த பெருமாள் அதர்மத்தை அநுஷ்டித்தனரோ?" என்று இவர் எழுதுகிறார். இதனால், சித்ரகூடத்தில் பரதன் ப்ராயோபவேசம் பண்ணினதாகவும் அதைப் பெருமாள் தடுத்ததாகவும் இவர் ஸ்பஷ்டமாக எழுதினராகிறார். அங்கு ஸ்ரீபரதாழ்வான் செய்ய நினைத்தது ப்ராயோபவேசமென்று தீர்மானித்துக் கொண்ட விவர், பெருமாள் ஸமுத்ரக்கரையில் செய்ததும் ப்ராயோபவேசந்தான் என்று அவசியம் தீர்மானித்தேயாகவேண்டும். ஏனென்னில்;

அயோத்யா காண்டத்தில் 111-ஆவது ஸர்க்கத்திலுள்ள ஐஹஜெ ஸணியெ பரீஷு கூமாநாஸ்ர ஸாரயெ ஆர்ய-ஃ ஷுதூவவெக்ஷாமி யாவநெ நஷுவஸீஷதி॥ * மெஷெ வமஸ்ராவாஸாயாம யாவஸஷுதியாவஷுதி। ...கூமொத்ர ஊவஸாவஷு ஸஷுஊவெவாஸ்ரஸஸ்யடி * என்கிற ச்லோகங்களைக் கொண்டுதானே பரதன் ப்ராயோபவேசம் பண்ணினதாக இவர் எழுதுகிறார். ப்ராயோபவேச மென்கிற சப்தாநுபூர்வி அங்கு வால்மீகி வாக்கில் சிறிதுமில்லை. கடற்கரையில் பெருமாள் செய்த காரியத்தை என்ன சப்தங்களாலே வால்மீகி கூறியிருக்கிறாரோ அதே சப்தங்களால்தான் பரதன் செய்த காரியத்தையும் கூறியிருக்கின்றார். ஷுதிமயநம், ஷுதூவவெஸநம் என்கிற பதங்களுக்கே ஷுதிகஷிதநிஷெஃமுள்ளது. அங்கு பரதன் செய்த கார்யம் வேறு; இங்குப் பெருமாள் செய்த காரியம் வேறு என்று ஸாதிக்கப் பிரமனாலுமாகாது. பரதன் செய்த காரியத்தைப் பெருமாள் தடுத்தது உண்மையே. க்ஷத்ரியர் செய்யத்தகாதென்று சொல்லித் தடுத்ததாக இவர் எழுதுவது மருள். * நதூஊஷயஃர ஷிஷித்ராநாம வியிஃ ஷுதூவவெஸநெ * என்பது அங்குள்ள வால்மீகி ஸூக்தி. 'சஷிஷித்ரக்ஷத்ரியாணாடி' என்பது வியாக்கியானம். கைகேயியின் வரத்தின்படியும் தசரதருடைய இசைவின்படியும் பெருமாள் திருவுள்ளத்தின்படியும் பரதன் ராஜ்யாபிஷேகத்திற்கு ப்ராப்தனைவிட்டபடியால் இப்படிப்பட்ட அவன் ப்ரத்யுபவேசநம் பண்ணுவது அதர்மம் என்று பெருமாள் கூறினரேயல்லது வேறில்லை. பெருமாள் கடற்கரையில் போந்தபோது அபிஷிக்த க்ஷத்ரியத்வம் தமக்கில்லாமையாலே அக்காரியத்தைத் தாம் அநுஷ்டித்தது அதர்மமாகாது, ஸ்வோக்தி விருத்தமுமாகாது.

நநு—'சித்திரகூடத்தில் பரதாழ்வான் செய்த காரியம் வேறுதான்; கடற்கரையில் பெருமாள் செய்த காரியம் வேறுதான். வால்மீகியின் உக்தியில் இது விளங்காநின்றது. * யாவந்நப்ரஸீததி* என்றும் * யாவந்நப்ரதியாஸ்யதி * என்றும் பரதன் சொன்னப்போலே வசநவ்யக்தி கடற்கரையில் இல்லை' என்று சொல்ல வருவரேல், தஜ்ஜம் வாஜரம் வசஃ. அந்த வார்த்தை இருக்கவுமாம், இல்லையாகவுமாம். அநுஷ்டாநோபக்ரமத்தில் அந்த நினைவு எவர்க்கும் இருந்தே தீரும். ஸாவம்வ, பரதன் செய்தது ப்ராயோபவேசமென்று தீர்மானித்தெழுதிய இப்பண்டிதர்க்குப் பெருமாள் செய்ததும் ப்ராயோபவேசந்தானென்று இசைந்தே தீரவேண்டியதாய் விட்டபடியால் * அத்யமே ச்லோகத்திற்கு அண்ணஸ்வாமி வெளியிட்டிருக்கும் அர்த்தமே இவர்க்கும் தஞ்சமாய் வந்து முடிந்ததென்று தேறிவிட்டது. தத்வப்ரதிஷ்டையில்: 60 + 64 பாராக்கள் பார்க்க

மேலும் இப்பண்டிதர் எழுதியிருக்கிற விநோதத்தை நோக்குங்கள்; "சுஷ்ஸெவாஜரணாடி சுய தரணாடி என்று ஒரு கல்பம்; ஸாமரஸ்வாஜரணம் சுய தரணம் என்று ஒரு கல்பம்; ஸெவா இரண்டிலொன்று; ஸாமரஸ்வா இரண்டிலொன்று. இப்படிக்கும் அந்வயம் கொள்ளலாம்" என்று முடிவில் எழுதுகிறார். இரண்டாவது வாக்கியத்தில் (ஸெ) என்பதைக் கூட்டாமல் (ஸாமரஸ்வா ஜரண ஜய தரணாடி) என்று ஒரு கல்பம்—என்கிறவிவருடைய விவக்ஷிதத்தை எம்பெருமான்தான் அறியவேணும். மரணதரணங்கள் ஸாகரத்திற்கே எப்படி ஸம்பவிக்கும். ஸாமரகதந்த்ரக தரண மல்லது வேறொன்றை இவர் இங்கு விவக்ஷிக்க முடியாதே. கடல் எந்த வஸ்துவைக் கடக்கவேணுமோ அறியோம். தரண மென்பதற்கு க்ஷேமமென்று அர்த்தமென்று இவர் எழுதுவதும் பிசகு. இந்த அஸம்பத்த பாஷிதம் கிடக்கட்டும். * சுஷ்ஸெவா ஜரணாடி சுய தரணாடி * என்று இவர் எழுதுகிறார். இதனால், பெருமாள் தம்முடைய முடிவைக் கூறுவதான ஒரு பக்ஷத்தையும் தாம் அங்கீகரிப்பதாக நன்கு காட்டுகிறார். ஸாமரஸ்வ ஜரண மென்பதும் அந்தப் பக்ஷத்திலேயே உண்டு—என்று

இவர் எழுதினாலும் ஸாஜஸ்வ ஜரண மென்கிற விஜத பக்ஷத்தை இவர் அங்கீகரித்துவிட்டதாக விளங்கிவிட்டது. "வ்ருக்ஷஸ்ய ஜெ நிஷண்ண வ்ருக்ஷஜேஷம் விஷுஷயதெ" என்றதுதான் இங்கு நினைவுக்கு வருகிறது. 'கடலுக்கே மரணமாகக் கொள்ளாமல் பெருமாளுக்கு மரணமாகக் கொண்டால் மஹா தோஷம்' என்று ஸாதிக்கத்தொடங்கினவிவர் ஜெ ஜரணமென்று அந்வயிக்கிற பக்ஷமும் கொள்ளத்தகுந்ததுதான் என்று சுவஸக்ருசு எழுதுவது என்னோ!. ஸாமரஸ்வ ஜரண மென்று சொல்லக்கூடாதென்று அண்ணஸ்வாமி யெழுதியிருப்பதை மறுப்பதில் மாத்திரம் எனக்கு நோக்கேயல்லது ஜெ ஜரண மென்று யோஜிக்கக்கூடா தென்பதில் எனக்கு நோக்கில்லை' என்றே இனியிவர் சொல்லித் தீர வேண்டும். அப்படியானாலும், ஜெ ஜரண மென்று யோஜிக்குமளவில் மஹத்தான அநர்த்தம் வந்துவிடும் என்று இவர் முதலேபிடித்து எழுதினதெல்லாம் பாழ்தானே. ஜெ ஜரண மென்றாலும் அது பெருமாளுடைய விநயப்பேச்சு என்றும், ஸமுத்ரத்தின் மரணத்தில்தான் அதுவும் பர்யவஸிக்கு மென்றும் இப்பண்டிதர் எழுதுகிறார். ஜெ ஜரண மென்று யோஜித்துவிட்டு அதன் தாத்பர்யத்தை இவர் எங்ஙனே இழுத்துக்கொண்டு போனாலும் அதில் நமக்கு விப்ரதிபத்தியில்லை. அந்வயக்ரமத்தில் விவாதமே யொழியத் தாத்பர்யத்தில் விவாதமே யில்லை. இவர் எழுதுகிற தாத்பரியத்திற்கு மேற்பட்ட பல தாத்பரியங்களை அண்ணஸ்வாமி எழுதியே யிருக்கிறார். *ஊயவஸ்ஜாஸாநஜீவிஷெ * என்ற பிராட்டியின் வார்த்தையைத் திருவடி சொல்லக் கேட்ட பெருமாள் உடனே * நஜீவெயம க்ஷணஜவி விநா தாஜஸிதெக்ஷணாடி * என்றார். இதற்கு என்ன அர்த்தம். இனி ஒரு நொடிப்பொழுதும் பிழைத்திராமல் இப்போதே நான் முடிந்துவிடுவேன் என்பதுதானே இதற்கு அர்த்தம். அப்படி முடிந்துவிட்டாரோ? இல்லை. அதற்கு அது தாத்பர்யமன்று என்னவேணும். இப்படி தாத்பர்ய நிர்வாஹம் பண்ணி ஒழுங்கு படுத்தவேண்டிய பெருமாள் வார்த்தைகள் பலவுண்டு. சுஷ்ஜெ ஜரண மென்ற விதுவும் அப்படியேயாகிறது. பெருமாள் முடிவதாகக் காட்டுகிற அந்வயம் ஆபத்துக்கிடம் என்று ஆக்ரஹம் கொண்டவிவர் அந்தோ! அந்த ஆபத்துக் குழியிலேயே தாமும் ஏன் விழுகிறார்? என்பதே இங்கு நாம் கேட்பது.

ஸாகல்யஶரண மென்று மிகவும் தவறான ஒரு அர்த்தத்தையும் கூடக் கூட எழுதிவருமிவர் இராமபிரானை தூஷிக்க வந்தவராமத்தனை. ஸ்ரீராம குணங்களுக்கு வேறுநிந்தை வேண்டா.

'பெருமாள் அநுஷ்டித்தது ஸகலாங்கஶரணாகதியன்று' என்று எழுதாநின்ற விவர் விகலாங்க ஶரணாகதி யென்று ஒப்புக் கொண்டாராகிறார். சில அங்கங்கள் தவிர்ந்து சில அங்கங்களோடே கூடின சரணாகதி யென்கிறாரே; தவிர்ந்த அங்கங்கள் போகட்டும்; இசைந்த அங்கங்கள் எவை? ஏதேனுமொன்றை ஒப்புக்கொண்டாலும் ஸாகல்ய ஶரணமென்பதை நெஞ்சால் நினைக்கவும் வழியில்லையே. *ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநமித்யாதிகளில் எந்த அம்ஶம் பெருமாளிடத்திலிருந்தது? பெருமாள் குணபூர்த்தி யில்லாதவன் திறத்தில் சரணாகதி செய்தாராகையாலே அது பலிக்கவில்லை என்று ஆசாரியர்கள் ஸாதித்தார்களே யல்லது ஆநுகூல்ய ஸங்கல்பத்திற்கு எதிராக ப்ராதிகூல்ய ஸங்கல்பம் செய்துகொண்டாராதலால் பலிக்கவில்லை? யென்று ஒரு ஆசார்யரும் ஸாதித்திருக்கவில்லை. ஸாகல்ய ஶரணமென்கிற அர்த்தம் ஆசார்ய கோஷ்டியில் ப்ரஸித்தமாகில் அதைக்கொண்டு எவ்வளவோ சாஸ்த்ரார்த்தங்கள் அவச்யம் சிக்ஷிக்கப்பட்டிருக்குமே. இதுநிற்க.

பெருமாள் பக்கலில் ஸர்வேஶ்வரத்வம் கழற்ற வொண்ணுததாயினும், இருக்குமிடம் தெரியாதபடி அதனை மறைத்து மநுஷ்யத்வத்தையே பெருமாள் பெரும்பாலும் காட்டிவருகிறார் என்பது ஸ்ரீராமாயணத்தில் ஆழ்ந்த அவகாஹநமுடையாருடைய ஸித்தாந்தம். ஆகவே அந்த மநுஷ்யத்வத்திற்கு மிகவும் சேரக் கடலரசனை த்ரிகரண சுத்தியோடு வேண்டிக்கொண்டு அக்கரை செல்ல நினைத்துக் கரையிலே தரைக்கிடை கிடந்த பெருமாள் அந்த ஸமயத்திலே ருஜுவாக நெஞ்சால் நினைப்பதோ வாயாற் சொல்லுவதோ எப்படியிருக்க வேண்டு மென்பதை நாம் விவரிக்க வேண்டுமோ? 'தண்ணீர்த் தெய்வமே! நீ வழிவிட்டாலொழிப எனக்கு வேறு கதியில்லை; இப்போது உன் தயவை எதிர்பார்க்க வேண்டியதாக நேர்ந்துவிட்டது; நீ தயவு செய்து வழிவிட்டால் தான் நான் ஸபரிவாரனுய் அக்கரை சென்று எதிரிகளை முடித்துப் பிராட்டியை லபித்து வாழலாகும்; இல்லையேல் இங்கேயே முடியவேண்டியதாகுமத்தனை' என்று [illegible] [illegible]

திப்பதன்றே ப்ராப்தம். 'வழிவிடுகிறாயா? அல்லது உன்னைத்தொலைத்துவிடட்டுமா?' என்று உபக்ரமத்திலேயே உரைப்பதானது வணங்குகிறவனுடைய காரியமாகுமோ? காட்டிலே வழிபறிக்கவருங் கள்ளர்கள் கத்தியைக் காட்டி 'உடைமைகளைக் கொடுக்கிறாயா? உயிரை வாங்கிவிடட்டுமா?' என்று சொல்வது உண்டு அந்த நிலைமையிலா பெருமாளை வைத்துப் பேசுகிறதென்று விவேகிப்பாரில்லையே!

கடன்வாங்கிக்கொண்டு போனவர்களிடமிருந்து கடனை மீட்டுக்கொள்ள நினைப்பவர்கள் 'தயவு செய்து கடனைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்' என்று வணங்கிக் கேட்பது ஒரு ஸமயம்; 'கொடுக்கிறீரா? அல்லது, சிறையில் புகுந்து பரிபவப்படுவீரான வளவு முயற்சியை யெடுத்துக் கொள்ளட்டுமா?' என்று வெருட்டிக் கேட்பது ஒருஸமயம். இங்ஙனே வெருட்டிக் கேட்கிற வார்த்தையே முதலடியில் வெளிவந்துவிட்டால் அதற்கு, வணங்கிக் கேட்கிற ஸமயமென்று பேருண்டோ? இந்த மிகச்சிறு விஷயத்தைக் கூட நெஞ்சில் வாங்கிக் கொள்ளாமல் வாது செய்பவரோடு எதிர்வாது புரிவது ஸத்யமாய் நமக்கு வெட்கமாகவே யிருக்கிறது.

ஒருவரிடத்தில் நாம் பணம் கொடுக்கும்போது இதை நாம் மறுபடியும் திருப்பிப் பெற்றுக் கொள்வது எங்ஙனே என்று ஒவ்வொருவரும் ஆலோசிப்பதுண்டு. அப்போது மூன்று விதமாய் மனத்தை ஸமாதானப்படுத்திக் கொள்வார்கள்; (அதாவது) அப்பா! தாயே! என்று வேண்டிக்கொண்டு காலைக் கையைப் பிடித்து அந்த வழியிலாவது வாங்கிவிடுவோம்; அவ்வளவுக்கு அவகாசமில்லாதபடி அவனே எளிதாய்க் கொடுக்கவாவது பெற்றுவிடுவோம்; இல்லையேல் நமக்குள்ள உரிமையைக் கொண்டு நியாயாலயத்தில் பிடித்திழுத்து பலாக்காரத்தாலே பெற்றுக் கொள்வோம்—என்கிற இம்மூன்று வழிகளையும் முதலிலேயே தீர்மானித்துக் கொள்வார்கள். அதுபோலவே பெருமாளும் விபீஷணன் தம்பக்கலில்வந்து சேருவதற்கு மிகமுன்னமேயே திருவடியை நோக்கி "தபஸா ஸேதுபந்தேந ஸாகரோச்சோஷணேந வா। ஸர்வதா ஸாத்ய உபாயைஸ்ச ஸாகரஸ்யாஸ்ய லங்கநே॥" என்று மூன்றுவகையான உபாயங்களையும் சிந்தையிற் கொண்டு வெளிப்படவு மருளிச்செய்து, கடலைக் கடத்தல் எவ்வகையிலும் தமக்கு எளிதே யென்பதை வெளியிட்டருளினர்.

அதற்குப் பிறகு விபீஷணாழ்வான் வந்து சேர்ந்தான். அவனை நோக்கி ஸுக்ரீவ மஹாராஜரும் திருவடியும் "கதம் ஸாகரமக்ஷோப்யம் தராம வருணாலயம்। ஸைந்யை: பரிவ்ருதா: ஸர்வே வாநராணாம் மஹௌஜஸாம்॥ உபாயம் நாதிகச்சாமோ யதா நதநதீபதிம்। தராம தரஸா ஸர்வே ஸஸைந்யா வருணாலயம்॥" என்று கடல்கடக்கும் வழி யாதோ வென்று கேட்டார்கள். அதற்கு விபீஷணன் சொன்ன பதிலாவது—"ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி। கா2நித: ஸகரேணாயமப்ரமேயோ மஹோததி:॥ கர்துமர்ஹதி ராமஸ்ய ஜ்ஞாதே: கார்யம் மஹோததி:" என்பதாம். ரகுகுலத்திற்கு ஸாகரம் மிகவும் உபகாரகமாக அவதரித்ததாகையால் இது மிகவும் பெருமை யுடையது; (மநுஷ்ய பாவனையிலே நிற்கிற) பெருமாளுக்கும் இக்கடல் பரமபூஜ்யமானது; ஆதலால் இதனை வணங்கி வழிபட்டு வழி கேட்பது யுக்தமென்று எனக்குத் தோன்றுகிறது; இதைப் பெருமான் ஸந்நிதியிலும் விஜ்ஞாபித்துத் திருவுள்ளமானபடி செய்வது—என்றார் விபீஷணாழ்வான்.

"ஏவம் விபீஷணேநோக்தோ ராக்ஷஸேந விபஶ்சிதா। ஆஜகாமாத ஸுக்ரீவோ யத்ர ராம: ஸலக்ஷ்மண:॥ ததஶ்சாக்யாதுமாரேபே விபீஷணவச: ஶுபம்। ஸுக்ரீவோ விபுலக்ரீவ: ஸாகரஸ்யோபவேஶநம்॥"—விபீஷணன் வெளியிட்ட அபிப்ராயத்தை உடனே ஸுக்ரீவ மஹாராஜர் பெருமாள் ஸந்நிதியிலே போந்து விண்ணப்பித்தார். [ப்ரக்ருத்யா தர்மஶீலஸ்ய ராகவஸ்யாப்யரோசத] இயற்கையாகவே ருஜுமார்க்கத்திலேயே செல்பவரான பெருமாளுக்கும் ஸமுத்ரராஜனை வணங்கி வேண்டிக்கொள்வதென்கிற அந்த விஷயம் திருவுள்ளத்திற் பாங்காகப் பட்டது.

உடனே பெருமாள் இளைய பெருமாளையும் மஹாராஜரையும் நோக்கி, ஸமயத்தில் நல்ல வுபாயத்தை நினைப்பூட்டின விபீடணனுக்கு உரிய வெகுமதி யளிக்குமாறு நியமித்துவிட்டு, [விபீஷணஸ்ய மந்த்ரோऽயம் மம லக்ஷ்மண ரோசதே। ப்ரூஹி த்வம்

ஸஹஸுக்ரீவஸ்தவாபி யதி ரோசதே॥] லக்ஷ்மணா! விபீஷணன் தெரிவித்த விஷயம் எனக்கு மிகவும் யுக்தமாகத் தோன்றுகிறது. நீயும் ஸுக்ரீவனும் நன்கு ஆலோசித்துப்பார்த்து இதில் உங்களுடைய அபிமதியையும் தெரிவிக்கவேணும்—என்றார். அது கேட்ட ஸுக்ரீவ லக்ஷ்மணர்கள் [கிமர்தம் நோ நரவ்யாக்ர! ந ரோசிஷ்யதி ராகவ। விபீஷணேந யத்தூக்தமஸ்மிந் காலே ஸுகாவஹம்॥...விபீஷணஸ்ய ஶூரஸ்ய யதார்தம் க்ரியதாம் வச:।] பெருமாளே! எங்களுடைய அபிமதியைத் தனியே தெரிவிக்கவேண்டியதென்னவிருக்கிறது? இந்த ஸமயத்திற்கு இணங்கிய உபாயத்தையே விபீஷணன் கூறியிருக்கின்றாராதலால் அதுவே எங்களுக்கும் ருசிக்கின்றது; அப்படியே செய்தருள வேண்டியதுதான் என்றார்கள். [ஏவமுக்த: குஶாஸ்தீர்ணே தீரே நதநதீபதே:। ஸம்விவேஶ ததா ராமோ வேத்யாமிவ ஹுதாஶந:॥] பிறகு பெருமாள் கடற்கரையிலே தர்ப்பங்களைப் பரப்பி நீறுபூத்த நெருப்புப்போலே சயனித்தருளினார். (இவ்வளவோடு பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.) மேல் இருபதாவது ஸர்க்கத்தில், சார்த்தூலனென்கிற வொரு ராக்ஷஸன் சாரனாக இங்குவந்து மீண்டதும், மறுபடியும் சுகனென்கிற ஒரு ராக்ஷஸன் ராவணனது கட்டளையினால் இங்குவந்து பரிபவப்பட்டுப் போனதுமான சில கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேல் இருபத்தோராவது ஸர்க்கத்தில் (பத்தொன்பதாவது ஸர்க்கத்தின் முடிவிலுள்ள கதையின் தொடர்ச்சியாக) * தத: ஸாகரவேலாயாம் தர்பாநாஸ்தீர்ய ராகவ:। அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததே:॥ * என்று தொடங்கி * ஸ த்ரிராத்ரோஷிதஸ்தத்ர நயஜ்ஞோ தர்மவத்ஸல:। உபாஸத ததா ராம: ஸாகரம் ஸரிதாம் பதிம்॥ * என்னுமளவாகப் பதினொரு ச்லோகங்களினால் பெருமாளுடைய தரைக்கிடை பேசப்பட்டது. இந்த இடத்தில்தான் * அத்ய மே மரணம் வாऽத தரணம் ஸாகரஸ்ய வா * என்பது எட்டாவது ச்லோகமாக வுள்ளது. பன்னிரண்டு ச்லோகங்களுக்குமேல் பெருமாளுடைய கோபாவேசமும் அதனால் விளையும் காரியமும் பேசப்படுகின்றன. அந்த ப்ரகரணம் வேறு, கீழுள்ள ப்ரகரணம் வேறு. வணங்கி வழிபட்டுக் கிடந்த

ஸமயத்திலே பெருமாளுடைய திருவுள்ளம் எங்ஙனே யிருக்கக் கூடியது? எங்ஙனே யிருந்தது? என்பது மாத்திரம் ஆராயப்ராப்தம். *ப்ரக்ருத்யா த⁴ர்மஶீலஸ்ய* என்றும், *நயஜ்ஞோ த⁴ர்மவத்ஸல:* என்றும் இந்த ப்ரகரணத்திலேயே உள்ள சப்தங்களையும் அவற்றுக்குப் பெரியார் வியாக்கியானம் செய்கின்ற அர்த்தத்தையும், அடுத்த படியாகப் பெருமாள் தாமே ஸாதிக்கிற *ப்ரஸாத³ஶ்ச க்ஷமா சைவ ஸுக்³ரீவம் ப்ரியவாதி³தா। ஸர்வஸ்யம் ஹநுமந்தே நிக்³ரஹேணேஷு ஸதாம் க³ணா:॥* என்கிற வார்த்தையையும் விமர்சித்தால், கரணத்ரய நியமநவிப்ரஹ்வதராய் வணங்கிக்கிடந்த காலத்திலே கடலரசனை முடிப்பதான வொரு திருவுள்ளமும் பெருமாளுக்கு உடனிருந்தது என்று சொல்வது எங்ஙனே பொருந்தும்?

விபீஷணன் வந்து சேர்வதற்கு முன்னே பொதுப்படையாகப் பெருமாள் கூறியிருந்த *தபஸா ஸேதுப³ந்தே⁴ந ஸாக³ரோச்சோ²ஷணேந வா। ஸர்வதா² ஸுஸமர்தோ²ஸி ஸாக³ரஸ்யாஸ்ய லங்க⁴நே॥* என்கிற வார்த்தை உபாய விசேஷ நிர்த்தாரண மின்றிக்கே 'இங்ஙனே எனக்கு ஸாத்யமான பல வுபாயங்களுண்டு' என்பதை மாத்திரம் ஸர்வதா² யோக்³யதாஸத்த்வ ஸ்பு²டமாகத் தெரிவிக்கப் பிறந்ததாதலால், பிறகு ஆப்த வசனங்களாலே சரணாகதியாகிற உபாய விசேஷம் கைக்கொள்ளப்பட்டு அதனை ஸநியமமாக அநுஷ்டிக்கப்புகுந்த காலத்திலே ஸாக³ரோச்சோ²ஷண நினைவையும் கூடவேவைத்து அர்த்தம் பண்ணுவதற்கு அந்த வார்த்தை இடம் தரவேமாட்டாது. அந்த வார்த்தையின் உண்மையான பொருளும் மேலே இனிது விளங்கும்.

ஒரு க்ரந்தத்தைத் தானே பார்த்துப் பரிச்ரமப்பட்டுப் பொருள் தெரிந்துகொள்ள வல்லமை வாய்ந்த வொருவன் ஆப்த வசநாதிகளாலே ஒரு ஆசார்யரிடம் சென்று அவரிடத்திலே அதிகரித்து க்ரஹிப்பதாக நிச்சயித்துச் சென்று வணங்கும்போது 'நீர் சொல்லுகிறீரா? நானே புஸ்தகம் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டுமா? என்று வெருட்டிச் சொல்லுவது முண்டோ? அவ்வாசிரியர் இரங்கிச் சொல்லிக் கொடாவிடில் இவன்தானே ஏடுபார்த்துத் தெரிந்து கொள்ளவே போகிறானெனினும், வணங்கி வேண்டிக்கொள்ள வந்தபோது விபரீதமான நினைவும் சொலவும் இருக்கத்தகவே தகாதன்றோ. ஸாமாந்யர்களான நம்முடைய படியே யிதுவானால் *ப்ரக்ருத்யா த⁴ர்மஶீல*ரென்னப்பட்ட பெருமாளுடையபடி இதற்கு விபரீதமாயிருக்க வடுக்குமோ? "சணல்கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம் போலே" என்று ஆசாரியர்கள் ஸாதிக்கிற கணக்கிலே ஶரணவரணாநுஷ்டாநமும் உஜ்ஜீவநாயாநுஸந்தா⁴நமும் ஸாக்ஷாத்காரவத்ஸேந ஒரு வ்யக்தியினிடத்தில் குடிபுகத்தகாதவை—என்கிற ஒருவார்த்தையே அண்ணா ஸ்வாமியின் விஸ்தரங்களுக்கெல்லாம் ஸாரமான ஜீவாது.

„மயா தே மைத்ரீ ப⁴வது யதி³ ஜீவிதுமிச்ச²ஸி—என்பதில் என்ன ஸமாதா⁴நம்?" என்று பீதாம்பர பண்டிதர் எழுதுவது அர்த்தமில்லாத வார்த்தை. *தேந மைத்ரீ ப⁴வது தே யதி³ ஜீவிதுமிச்ச²ஸி* என்று இராவணனை நோக்கிப் பிராட்டி அருளிச் செய்திருப்பதுண்டு. இங்ஙனே பெருமாள் அருளிச் செய்யவும் ப்ராப்தம். இதற்கு உபதேசமொழி யென்று பெயரே தவிர வணக்கமொழி யென்று பெயர் கிடையாது. 'பாவீ! அநியாயமாய்க் கெட்டுப் போய்விடாதே; பெரியாரோடு ஒத்துவாழ்; இல்லாவிடில் நீ பாழாய்ப் போய்விடுவாய்' என்று வயிற்றெரிச்சலோடு சிறியார்க்குப் பெரியார் சொல்லும் வார்த்தை உலகில் கிடையாதென்று யாரும் சொல்லவில்லை. சரணாகதி செய்யுங் காலத்திலே அப்படிப்பட்ட உபதேச மொழிக்கு ப்ரஸக்தி யேது?

இது ஸர்வேச்வரனுடைய சரணாகதி ப்ரகரணமாகையால் அவனுடைய தன்மைக்குத் தகுதியாக அப்படியும் சொல்லலாம் என்பது பாலிஶபாஷிதம். ஸர்வேச்வரத்வாகாரத்தை இங்கு நினைப்பதற்கே வழியில்லை. வெறும் மநுஷ்யத்வாகார மொன்றுதான் இங்கு வைத்துப் பேசவுரியது. அல்லாவிடில், பெருமாள் தரைக்கிடை கிடந்ததே தவறான காரியமாகும். ப்ரபுத்வத்திற்குப் பொருந்த ஆஜ்ஞாபந ரூபமாகவே காரியம் செய்திருக்க வேண்டும். புல்லைப் பரப்பிப் படுக்கை போடாமல் நின்றுகொண்டே மந்த்ர பலத்தாலோ மற்றும் எந்த சக்தி விசேஷத்தாலோ கடலரசனை எதிரே தோன்றப் பண்ணி [ஆண்டாள் *ஆழிமழைக் கண்ணாவென்று தேவதையை யழைத்து நியமித்ததுபோலே] 'வருணா! எனக்கு வழிவிடாய்',

என்று நியமித்துக் காரியங் கொள்ளாதே, ப்ரதிஶயநம் பண்ணினது ஏன்? * ஊயா சுவம் ஸஊநுஜ்ஞாதொ மஹ ஸொகாநநுஜ ஊாநு * என்று பெரியவுடையார்க்கு வழி காட்டின பெருமிடுக்கர் * ஊயா யஶயஊநுஜ்ஞாதாஃ தீவ்ரா மஹதவாநராஃ! * இத்யாதிப் புடைகளிலே வாநரமுதலிகளை நியமித்தும் * ஊயா சுவம் ஸஊநுஜ்ஞாதொ ஜாநுஊாத்ரொஊகொ ஹவ * என்று கடலரசனை நியமித்தும் எளிதாக எழுந்தருள்வதற்குப் பெருமாள் அசக்தரோ? ஆற்றலையெல்லாமடக்கிக்கொண்டு வணக்கங்கொண்டு காரியங்கொள்ளப் பார்த்தவிடத்திலே பரத்வத்தையும் கூடவே வைத்துப் பேசுவது என்ன அழகு? விஷயங்களைக் கலந்த கட்டியாகப் பிசிறிப் பிசைந்து பேசுவது பண்டித க்ருத்யமன்று. இராகவன் இப்போது எந்த நிலைமையில் இருந்து வருகிறானென்பதைக்கூட ஆலோசியாமல் நெஞ்சில் தோன்றினபடியும் வாயில் வந்தபடியும் சொல்லிவிடுவது பிராமாணிகர்கட்குப் பணியன்று.

"செய்யும் ப்ரணயத்தில் குறைவில்லை; ஹிம்ஸம் பண்ணால் ஊண்டபாதம். இந்த பயத்தை முன்பே காட்டாவிடில் அநார்ஜவம் நியதம்" என்கிறார் பீதாம்பரபண்டிதர். ப்ரணயமென்கிற சொல்லுக்கு என்ன பொருள்? இங்குப் பெருமாளுக்கும் கடலரசனுக்கும் எவ்வகையான பரிமாற்றம்? ப்ரணய கலஹ மித்யாதி ஸ்தலங்களிலே கொள்ளப்படும் ப்ரணய பதத்திற்கு இங்கு என்ன ப்ரஸக்தி? பல்லைக்காட்டிக் காரியங்கொள்ள வந்தவன் வில்லையும் கூடவே காட்டி அச்ச முறுத்திக்கொண்டே வணங்கினானென்பது எங்ஙனே சேரும்? அச்சமுறுத்துகிற ப்ரகரணம் இதுவன்று கிடீர். ஆர்ஜவம் அநார்ஜவம் என்பதற்கு இன்னது பொருள் என்றே தெரிந்துகொள்ளாமல் அந்தப்பதங்களை ப்ரயோகிப்பார்க்கு நாம் என் சொல்லவல்லோம். கரணத்ரய ஸாரூப்யத்தை ருஜுத்வ மென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் கூறியுள்ளார்கள். இங்கே உடல் வணங்கியும் மனம் தண்டனையில் நெறிப்புக் கொண்டும் இருந்ததாகப் பொருள் கூறினால் இது செவ்வைக்கேடே யல்லது செவ்வையாகவே மாட்டாது. 'அச்சமுறுத்துவதை முன்பே காட்டாவிட்டால்தான் ஆர்ஜவக்குறை பெருமாளுக்கு வந்து சேரும்' என்று பீதாம்பர பண்டிதர் எழுதுவது தவறு. ஸுக்ரீவ விஷயத்தில் * ஊாவாஷி வயஊநமாஃ * இத்யாதியாகப் பிறகு தெரிவித்த வார்த்தைகளை முன்னமே தெரிவித்திருப்பதுண்டோ? அங்ஙனம் தெரிவியாமையினால் பெருமாள் செவ்வைக்கேடர் என்று சொல்லுவாருண்டோ? * சுவாம் வதாஸ்ஸாத்ருஶிதாஷி தேசிக ஸ்ரீஸூக்திப்படியே வாவஶாநயெதாஷியான பின்பு நிகழ்ந்த சீற்றச் செயலும் அருள் பொலிந்ததே யென்று அண்ணாஸ்வாமி யெழுதியிருக்கும்போது அதில் அநார்ஜவம் சங்கிக்க அவகாசலேசமு மில்லையே. ஶரண வரண ஸமகாலத்திலேயே கடலைத் தொலைத்துவிடுகிறேனென்கிற ஸங்கல்பந்தான் செவ்வைக் கேடாகும். ஒரேகாலத்தில் உத்தம குணர்கள் பக்கலில் ஒன்று சேர்ந்திருக்க முடியாதவைகளான ஸாம தண்ட சிந்தனைகள் பெருமாளிடத்தில் ஒருங்கே கூடியிருந்தனவாகக் காட்டக்கூடிய இடம் ஸ்ரீராமாயணத்திற்குள் சிறிதேனும் கிடைக்குமோ? முழுதும் தேடிப்பார்க்க.

"சுகரணெ வ்ருதுவாய மென்றால் ஷிதஶாஸநம் அநார்ஜவமோ?" என்கிறார் பீதாம்பர பண்டிதர். சாஸ்த்ரம் நம்மிடத்தில் சரணாகதி செய்ய வந்ததன்று. * ஶாஷ்ரூம்தா வ்ருஷ ஸம்ஶித மென்று முறையிடப்பட்டுளது. பெருமாள் இங்கு ஶாஷ்ரூவான முறைமையிலேயா தரைக்கிடை கிடக்கிறார்? ராஜ்ய தந்த்ர மென்கிற பேச்சுக்கு இங்கு என்ன ப்ரஸக்தி? ப்ரத்யுபவேசக தந்த்ரமன்றோ இது. இவையெல்லாம் அஸம்பத்த வாக்விலஸிதங்கள்.

"இங்கே தக்ஷிண பாஹுவர்ணநம் நயம் பயம் இரண்டையும் காட்டுகிறது" இத்யாதிகளான பீதாம்பர பண்டித வாக்யங்கள் எடுத்துக் கழிக்கவும் தகாதவை. 'தரைக்கிடை கிடந்த காலத்திலே பெருமாளுடைய திருவுள்ளம் எப்படிப்பட்டது?' என்று விமர்சிக்கும் ப்ரகரணத்திலே இத்தகைய காடுபாய்ந்த வாக்யார்த்தங்கள் காட்டிலே கூறத்தக்கன. இவ்விடத்திலே கோவிந்தராஜீய வ்யாக்யானத்திலுள்ள பதப்ரயோஜந விவரணங்களையும் அவதாரிகைகளையும் நோக்கினால் ஸாகரமாரண நினைவு பெருமாள் திருவுள்ளத்தில் (12 ச்லோகம் வரையில்) எள்ளளவும் எட்டிப்பார்க்கவே யில்லையென்பது தெளிவாகும்.

ஶரணவரணாநுஷ்டாநமும் ஜ்ஞாநோபாயாநுஸந்தாநமும் அநேககார்யாவஶேஷேந ஒரு வ்யக்தியினிடத்தில் எப்படியிருக்கத் தகாதவையோ அப்படியே விஶேஷகார்யாவஶேஷேநாபி இருக்கத் தகாதவைதான்; அதுமாத்திரம் இராகவனிடத்தில் எங்ஙனே கூடிற்று? என்று சிலர் கேட்கக்கூடும். இதனால், பெருமாள் சரணாகதிக்கு, அல்லது ப்ரத்யுபவேஶநத்திற்கு அதிகாரி யல்லர் என்பதும், மநுஷ்ய பாவனைக்குச் சேரப் பல காரியங்களையும் செய்துபோந்த கணக்கிலே இதனையும் செய்தார் என்பதும் சொல்ல வேண்டிற்றுகுமத்தனை யல்லது வேறொன்றும் சொல்லப்போகாது. பல்லைக் காட்டிக் கொண்டு யாசிக்கும் ஸமயத்திலேயே வில்லைக்காட்டி வெருட்டுவதான க்ருத்யமும் மநுஷ்யர்கள் பக்கலில் காணக்கூடியதே யாதலால் மநுஷ்ய பாவனையில் நின்ற பெருமாளுக்கு அதுவுந்தான் பொருந்தினதாக இருக்கட்டுமே என்று சொல்லப் பார்ப்பது பெருமாளை காபுருஷ கோஷ்டியிலே வைத்துப் பேசுவதாகும். பாலகாண்ட ப்ரதம ஸர்க்கத்திலும் அயோத்யாகாண்ட ப்ரதமத்விதீய ஸர்க்கங்களிலும் விரித்துரைக்கப்பட்ட ஸ்ரீராம குணங்களுக்கு விரோதமாகக் கூறும் கூற்றுக்கள் செவியிலும் ஏற்கத் தகாதவை.

"பெருமாளை முடிக்கவா நாலுமந்திரிகள் மந்த்ராலோசனை செய்து இவ்வுபாயத்தை நிச்சயித்தார்கள்? இவர் மந்த்ரியாயிருந்தால் எப்படியோ?" என்று பீதாம்பர பண்டிதர் எழுதியிருப்பதும் பொருளற்ற பேச்சு. 'கடலைக்கடந்து வைரியை வென்று வைதேஹியைப் பெற முடியாமற் போனால் மரண மடைவது தவிர வேறு செய்யகில்லேன்'—என்கிற தாத்பரியமே தேறுமாறு சொல்லிக் கொண்ட விதனால் யாதொரு குறையும் சங்கிக்கப் போகாது. மஹா வீரர்களுக்கு ஏற்ற பேச்சே யிது. மரண மென்று திருவாக்கினால் சொல்லிக்கொண்ட மாத்திரத்திலேயே அது ப்ராப்தமாய்விட்டதாக நிச்சயித்து ஆக்ஷேபம் செய்வாருடைய மேதை அற்புதமாகவே யுள்ளது. மந்த்ரிகள் பெருமாளை முடியச் சொன்னதாக யார் சொல்லுகிறார்கள்? மந்த்ரிகளும் முடியச் சொல்லவில்லை. சரணாகதிக்கு மரண ஸங்கல்பம் அங்கமுமன்று. அங்ஙனே பெருமாள் செய்து கொள்ளவுமில்லை. உத்தேசித்ததொரு காரியத்தை ஸாதித்தே தலைக்கட்டுவதென்று தீவ்ரமான உறுதி கொண்டிருக்குமவர்கள் அவ்வுறுதியைக் காட்டுவதற்கு ஶேஷபூதமாகவே வார்த்தைப்

பாடாக ஸ்வமரணத்தையும் ஒரு கல்பமாகப் பேசுவது எங்குமுள்ள வழக்கம். * ஸ்ராவண ஶ்ராத்தவா * இத்யாதிகள் இவ்வகுப்பில் தானே சேர்ந்தவை. இவ்வகையிலே அமைந்த 'மே மரணம் வா' என்ற வார்த்தையின்மீது எத்தனை ஆக்ஷேபம்! எத்தனை படையெடுப்பு!. * ஸ்ருயாந்தோ வரிஷாஶ் ப்ருதிஷுரவஶேஷ.*

"ப்ரபந்நரான விபீஷணனை சத்ருவான ராவணன் கையில் ப்ரதிப்ரதாநம் பண்ணும்படி தாமே முடிய நினைத்தாரோ? தேவர்கள் சரணாகதியை ஶோஷமாக்கஸங்கல்பித்தாரோ?" என்று வெகு அவலீலையாக எழுதுகிறார் பீதாம்பரபண்டிதர். ஸ்ரீராமாயணத்தில் எத்தனை ஸந்தர்ப்பங்களில் பெருமாள் தம்முடைய மரணப்பேச்சை வாய்விட்டுக் கதறி யிருக்கிறாரென்று தெரியுமோ? * ஸீதயா ஸஹிதோஹம்வை நஹிஜீவாமி லக்ஷ்மண । ஶூந்யம் ஶோகேந மஹதா ஸீதாஹரணஜேந ச । ஸமஸ்தோகே மஹாராஜோ நசிரம் ஶ்ரக்ஷ்யதி ஜீவிதா ॥......ஸ்வயா விரஹிதாஶ்சாஹம் ஶோகேஷு ஜீவிதாத்யஜ ॥* இத்யாதிகள் ஆரண்ய காண்டத்தில் பெருமாள் உக்திகள். இப்படியே யுத்தகாண்டத்திலும் 'ஸ்ராவண ஶ்ராத்தவா' என்றும் 'ஸத்ய ஸாஶ்வ ஸாஶஸ்வ வஶாந்தா ஶஶஸ்மயாதே' என்றும் சொன்ன அடுத்த க்ஷணத்திலேயே * நஹி யாஶ நஶகாயம் நேவ வ்யாணேநாபி ஸீதயா ।...கிம்ஶ ஸாஜ்யேந கிம்வ்யாணேஶ் யாஶ காயம் நவிஷ்யதே ।...ஜஹேவ ஶரணம்ப்ரேயஶ் நதா ஸம்யாவிஶ ஸம்ணாம் * இத்யாதிகள் பெருமாள் திருவாக்கில் நிரம்பியுமாக வந்திருக்கின்றன. தரைக்கிடை கிடவாமல் மஹாவீரனும் ஶஹா வீரயஶஸ்ஸனும் ஸ்ரீராமன் காரியஞ் செய்யுமிடங்களிலேயே இப்படிப்பட்ட பேச்சுக்களிருந்தால் அவ்விடங்களில் விளையாத ஆக்ஷேபம் தரைக்கிடை கிடக்குங்காலத்ததான அத்யமே மரண மென்பதில் என்ன விளையக்கூடும்? * ஸ்வயம் ஸ்வீதவா வாநர ஸநை:* என்றாப்போலே ஸ்ரீராமாயணத்தை ஓரிடத்திலும் ஆழ்ந்து பாராமல் மேலெழவும் பாராமல் நெஞ்சில் தோற்றுகிறபடியெல்லாம் ஆக்ஷேப தூஷணைகளைச் செய்து கொண்டிருப்பார்க்கு நம்முடைய உக்திகள் எங்ஙனே பயனளிக்கும்? இப்போது இதில் நாம் காட்டியுள்ள விஷயங்கள் ஏற்கனவே அண்ணஸ்வாமியின் க்ரந்

தங்களில் பரக்க நிரூபிக்கப்பட்டிருப்பவையே. ஆனாலும் இங்கு ஸாரமாக எடுத்துக் காட்டினோமத்தனை. [ஸஹ்யே வாநராஸ்து தாரணம்வா (மே) மரணம்வா] என்கிறஒரு அந்வயம் தவிர மற்றைப்படி இவர்காட்டும் அந்வயங்கள் பெருமாளுடைய திருவுள்ளத்திற்கும் வால்மீகியின் அபிப்ராயத்திற்கும் வெகு தூரத்திலே நிற்கும்.

மே என்பதற்கு 'என்னிடமிருந்து' என்று பஞ்சமியாக அர்த்தங்கூறி, „உதகே மரணம்வா! அத தாரணம்வா வாநராஸ்ய என்றால் என்ன வ்யுத்க்ரமம்?" — என்று கேட்கிறார் பீதாம்பர பண்டிதர். இப்போது இவர் காட்டுகிற அந்வயக்ரமம் ஒரு பொருளையும் தரமாட்டாதது. ஒரு வியாக்யாநகாரரும் காட்டினதுமன்று. மே என்பதற்குப் பஞ்சமியாகப் பொருள்கொள்ள அவசியம் ஏற்பட்டால் கொள்ளலாம். அதை மறுப்போமல்லோம். இங்கு அப்பொருள் அஜாகளஸ்தந துல்யமாகும். ஸாகரத்திற்கு என்னிடமிருந்து தரணமாவது-என்று ஒரு விலக்ஷணமான அர்த்தம் இவர் கூறவருகிறாரே, இதில் ரஸமறிந்தவர் இவரொருவரே யாகவேணும். விசாரமோ ஈட்டு ஸ்ரீஸூக்திபை யநுஸரித்துப் பிறந்துளது. அதற்கிணங்காத வேறொரு அஸமஞ்ஜஸப் பொருளைச் சொல்லிக்கொண்டு 'இப்பொருளில் என்ன வ்யுத்க்ரமம்? என்று கேட்பது விவேகிகளின் பணியாகுமோ? மூலத்தில் மே மரணம் என்றுள்ள பதச்சேர்த்தியைப் பிரிக்காமல் அந்வயிப்பது க்ரமிகாந்வயம்; அதைப்பிரித்து மிகவும் வ்யவஹிதமான வேறொரு பதத்தோடே சேர்த்து அந்வயிப்பது வ்யுத்க்ரமாந்வயம். காவ்யம் வாசிப்பவர்களுக்கும் இது எளிதாகத் தெரியுமே. அந்தோ! ஒவ்வொன்றையும் முறை கேடாகவேயா எழுத வேண்டும்?

"உபாய விகல்பத்தில் இரண்டு கல்பத்திலும் பலன் ஒன்றேயாகவேணும்" என்று தொடங்கி இவர் எழுதியிருப்பதும் தவறு. இங்கு உபாய விகல்பமாக பாலிசனும் நினைக்க முடியாது. ப்ரத்யுபவேசநமாகிற உபாயம் ஒன்றே நிஷ்கர்ஷித்துப் பரிக்ரஹிக்கப்பட்டுவிட்டது. அதில் விகல்பமே கிடையாது. தரணம் என்பது இவ்விடத்தில் பலனே யல்லது உபாயமன்று. ஸ்ரீவசநபூஷணத்தில் இது ஸுஸ்பஷ்டம். மேல் விளைய வேண்டிய ராவணவத ஸீதா ப்ராப்திகளைப்பற்ற இது உபாயமன்றோ என்ன வேண்டா. ஒன்றுக்கு ஒன்றைப்பற்ற உபாயத்வமும் மற்றொன்றைப்பற்ற ஹேதுத்வமும் சாஸ்த்ர

ஸித்தம். சரணாகதியாகிற உபாயத்தினால் தரணத்தை இங்குப் பலனாகக் கொண்டாரே யல்லது உபாயமாகக் கொண்டாரல்லர். இதை நாம் எடுத்துச் சொல்லுவது சிறு குழந்தைகளுக்குச் சொல்வதுபோலவே யுள்ளது. ப்ரகரணம் உபாய பரிக்ரஹப்ரகரணந்தான். அந்த வுபாயம் விபீஷணாதிகளின் வார்த்தையினாலும் பெருமாள் தம்முடைய ருசியினாலும் சரணாகதியே யென்பதாக உறுதி செய்யப்பட்டு அநுஷ்டிக்கப்பட்டுமான பின்பு அதில் விகல்பமென்கிற பேச்சுக்கு ப்ரஸக்தி யேது? "மே மரணமென்கிற ஒரு கல்பமுமுண்டு" என்று ஒரு தடவைக்கு இரு தடவையாக எழுதியிருக்குமிவர் தம்முடைய கருத்துக்கே மறுப்பாகக் காட்டும் தூஷணங்கள் பரிஹாஸ்யங்களே யல்லது வ்யாக்யேயங்களல்ல என்று, இவருடைய அபத்தச் சுவடியின் வீக்ஷணத்தில் விரமிப்போமிப்போது.

அறிவிற் சிறந்த ஆரியர்களே! ஈட்டில் ஜேவக வ்யாக்யாதிகளினால் ஸம்வதிதமான "இத்தை முடித்தல் கடத்தல்" என்கிற வாக்கியமே இத்தனை விசார விரிவுகளுக்கு மூலமாயிற்று. அந்த வாக்கியம் அப்படியிருந்திருக்கத் தகுதியுண்டாவென்று ஆராய்ச்சி செய்யலாமே. அங்கு நம்பிள்ளை தாத்பரிய ஸரணியில் ஸாதித்தவரேயன்றிப் பதவுரை முறையில் ஸாதித்தவரல்லரே. வாய்திறக்கும்போதே இத்தை முடித்தல் என்று ஸாதிப்பரா? கடலைக் கடத்தல் நேராவிட்டாலன்றோ அதனை முடித்தல் வேண்டும். இத்தைக் கடத்தல் முடித்தல் என்று ஒழுங்குபாடாக ஸாதிப்பதில் என்ன தடை? முறைதவறியிருப்பதுகொண்டே இங்கு ஏதோ பிழை புகுந்திருத்தல் வேண்டும் என்று ஏன் தெளிந்து கொள்ளலாகாது? இற்றை முடிதல் கடத்தல் என்பது மாத்திரம் முறைமையோ? என்ன வேண்டா. ஸ்ரீராமாயண ச்லோகத்தின் ஆநுபூர்வியில் ஆர்க்கும் விப்ரதிபத்தி யில்லையே. மூலமுள்ளபடிக்குச் சேருகிறது என்பதே யல்லாமல் மற்றுமுண்டான தகுதிகளும் தத்வப்ரதிஷ்டையில் நிரூபிக்கப்பட்டே யுள்ளன. ஸ்ரீராமாயண மூலத்தையே மாற்றிவிடப் புகுந்தவர்களும் உள்ளார்களெனினும் அன்னவர்களைப் பொருள்படுத்தி நாமுரைக்க வேண்டுவ தொன்றுமில்லை. ஸார்வஜ்ஞ தாவான நம்பிள்ளை திருவாக்கில் இத்தை முடித்தல் என்பது முந்துற இருப்பதற்கு என்னவேனும் தகுதியுண்டா? என்று யோசித்தாராம் நிரூபித்துக் காண்மின்.

இரண்டாவது :—இந்த விபரீதார்த்தம் ஸ்ரீராமாயண ப்ரகரணத்திற்குப் பொருந்தவில்லை யென்ப தொன்றேயோ? ஈட்டு ப்ரகரணத்திற்கும் இறையேனும் பொருந்தவில்லையே. ஆழ்வாரை மேன்மேலும் உகப்பிப்பதில் எம்பெருமானுக்குத் திருவுள்ளமே யல்லது ஆழ்வாரைத் தொலைத்துவிடுவதாக எம்பெருமான் ப்ரதிஜ்ஞை பண்ணினானென்று உண்மையான ஸ்ரீவைஷ்ணவர் வாயில் வருவதுமுண்டோ? ஆழ்வாருடைய ஒவ்வொரு பாசுரத்தையும் அல்லது ஒவ்வொரு அக்ஷரத்தையும் எடுத்துக் கொள்வோம். ஓரிடத்திலாவது இத்தகைய ரஸாபாஸப் பொருள்படுமாறு ஸ்ரீஸூக்தியுளதோ? * தண்டாமஞ் செய்து என் எண் தானானே * என்று ஆழ்வார் ஸாதிப்பதையும் அதற்கு நம்பிள்ளை பணித்த ஸுநவ்ய வ்யாக்யானத்தையும், மற்றும் "வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னை யொழிய என்னில் முன்னம் பாரித்துத் தானென்னை முற்றப்பருகினான்" என்பது முதலான பாசுரங்களையும் ஸேவிக்கப் பெற்றவர்களுமா ஆபாஸப் பொருளை அகத்திற் கொள்வது? * எங்கள் குழுவினில் புகுரவிட்டோமென்கிற பீதாம்பர பண்டிதஜ்ஞாதிகளான ஸ்ரீவைஷ்ணவ ஹோஷ்ஷ்விஷ்ஷர்கள் யாதானும் சொல்லுக. ஆழ்வாரளவிலே எம்பெருமான் படுகாடு கிடக்கிறபடியைப் பாசுரந்தோறும் அறியவல்ல பாக்யசாலிகளுமா நெஞ்சால் நினைக்கவுமொண்ணாத பொருளைப் பேசவேண்டும்?

* பாவியேனைப் பலநீ காட்டிப்படுப்பாயோ * இத்யாதி பாசுரங்கள் இல்லையோ? * நலிவானின்ன மெண்ணுகின்றாய் * என்று பதிகம் பதிகமாகப் பேசவில்லையோ ஆழ்வார்?—என்று, அருளிச் செயலின போக்கறியாதார் சிலர் க்ஷேபிப்பரேல், அப்பாசுரங்களைப்பற்றி ஸ்ரீவசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதிகளில் அருளிச்செய்யுமதை ஸதாசார்ய ஸந்நிதியில் கேட்டுணர்மின் என்போமத்தனை. கொடுவுலகத்திலிருப்பைப் பொறுக்கமாட்டாமல் ஆர்த்திமிக்குப் பேசும் பாசுரங்கள் தனிப்பட்டவை. * யானொட்டி யென்னுள் * என்கிற பாசுரங்கொண்ட பதிகம் பரமானந்தம் பொலியப் பேசியது. இதில் ஆர்த்தியின் கந்தமும் எட்டிப் பார்ப்பதன்று. எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற இனிமையைப் பேசுவது இத்திருவாய்மொழிக்கு ப்ரமேயமென்று மணவாளமாமுனிகளும் நூற்றந்தாதியில் அருளினர். அப்படிப்பட்ட திருவாய்மொழியில், எம்பெருமான் ஆழ்வாரைத் தொலைத்துவிடுவதாக ப்ரதிஜ்ஞை செய்தானென்பதும், "அதற்குத் தாத்பர்ய மென்னவென்றால்" என்று பேசத்தொடங்கிக் காடுபாய்வதும் அநுவதிக்கவும் தகாதவை.

இற்றை முடிதல் என்றால் ஈட்டு ப்ரகரணத்திற்கு நன்கு பொருந்துகிறதோ வெனில்; ஆச்சரியமாகப் பொருந்துகிறது. இதை நாம் உபபாதிக்க அதிகபரிச்ரமம் கொள்ள வேண்டாம். திருநெடுந்தாண்டக வியாக்கியான அவதாரிகையில் (பெரியவாச்சான்பிள்ளை)

"இனி முகங்காட்டா தொழியில் ஜகத்து அநீச்வரமாமென்று பார்த்து......ஆழ்வார்க்கு முகங்காட்டி, தானும் இவரும் ஜகத்து முண்டாம்படி பண்ணினான்"

என்றருளிச் செய்திருக்கும் ஸ்ரீஸூக்தி யொன்றைக் காண்மின். இதைப்பற்றின விரிவுகளை அண்ணாஸ்வாமி தக்க ஸமயங்களில் வெளியிடுவர். எம்பெருமான் ஆழ்வார் பக்கலிலே * ஸூவாஸம்த்வ ஹ்ருதிவாஸி * என்றாற்போலே குடியிருக்க விரும்புவதும், 'இப்பெரும்பேறு நமக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ' என்று அவன்தான் தளும்பி நிற்பதும், 'இது கிடைக்காவிடில் பின்னையிருந்து நாம் ஜீவிப்பதுமுண்டோ?' என்று அவன் ஸ்வஸத்தையில் வெறுப்புக் கொள்வதும், 'ஆழ்வார் நம்மை அங்கீகரித்தால்தான் நமக்கு ஸத்தையுண்டு; இல்லையேல் ஶஶவிஷாணாதிகளைப் போலே நமக்கும் தாஸ்ஸ்வமேயத்தனை' என்று அவன் எண்ணுவதும் ஆக இப்படிப்பட்ட ரஸமயப் பொருள்களை ஈட்டில் வாரியிறைத்திருக்கின்ற நம்பிள்ளை திருவாக்கில் அவத்யமயமான வொரு வாக்கியம் வந்ததாக ஸ்தாபிக்க முயல்வாருமுண்டாவதே!, எம்பெருமானைப் பெறாமல் ஆழ்வார் முடியநிற்பதும், ஆழ்வாரைப் பெறாமல் எம்பெருமான் முடியநிற்பதுமாக நம்பிள்ளை போல்வார் வியாக்கியானங்களில் அடிக்கடி காண்கிறோம். எம்பெருமான் ஆழ்வாரை முடித்துவிடுவே னென்று ப்ரதிஜ்ஞை பண்ணுவதான பொருள் ஸர்வதா அஸம்பாவிதமே. "ஆழ்வார், தன்னைப்பிரிந்து நோவுண்டு முடிந்துபோமளவாக எம்பெருமான் செய்வதுண்டே; அதுதான் முடித்தலாக இங்குக் கொள்ளலாகாதோ?" என்னில்; "புணர்தொறு மென்னக் கலந்து பிரிந்து ஜ்ஞாந பக்திகளை வளர்த்

தது கனங்குழையிடக் காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜனப்புறப்பூச்சும் போலே ஆற்றநல்ல மாபோகச் சிரமமாக." என்ற ஆசார்ய ஹ்ருதய திவ்யஸூக்தியின் சுவடறிவார் இங்ஙனே பேசார்.

* சுவஜ்ஞம்வசிகவா கூவொஜூம் கரொதிப்படியே ஏதுக்கு இத்தனை அநர்த்தங்கள்? * யதாஜூரமாமவஸஜிம் ஸவாவீர! வீக்ஷ்ய விஸ்மஜூதாவிதி ஊஹொவிய ஊமுஜாஜள। கொயம் ரூணஃ கதரகொயிமதஃ கியாநுவா கவஸ்ய ஹூதெஃவஜஉஹொ வத கவஸ்ய ஹஜிஃ! * (அதிமாநுஷஸ்தவம்) என்று அகங்குழையும்படியான திருக்குணம்வாய்ந்த ராகவன் * சுஜெயொ உஹொஜயிஃ இத்யாதிகளாலே பக்தனால் கொண்டாடப்பட்ட கடலரசன் திறத்தில் குற்றம் காணுதவளவிலேயே க்ரூர நினைவைக் கொண்டாரென்னும் பேச்சை மீண்டுமீண்டும் பேசாதீர்கள். இப்படிப்பட்ட அபார்த்தம் நம்பிள்ளை பணிக்கவும் தகாது, இராகவன் இதற்கு இலக்காகவும் தகாது.

* தவஸா ஸெதுவந்ந ஸாமரொ ஷொஷணெந வா ஸவஸா ஸவஸஉயொஸி ஸாமரவஸ்ய வுவெந॥ * என்று விபீஷண சரணாகதிக்கும் முன்னமே பெருமாள் பேசியிருக்கும் பேச்சுக்குப் பாங்காகவே யுளது இவ்வர்த்தம்— என்கின்றவர்கட்கு ஒரு ரஹஸ்யார்த்த முபகரிப்போமிங்கு. ஸாமரொஷொஷணெநவா' என்றதற்கும் அத்யமே ச்லோகத்திற்கும் யாதொரு புணர்ப்பு மில்லையென்று பண்டே பரக்க நிரூபிதம். மற்றொன்றும் மதியிற் கொண்மின். ஸாமரொஷொஷணவிதி ந ஸொஷயதெஜூடீ; கவிதா ஸூஷ்யதெஃ. ஸாமரஸ்ய ஸூக்ஷீகரணவிதி நாயஃ; கவிதா ஸூக்ஷீஹாவொயஃ. ஸாஉகதஜூக ஸாமர கஉக ஸொஷணம் நாயஃ. ஸாமரஸ்ய ஜயாயீநஃ ஷூதனவ ஸூக்ஷீஹாவொயஃ. 'கடலரசன் நாம் அணைகட்டிச் செல்லுமாறு உடன்பட்டோ, அல்லது அந்த ப்ரயாஸமும் நமக்கு வேண்டாமல் நடந்தே நாம் செல்லும்படி தன்னை வற்றிக்கொடுத்தோ உபகரிக்க நாம் கடந்துவிடலாம்'என்று பெருமாள் கூறுவதாகக் கொள்வதே இங்கு மிகச்சிறந்த பொருள். பரத்வப்பிடாரைக் காட்டவல்ல பொருளைக்காட்டிலும் நீர்மைக்

குணத்தைக் காட்டவல்ல பொருளே ஸ்ரீராகவன் திறத்தில் ஏற்கும் என்பது நம் ஆசார்யர்களின் ஸித்தாந்தமாதலால், மளணவ்ருத்தியொன்றுமின்றியே எளிதாகக் கிடைக்குமிப்பொருளே கொள்ளற்பாலது.

* சுக்ருதஸெது உநாகஜிதவஸ்வம் ஜநநஸிநூஜூவவஉஜஹநு। ஸவிஸாதாஉதிஜூம்வஸ்ய ஸஉாவதிம் ஸவஜிவொஷஸீவஉவாநயக॥ * என்று யாதவாப்யுதயத்தில் தேசிகன் பணித்தபடியும் அதற்கு மூலமாக ஸ்ரீவிஷ்ணுபுராணுதிகளிலுள்ளபடியும் வஸுதேவர்க்கு யமுனையாறு தன்னை வற்றிக்கொடுத்தாப்போலே இராகவனுக்கும் அங்ஙனே கடல் செய்யலாமாதலால் அந்த ரீதியே இங்குவிவக்ஷிக்கப்படுகின்றதென்கை மிகப்பொருந்தும்

முடிவில் சிறியதோர் விண்ணப்பம். அபார்த்தங்களையுங்கூட ஸஜயங்களாகவே கொண்டு ஸமர்த்திக்க மஹான்களுங்கூட உஜூாஜம்வரங்கள் செய்வது பிசகு என்று நாம் எண்ணவே முடியாது. * ஊவஸாநாஜூஜிஉதஃ......ஸாதம் நஜெ உதிரவும் வரஜாயிராஜ * என்று ஆழ்வானே பணிக்கும்போது நாமெல்லாம் எந்த மூலைக்கு? நன்றே நீதா, ஒரு வழியில் வாஸனை பண்ணிவிட்டால் அதில் நின்றும் நெஞ்சைப்பேர்ப்பது எம்மான்பினர்க்கும் எளிதன்றுதான். பிடிவாதமென்பது ஜநிஜஉாக்களுக்கு அவர்ஜநீயமே. இதில் வியப்பொன்றுமில்லை. அச்சுப் புத்தகங்களிலும் ஓலைப்புத்தகங்களிலும் ஆராய்ச்சியில்லாமே விச்வாஸம் வைத்தவர்கள் க்ரமேண பலபல விஷயங்களை ஆராய்ந்தால் திண்ணமாகத் தாங்களே தெளிவு பெற்றிடுவர்கள். என் சிற்றறிவுக்கெட்டிய ஒன்றிரண்டு விஷயங்களை நான் காட்டுகிறேன், காண்மின்;—பெருமாள் திருமொழியில் * வளையவொரு சிலையதனால் மதிளிலங்கையழித்தவனே * என்றதற்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் "ஸ்ருஹாஸ்ராதிகள் வாய்மடியு மூரை மநுஷ்யத்வத்துக்கு ஏகாந்தமான வில்லாலே அவனுடைய ஊரை அழியச் செய்தவனே!" என்று காண்கிறது. இதில் "வாய்மடியும் ஊரை" என்பதற்கு எங்கே அந்வயம்? "அவனுடைய ஊரை"என்பதற்கு எங்கே அந்வயம்? இப்படியா பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்

திருப்பர். இப்படியே பாடம் பல பதிப்புக்களிலும் ஏறிவருகின்றது. அதிலேயே * ஆலிநகர்க்கதிபதியே * என்றவிடத்து "வாலியைக் கொன்று ஊரிலிதன்னைத் துணையாகக் கொள்ளப் பெற்றதே!" என்று ஒரு பதிப்பில் பாடமும், மற்றொரு பதிப்பில் மற்றொரு வகையான பாடமும் காண்கிறது. ஒன்றுவது பொருந்துமா என்று பாருங்கள். ஆசாரியர்கள் அமுத மொழிகளை நமக்குச் சேமநிதியாகவே இட்டருளினர். அவை நாளடைவில் பல காரணங்களால் பலவகைப்பட்ட விக்ருதிகளை அடைந்திட்டால் அவற்றையெல்லாம் ஒருவர் எடுத்துரைக்க நாம் இசைந்திடுவதா என்கிற பொறுமையுடையார் நல்ல அர்த்தங்களையும் சுத்த பாடங்களையும் அநியாயமாய் இழந்தே போகவேண்டுமத்தனை.

பல பெரியார்கள் வெகுநாளாக ஆதரித்து ஓதிவருகிற பாடங்களை ஒருவருடைய உத்போதநத்திற்காகத் திருத்திக் கொள்ள வேண்டும்படியாக நேர்ந்துவிடுகிறதே யென்கிற வருத்தம் அல்லது வெட்கம் சில மஹான்களுக்கு இருக்கக்கூடியதே. அதற்கு நாமென் செய்வோம். பெரிய திருமொழியின் சாற்றுப் பாசுரமாகிய * குன்றமெடுத்து ஆநிரை காத்தவன் தன்னை * என்கிற ஈற்றுப் பாசுரத்தின் இரண்டாமடியை "மன்றில் மலி புகழ்" என்றே உலகமெங்கும் ஸேவித்துவருவதை நாம் காண்கிறோம். வேறுவகையான பாடம் ஒருவருடைய வாயிலும் வந்ததாக இதுவரை நாம் கண்டதில்லை; காணப்போகிறதுமில்லை. ஆனால் வழங்கிவருகிற பாடம் என்றைக்கோ தவறாக வந்துபுகுந்து உலகமெல்லாம் பரவிவிட்டது என்று தான் சொல்லித் தீர வேண்டியதாயிருக்கிறது. அப்பெரிய திருமொழியின் பதினோராம் பத்திலேயே இரண்டாவது திருமொழியின் இறுதிப் பாசுரமாகிய * வென்றி விடையுடன் * என்கிற பாட்டின் இரண்டாமடியில் "மன்றில் மலி புகழ்" என்கிற பாடம் உண்டேயன்றி மேற்குறித்த சாற்றுமுறைப் பாசுரத்தில் அது கிடையாது, பொருந்தாது. அதைப்பற்றி அண்ணாஸ்வாமி (பெரிய திருமொழி) திவ்யார்த்ததீபிகையில்—(அப்பாசுரத்தினுரையில்)

> "இரண்டாமடியில் 'மன்றில் புகழ்' என்ற பழைய பாடம் மறைந்து போய் 'மன்றில் மலி புகழ்' என்ற புதிய பாடமே எங்கும் பரவிநின்றாலும் அது பெரியோர்க்கு உடன்பாடன்று; இத்திருமொழியில் நேரசை முதலான் பாசுரங்கள்தோறும் ஒவ்வோரடியும் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும் நிரையசை முதலான பாசுரங்கள்தோறும் ஒவ்வோரடியும் ஒற்றொழித்துப் பதின்மூன்றெழுத்தும் அமைந்துள்ளன வென்பதைக் கண்டறிந்தால் இப்பாட்டில் 'மலி' என்பது அதிகப்படியான பாடமென்று எளிதிற் புலனாகும்"

JL M21,01'S53 N36.1

என்று அழகாக நிரூபணமும் காட்டியிருக்கிறார். அதைக் கண்டவாறே, "ஜுஷ்டச்வாந்த தோஷ:, ஹாஜஸச்வாந்த தோஷ: என்கிறாப்போலே பொருந்தவிடக்கூடாதா என்ன? அது தவறான பாடமென்று ஏதுக்கு எழுதவேணும்?" என்று சீறிப்பேசுகிற ஸ்வாமிகள் மிகையாகக் காணப்படுகிறார்களே யன்றி ஜுஷ்டச்வ ஹாஜஸச்வாதிகளைக் கொண்டு ஸமாதானம் பண்ணுகிற வழியைப் பெரியவாச்சான்பிள்ளை முதலான பூருவாசாரியர்களும் விட்டிட்டு இலக்கண வழியைப் பின்சென்றே பல திருத்தங்களை வியாக்கியானங்களில் காட்டியுள்ளார்களென்பதை யாராய்ந்து தெளிவு பெறுவார் சிலரே. பஹுச்ருதர்களும் தமிழ்ப்பண்டிதர்களுமான பல மஹான்கள் திருத்திப் பதிப்பித்திருக்கின்ற திவ்யப்ரபந்தப் பதிப்புகளிளெல்லாம் (நாம் மேற்காட்டிய விடத்தில்) மலி என்பதின்றியே 'மன்றில் புகழ்' என்ற பாடமேயுள்ள தென்பதையும் நோக்காமல், எதற்கும் மறுப்புக் கூறிக்கொண்டே யிருக்கவேணுமென்கிற நோக்குடன் எதையேனும் சொல்லிக் கொண்டிருப்பாருள்ள விடங்களில் அன்னவர்களுடைய அபிநிவேசத்திற்கும் அபிமானத்திற்கும் தகுந்தபடியே சொல்லிக்கொண்டும் எழுதிக்கொண்டும் 'ராஜாயஸ்வஸ்தி, ராவணாயஸ்வஸ்தி, என்று பேசிப் போது போக்குவாரைப்போலே யிருக்கவேண்டுமென்பது காலநிலைமைக்கு ஒத்ததாயினும், உண்மைகளை மறைத்து அடக்கிவைத்து, அபத்தங்களை யெல்லாம் ஆதரித்திருக்கமாட்டாத தன்மையே காரணமாக இவ்வுலகத்தாருடைய வருத்தத்திற்குப் பாத்திரமாகும்படி சில மஹான்களுக்கு நேர்ந்துவிடுகின்றது. இதுவுமொரு பகவத் ஸங்கல்பமே!.

தமிழ்நாடு ... காப்பக இயக்ககம்
218933
சென்னை-600 008

அடியார்க்கு அடியேன்,

தி. வி. சிங்கராசாரிய தாஸன்.

நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்த ஸம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷடி ச்பையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
7. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள
8. மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனோடு இப்பத்திரிகை விஷயமான ஸுகதுக்காநுபவங்களை யுடையவர்கள் (Sympathizers) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவனாகக் கடவேன்.
9. (25) இருபத்தைந்து ரூபா கொடுக்கு மவர்களை ஜீவியச் சந்தாதாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பண மன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.
10. பத்திரிகையின் வருஷசந்தா

வெளியூர்	...	1	12	0
உள்ளூர்	...	1	8	0
தனிப்ரதி	...	0	3	0

ஷடி ரூபாயை அனுப்பி சரியான விலாசத்தைத்தெரிவித்தால் சஞ்சிகை புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விளம்பரம்

ராப்பர் முழுப்பக்கம்	ஒரு தடவைக்கு	...	5	0	0
,, அரைப்பக்கம்	,,	...	3	0	0
,, கால்பக்கம்	,,	...	2	0	0

—பத்ராதிபர்.

Registered No. M. 3401

விளம்பரம்

1. தங்கம், கெம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச் சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயுமிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1 - க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம் பொன்னுக்கு உத்தரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசு வளையல்களுக்கும் கேட்லாக்கு உண்டு. அதை வாங்கி நெம்பரைக் குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்துகொடுக்கப்படும்.

பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ் டவுன், மதருஸ்.

ப்ராணஸுத

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பலஹீனத்தினால் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரணைப் போன்ற டானிக் ராஜா- "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏற்பட்ட பலஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை

Edited & Published by Vadakarai Ramanujachariar, 25, Acharappan St., and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St., Madras.